# வள்ளலார் பற்றிய பல பேராசிரியர்களின் கட்டுரைகள்

**பதிப்புரை**

மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் காந்தியியல், இராமலிங்கர் தத்துவத்துறை சென்ற ஒன்பது ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகின்றது. ஆரம்ப காலத்தில் இத்துறையின் மூலம் சிந்தனைக் கூட்டங்கள், படிப்புவட்டங்கள், கருத்தரங்குகள், பேச்சுக் கோர்வைகள் முதலியன மூலம் காந்தியடிகள், இராமலிங்க வள்ளலார் இருவரின் கருத்துக்களையும் ஆராய்ந்து பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்தி வந்தது. இத்துறையில் நிகழ்ந்த ஆராய்ச்சியின் பயனாக சில நூல்களும் வெளிவந்துள்ளன. அத்துடன் சான்றிதழ், டிப்ளமாக்களும் பரிட்சைகள் நடைபெறுகின்றன. சென்ற இரண்டு வருடங்களாக M.Sc. அமைதியாக்கல் என்ற முதுகலை பட்டப்படிப்புக்கு மாணவர்களை இத்துறை தயாரித்து வருகிறது.

சென்ற ஆண்டுகளில் -- பேராசிரியர் மா. பா. குருசாமி அவர்கள் இத்துறையின் நெறியாளராகப் பணியாற்றிய காலத்தில் (1973 - 1976) -- நடந்த கருத்தரங்குகளில் வாசிக்கப்பட்ட சில கட்டுரைகளைத் தொகுத்து, அதற்கு நூல் வடிவு தந்து, இப்போது வெளிவருகிறது. இக்கட்டுரைகளுள் சில, வள்ளலாரின் உள்ளத்தை விண்டு காட்டுபவை. அவர் உலகினருக்கு குறிப்பாக தமிழருக்கென உருவாக்கித் தந்த சபை, சாலை, சங்கம் ஆகிய மூன்று நிறுவனங்களைப் பற்றிய விளக்கங்கள் இதில் உள்ளன. வள்ளலாரை வேறு பல ஞானிகளின் வாழ்வுடன் குறிப்பாக காந்தியடிகளின் வாழ்வுடன் ஒப்புநோக்கும் கட்டுரைகளும் இதில் உள்ளன. இவை வெவ்வேறு காலத்தில் எழுதப் பெற்றவையாயினும், வள்ளலாரைப் புரிந்துகொள்வதற்கும், அவரது கோட்பாடுகளைக் கடைபிடித்து ஒழுகுவதற்கும் உதவியாக இருக்கும்.

அண்மையில் இத்துறை வள்ளலாரைப் பற்றிய குறுகிய காலப் பயிற்சி ஒன்று நடத்தியது. நூற்றுக்கு மேற்பட்ட அன்பர்கள் கலந்து கொண்டனர். **டாக்டர் சுப. அண்ணாமலை** அவர்கள் இப்பயிற்சிக்கு வழிகாட்டி உதவினார். இப்பயிற்சிக் காலத்தில் நிகழ்த்திய சொற்பொழிவுகள் சிலவும் இந்நூலில் இடம் பெறுகின்றன.

திரு. நா. மகாலிங்கம் அவர்களின் தலைமையில் நடைபெறும் இராமலிங்கர் பணிமன்றம் வள்ளலாரைப் பற்றிய பல சிறந்த நூல்களை வெளியிட்டு வருகிறது. அவர்கள் தூண்டுதலாலும், ஆரம்ப உதவியாலும் நடைபெற்று வருகிற இத்துறையும் இராமலிங்கரையும், காந்தியடிகளையும் மக்களுக்கு விளக்கிக் காட்ட முயன்று வருகிறது. அதில் இக்கையேடும் ஒரு சிறு முயற்சி. தமிழ்மக்கள் இதனை ஆதரிப்பார்கள் என்ற நம்பிக்கையுடன் வெளியிடுகிறோம்.

க. அருணாச்சலம்

*This e-book can be downloaded for free from http://www.vallalar.org*

## கட்டுரை ஆசிரியர்கள் முகவரி

**பேராசிரியர் க. அருணாசலம், எம். எல். சி**
தலைவர், அகில இந்திய காந்தி நினைவு நிதி
ராஜ்காட் ரோடு, புதுடில்லி - 110002
சிறப்புப் பேராசிரியர், காந்தியியல் இராமலிங்கர்
தத்துவத்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
பழைய வளாகம், அழகர் கோயில் சாலை, மதுரை - 625002

**பேராசிரியர் சுப. அண்ணாமலை, எம். ஏ., எம். லிட்., பி. எச். டி.,**
முதல்வர், தியாகராயர் கல்லூரி, மதுரை - 625009

**டாக்டர் தி. முருகரத்தினம், எம். ஏ., எம். லிட்., பி. எச். டி.,**
இணைப்பேராசிரியர், திருக்குறள் ஆய்வகம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை - 625021

**மறைத்திரு ஊரன் அடிகள்**
சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம்
வடலூர் - 607 303, தென்னார்காடு மாவட்டம்

**பேராசிரியர் இராம. பெரியகருப்பன், எம். ஏ., பி. எச். டி.,**
(தமிழண்ணல்)
தலைவர், தமிழியல் துறை; ஒருங்கிணைப்பாளர்,
தமிழ் மற்றும் இந்திய மொழிப்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை - 625 021

**திரு ம. இராமகிருஷ்ணன், எம். ஏ.,**
துணைப் பேராசிரியர், தமிழ்த்துறை,
மதுரைக் கல்லூரி, மதுரை - 625 011

**டாக்டர் சரஸ்வதி வேணுகோபாலன், எம். ஏ., பி. எச். டி.,**
தமிழியல் துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை - 625021

**பேராசிரியர் இரா. வே. நாராயணன், எம். ஏ.,**
முதல்வர், செந்தமிழ் கல்லூரி, மதுரை-625001

**திருமதி எம். இளம்பிறை மணிமாறன், எம். ஏ.,**
துணைப் பேராசிரியர், ஆங்கிலத்துறை,
ஏ.பி.சி. மகாலெட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி.

**திரு க. மு. நடராஜன்**
செயலர், அகில இந்திய சர்வ சேவா சங்கம், வாரணாசி.

**திருமதி அ. சாந்தா, எம். ஏ.,**
தமிழியல் துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்;
மதுரை-625021

**பேராசிரியர் மா. பா. குருசாமி, எம். ஏ., எம். லிட்., டி. ஜி. டி.,**
தலைவர், பொருளாதார & வரலாற்றுத் துறை
ஆதித்தனார் கல்லூரி, திருச்செந்தூர்.

**திருமதி என். சரோஜினிதேவி, எம். ஏ.,**
பேராசிரியர், தமிழ்த்துறை, அருள்மிகு பழனியாண்டவர்
மகளிர் கலைக் கல்லூரி, பழனி

**திரு எல். ஆர். லட்சுமி நாராயணன், எம். ஏ.,**
ஆங்கிலத்துறை, மதுரை காமராசர்
பல்கலைக்கழகம், மதுரை-625021

**திரு ச. செயப்பிரகாசம், எம். ஏ., எம். ஏ.,**
இணைப் பேராசிரியர், காந்தியியல் இராமலிங்கர்
தத்துவத்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
பழைய வளாகம், அழகர் கோவில் சாலை
மதுரை-625002

**டாக்டர் ம. சண்முகம், எம். ஏ., பி. எச். டி.,**
காந்தியியல் இராமலிங்கர் தத்துவத்துறை, மதுரை
காமராசர் பல்கலைக் கழகம்.

**பேராசிரியர் ச. பாண்டியன், பி. காம்., பி. எல்., டி. ஜி. டி.,**
தாளாளர், காந்திய சிந்தனைக்கல்லூரி
மதுரை-625020.

## வள்ளலார் வாழ்வும் தத்துவமும்

### (i) ஊன்றிப் படிக்க வேண்டிய அடிப்படை நூல்கள்

திருஅருட்பா (ஆறு திருமுறைகள்)
-- ஊரன் அடிகள் பதிப்பு

(வள்ளலார் இராமலிங்க அடிகள் அருளிய திருஅருட்பா அனைத்தையும் ஒருங்கு தரும் மிகச் சிறந்த பதிப்பு. இதனை மறு அச்சு செய்தல் வேண்டும்)

திருஅருட்பா உரைநடைப் பகுதி
-- ஊரன் அடிகள் பதிப்பு

(வள்ளலார் இராமலிங்க அடிகளின் உரைநடை அருளிச் செயல்கள் முழுவதும் ஒரே புத்தகமாக முதன்முதலில் வெளிவருவது இப்பதிப்பே. மிகச் சிறந்த பதிப்பு)

### (ii) ஊன்றிப் படிக்க வேண்டிய துணைநூல்கள்

| | |
|---|---|
| 1. Dr. Sp. Annamalai | The Life and Teachings of Saint Ramalingar Bombay: Bharatiya Vidya Bhavan, 1973. |
| 2. Suddhananada Bharathi | Saint Ramalinga and His Revealations, Madras: Suddhananda Library. |
| 3. Francis Dayanandan | Ramalingaswami, Madras: The Christian Literature Society, 1972. |
| 4. Vanmikanathan.C | Pathway to God through Ramalinga Swamikal, Bombay, 1976. |
| 5. Chetty, T.V.G | Sri Chidambaram Ramalinga Swamiji His life, Mission and Studies. |
| 6. ஊரன் அடிகள் | இராமலிங்க அடிகள் வரலாறு |
| 7. திரு. வி. கலியாணசுந்தரனார் | இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம் |
| 8. சாமி. சிதம்பரனார் | வடலூரரார் வாய்மொழி |
| 9. கே. சீனிவாசன் | சுத்த சன்மார்க்க விளக்கம் |
| 10. ம. பொ. சிவஞானம் | வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு |

| | |
|---|---|
| 11. ம. பொ. சிவஞானம் | வள்ளலாரும் காந்தியும் |
| 12. மா. பா. குருசாமி | வள்ளலார் - ஓர் அறிமுகம் |
| 13. சு. சிவகாமசுந்தரி | வள்ளலார் |
| 14. சரவணானந்த சுவாமி | வள்ளலார் கண்ட ஒருமை வாழ்வு |
| 15. உ. மா. துரைசாமிப்பிள்ளை | சிதம்பரம் இராமலிங்க சுவாமிகளின் சரித்திரமும் அருட்பா ஆராய்ச்சியும் |
| 16. அ. லெ. நடராசன் | வள்ளலார் வாழ்வும் வாக்கும் |
| 17. பி. ஶ்ரீ. | இராமகிருஸ்ணரும் இராமலிங்கரும் |
| 18. ஊரன் அடிகள் | வள்ளலார் மறைந்தது எப்படி |
| 19. Sivasubramania Pillai. A. | The Philosophy of Saint Ramalingam with Special reference to its Basic concepts. (unpublished Ph. D. thesis of the University of Madras) |
| 20. Shanmugam, M. | Saiva Siddhanta and the Social Philosophy of St. Ramalingam (unpublished Ph.D. thesis of the University of Madras), 1978. |
| 21. Manickam, R. | Studies in Thiru Arutpa (unpublished M.Litt thesis of the University of Madras) |

**வள்ளலார் வாழ்வும் தத்துவமும்**

**குறுகியகாலப் பயிற்சி வகுப்புக்கள்**

காந்தியியல் இராமலிங்கர் தத்துவத்துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
பழைய வளாகம், அழகர் கோவில் சாலை
மதுரை-625002

**யாருக்காக**

14 வயது நிரம்பிய ஆர்வலர் யாரும் கலந்து கொள்ளலாம்

**கட்டணம்**

இலவசம்

**காலம்**

எட்டு நாட்கள் தொடர்ச்சியாக மாலை 5-30 முதல் 8-00 மணி வரை நடைபெறும். இடையில் வரும் ஞாயிறன்று மட்டும் காலை 10-00 முதல் மாலை 7-00 மணி வரை நடைபெறும். மொத்தம் 25 மணி நேரங்கள் வகுப்புகள் நடைபெறும்.

**இடம்**

1) காந்தியியல் இராமலிங்கர் தத்துவத்துறை மதுரை காமராசர் பல்கலைக்கழகம், பழைய வளாகம், அழகர் கோவில் சாலை, மதுரை-625002

2) மதுரை காமராசர் பல்கலைக்கழக எல்லைக்குட்பட்ட எப்பகுதியிலும் இவ்வகுப்புக்கள் நடைபெறக்கூடும்.

**நாள்**

நடைபெறும் தேதிகள் அவ்வப்பொழுது செய்தித்தாள்கள், வானொலி வாயிலாக அறிவிக்கப்படும்.

**விண்ணப்பம்**

இவ்வகுப்புக்களைத் தங்கள் பகுதியில் நடத்த வேண்டும் என விரும்புவோர் அடியிற்கண்ட முகவரிக்கு விண்ணப்பிக்கலாம்.

இணைப் பேராசிரியர்
காந்தியியல் இராமலிங்கர் தத்துவத்துறை,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
பழைய வளாகம், அழகர் கோவில் சாலை,
மதுரை-625002

விண்ணப்பத்தாள்களையும் இம்முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

**வகுப்பின் நோக்கம்**

வள்ளலாரின் வாழ்வு, தத்துவம், செயல் திட்டம் முதலியவை பற்றிய அடிப்படை அறிவை ஏற்படுத்துதல்.

வள்ளலார் வழிச்செயல் திட்டங்கள் தொடங்கத் தூண்டல்.

**வகுப்பின் உள்ளீடு**

வள்ளலார் வாழ்வும் காலமும்
ஆன்மநேய ஒருமைப்பாடு
சமுதாயச் சீர்திருத்தம்
சீவகாருண்யம்
சமரச சுத்த சன்மார்க்கம்
வள்ளலாரும் காந்தியடிகளும்
வள்ளலார் வழிப் பணித்திட்டம்
மரணமிலாப் பெருவாழ்வு

**கற்பித்தல் முறைகள்**

அருட்பா வகுப்பு
விரிவுரை
குழு விவாதம்
இசையோடு பாடல்
அருட்பா யோகம்
குழு விளையாட்டு
பாத்திரமாதல்
தொடர் மதிப்பீடு
கள ஆய்வு
களப் பணி

**ஆசிரியர்கள்**

1. பேராசிரியர் க. அருணாசலம் எம். எல். சி.,
தலைவர்
காந்தியியல் இராமலிங்கர் தத்துவத்துறை
மதுரை காமராசர் பல்கலைகழகம்,
தலைவர், அகில இந்திய காந்தி நினைவுநிதி, புதுடில்லி.

2. டாக்டர் சுப. அண்ணாமலை எம். ஏ., எம். லிட்., பிச். டி.,
முதல்வர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

3. ச. செயப்பிரகாசம் எம். ஏ., எம். ஏ.,

4. டாக்டர் எம். சண்முகம் எம். ஏ., பிச். டி.,
மற்றும் அறிஞர் பலர்.

## மேல் படிப்பு

இப்பயிற்சி வகுப்பில் சிறப்பாகத் தேறுவோர் வள்ளலார் பற்றிய ஆழமான அறிவு பெறவும், பணி மேற்கொள்ளவும், ஆராய்ச்சியில் ஈடுபடவும் "வள்ளலார் வாழ்வும் தத்துவமும்" பற்றிய மேல்நிலை பயிற்சி முகாம்கள் நடத்தப்படக் கூடும்.

## பொருளடக்கம்

1. வள்ளலாரும் சமுதாயச் சிக்கல்களும் ........ 10
2. அன்றைய சிக்கல்களும் இராமலிங்க அடிகளார் கண்ட தீர்வும் ........ 13
3. வள்ளலாரின் நிறுவனங்கள் ........ 17
4. வள்ளலாரின் இறைக் கொள்கை ........ 23
5. வள்ளலாரும் வாதவூரரும் ........ 29
6. வள்ளலாரும் தாயுமானவரும் ........ 42
7. வள்ளலார் உள்ளம் ........ 54
8. எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணல் ........ 60
9. பசிப்பிணி: வள்ளலாரும் காந்தியடிகளும் ........ 70
10. வள்ளலாரின் விண்ணப்பங்கள் ........ 75
11. சன்மார்க்க சங்கமும் உயிரிரக்கமும் ........ 82
12. ஜீவகாருண்யம் ........ 89
13. மரணமிலாப் பெருவாழ்வு ........ 94
14. THE CONCEPT OF RAMALINGAR'S 'IMMORTALITY' ........ 104
15. வள்ளலார் காட்டும் சன்மார்க்க நெறி ........ 107
16. வள்ளலார் வாழ்க்கை வரலாறு--சில சிந்தனைகள் ........ 128
17. ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமை ........ 132
18. வள்ளலாரும் காந்தியடிகளும் ........ 135

# 1. வள்ளலாரும் சமுதாயச் சிக்கல்களும்

-- சுப. அண்ணாமலை

## 1. வள்ளலார் மதவாதியா? சமுதாயச்சிந்தனையாளரா?

அவர் மதங்களை ஏற்றுக் கொள்ளாத இறைநெறியாளர் -- அவரது இறை நெறியாகிய சுத்த சன்மார்க்கம், சமுதாயச் சிந்தனையை உள்ளடக்கியது. சமுதாய முன்னேற்றத்திற்கான சேவையே இறைவனை அடைந்து நுகரும் வழி; எல்லையற்ற இறைவனை, எல்லையற்ற சமுதாய சேவையின் மூலம் பெறும் அருட் காட்சி வாயிலாக உணர்ந்து, அறிந்து, நுகரலாம் என்பது அவர்தம் இறைக் கோட்பாடு, சாதி, மத, சமய, கோத்திர குல, இன, மொழி, நிற வேறுபாடுகள் உள்ளிட்ட எவ்வித வேறுபாடும் இல்லாத உலக சமுதாய அமைப்பே அவரது சமுதாயக் கோட்பாடு (Universal Religion and Universal Society). இங்ஙனம் இறைநெறியும் சமுதாயச் சிந்தனையும் இணைந்த புதுநெறியாளர் வள்ளலார்.

## 2. வள்ளலார் கண்ட சமுதாயமும் (பழைய சமுதாயம்) காண விரும்பிய (புதிய) சமுதாயமும்

சமயங்கள் வெற்றுச் சடங்காய்ப் போன நிலை அவர்கண்ட சமுதாயத்தில் இருந்தது. சாதி வளர்ப்பவரின் கைப்பாவையாக--அவரால் பாதுகாக்கப்பட்ட சாதி வேறுபாடுகளுக்கு அரண் செய்யும் பொய்மைக் கொள்கையாகச் சமயம் இருந்தது. சாதி உயர்வு தாழ்வுகள் தலை விரித்தாடின. சாதிச் சண்டைகளும் தீண்டாமையும் பெருகிய அளவில் இருந்தன. சாதிக்குள்ளும் கோத்திர, குலப் பிரிவுகள் மக்களுக்குள் பிளவுகளை ஏற்படுத்தின. இவற்றால் அலைவு தான் இருந்ததே தவிர வாழ்க்கை இல்லை. ஒற்றுமை இல்லை. நேசபாவம் இல்லை. ஆதலின் முன்னேற்றம் இல்லை. மாறாகக் கலகமும் சண்டையும், பகைமையும், காழ்ப்பும் வளர்ந்தன. சமயமோ இதைத் தடுக்க வழியின்றி, வெறும் சடங்குக்குள் சிறைப்பட்டு, தத்துவ வாதங்களுக்குள் முடங்கி, சாதி வெறியாளர்களுக்குப் பின்பாட்டுப் பாடிக் கொண்டிருந்தது. வெறும் சடங்கு மூட்டையாகவும் தத்துவ வாதக்குப்பையாகவும் இருக்கும் வரை சமயம் மக்களுக்குப் பயன்படாது என்பதை வள்ளலார் உணர்ந்தார். சமயம் வாழ்க்கை நெறியாக, செயல் நெறியாக, செயலூக்கமாக இருக்க வேண்டும். (Religion should be a living force and a force for living என்பதை உணர்ந்தார். சமயம் சடங்கு செய்யும் அல்லது செய்விக்கும் குருக்களின் அல்லது பூசாரியின் சொந்தச் சொத்தல்ல. சடங்கைச் செய்துவிட்டு, சமயத்தின் கடமை முடிந்துவிட்டது என்று எண்ணி, விருப்பம்போல் வாழ்வது குருட்டுத்தனம். படித்தவர் நிலையில் ஏதோ தத்துவ வாதங்களைச் சாத்திரப் பிடிப்பின் அழுத்தத்தோடு செய்துவிட்டால், ஆன்மாவின் தேவை முடிந்துவிட்டது என்று எண்ணி, தத்துவத்தின் நிழல் ஒன்று கூடப் படியாமல் விருப்பம் போல் வாழ்வதும் குருட்டுத் தனம். இவ்விரண்டாலும் பொருள் முதல் வாதந்தான் (Materialism) வளருமே அன்றி, உயிர்முதல் வாதம் (Spiritualism) நன்மை அடையாது; வளராது. சமயம் என்ற சிறிய அளவுக்கு உள்ளே அடைப்பட்டிருக்கும் இறைநெறி, தத்துவம் என்ற இருட்டறைக்குள்ளே முடங்கிக் கிடக்கும் இறைநெறி--அப்பெயருக்கே தகுதியில்லாததாய்ப் போய்விட்டது--அது மக்களுக்கு, வாழ்க்கை நெறியாக வரவேண்டும்--வந்தால் பேயாட்டம் ஆடுகின்ற சாதி, சமய, இன, குல, கோத்திர

வேறுபாடுகள் மறையும் என்ற நோக்குடன் (Perspective) வள்ளலார் அக்காலச் சமுதாயத்தைச் சந்தித்தார்.

இரண்டு ஆயிரம் ஆண்டுகளாக கூறிவரும் வறுமை தம் காலத்திலும் அகலாமல் இருப்பதையும், சமயங்களும் சாதிகளும் வறுமையுடன் போராடி அதை ஒழிக்காமல் தமக்குள்ளேயே போராடி ஒன்றை ஒன்று ஒழிப்பதற்குக் கச்சை கட்டிக் கொண்டு இருப்பதைக் கண்டார். "வறுமையால் சங்கடப் பாவி"யின் கொடிய பிடிக்குள் சிக்கி, காற்றினில் சருகாய்ச் சீவனற்று நெளியும் மனிதப் புழுக்களோ இறைவனை அறிவார்கள்? அவர்களிடம் இறைவனைப் பற்றிக் கூறுவதும் பாவம் என்றார் விவேகானந்தர். அந்த ஏழைகளை பொருள் உடையவரின் சகோதரர் என்று கூறினார் வள்ளலார். அந்த சோதரருக்கு இரக்கம் காட்டி, பசி துடைத்துக் கண்ணீரை மாற்றுவதே உண்மையான இறைவழிபாடு என்றார் அவர். வறுமை தீர்ப்பது பசிதீர்ப்பது மட்டும் அன்று வளமாக வாழச் செய்வதே--பசி தீர்த்தல் முன்பு அறமாகக் கருதப்பட்டது. சமய நெறியில்--ஒரே சமயத்தைச் சார்ந்த அடியார்க்கு அன்னம் இடுதல் சமய ஒழுக்கமாகக் கருதப்பட்டது. ஆனால் வள்ளலார், தேசம், கலாசாரம், சமயம், குலம் முதலிய எந்த வித வேறுபாடும் பாராமல், விசாரியாமல் அனைவருக்கும் அவர் துன்பம் உறும்போது பசிதீர்க்க வேண்டும் என்கின்றார். இச்சகோதர பாவத்திற்குத் தடையாய் இருந்துவரும் பழைய அமைப்புக்களாகிய சாதி, சமய, கோத்திர அமைப்புக்களை எதிர்க்கின்றார். அன்பு மனிதருக்கு இயற்கைக் குணம். அது தடையின்றிப் பாவவேண்டும். ஆனால் இந்தப் பழைய அமைப்புகள் அன்புக்கு வேலி கட்டிவிட்டன. அன்பு வளர்ந்து, அகிலம் முழுதும் அன்பால் நோக்கும் பார்வை (Universal Perspective) வந்தால் தான், அதன் மூலம்--இறைவனை உணரமுடியும். இதற்காக வள்ளலார் அகிலமாம் சகோதரத்துவம் என்ற கொள்கையை எடுத்துக் கூறி--அதைப் பழைய அமைப்புக்களுக்கு மாற்றாக, நம் முன் வைத்தார். சாதியை விட்டவனே சன்மார்க்கி என்றார். 'நம் குலம் எல்லாம் புழுக்குலம்' என்றார். சாதிப்பேச்சும் குலப் பூச்சும் இறவாமையைத் தருமா? என்று கேட்டார். உயர் குலம் என்று இறுமாந்தவரும் இறக்கின்றார். தாழ்குலம் என்று தள்ளப்பட்டவரும் இறக்கின்றார். இறவாமைதான் வாழ்வில் அடுத்து நாம் எட்டிப் பிடிக்க வேண்டிய படி; அதனை அடைவதற்கு உங்கள் சாதியும் குலமும், சமயமும் மதமும் என்ன செய்யும் என்று கேட்டார் வள்ளலார்.

சாதிகளற்ற சமுதாயம் உருவாக்க சமுதாயச் சீர்திருத்தம் செய்ய வழி கூறியுள்ளார். அதன் நோக்கம், மனிதன் உயர் மனம் படைப்பது என்பதே ஆகும். அந்த உயர் மனம் யாது? ஆன்ம நேயம் கொள்வதே ஆகும். அந்த நேயம், அவனது இயற்கைப் பண்பாம் அன்பின் விளக்கம்; விரிவு; மலர்ச்சி; பெருக்கம். இறைவன் தந்த அந்த இயல்பு வர வேண்டும். மனிதனாய் போட்டுக் கொண்ட சாதி சமய எல்லைக் கோடுகள் தடையாகி அந்த இயல்பை வளர விடாது தடுத்துவருகையில், இறைவனை அறிவது எவ்வாறு? அடைவது எவ்வாறு? ஆதலால் இயற்கைப் பண்பிற்குச் செயல் வடிவம் கொடுத்துச் சீவகாருணிய சேவை செய்வதே இறைவனை அறிய, உணர ஒரே வழி ஆகும் என்றார் வள்ளலார். சாதி வேறுபாடு கருதும் திசை விலகினால் தான் சமுதாயத்தில் பரவியிருக்கும் பொல்லா வறுமையுடன் போராட்டம் தொடுக்க முடியும். சாதிச் சங்கம் சாதி வறுமையை நீக்கும். சமுதாய வறுமையை நீக்காது. சாதி பொய், சமுதாயம் உண்மை. சாதியில் தடைசெய்யப்படாத, கருணை வேண்டும். "எங்கே கருணை இயர்கையின் உள்ளன அங்கே என்றருள் அருட்பெருஞ்ஜோதி" என்று வள்ளலார், தடையற்ற கருணையின் பெருக்கிற்கு எல்லோர்க்கும் துன்பம் துடைக்க ஓடும் செயலுக்கு முக்கியத்துவம்

கொடுக்கின்றார். வறுமையற்ற சமுதாயத்தை நோயற்ற சமுதாயத்தை உருவாக்க மனிதர்கள் உழைக்க வேண்டும். அதுவே இன்று தேவையான இறைநெறி. அதையே சுத்த சன்மார்க்கத்தின் முக்கியமான படி என்று வகுத்தார் வள்ளலார். இச்சேவையில் வினைகனியாகக் கிடைப்பது ஆன்மநேயம். நேயத்தால் விளைவது ஒருமைப்பாடு. இது நாடுகளிடையே வந்தால் உலகப் போர்கள் நிகழா. அணு ஆயுதங்கள் வளரா. வணிகச் சந்தைக்குப் போட்டிகள் வரமாட்டா.

### 3. வள்ளலார் ஆன்மநேய ஒருமைப்பாட்டையும் இறைக்காட்சியையும் (God Realisation) எவ்வாறு இணைக்கின்றார்?

இறைக்காட்சியை வெறும் சமயச் சடங்குகளால் பெற முடியாது என்று உறுதியாகக் கூறுகின்றார் வள்ளலார். அவை கலை உரைத்த கற்பனைகள் - அவற்றிற்குப் பயன் இருக்கலாம், ஆனால் அவை முடிந்த பயனைத் தாரா. அவற்றைக் கடந்து செல்ல வேண்டும். அவற்றுள்ளேயே உழலுதல் கண்மூடி வழக்கம்.

இறையுருவத்தை வழிபாட்டின் முதற்படியாக வள்ளலார் கொண்டாலும் அதைக் கடந்து செல்ல வேண்டும் என்கின்றார். அவர் காட்டிய இறை - அருட்பெருஞ்ஜோதி ஆகும். அருள் வெளியில் அதாவது உயிர் அருள்மயமாகி நிற்கும் போது, அதில் இறை, சோதியாகக் காட்சி தருகின்றான். இது அகமுகக்காட்சி, வெளியே உள்ள சடங்கு, ஆலயம், பூசை, பொருட்கள் எல்லாம் புறக்காட்சி. இவற்றைக் கடந்து அகமுகமாகப் பார்க்கும் பார்வை வளர வேண்டும் என்றார் வள்ளலார். பூசை, திருவிழா, தேங்காய் உடைத்தல், கற்பூரம் காட்டல் எல்லாவற்றையும் ஒதுக்குகின்றார். காவியுடை அணிவதை மறுக்கின்றார். அது போராட்டத்தின் அறிகுறி என்றும் வெள்ளாடையே வெற்றியின் அறிகுறி என்றும் கூறுகின்றார். புராணங்கள், கலைவடிவங்கள் எதையும் அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. அவை எல்லாம் புறக்காட்சி. அகமுகக் காட்சி என்ற ஆன்மீக அனுபவத் தையே அவர் வற்புறுத்துகின்றார்.

இந்த அகமுகக் காட்சி, இறையருளால் தான் வாய்க்கும். அந்த அருளை, அதன் இனமாகிய நமது கருணையால் நான் பெற முடியும் கருணையால் சமுதாயச் சேவை செய்தால் இறையருள் கிடைக்கும். அது கிடைத்தால் இறை அன்பு பிறக்கும். அன்பால் அகமுகக் காட்சி, சிறிது முயற்சியிலேயே வாய்க்கும். அக்காட்சியால் 'அருள் வல்லமை' பெறலாம். அவ்வல்லமையால் பின்னும் பெருகிய அளவில் சீவகாருணிய சேவைச் செயல் செய்தல் வேண்டும். இதற்கு எல்லையே இல்லை. செயல், செயல், செயல், இதுவே என்றும் மனிதனின் நெறியாக இருக்க வேண்டும். அச்செயலால் மேலும் இறையருள் வாய்க்கும். இறைக்காட்சியும் இறைக்கலப்பும் வாய்க்கும். அதனால் மேலும் செயல் செய்தல் வேண்டும். இதனை வள்ளலார் கருமசித்தி முதலிய சித்திகள் என்று கூறுகின்றார். இறைவனோடு ஒன்றிக் கலந்து நிற்கும் முத்தியின் பின்னும் சித்தி வாய்க்கும் அதாவது செயல் வல்லமை வாய்க்கும் என்கிறார். அவ்வல்லமையால் உலகம் எங்கும் சென்று, யாவருக்கும் தேவைப் பட்ட உதவிகளைச் செய்து, இறைவனையும் கலந்து, நுகர்ந்து, இந்நுகர்வும் செயலுமாக வாழ்வதே சன்மார்க்கம் என்கின்றார் வள்ளலார். இறைவனுக்கும் எல்லை இல்லை. அவன் தரும் இன்பத்திற்கும் எல்லை இல்லை. அவனது கலப்பால் கிடைக்கும் வல்லமையால் செய்யும் செயலுக்கும் முடிவில்லை. இதுவே இறவாப் பெரு வாழ்வு என்பது சன்மார்க்கக் கோட்பாடு.

## 2. அன்றைய சிக்கல்களும் இராமலிங்க அடிகளார் கண்ட தீர்வும்

--தி. முருகரத்தினம்

1. இராமலிங்க அடிகளார் ஒரு சமயவாதி என நாம் அறிவோம். சென்ற நூற்றாண்டிலே தமிழகத்தில் தோன்றித் தில்லை நடராசர் பக்தராகி உணர்வும் உருக்கமும் பெற்று அருட்பாக்கள் ஆயிரமாயிரம் பாடிய அருளாளர் அவர். தேவார மூவர், திருவாசக மணிவாசகர், முற்றுந்துறந்த பட்டினத்தடிகள், எல்லோரும் இன்புற்றிருக்க நினைத்த தாயுமானவர் ஆகியோர் வழியிலே இறுதியில் தோன்றிய உறுதியாளர் அவர். 'நாம் எல்லோரும் சமயவாதிகள் என்பது போல அவரும் ஒரு சமயவாதி' என்று எளிதாகக் கூற முடியாது. அவர் வாழையடி வாழை என வந்த திருக்கூட்டத்தில் ஒருவர்; நாம் வாழையடி வாழை என வந்த வெறுங் கூட்டத்தில் ஒரு கூட்டம். நாம் எல்லாம் சமயிகள்; அவர் சமயவாதி; நாம் சமய வழிபாட்டினர்; அவர் சமய வழிகாட்டுநர்; நாம் சமயத் தொண்டர்; அவர் சமயத் தலைவர்;

2. அவருக்கும் மற்றியோருக்கும் இடையே அமைந்த வேறுபாடு என்ன வேறுபாடு? இராமலிங்க அடிகளார் கொண்ட தெய்வ பக்தி ஆழமானது; நம்பிக்கை முழுமையானது; ஈடுபாடு எல்லையற்றது. அறவு ஐயம் திரிபற்றது. ஆகவேதான் அவர் ஒரு தெய்வீகச் சான்றோராகத் திகழ முடிந்தது. இத்தகைய பண்புகளால் தெய்வீகச் சான்றோர் ஆனவர் தாம் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், மாணிக்கவாசகர், தாயுமானவர் முதலானோர். ஆதலால் இராமலிங்க அடிகளாரும் மற்றைய அடிகளாரும் இவ்வகையில் ஒற்றுமையுடையோரே.

3. ஆனால் இராமலிங்க அடிகளாருக்கும் மற்றைய அடிகளாருக்கும் இடையே வேறொரு வேறுபாடும் உண்டு. இராமலிங்க அடிகளார் ஒரு புதிய மார்க்கத்தையே தோற்றுவித்தார். மாணிக்கவாசகரும் பட்டினத்துப் பிள்ளையாரும் தாயுமானாரும் தாம் சார்ந்த சமயத்தையே வளர்த்தனர்; வாழ்வித்தனர். இராமலிங்க அடிகளார் ஒரு புதிய மார்க்கத்தைக் காண்பதற்கு ஒரு காரணம் உண்டு. அவர் கண்ட மார்க்கம் சமரச சன்மார்க்கம் ஆகும். இராமலிங்க அடிகளார் தாம் சார்ந்திருந்த சமயமும் தாம் வாழ்ந்து வந்த சமுகமும் குறையுடையவை என்றும் அவற்றின் கொள்கைகளும் பணியும் போதா என்றும் உணர்ந்தார். அவை சில தவறுடையவை எனவும் அவர் எண்ணினார். அவை சில தீமை தருபவை எனவும் கண்டார். ஆகவே அவற்றுக்கு மாற்றாக மற்றொரு மார்க்கம் காண வேண்டிய தேவை அடிகளாருக்கு ஏற்பட்டது. இதுவே இராமலிங்க அடிகளாருக்கும் மற்றைய அடிகளாருக்கும் இடையே அமைந்த முக்கியமான வேறுபாடு. இவ்வகையில் அடிகளார் சிறப்புப் பெற்றவராகத் திகழ்கிறார் எனலாம். இவ்வாறு, இருக்கும் நிலையினை வெறுக்கும் நிலையில் தோற்றம் பெற்றவரே சமயச் சான்றோர். கவுதம புத்தரும், ஏசு நாதரும், முகமது நபியும் தம் காலத்து இருந்த சமய சமூக நிலையின் குறைகளைக் கண்டு களையச் சென்று புதுச் சமயங்கள் நிறுவியவராவர். இவர்கள் வரிசையில் இராமலிங்கரும் இடம் பெறுகிறார் எனலாம்.

4. நடப்புலகைக் கண்டு அடிகளார் கசப்புணர்வு கொண்டார் என்பதற்கு அவர் பாடிய அருட்பா முழுவதிலும் நிறையச் சான்றுகள் கிடைக்கின்றன. அவர் காலத்தில் அவர் கண்ட முதற் குறை சமயப் பூசல். அன்று சமயங்கள் பலவாக விளங்கின. சமயங்களுக்குள்ளும் சமயப் பிரிவுகள் மிகப் பலவாக விளங்கின.

சமயங்களிடையே உட்பூசலும் வெளிப் பூசலுமாகப் பெரும் போர் நடை பெற்று வந்தது. சைவர்க்கும் வைணவர்க்கும் இடையே போர், சைவத்தில் வேதாந்திகளுக்கும், சித்தாந்திகளுக்கும் இடையே போர், வைணவத்தில் தென்கலைக்கும் வடகலைக்கும் இடையே போர், இந்துக்களுக்கும் கிறித்தவர்களுக்கும் இடையே போர், கடவுள் நம்பிக்கை உள்ளோர்க்கும் இலோர்க்கும் இடையே போர். இந்தப் போர்கள் எல்லாம் பொருளற்றவை என்றுணர்ந்தார் இராமலிங்க அடிகளார். இந்தப் போர்களை அறிவாக உணராது வெறியாக உணர்ந்தார். இப்போராட்டங்களை எதிர்த்து அவர் முழக்கம் இட்டார்.

கூறுகின்ற சமயம்எல்லாம் மதங்கள்எல்லாம் பிடித்துக்
கூவுகின்றார் பலன் ஒன்றும் கொண்டறியார் வீணே
நீறுகின்றார் மண்ணாகி நாறுகின்றார் ........ ........

சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே
சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே அபிமானித்து அலைகின்ற உலகீர்
அலைந்த லைந்து வீணேநீர் அமிதல்அழ கலவே.

இவை போன்ற முழக்கங்கள் பலப்பல. 'மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்' என்னும் தொடரால் அவரது வெறுப்பின் ஆழம் புலப்படுகிறது. 'மதித்த சமயமத வழக்கெல்லாம் மாய்ந்தது' எனவும் அவர் ஓரிடத்தில் மகிழ்ச்சியையும் வெளியிடுகிறார்.

5. இந்தச் சமயங்களுக்கும் மதங்களுக்கும் அடிப்படை, அவற்றின் தத்துவ நூல்கள், இந்தியச் சமயங்களுக்கு வேதங்களும் ஆகமங்களும் சாத்திரங்களும் புராணங்களும் இதிகாசங்களும் அடிப்படையாக விளங்குகின்றன. இவற்றின் மீது கட்டப்பட்ட கோபுரமே இந்து சமயம். இந்த இந்து சமயத்தில் ஒருவராகவே அடிகளார் திகழ்ந்தார். அதனை அவர் நன்கு அறிந்தும் இருந்தார்; உணர்ந்தும் இருந்தார். ஆனாலும் அவ்வடிப்படை நூல்களில் அவர்க்கு நம்பிக்கை இல்லை. அவை உண்மையும் அல்ல; நன்மையும் செய்வதில்லை; மாறாகத் தீமையே விளைவிக்கின்றன என அவர் கருதுகிறார். அவர் கருத்துக்களில் சில இவை;

வேகநெறி ஆகமத்தின் நெறிபுராணங்கள்
விளம்புநெறி இதிகாசம் விதித்தநெறி முழுவதும்
ஓதுகின்ற சூதனைத்தும் உளவ னைத்தும் காட்டி
உள்ளதனை உள்ளபடி உணரஉரைத் தனையே

சாதியும் மதமும் சமயமும் தவிர்த்தேன்
சாத்திரக் குப்பையும் தணந்தேன்

சமய நூல்களைச் சூது எனவும் குப்பை எனவும் இங்கெல்லாம் அவர் குறிப்பிடுவது அவர் உள்ளக் குமுறலையே எடுத்துக் காட்டுகிறது. இவற்றைப் 'பொய்' எனவும் அவர் ஓரிடத்தில் பழிக்கின்றார்.

உலகறி வேதாகமங்கள் எல்லாம் பொய் பொய்யே இவற்றை ஒழிக்க வேண்டும் என்று அவர் உள்ளம் கொதிக்கிறது:

கலையுரைத்த கற்பனையே
        நிலைஎனக்கொண் டாடும்
கண்மூடி வழக்கம் எலாம்
        மண்மூடிப் போக

'கண்மூடி வழக்கம்' என்னும் கடுஞ்சொல் ஆட்சியை இங்கு சிறிது எண்ணி அவர் உள்ளத்தை உணரலாம்.

இச்சமயங்களும் மதங்களும் சாத்திரங்களும் கண்டு கூறியவை கடவுளும் தெய்வங்களும் இவையெல்லாம் வீண் என்றும் வேண்டாதவை என்றும் இராமலிங்க அடிகள் கண்டிக்கிறார். இவை அனைத்தையும் பேசியும் பயன்படுத்தியும் வரும் மதவாதிகளும் இருக்கின்றனர். இக்கூட்டத்தாரும் அடிகளாருக்கு குற்றவாளிகளாகவே தோற்றமளிக்கின்றனர். ஆதலால் சமயமதங்கள், வேதாகமசாத்திரங்கள், அவற்றின் பலப்பல தெய்வங்கள் அவற்றின் காவலர் கூட்டங்கள் -- இவை அனைத்தையும் அடிகளார் இங்குச் சாடுகின்றார்.

கொள்ளைவினைக் கூட்டுறவால் கூட்டியபல் சமயக்
        கூட்டமும் அக் கூட்டத்தே கூவுகின்ற கலையும்
கள்ளமுறும் அக்கலைகள் காட்டியபல் கதியும்
        காட்சிகளும் காட்சிதரு கடவுளரும் எல்லாம்
பிள்ளைவிளை யாட்டு .......................

இவையே அவர்கண்ட இரண்டாம் குறை. முதற்குறையும் இரண்டாம் குறையும் அவை இரண்டும் அடிகளார் கண்ட சமயக் குற்றங்கள்.

6. அடிகளார் கண்ட அடுத்த குறை - மூன்றாம் குறை -- சமூகத்தில் அமைந்த குறை. அது சாதி மத வேறுபாடு; உயர் வருணம் தாழ் வருணம் என்னும் சழக்கு; அதாவது வருணாசிரமம். அந்தச் சாதியினை அவர் கண்டிக்கும் வேகத்தை இப்பாடல் அடிகளில் காணலாம்.

நால்வருணம் ஆசிரமம் ஆசாரம் முதலா
        நவின்றகலைச் சரிதமெலாம் பிள்ளைவிளை யாட்டே
மேவருணம் தோல்வருணம் கண்டறிவார் இலைநீ

இருட்சாதித் தத்துவச் சாத்திரக் குப்பை
        இருவாய்ப் புன்செயல் எருவாக்கிப் போட்டு
மருட்சாதி சமயங்கள் மதங்களாச் சிரம
        வழக்கெலாம் குழிக்கொட்டி மண்மூடிப் போட்டு

சாதியும் மதமும் சமயமும் பொய்யென
        ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ் ஜோதி

அடிகளார் சாதியைக் கண்டித்தலோடு அமையாது அவற்றுடன் பிற ஆசிரமங்களையும் ஆசாரங்களையும் கண்டித்தலை இங்குக் காண்கின்றோம். ஆசிரமங்களாவன பிரமசரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் ஆகியவை.

இந்த அமைப்பையே அவர் சாடுவதாகத் தெரிகிறது. வருணாசிரமத்தோடு சேர்ந்து எண்ணற்ற சாரங்கள் இயங்கி வருகின்றன. அவற்றையும் அடிகளார் சாடுகின்றார்.

7. அன்று வழங்கிய சமயங்கள், அவற்றைத் தாங்கி அன்று நிலவிய நூல்கள், அவை ஆதரித்த அன்று விளங்கிய சமூக அமைப்பு ஆகிய இவை அனைத்தையும் அடிகளார் வெறுத்தார். அவை அனைத்தும் பொய் என்பது மட்டும் அல்ல; தீயவையும் ஆகும் என்று அவர் கருதினார். இந்த உணர்வோடு தெய்வத்தின் மீது அவர் கொண்ட முழுமையான பக்தி இணைந்தது. ஆதலால்தான் அடிகளார் வெறுஞ் சமயவாதியாக மட்டும் அல்லாது சமய சீர்திருத்தவாதியாகவும் உயர்ந்தார். பழமையை மாற்ற எண்ணிய போது புதுமை ஒன்றையும் அவ்விடத்தில் அவர் படைத்து வழங்க வேண்டிய தேவையும் ஏற்பட்டது. அவர் கண்ட புதுமை -- புதுமைச் சமயம் -- சமரச சன்மார்க்கம் என்பது.

இவ்வாறாக அன்றைய சமூகச் சிக்கல்களை எடுத்துக் காட்டி அவற்றுக்குத் தம்போக்கிலே இராமலிங்க அடிகளார் தீர்வும் கண்டார்.

# 3. வள்ளலாரின் நிறுவனங்கள்

-- ஊரன் அடிகள்

வள்ளலார் இராமலிங்க அடிகள், தாம் பின்னாளில் விளங்கிய வடலூரில் நான்கு நிறுவனங்களை நிறுவினார். அவை இன்றும் நடைபெற்று வருகின்றன. மேலும் பத்து நிறுவனங்களை நிறுவத் திட்டமிட்டார்; ஏற்பாடுகளையும் செய்தார்; ஆயினும் அவை நிறுவப் பெறாமலே நின்று போயின.

**நிறுவிய நிறுவனங்கள் 4**

1. சன்மார்க்கசங்கம் (1865)
2. சத்திய தருமசாலை (1867)
3. சத்திய ஞானசபை (1872)
4. சித்திவளாகம் (1870)

முதல் மூன்றும் வடலூரில் ஒரே இடத்தில் உள்ளன. நான்காவது, வடலூர்க்குத் தெற்கே மூன்று மைலில் மேட்டுக்குப்பம் என்னும் ஊரில் உள்ளது.

**நிறுவிய காலம்:**

வள்ளலாரின் வாழ்க்கையை, சென்னை வாழ்க்கை வடலூர் வாழ்க்கை என இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். சென்னை வாழ்க்கை இளமை முதல் 25-ஆம் அகவை வரை; 1858 முதல் 1874ல்-சித்திபெறும் வரை; 16 ஆண்டுகள். சென்னை வாழ்க்கை, தலவழிபாட்டிலும் பாமாலைகளைப் பாடுவதிலும், தம்மை அடுத்தவர்களுக்குப் பாடஞ்சொல்வதிலும் சில நூல்களைப் பதிப்பிப்பதிலும் கழிந்தது. வடலூர் வாழ்க்கையோ, வழிபாடு, பாடல் செய்தல், உபதேசஞ் செய்தல் இவற்றோடு நிறுவனங்களை நிறுவுதலையும் பெற்றது. இளமை முதல் வள்ளலாரின் உள்ளத்தில் அரும்பி முகிழ்ந்த எண்ணங்களும் கொள்கைகளும் வடலூர் வாழ்வை மேற்கொண்ட புதிதில் ஓர் உருப்பெற்றன. உருவான அவை சமரச சுத்த சன்மார்க்கம் எனப் பெயரிடப் பெற்றன. தமது மார்க்கத்தைப் பரப்புவதற்குச் சில நிறுவனங்கள் வேண்டும் என வள்ளலார் எண்ணினார். ஒவ்வொன்றாகச் சிலவற்றை நிறுவினார். ஸ்தாபன ரீதியாகச் செயல்படுதல் சிறப்பென்று இன்று நாம் சொல்லிக் கொள்கிறோம். நூறு ஆண்டுகளுக்கு முன்னேயே வள்ளலார் ஸ்தாபன ரீதியாகச் செயல்படத் தொடங்கினார். அவர் நிறுவிய நிறுவனங்களையும், நிறுவத் திட்டமிட்டவற்றையும் ஒவ்வொன்றாகக் காண்போம்.

**1. சன்மார்க்க சங்கம்**

1858-ல் சென்னை வாழ்வை நீத்தபின் வடலூரை அடுத்த கருங்குழி, வள்ளலாரின் உறைவிடமாயிற்று. அடிக்கடி சிதம்பரம் சென்று வழிபடுவதையும், பாமாலைகள் பாடிப் பரவுவதையுமே அடிகள் பெரும்பணியாகக் கொண்டிருந்தார். இவ்வாறு ஆண்டுகள் ஏழு கழிந்தன. இந்நிலையில் தமது மார்க்கத்திற்கு ஒரு சங்கம் காண விரும்பினார்.

தங்கமே அனையார் கூடியஞான
சமரச சுத்த சன்மார்க்கச்
சங்கமே கண்டுகளிக்கவும் சங்கம்
சார்திருக் கோயில்கண் டிடவும்
துங்கமே பெருஞ்சற் சங்கம் நீடூழி
துலங்கவும் சங்கத்தில் அடியேன்
அங்கமே குளிர நின்றனைப் பாடி
ஆடவும் இச்சைகாண் எந்தாய். (3406)

என்று தன் விருப்பத்தை இறைவனிடம் விண்ணப்பித்தார். தம்மை அடுத்துச் சூழ்ந்திருந்த அன்பர் சிலரைக் காட்டிச் சன்மார்க்க சங்கத்தை 1865-ல் கருங்குழியில் நிறுவினார்.

சங்கம் நமக்குப் புதியதன்று. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சங்கம் வைத்து மொழி வளர்த்த நாடு, தம் நாடு, மொழிச் சங்கம் நமக்குப் பழமையானது. ஆன்மீக சங்கமோ நமக்குப் புதுமையானது. தமிழகத்தில் ஆன்மீகத்திற்கென்றே முதன் முதலில் சங்கம் நிறுவியவர் வள்ளலாரே. வள்ளலாருக்கு முன்பிருந்த ஞானிகள் மடங்களை நிறுவித் தொண்டு செய்தனர். வள்ளலாரோ மடம் நிறுவாது சங்கம் நிறுவினார். மடத்திற்கும் சங்கத்திற்கும் வேறுபாடு என்ன? மடம் துறவறத்தார்க்கு மட்டுமே உரியது. சங்கம் இல்லறத்தார்க்கும் உரியது. மடம் ஆடவர்க்கு மட்டுமே உரியது. சங்கம் பெண்டிர்க்கும் உரியது. மடம் அதற்குரிய பக்குவம் பெற்றவர்க்கும் மட்டுமே உரியது. சங்கம் பக்குவம் பெற்றார், பெறாதார் ஆகிய அனைவர்க்கும் உரியது. மடம் எல்லார்க்கும் இடந்தராது (மடங்களை யாம் குறைத்துக் கூறுவதாகக் கருதக்கூடாது, எல்லார்க்கும் இடந்தந்தால் அது மடமாக இராது) சங்கம் எல்லார்க்கும் இடந்தரும். பக்குவம் பெற்றவர்கள் சாதனை புரிவதற்கே உரிய இடம், மடம். அனைவரும் சேர்ந்து பக்குவம் பெறுதற்குரிய இடம் சங்கம். எல்லார்க்கும் இடந் தந்து இழுத்துத் திருத்த வேண்டும் என்ற பேரெண்ணத்தால் தான் மடம் எனப் பேரிடாது சங்கம் என பேரிட்டார். அன்று மடமாக நிறுவியிருப்பின் அதற்கு நாட்டில் இன்று இவ்வளவு கிளைகள் தோன்றி இரா. சங்கமாக நிறுவியதால் தான் இன்று ஊரெங்கும் நாடெங்கும் சன்மார்க்க சங்கங்களைக் காண்கிறோம்.

உலகமக்கள் அனைவரையும் சன்மார்க்க சங்கத்தில் சேர்ப்பதற்கென்றே இறைவன் தன்னைப் படைத்தான் என்று வள்ளலார் கூறுவார்.

அகத்தே கறுத்துப் புறத்து வெளுத்
திருந்த உலகர் அனைவரையும்
சகத்தே திருத்திச் சன்மார்க்க
சங்கத் தடைவித் திடஅவரும்
இகத்தே பரத்தைப் பெற்று மகிழ்ந்
திடுதற் கென்றே எனைஇந்த
உகத்தே இறைவன் வருவிக்க
உற்றேன் அருளைப் பெற்றேனே (5485)

உலகர் அனைவரையும் என்று இப்பாடலில் கூறும் வள்ளலார் இன்னொரு பாடலில் உயிர்கள் அனைத்தையும் என்பார்.

எவ்வுலகும் அண்டங்கள் எத்தனையும் நான்காண
இவ்வுலகில் எந்தை எனக்களித்தான் -- எவ்வுயிரும்
சன்மார்க்க சங்கம் தனை அடையர் செய்வித்தே
என்மார்க்கம் காண்பேன் இனி. (5514)

முன்னைய பாட்டு, வள்ளலார் பிறந்த காரணம், பின்னைய பாட்டு அதன் காரியம். மக்கட் சமுதாயத்திற்கு மட்டுமேயன்றி அனைத்துயிர்களிடத்தும் அன்பு செலுத்துதல் வள்ளலார் கொள்கை. இதை ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமை என்பார். இவ்வுரிமையைப் பரப்பவே சன்மார்க்க சங்கத்தை நிறுவினார்.

## 2. சத்திய தருமசாலை

வள்ளலாரின் கொள்கைகளில் தலையானது சீவகாருணியம். இதனை அற்றார் அழிபசி தீர்த்தல், புலால் மறுத்தல் என இருவகையால் வற்புறுத்திக் கூறுவார். சீவகாருணிய ஒழுக்கமே கடவுள் வழிபாடு என்பது வள்ளலார் வாய்மொழி. வாய்மொழி மட்டுமல்ல, கையெழுத்தும் அஃதே. 'சீவகாருணிய ஒழுக்கம்' என்றே ஒரு நூலை எழுதினார். எழுதியதைச் செயலில் செய்து காட்டுவதற்காகச் சத்திய தருமச்சாலையை நிறுவினார்.

கருங்குழியில் உறைந்த வள்ளலார், தருமசாலையை நிறுவுவதற்கு வடலூரில் இரு நெடுஞ்சாலைகளை ஒட்டியுள்ள பெரு வெளியே தக்க இடம் எனத் தேர்ந்தார். அவ்விடத்தில் 23-5-1867ல் சத்திய தருமச்சாலையை நிறுவினார். அடிக்கல் நாட்டுவதும் திறப்பு விழாவும் ஒரே நேரத்தில் நிகழ்ந்தன. இது எவ்வாறு இயலுன் என்று நாம் எண்ணலாம். தேர்ந்தெடுத்த இடத்தில் ஒரு சார், நிலையான புதிய கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டப் பெற்றது. அடுத்து, மற்றோர் சார், முன்னமே தயாராகக்கட்டி முடிக்கப் பெற்றிருந்த தற்காலிகக் கொட்டகையில் திறப்பு விழா அன்னதானம் நடைபெற்றது.

புலால் உண்பவரைப் புறவினத்தார் என்றும் புலால் மறுத்தவரை அகவினத்தார் என்றும் மக்களை இரண்டு வகையாக வள்ளலார் பிரித்துச் சுட்டினார். புலால் உண்ணும் புறவினத்தார் சன்மார்க்க சங்கத்தில் சேர்வதற்கு உரியவராவார் ஆனால் பசி என்று தருமசாலைக்கு அவர்கள் வந்துவிட்டால் உணவு இல்லை என்பதில்லை. புறவினத்தார் பசியும் போக்கப் பெற்றது. இது வள்ளற் பெருமானே செய்த ஏற்பாடு. பசியின் கொடுமையைப் பற்றி முன்பு இருந்த ஔவையார், திருவள்ளுவர் முதலியோர் நிறையப் பாடியிருக்கிறார்கள். ஆனால் வள்ளலாரைப்போல் செய்தார் யார்? என்று வண்ணச்சாபம் தண்டபாணி சுவாமிகள் ஒரு பாடலில் கேட்பது உண்மை.

## 3. சத்திய ஞான சபை

கடவுள் ஒருவரே என்பதும் அவரை, ஜோதி-ஒளி-வழிபட வேண்டும் என்பதும் வள்ளலார் கொள்கை. இறைவன் ஜோதி வடிவில் வழிபடுவதற்கென்றே வடலூரில் வள்ளலாரால் சத்திய ஞான சபை நிறுவப்பெற்றது. சபை எண் கோண வடிவில் செப்புக் கூரை (கோபுரம்)யுடன் தெற்கு நோக்கி அமைந்துள்ளது. சபை நடுவே இறைவன் அருட் பெருஞ்ஜோதியாய் எழுந்தருளியுள்ளான். ஜோதியின் முன்னர்

கண்ணாடி ஒன்றுள்ளது. கண்ணாடியை அடுத்து ஏழு வெவ்வேறு நிறத்திரைகள் உள்ளன. திரைகள் அகன்றால் கண்ணாடியில் ஜோதியை தரிசிக்கலாம். திரைகள் - நமக்குள்ளிருக்கும் தத்துவப் படலங்கள், கண்ணாடி - சுத்தமனம், ஜோதி - ஆன்ம ஒளி. மனிதன் புலன்களையும் தத்துவங்களையும் வென்று உள்ளத்தைத் தூய்மையாக்கினால் அதில் ஆன்ம ஒளியாகிய இறைவனைக் காணலாம் என்பது சபை காட்டும் கருத்து. இக்கருத்தைக் காட்சியாகக் காட்டுவதுதான் சத்திய ஞான சபையில் மாதந்தோறும் பூச நாளில் நிகழும் ஜோதிதரிசனம்.

**4. சித்திவளாகம்**

1867-ல் தருமச்சாலையை நிறுவியது. முதல் சாலையே அடிகளின் உறைவிடமாயிற்று. வர வரக்கூட்டம் பெருகவே அமைதியை நாடி அடிகள் 1870-ல் மேட்டுக்குப்பம் சென்றார். அங்கு அடிகள் தனித்துறைந்த இடமே சித்திவளாகத் திருமாளிகை. சித்திவளாகம் என்பது அடிகளே இட்ட பெயர். 30-1-1874ல் சித்தி பெற்றது இங்கேயே.

**இவற்றின் ஆட்சி**

சங்கம், சாலை, சபை, சித்திவளாகம் ஆகிய இந்நான்கும் ஒரு தொகுதியாகத் திருவருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையங்கள் என்ற பேரால் இப்போது வழங்குகின்றன. தமிழக அரசின் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கீழ், அறங்காவலர் ஐவராலும் நிர்வாக அதிகாரி ஒருவராலும் இவை நிர்வகிக்கப் பெறுகின்றன. (இக்கட்டுரையாளரும் அறங்காவல் ஐவருள் ஒருவர் என்பது தெரிந்திருக்கலாம்).

**நிறுவத் திட்டமிட்ட, ஏற்பாடு செய்த நிறுவனங்கள்**

நிறுவிய தருமசாலையை தவிர

1. வைத்தியசாலை
2. சாஸ்திரசாலை
3. உபகாரசாலை
4. விருத்திசாலை
5. உபாசனாசாலை
6. யோகசாலை
7. விவகாரசாலை

என ஏழு சாலைகளை நிறுவத் திட்டமிட்டிருந்தார்.

வைத்தியசாலை - Hospital - வள்ளலார், சிறந்த சித்த மருத்துவராயும் விளங்கினார்.

சாஸ்திரசாலை - Library
உபகாரசாலை - Enquiry and public Relations Centre
விருத்திசாலை - Centre for Man's Inner and outer development
உபாசனாசாலை - தியான மண்டபம்
யோக சாலை - யோகம் செய்யுமிடம்
விவகார சாலை - Administrative office.

இவ்வேழும் திட்டமிடப்பெற்ற காலம் தருமசாலை நிறுவிய காலமாகிய 1867-ம் ஆண்டே.

### 8. சன்மார்க்க போதினி (1867)

இது மும்மொழிப்பாடசாலை; தமிழ், ஆரியம், ஆங்கிலம் மூன்றையும் கற்பிப்பது. சிறுவர்க்கு மட்டுமின்றி முதியோர்க்கும் கற்பிப்பது. தமிழ் நாட்டில் முதியோர் கல்வியை முதன் முதலில் ஏற்படுத்தியவர் வள்ளலாரேயாவர். இப்பாடசாலையைப் பற்றிய குறிப்பில் 'தமிழ், ஆரியம், இங்கிலீஷ்' என்றும் முறைவைப்பு அருமையானது. நாட்டுமொழியும், தாய்மொழியும் ஆகிய தமிழ் முதலில் வைக்கப்பட்டது. ஆட்சி மொழியாகிய ஆங்கிலம் மூன்றாவதாக வைக்கப் பட்டது. மும்மொழிப்பாடசாலையையும், முதியோர் பாடசாலையையும், வள்ளலார் நூறு ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கினார் எனில் அவரது தீர்க்கதரிசனத்தை அளவிடுதல் யாங்ஙனம். வருங்காலத்தில் பன்மொழியறிவும் பயிற்சியும் இன்றியமையாததென அன்றே வள்ளலார் கருதினார் போலும்.

### 9. சமரச வேத பாடசாலை (11-1-1872)

இதில் 15 வயதிற்கு மேற்பட்டவர்களே சேர்த்துக் கொள்ளப் பெறுவார்கள். அவர்களும் நல்லறிவு, கடவுள் பக்தி, உயிர் இரக்கம், பொது நோக்கம், திரிகரண அடக்கம் முதலிய நற்குணங்களையும் உண்மை உரைத்தல், இன்சொல்லாடல், உயிர்க்கு உபகரித்தல் முதலிய நற்செய்கைகளையும் உடையவர்களாயிருக்க வேண்டும். சில காலம் இதிற் பயின்று ஓரளவு பயிற்சி பெற்றபின் அவரவர்கள் பயிற்சிக்கும், குடும்பத்துக்கும் தக்கவாறு மாதந்தோறும் பொருளுதவி செய்யப் பெறும். பயிற்சிக்குத் தக்கவாறு பொருளுதவி அளிப்பது பொதுவாக எங்கும் உள்ளது. குடும்பத்திற்குத் தக்கவாறு பொருளுதவி என்பது வள்ளலாருக்கே உரிய தனிப்பெருங்கருணைத் திருவுள்ளம். இப்பாடசாலை காலையும் மாலையும் இரண்டு இரண்டு மணி நேரம் நடைபெறும். இவையெல்லாம் இப்பாடசாலைக்கு வள்ளலாரே வகுத்த திட்டம்.

### 10. சன்மார்க்க விவேக விருத்தி (1868)

இவ்வளவு நிறுவனங்களுக்கும், திட்டங்களுக்கும் ஒரு பத்திரிகை பலம் வேண்டாமா? தமது மார்க்கத்தைப் பரப்புவதற்கு ஒரு பத்திரிகை இன்றியமையாத தென்று 1867ல் வள்ளலார் சன்மார்க்க விவேக விருத்தி என்று ஒரு திங்களிதழைத் தொடங்கினார். அதற்கு அவரே முதற் கையொப்பக்காரர். சிதம்பரம் இராமலிங்கம், ரூபாய் ஒன்று எனத் தாமே தம் கையெழுத்தில் எழுதியுள்ளார். வேட்டவலம் ஜமீந்தாரிலிருந்து சிதம்பரம் அருணாசல பரதேசிவரை, வேங்கடேசய்யரிலிருந்து 'காதர் சாயபுவரை' பலதரத்தார், பல சமயத்தார் கையொப்பமளித்துள்ளனர்.

சன்மார்க்க விவேக விருத்தி இதழ் தொடக்கத்தோடேயே நின்று போயிற்று. 1967 முதல் யாம் அதனைத் தொடங்கி இவ்வைந்தாண்டுகளாக நடத்தி வருகிறோம்.

**முடிவுரை**

வள்ளலார் காலத்தும் அதற்கு முன்பும் கிறிஸ்தவமிஷனரியினர் மருத்துவத்தாலும் கல்வியாலும் தன் சமயத்தைத் தமிழகத்தில் பரப்பினர். பண்டைக் காலத்தில் சமண சமயம் தமிழ்நாட்டில் பரவிச் செல்வாக்குப் பெற்றதற்குரிய பல காரணங்களுள் சமணரது இலக்கியப் பணி, மருத்துவதானம் முதலியவும் காரணமன்றோ. வள்ளலாரும் தமது மார்க்கத்தை வளர்ப்பதற்கும் பரப்புவதற்கும் பலசாதனங்களைக் கையாண்டார். பல நிறுவனங்களை நிறுவினார். கல்விச்சாலை நிறுவினார். பலமொழி பயிலும் வாய்ப்புகளை ஏற்படுத்தினார். முதியோர்க்கும் கல்வி பயில வசதி செய்தார். விருத்தர்களைப் பள்ளியிற்பயிலும் குமாரர்களாய், பாலர்களாய் ஆக்கினார். மருத்துவ சாலை, உபகார சாலை, விருத்தி சாலை, விவகார சாலை, யோக சாலை, சாஸ்திர (புத்தக) சாலை முதலிய பல சாலைகளை நிறுவ ஏற்பாடு செய்தார்.

சமயப் பணியோடு, சமுதாயப்பணி; ஆன்மீகப் பணியோடு அறிவியற் பணி, அருளியற் பணியோடு உலகியற் பணி என்று இன்று நாம் பேசுகிறோம். இவையெல்லாம் அன்று நூறு ஆண்டுகளுக்கு முன் வள்ளலார் கொண்டிருந்த திருவுள்ளக்கிடையே; தீட்டிய திட்டங்களே. வள்ளலார் நிறுவி, இன்றுள்ள நிறுவனங்களோடு, நிறுவத் திட்டமிட்டும் ஏற்பாடு செய்தும் நின்றுபோன நிறுவனங்களும் இன்றிருந்தால் வடலூர் எப்படி இருக்கும். ஒரு பல்கலைகழகமாக வன்றோ இருக்கும். வரலாற்றில் படிக்கும் நாளந்தா, காஞ்சிப் பல்கலைகழகங்களை விடச் சிறந்ததாகவன்றோ இருக்கும்.

வள்ளலார் சித்தி பெற்று 100 ஆண்டுகள் நிறைகின்றன. 1974 ஜனவரி 30 ஆம் நாள் வள்ளலார் சித்தி நூற்றாண்டு விழா வருகிறது. 74ஆம் ஆண்டு முழுதும் நூற்றாண்டு விழாக் கொண்டாடப் பெறவிருக்கிறது. நூற்றாண்டு விழாவின் பயனாக ஒரு புத்துணர்ச்சி ஏற்பட வேண்டும். வள்ளல் பெருமான் நிறுவத்திட்டமிட்ட நிறுவனங்கள் பலவும் வடலூர்ப் பெருவெளியில் நிறுவப் பெறவேண்டும். கிறிஸ்தவ உலகுக்கு வத்திக்கான் போல் சன்மார்க்க உலகுக்கு வடலூர் சிறந்து விளங்க வேண்டும்.

வள்ளலார் கழல் வாழ்த்தல் வாழ்வாவதே.

# 4. வள்ளலாரின் இறைக் கொள்கை

-- இராம. பெரியகருப்பன்

வள்ளலார் வகுத்த சன்மார்க்க நெறியின்படி இறைவன் ஒருவனேயாவன். அவன் 'அருட்பெருஞ்ஜோதி' என அழைக்கப்பெறும் தனிமுதல் தலைவனாவான். சமயங்களும் தத்துவங்களும் அணுக முடியாதவனும் அனுபவத்தால் மட்டுமே உணரக் கூடியவனுமான அவ் இறைவனைச் 'சிவம்' என அழைப்பதில் வள்ளலார்க்கு விழைவு மிகவுண்டு. ஆயினும் சைவ சித்தாந்தத்தில் கூறப்படும் 'பரசிவம்' என்பது பரவெளியில் நடமிடும் இறைவனின் இடதுகாற் சிறுவிரலில் ஒட்டிய தூசியில் ஒரு சிறு துகளே என்று தன் அனுபவத்தால் உணர்ந்து கூறுகின்றார். வள்ளலார் கூறும் 'சிவம், எல்லாச் சமயங்களுக்கும் தத்துவங்களுக்கும் உரிய ஒரே ஒரு தனி முழுமுதலாகும், தனித்தனிச் சமயங்கள், தத்துவங்கள் யாவும் முயன்றும் எட்டாத மிகப் பெரும் நிலையினனாகிய பேரிறைவனையே அவர் 'சிவமாகவும், அருட்பெருஞ்ஜோதியாகவும்' காணுகின்றார்.

சுருக்கமாகக் கூறுவதெனில், "உயிர்கள் அருட் பெருஞ் சோதியாகிய இறையிடம் அருட்பெரும் சோதியைப் பெற்றுத்தாமும் அருட்பெரும் சோதியாகி விடுவதே" வள்ளலார் வகுத்த சன்மார்க்கமாகும்.

அருள்நெறியினால் ஒருவன் தன்னை உலகு எங்கும் கலந்துள்ள 'ஒளி' யாகக் காண்கின்றான். இவ் அருளுறவால் இறையோடு உறவுடையவன் என என்னும் மனப்பக்குவம் வாய்க்கின்றது. சீவான்மாவினுள் பரமான்மாவாக இருக்கும்-- உயிருக்குள் உயிராக இருக்கும்-இறையை உணர்ந்து, தனக்குள் உள்ள உள்ளொளியாகவே இறையை நாடுகிறான். அவ் உள்ளொளிக்கும் உள்ளொளியாகவே இறைவன் இருப்பதை அவனால் உணர முடிகின்றது. கண்ணுக்குப் புலப்படும் புற ஒளி; கருத்துக்குக் காட்சியாகும் அக ஒளி; உள்ளத்தால் மட்டுமே உணரப்படும் உள்ளொளி. இவற்றுள் புறஒளி அகஒளிக்குள் அடக்கம் அக ஒளியோ உள்ளொளிக்குள் ஒடுக்கம். அவ் உள்ளொளியை அனுபவிக்கலாமே தவிரப் புறத்தார்க்குப் புலனாக எடுத்துரைக்க இயலாது என்பர். இவ் உள்ளொளியையே வள்ளலார் 'அருட்பெருஞ்சோதி' என அழைக்கின்றார்.

"சோதியுட் சோதியுட் சோதி என்னைச்
சிவவெளிக்கு ஏறுஞ் சிகரத்தில் ஏற்றிச்
சிவமாக்கிக் கொண்டது பாரீர்"

சோதிக்குள் இருக்கும் சோதிக்குட் சோதியான இறையைப் பொதுவாக உணரலாமேயன்றித் தனித்து நோக்கி அறிய இயலாது என்றும் உள்ளத்தால் உணர்த்தறியலாமேயன்றி அளவை முதலிய தருக்கநெறிகளால் அளந்தறிய முடியா தென்றும் விளக்குகின்றார்.

"பொதுவுளர் உணரும் போதலால் பிரித்தே
அதுவெனில் தோன்றா அருட்பெருஞ் சோதி" திரு. 6.1 121

"உளவினில் அறிந்தால் ஒழியமற்று அளக்கின்
அளவினில் அளவா அருட்பெருஞ் சோதி" திரு. 6.1 722

இச் சோதியே சிற்றம்பலத்தில் நடமிடும் எம்பெருமான் என்றும் தெளிவுபடுத்துகிறார்.

"என்றன்
அப்பனைச் சிற்றம்பலத்து என் அருட்பெருஞ்
சோதியைப் பெற்றேன்" திரு 6:47:3.

இவ் இறைவனிடமிருந்து இப்பெருஞ் சோதியை உயிர்கள் பெற்று உய்தல் வேண்டும். தனக்குச் சோதி வடிவினனாகிய இறைவன் சோதியினை நல்கியதை அவரே மனமகிழ்ந்து கூறுகின்றார்.

"அமரரும் முனிவரும் அதிசயித் திடவே
அருட்பெருஞ் சோதியை அன்புடன் அளித்தே
கமமுறு சிவநெறிக்கு ஏற்றிஎன் தனையே
காத்து எனது உளத்தினில் கலந்தமெய்ப்பதியே." திரு. 6:101:18

அச்சோதியைப் பெற்றதால் பயன் என்ன? வெயில் ஒளியால் பொருள்கள் கெடாவாறு பதப்படுத்தப்படுதல்போல, இவ் அருள் ஒளியால் ஆன்மாக்கள் பதப்படுத்தப்படுகின்றன. தன்னை அவ்வாறு இறைவன் வேதித்தகை--பதப்படுத்தியதை வள்ளலார் விளக்கில் கூறுகின்றார்.

"தன்னையே எனக்குத் தந்து அருள்ஒளியால்
என்னை வேதித்த என்தனி அன்பே" திரு. 6:1:1479-80

இங்ஙனம் வேதிக்கப்பெற்றதால் தாமே அருட்சோதி வடிவாகி விட்டதை அவர் முரசறைந்து அறிவிக்கின்றார்:

"அருட்சோதி ஆனேன்என்று அறையப்பா முரசு
அருளாட்சி பெற்றேன் என்று அறையப்பா முரசு"

இவையனைத்தையும் தொகுத்துத் தாம் பெற்ற அனுபவத்தைக் கூறும் இடமும் உண்டு. தாயாகவும் தந்தையாகவும் விளங்கும் அருட்பெருஞ்ஜோதி, அருட்பெருஞ் சோதியாகிய அமிழ்தத்தைத் தனக்குத் தந்து, அழிவற்றதோர் 'மரணமில்லாப் பெருவாழ்வாகிய' அருட்பெருஞ் சோதிச் செங்கோலும் கொடுத்து அரசாட்சி நல்கியது என வியந்து பாடுகின்றார்.

"அருட் பெருஞ் சோதிஎன் அம்மேயினேடு அறிவு, ஆனந்தமாம்
அருட் பெருஞ் சோதிஎன் அப்பன்என் உள்ளத்து அமர்ந்து அன்பினால்
அருட் பெருஞ் சோதித்தெள்ளார் அமுதம் தந்து அழிவற்ற ஓர்
அருட்பெருஞ் சோதிச் செங்கோலும் கொடுத்தனன் அற்புதமே."
திரு. 6:118:4

சோதியானது (ஆன்மா) சோதியை (இறையை) நாடி சோதித்துணையால் (அருளால்) சோதியாவதே (இறைமை) 'அருட் பெருஞ்சோதித் தத்துவம்' என்று முரசு அறையத் தோன்றுகின்றது.

இறைவனை ஒளிவடிவினனாகக் காண்பது நமக்குப் புதுமையன்று; மரபு வழிப்பட்டதேயாகும்.

"உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டா அங்கு
ஓஅற இமைக்கும் சேண்விளங்கு அவிர்ஒ" திருமுருகு 1:-3

என நக்கீரர் கோலமயில்மீது ஏறிவரும் சேயோனைச் சித்தரித்துக் காட்டியுள்ளார் அன்றோ? அருட்பத்தில் மாணிக்கவாசகர், "சோதியே சுடரே சூழ்ஒளி விளக்கே" என்று பரவினார் அன்றோ? தாயுமானவ அடிகளும் "அங்கிங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்தமூர்த்தியாகி அருளொடு நிறைந்தது எதுவோ அதுவே இறை" என உணர்த்தினார் அன்றோ? ஆனால் வள்ளலார் பெருமான் 'சோதி' என்பதைக் குறியீட்டுப் பொருளோடு ..... படிமப்பொருள் உணர்வோடு படைத்து இக் கருத்திற்கு (concept) ஒரு முழுவடிவம் தந்துள்ளமையை நாம் உணர்தல் வேண்டும்.

வள்ளலார் **அருட்பெருஞ்சோதி** யாகும் தன்மையை--படிமுறை வளர்ச்சியை வாதவூரடிகளிடம் கண்டு பாராட்டும்போது சோதிவடிவாவதென்பது எது என நமக்கு விளங்கி விடுகிறது.

"**அன்புருவம்** பெற்றதன்பின் அருளுருவம் அடைந்துபின்னர்
**இன்புருவம்** ஆயினைநீ எழில்வாதவூர் இறையே" திரு. 4:12

அன்புருவம் சுத்த தேகம்; அருளுருவம் பிரணவதேகம்; இன்புருவம் ஞானதேகம் என்பர். வள்ளலார் இறையை 'ஞானதேகம்' உடைய தென்பர். எனவே ஆன்மா 'ஞானதேகம்' பெறுவதென்பது இறையோடு இரண்டற ஒன்றுவதே யாகும். எவ்வுயிரும் தம்முயிரெனக் கருதும் கருணை ஒழுக்கத்தையும் ஆன்மநேய ஒருமைப்பாட்டையும் கைக்கொண்டு இறைவனை நாம் இடையறாது வணங்கிவந்தால் நமது உடம்பு தூய உடம்பாகி அன்புருவாக அமையும். அவ் அன்புருவே முதிர்ந்து அருளுருவாகும். இவ்வுரு அமையும் போது திருவருள் முழுமையாகி அனுபவமாகும் என்பர். இது 'சிவதுரியம்' எனப்படும் என்றும் அப்போது எங்கும் பேரொளி மயமாக இருக்கும் என்றும் கூறுவர். இதற்கு மேற்பட்டது இன்புருவம் ஆகும். ஆண்டவர்க்கு ஓர் உருவம் உண்டெனில் அது 'இன்புருவமே' யாகும். 'சச்சிதானந்தம்' என்ற முப்பொருள் தன்மை உணர்வாலும் இறைவனை விளக்குவதில் வள்ளலார்க்கு ஈடுபாடு உண்டு "சத்தாகிச் சித்தாகி இன்பமாகி" (மகா:3) என்பதுபோல நித்தியப் பொருளாகியும் அறிவுவடிவதாகியும் இன்புவுருவாகியும் திகழும் இறைவனை தத்துவ அடிப்படையில் அவர் விளக்குவார். எனவே "அருட்பெருஞ்சோதி" என்னும் வடிவம் அன்புருவாய்த் தொடங்கி அருளுருவாய் வளர்ந்து இன்புருவாய் நிறைவதே என அவர் வாக்கால் அறிகின்றோம்.

"எங்கே கருணை இயற்கையில் உள்ளன
அங்கே விளங்கிய அருட்பெருஞ் சிவமே." திரு. 1:961

கருணைக்கும் சோதிக்கும் உள்ள கருத்தொற்றுமையை இங்கே நாம் காண்கின்றோம். ஏனெனில் கருணையுள்ள இடமே சோதி அல்லது சிவம் உள்ள இடம் எனத் தெளிவாகக் கூறுகின்றார். இறைவனைச் 'சோதி' என்றதனால் அவன் நடமிடும் பொதுவை உயிர்களே என உருவகப்படுத்துகின்றார்.

"உயிரெலாம் ஒருநீ திருநடம் புரியும்
ஒருதிருப் பொதுவென அறிந்தேன்" திரு. 6:132:75

இதனை இன்னும் விளக்கமாகக் கூறும் இடமும் உண்டு.

"எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்
தம்முயிர்போல் எண்ணி எவ்வுயிரும்
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்
யாவர்அவர் உளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடமெனநான் தெரிந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடவென்
சிந்தைமிக விழைந்த தாலோ" திரு. 6:121:2

இதிலிருந்து 'அருட் பெருஞ்சோதி' என்ற தொடர்ப் பொருள் நமக்கு விளக்கமாகின்றது. அருளே வள்ளலாரிடம் சோதியாக உருவகப்படுகின்றது. உயிர்கள் எல்லாம் 'பொது' வாக சிற்றம்பலமாக விளங்குகின்றன; ஆங்கே 'சோதி' வடிவான இறைவனின் நடம் என்பது அவனது, அருட்செயல்களேயாகும். ஆங்குள்ள இறைவனும் அருட்சோதி வடிவினனே. உயிர்கள் அருள்செய்து பழகி, அருள்மயமாகி, அருளிற் கலப்பதையே வள்ளலார் 'அருட்பெருஞ்சோதி தனிப்பெருங் கருணை' என்ற தொடரில் வைத்து விளக்கியுள்ளார்.

"நம்முடைய தலைவராகிய கடவுளை நாம் அடைவதற்கு அவர் எழுந்தருளியிருக்கும் கோட்டையின் சாவியாகிய அருள்வேண்டும். இவ்வருளை அன்பினால் அல்லது வேறுவகையால் அடைவது அரிது" என்று அவர் கூறுவதினின்றும் இதனை அறியலாம். இதனை மேலும் ஒருசான்று காட்டியும் நிறுவுதல் கூடும். ஆன்ம ஒழுக்கம் பற்றி விளக்கவந்த அடிகள் "யானைமுதல் எறும்பு ஈறாகத் தோன்றிய சரீரங்களிலுள்ள ஜீவான்மாவே திருச்சபையாகவும், அதனுள் பரமான்மாவே பதியாகவும் கொண்டு, யாதும் நீக்கமற எவ்விடத்தும் பேத மற்று எல்லாந்தானாக நிற்றல்" என்று கூறுகின்றார்.

அருளைச் சோதியாகக் கண்ட வள்ளலார், அஃதே உலக இயற்கை எனக் கொண்டார். எம்மதத்தவரும் போற்றும் 'அருள் நெறியே' சமரச சன்மார்க்க நெறி என்று எண்ணினார். "தனித்தலைமைப் பெரும்பதியாகிய பெருங்கருணைக் கடவுள் இயற்கை உண்மையர்; இயற்கை அறிவினர்; இயற்கை அன்பினர்;" என அவர் விளக்குவார்.

இயற்கையுண்மைத் தனிப்பெரும் பொருள் என இறைவனையும் இயற்கை விளக்கம் தனிப்பெரும்பதம் என சத்திய ஞானசபையினையும் இயற்கை இன்பத்தனிப் பெரும் சுகம் என இறை அனுபவத்தையும் அவர் சுட்டுவார். இயற்கை உண்மை நிறைவான சுத்த சிவ அனுபவ வெளியே இறைவனின் இடமாகும். இயற்கை விளக்க நிறைவான அருட்பெருஞ்சோதி வடிவமே இறைவனின் உருவமாகும். இயற்கை இன்ப நிறைவாகி ஓங்கிய சிவானந்த ஒருமைத் திரு நடனமே இறைவனின் செயலாகும். இவ்வாறு 'அருளைச்' சோதி வடிவாகக் கண்டு, அஃதே உலக இயற்கை என விளக்கும் வள்ளலார், இறையுண்மையைக் காட்டக் கையாளும் பிறிதோர் உத்தியையும் இங்குக் காண்போம்.

படிப்அரகன் திருக்குறுந்தொகையில்

"மனிதர்காள்! இங்கேவம்! ஒன்று சொல்லுகேள்!
கனிதந்தாற் கனி உண்ணவும் வல்லிரே?
புனிதன் பொற்கழல் ஈசன் எனும்கனி
இனிது சாலவும் ஏசற்றவர்கட்கே"

என்று பாடிச்சென்றார். அவர் கூறிய 'ஈசன் எனும் கனி' வள்ளலாரிடம் புதுமையும் பொலிவும் பெறுகின்றது. "கோட்டையிலே இளைப்பாற்றி கொள்ளும் வகை கிடைத்த குளிர்தருவாய்; தருநிழலாய்; நிழல் கவிந்த கனியாய்க்' காணும் வள்ளலார் இவ்வுருகத்தைத் தம் பாடல்களில் பல இடங்களில் அழகுறப் பயன்படுத்தியுள்ளார். மகாதேவ மாலையில் இதனை முற்றுருவகமாக்கி அவர் மகிழ்கின்றார்.

"பேதம்உறா மெய்ப்போத வடிவமாகிப்
பெருங்கருணை நிறம்பழுத்துச் சாந்தம் சின்மயமாய்
சீதமிகுந்து அருள்கனிந்து கனிந்துமாறாச் சின்மயமாய்
நின்மமலே மணந்து நீங்கா
ஆதரவோடு இயன்மவுனச் சுவைமேன்மேற் கொண்டு
ஆனந்தரசமொழுக்கி அன்பால் என்றுஞ்
சேதமுறாது அறிஞருளம் தித்தித்து ஓங்கும்
செழும் னிதக் கொழுங்கனியே தேவதேவே. (மகா. 44)

அருள்கனிந்து கனிந்து--அன்பால் என்றும் சேதமுறாது திகழும் கனி என இறைவனை ஏத்தும் இயல்பு நோக்கத்தக்கது. வள்ளலார் இறைவனை "அருள் உருவாகக் காண்பதையே" சோதிப் படிமமும் கனியுருவகமும் காட்டுகின்றன.

அவரது 'திருவடிப்புகழ்ச்சியும்' 'மகாதேவமாலை'யும் கற்று உணரத்தக்கன. இதுவரை தமிழ்ப்பத்திமை இலக்கியம் போற்றிவந்துள்ள இறையுண்மைகளைப் புதிய கண்ணோட்டத்துடன் விளக்கும் திறம் வியக்கற்பாலது. இறைவனைத் தத்துவப் பார்வையிலும் விளக்குகின்றார்; இலக்கிய நயத்தோடும் எடுத்துக்காட்டுகிறார். முன்னையோர் போலத் தாயாகப் பாவித்தும் பாடுகின்றார்; கணவனாகக் கொண்டும் பல இடங்களில் கருத்தொன்றிய காதலை வெளிப்படுத்துகிறார்.

அவர் காட்டும் இறைவன் "வேதாந்த நிலையாகிச் சித்தாந்தத்தின் மெய்யாகிப் பின் அவற்றையும் கடந்து சமரசத்தின் விவேகமாகத் திகழ்பவன்;

"அளவையெல்லாம் கடந்து, மனங்கடந்து, மற்றை அறிவையெலாம் கடந்து, கடந்த மலயோகர் உளவையெலாம் கடந்து, பதங்கடந்து, கடந்து நிற்கும்" கடவுளாவான்;

"வன்பு கலந்தறியாத மனத்தோர் தங்கள் மனங்கலந்து, மதிகலந்து வயங்காநின்ற என்பு கலந்து ஊன் கலந்து புலன்களோடும் இந்திரியம் அவைகலந்து உள்ளியங்குகின்ற அன்பு கலந்து அறிவு கலந்த" இறையாவான்.

"சொல்லொழியப் பொருளொழியக் கரணமெல்லாம் சோர்தொழிய உணர் வொழியத்" தனித்து வேறாகி நிற்பவனுமாவான்;

"கருணையெனும் பழம்பழுத்த வான்தரு" ஆவான்.

"சொற்போதற்கு அரும்பெரிய மறைகள் நாடித் தொடர்ந்து அயர்ந்து இணைத்துத் துலங்கி ஏங்கிப் பிற்போத--தான் விரைந்து அன்பர் உளத்தே சென்ற பெருங்கருணைப் பெருவாழ்வு" ஆவான்.

சமயங்களையும் கடந்த 'ஒரே கடவுளைக்' கண்ட பெருமை தமிழ்ச் சான்றோர்க்கு உண்டு எனினும், அதனை ஒரு கோட்பாடாக ஆக்கிக் காட்டிய பெருமை வள்ளலாருக்கே உண்டு எனலாம்.

"பொங்குபல சமயமெனும் நதிகள் எல்லாம்
புகுந்து கலந்திட நிறைவாய்ப் பொங்கி ஓங்கும்
கங்குகரை காணாத கடலே! எங்கும் கண்ணாகக்
காண்கின்ற கதியே! அன்பர்
தங்க நிழல் பரப்பி, மயல்கோடை எல்லாம்
தணிக்கின்ற தருவே! பூந்தடமே! ஞானச்
செங்குமுதம் மலரவரும் மதியே! எல்லாம் செய்யவல்ல
கடவுளே தேவ தேவே!! (மகா:48)

இவ்வாறு கடவுளை நவநிலைகளைக்கடந்தவராகவும் ஆறு அந்தங்களைக் கடந்தவராகவும் ஏனைய கடவுளரின் தெய்வ நிலைகளையெல்லாம் கடந்தவராகவும் வேதாந்தமாகவும் சித்தாந்தமும் காட்டும் தனித்தனி முதன்மைக்கும் அப்பாற்பட்டவராகவும் எல்லாச் சமயங்கட்கும் பொதுவானவராகவும் உணர்ந்து அனுபவிக்கப்படுபவராகவேயல்லாமல் எவ்வாற்றாலும் அறியமாட்டாதவராகவும் அருட்பெருஞ் சோதியாம் தனிப்பெருங்கருணை வடிவுடையவராகவும் உலகில் உள்ள உயிர்கள் அனைத்தும் உய்யும் அருள்வழிகாட்டுபவராகவும் வள்ளலாரால் விளக்கப்பெற்றுள்ளமை அவரது திருவருட்பாவைக் கற்றுணர்ந்தார்க்குத் தெள்ளிதிற் புலனாகும்.

## 5. வள்ளலாரும் வாதவூரரும்

--ம. இராமகிருஷ்ணன்

முத்திக்கு வித்தாகும் தமிழ்நாட்டில் வாழையடி வாழையென வந்த போருளாளர் திருக்கூட்ட மரபு பேராறாகா அன்று முதல் இன்று வரை பாய்ந்து கொண்டிருக்கிறது. அம்மரபில் வந்தோரனைவரும் 'நானார் என் உள்ளமார் என்ஞானங்களார்' என உள்ளாய்ந்து மெய்யுணர்வெய்தி, மரணமிலாப் பெருவாழ்வு பெற்றனர். இம்மரபில் தாமும் ஒருவராக 'அகத்தே கறுத்துப் புறத்தே வெளுத்து இருந்த உலகோர் அனைவரையும் சகத்தே திருத்திச் சன்மார்க்க சங்கத்திடைவித்தி' 'இறைவன் வருவிக்க' வந்தவதரித்தவர் அருட்சுடர் வள்ளலார். தமக்கு முன் ஞான மணம் பரப்பிய இறையருளாளரை வள்ளலார் தம் நூலுள் போற்றியுரைத்தார். அவருள்ளும் அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரையும் 'அருண்மாலை' என்னும் பதிகம் பாடிப் பரவுவாராயினர். நன்னெறி காட்டியருளிய இந்நால்வருள்ளும், 'இராமலிங்க சுவாமிகள் திருஞானசம்பந்தரைக் குருவாகக் கொண்டு, திருவாசகத்தைப் பொருணூலாகக் கொண்டு, முருகப் பெருமானைக் கடவுளாகப் போக்கி, யாண்டுங்கடவுள் நீக்கமற நிறைந்திருத்தலை உணர்ந்து, எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யாமை என்னும் அருளறத்தை வளர்த்து, அவ் வருணெறியே சமரச சன்மார்க்கமென்று தெளிந்து அம்மார்க்கத்தை உலகிற்கு அறிவுறுத்தி, இறுதியில் சாகாநிலையெனும் பெரு வாழ்வு பெற்றார். வடலூரார்க்கு வழிகாட்டியாக அமைந்த வாதவூரடிகளையும் அவர் தம் 'மலர்வாய்ப் பிறந்த வாசகத்தேனே'[1]யும் வள்ளலார் நோக்கில் நின்று ஆராய்தல் பெரிதும் பயனுடைத்தாம்.

1. இராமலிங்கர் திருவுள்ளம் - திரு. வி. க. பக்கம் 141.

**வாதவூராரிடம் வள்ளலார் கொண்டுள்ள ஈடுபாடு:**

மருதூர் மாமணி சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு நெறிகளிலும் நிலை நின்று இறையருளைத் துய்த்தவர் என்பதனை, 'அடியனாக்கிப் நேயனாக்கி அடிகளாக்கிக் கொண்டாயெனனை அகல நீக்கியே'[2], என்னும் அவர் மொழியாலறியலாம். இந்நெறிகளில் நின்றோர் முறையே அப்பர், சம்பந்தர், சுந்தரர், மணிவாசகர் ஆவர். ஈண்டுச்சம்பந்தரைக் குருவாயேற்றுக் கொண்ட வள்ளலார் வாதவூரார் தம் அனுபவங்களைத்தாம் அனுபவிக்க வேண்டும் என்று விழைதல் குறிப்பிடத்தக்கது.[3]

2. கீர்த்தனைப் பகுதி--மெய்யருள் வியப்பு--72.

3. தேசகத்தில் இனிக்கின்ற தெள்ளமுதே மாணிக்க
வாசகனே யானந்த வடிவான மாதவனே
மாசகன்ற நீ திருவாய் மலர்ந்த தமிழ் மாமறையின்
ஆசகன்ற அனுபவம் நான் அனுபவிக்க அருளுதியே.
--ஆளுடைய அடிகள் அருள்மாலை--1

வாதவூராரிடமும் வாசகத்திலும் இத்துணை ஈடுபாடு ஏனோ எண்ணில், 'மாணிக்கவாசகரின் பராமார்த்துகப் பெருவாழ்வு அவரைத் தவராஜன் ஆக்கியிருக்கிறது. மாணிக்கவாசகரது முன்னேற்றத்திற்கு அவரது நூலே அகசான்று ஆகின்றது. திருவாசகத்தில் எப்பகுதியை ஆராய்ந்து பார்த்தாலும் அது ஜீவனை சிவசொரூபமாக்கவல்லதாம்'. எனவே 'பூருவத்திலும் பொன்னடிக்கடிமைப்பதிய'[4] வைத்த வள்ளலார் மாணிக்கவாசகர் பால், அவர்தம் 'தமிழ் மாமறை'யின் பால் ஈர்க்கப்பட்டதில் வியப்பில்லையன்றோ!

---

4. திருவாசகம் -- சுவாமி சித்பவானந்தரின் முகவுரை

---

வள்ளலார் நோக்கில் வாதவூரர்:

மாணிக்கவாசகர் தத்துவப்படிகளில் ஒழுங்காக ஏறிச்சென்பறு பிறவாப் பெருநிலை எய்தியவர். அவர்தம் அனுபூதிப்பெருமை, அருளனுபவங்கள், அம்பலத்தரசன் அருளால் அவர் வாழ்வில் நிகழ்ந்த அற்புதச் செயல்கள் அனைத்தையும் உணர்ந்து பலவாறு புகழ்ந்து பாடுகின்றார் வள்ளலார்.

அடியார்கள் மெய்யுணர்வுஎய்தி இறைவன் திருவடியிற்சென்று கலத்தல் உண்டு. ஆனால் மணிவாசகர் நிலை அதுவன்று என்கின்றார் இராமலிங்கர். இறைவனே வந்து கலந்து கொண்டானாம். மணிவாசகரின் ஊனிற்கலந்து, உணர்வில் நிறைந்து, அவரை வெளியாக்கி, பரவெளியாய்த் திகழும் பரமன் தானே சென்று கலந்தான் என்னில் இப்பேறு எவர்க்கே வாய்க்கும். இந்த அருட்காட்சியை வள்ளலார் சொல்லோவியத்தால் காண்டல் நலம்.

மெய்யுணர்ந்த வாதவூர் மலையைச் சுத்த
　　வெளியாக்கிக் கலந்து கொண்டவெளியே முற்றும்
பொய்யுணர்ந்த எமைப்போல் வார் தமக்கு இன்பம்
　　புரிந்தருளும் வள்ளப் பொற்பே அன்பர்ச்
கையுறைந்து வளர் நெல்லிக்கனியே யுள்ளங்
　　கரைந்து கரைந்துருக அவர் கருத்தினூடே
உய்யுநெறியொளி காட்டிப் புறம்புமுள்ளும்
　　ஓங்குகின்ற சுயஞ்சுடரே உண்மைத்தேவே.[5]

---

5. திரு அருட்பா -- மகாதேவமாலை -- பக். 52

---

இப்பாடலில் "கையில் ஆமலகக்கனி போன்ற என் ஐயனே" என்ற திருவாசகத் திருவாக்கு அன்பர் கையுறைத்து வளர் நெல்லிக்கனியாக, வள்ளலார் வாக்கில் எதிரொலிக்கின்றது.

தம் பொருட்டு இறைவன் பிட்டுக்கு மண் சுமந்து, பிரம்பால் மொத்துண்டு அருள் நலங்காட்டியதைத் திருஅம்மானையில் மாணிக்க வாசகர் பாடிக் கசிந்துருகுகின்றார்.[6] "தாவுறுதற்--கண் சுமந்தான் அன்பன் கலங்கா வகை வைகை மண்சுமந்தான் என்றுரைக்கும் வாய்மை" யுணர்ந்து நெஞ்சுநெக்குருகிய வள்ளலார் இச் செய்தி கேட்டுத் தம் நெஞ்சு இடிபட்டது; வாதவூரர் உள்ளம் என்பட்டதோ என்று கலங்குகின்றார். கலக்கமேலீட்டால் தில்லையாடியிடம்,

---

6. பண்சுமந்தபாடல் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன் மண்டலத்தீசன்
கண்சுமந்த நெற்றிக்கடவுள் கலிமதுரை
மண்சுமந்த கூலி கொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்
--திரு அம்மானை--8.

---

"வன்பட்ட கூடலில் வான்பட்ட வைகை வீம்பிட்டநின்
பொன்பட்ட மேனியில் புண்பட்ட போதில் புவிநடையாம்
துன்பட்ட வீரர் அந்தோ வாதவூரர் தம் தூய நெஞ்சம்
என்பட்டதோ இன்று கேட்ட என்நெஞ்சம் இடிபட்டதே[7]

---

7. திருவருண்முறையீடு--81

---

என்று முறையிடுகின்றார்.

மாணிக்கவாசகர்க்காக இறைவன் குதிரைச் சேவகனாக எழுந்தருளியதை

"மாவாரவேறி மதுரை நகர்புகுந்தருளித்
தேவார்ந்த கோலம் நிகழ"

என்றும்,

'பொன்னை யழித்த நன்மேனி புகழிற் றிகழுமழகன்
மன்னன் பரிமிசை வந்த வள்ளல்'

என்றும் திருவாசகம் பாடும். அங்ஙனம் அடிகட்காகப் பரிமேலழகனாய்த் தனக்குக் காட்சி தரவேண்டுகின்றார் வடலூரார்.[8]

---

8. திருவாதவூரெம் பெருமான் பொருட்டன்று தென்னன் முன்னே
வெருவாத வைதீகப் பாய்பரிமேற்கொண்டு மேவிநின்ற
ஒருவாக கோலத்து ஒருவா அக்கோலத்தை உட்குளிர்ந்த
கருவாத நீக்கடக்காட்டுகண்டாய் என்கனவினிலே
--திருவருண்முறையீடு--131.

வேதங்கள், 'ஐயா என ஓங்கி ஆழ்ந்த கண்ணுண்ணுயன்' குருவடிவாகிக் குருந்த மர நிழலில் மணிவாசகரை ஆட்கொண்டு அருளுரைசெய்தது தான் யாதோ என்று மணிச்சுடராம் இறைவனையே வினவுவார் வள்ளலார்.

வேதமுடிவோ விளங்காகம முடிவோ
நாதமுடிவோ நவில்கண்டாய்--போதமுறு
மாசகர்க்குள் நில்லா மணிச்சுடரே மாணிக்க
வாசகர்க்குநீ யுரைத்தவாறு.[9]

9. சிவநேசவெண்பா--46.

"நாதமுடிமேலிருக்கும் வெண்ணிலாவே அங்கு
நானும் வரவேண்டுகின்றேன்"[10]

10. வெண்ணிலாக்கண்ணி.

என்பது வள்ளலாரின் வேட்கையன்றோ?

தில்லையில், வாசகத்திற்குப் பொருள்கேட்க, இறைவனே பொருள் எனக்காட்டிக் கூத்தாடும் பெருமானின் குரைகழலிற்கூடினர் வாசகர். அந்நிலை ஞான தேகத்துடன் இரண்டறக் கலந்த பெருநிலை என்பர் தேவார ஆசிரியர் மூவரும். மணிவாசகரும் சாகாக்கலை எய்தி உடலுடன் மறைந்து இறைவனுடன் ஒன்றிய பெருமக்களே. அவர் தம் சித்தினைப் பின் வரும் அட்டவணையால் எளிதில் உணரலாம்.[11]

11. இராமலிங்க அடிகள் வரலாறு--பக்கம் 526.

| | | | | |
|---|---|---|---|---|
| சுத்ததேகம் (அன்புருவம்) | ஒளி வடிவம் | உருவ சித்தி | பொற்சபை அனுபவம் | சுந்தரர் |
| பிரணவதேகம் (அருளுருவம்) | ஒலி வடிவம் | அருவுருவ சித்தி | சிற்சபை அனுபவம் | சம்பந்தர் அப்பர் பட்டினத்தார் |
| ஞானதேகம் (இன்புருவம்) | வான் வடிவம் | அருவ சித்தி | ஞானசபை அனுபவம் | மாணிக்கவாசகர் வள்ளலார் |

சுத்ததேகம், பிரணவதேகம், ஞானதேகம் என்ற மூன்று வகையுடனையே வள்ளலார் அன்புருவம், அருளுருவம், இன்புருவம் என்பர்.[12] மேலும், வாதவூரண்ணல்

12. மன்புருவ நடுமுதலா மனம்புதைந்து நெடுங்காலம்
என்புருவாய்த் தவஞ்செய்வார் எல்லாரும் ஏமாக்க
அன்புருவம் பெற்றதன்பின் அருளுருவம் அடைந்து பின்னர்
இன்புருவ மாயினைநீ எழில்வாத வூரிறையே.
ஆளுடைய அடிகள் அருண்மாலை-3

'தேடுகின்ற ஆனந்தச் சிற்சபையில் சின்மயமாய்
        ஆடுகின்ற சேவடிக்கீழ்' ஆடுகின்றதாகவே

வடலூரார் குறிப்பிடுவர்.

**வாசகத்திற்கு வாழ்க்கைப்பட்ட வள்ளலார்:**

சாத்திரங்களில் சிறந்தது திருமூலர் திருமந்திரம்; தோத்திரத்தில் சிறந்தது திருவாசகம்,[13] என்றும் திருவாசகம் என்பது மெய்ப்பொருள் நிரம்பிய வார்த்தை, மெய்ப்பொருளைத் தரும் வார்த்தை[14] உளடுகுக என்றும் உரைத்தருளினார் வள்ளலார்.

13. திருஅருட்பா-உபதேசப் பகுதி பக்கம் 42-பா.பி.பதிப்பு.
14. திருஅருட்பா-உபதேசப் பகுதி பக்கம் 108-பா.பி.பதிப்பு.

முதலிரவு நாளன்று, 'கங்குலின் எல்லை காண்பளவும்' ஊனுருக விழி நீர் பெருக்கியவாறே திருவாசகத்தை ஓதிய வண்ணமிருந்தனர் வடலூரார், மணத்தில் நாட்ட மில்லை யெனினும் வினைகாரணமாகவோ இறைவன் அருட்செயலாலோ ஒருத்தியைக் கைதொட நேர்ந்ததென்றும் தொட்டதன்றிக் கலந்ததில்லை என்றும் இறைவனிடம் விண்ணபித்துக்கொள்கின்றார்.

முனித்த எவவ் வினையோ நின்னருட்செயலோ
        தெரிந்திலேன் மோக மேலின்றிக்
தனித்தனி ஒருசார்மடந்தையர்தமக்குள்
        ஒருத்தியைக் கை தொடச் சார்ந்தேன்
குனித்த மற்றவரைத் தொட்டனன் அன்றிக்
        கலப்பிலேன் மற்றிது குறித்தே
பனித்தனன் நினைத்ததோறும் உள் உடைந்தேன்
        பகர்வதென் எந்தை நீ அறிவாய்.[15]

15. பிள்ளைப் பெருவிண்ணப்பம்--43.

இவ்வாறு கூறிய வள்ளலார், 'வான் கலந்த மாணிக்க' வாசகரின் வாசகத்தில் தாம் கலந்து, தன் ஊன் கலந்து, உயிர்கலந்து மகிழ்ந்ததாகவும், அவ்வேளையில் "நற்கருப்பஞ்சாற்றினிலே, தேன் கலந்து பால் கலந்து, செழுங்கனித்தீஞ்சுவை கலந்து" உவட்டாத இன்பம் அனுபவித்ததாகக் கூறி மகிழ்வார்.[16] ஆம். வள்ளலார் திருவாசகத்திற்கு வாழ்க்கைப்பட்டுவிட்டவர். மேலும், தாம் வாழ்க்கைத்துணை கலப்பறியாது வாசகத்திற் கலந்தமைக்குக் காரணமும் கூறுகின்றார். அவர் வாக்கில் கேட்பது பொருந்தும்:

16. ஆளுடைய அடிகள் அருண்மாலை--7

சேமமிகும் திருவாத வூர்த்தேவென்றுலருபுகழ்
மாமணியே நீயுரைத்த வாசகத்தைஎண்ணுதொறும்
காமமிகுகாதலன்றன் கலவிதனைக் குலவுகின்ற
ஏமமிகுகற்புடையாள் இன்பினும் இன்பெய்துவதே.[17]

17. ஆளுடைய அடிகள் அருண்மாலை--6

"வாசகத்தில் ஒருமொழியே என்னையும் என் உடையனையும் ஒன்றுவித்துத் தரு மொழியாம்[18]; அது 'குருமொழி' யாம் என்று போற்றியருள்வர் இராமலிங்கர். திருவொற்றியூரில் தியாகேசர் சந்நிதியில் நின்று திருவாசகத்தைப் பாடிக்கசிந்துருகுவார்.[19]

18. ஆளுடைய அடிகள் அருண்மாலை--8.
19. இராமலிங்க அடிகள் வரலாறு--ஊரன் அடிகள், பக்கம் 54,55.

ஒருநாள் வையாகாணி தார்க்கர்களாகிய இரண்டுவித்வான்கள் மேட்டுக்குப்பம் வந்து சுவாமிகளை அடுத்த 'திருவாசகத்தில் முதல் சிவபுராணத்திற்கு உரை செய்ய வேண்டும்' என்று கேட்க, வள்ளலார் 'சொல்லிவோம் கேட்கத்திறம் உண்டோ' என்று கூறி,

சிவபுராணத் தொடக்கத்தில் உள்ள 'நமச்சிவாய' என்பதில் முதல் எழுத்தாம் 'ந'கரத்தைப்பற்றி அறுபத்து நான்கு இலட்சணங்களை கூறினார். அப்போது அருகிருந்த தொழுவூர் வேலாயுதனார் அதற்கு மேல் உணரும் ஆற்றல் அற்றவராகக் காணப்படவே, 'முதலியாரைப்பாவுங்கைவிட்டார்' என்றனர்.[20] திருவாசகத்தில் எழுத்துக்கெழுத்து வள்ளலார் தோய்ந்து அனுபவித்தவர் என்பதுடன், சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் எனும் திருவாசகத்திற்கு[21] வள்ளலாரே ஒப்பறியா எடுத்துக்காட்டு என்பதும் பெறப்படுகின்றதன்றோ?

20. திருஅருட் பிரகாச வள்ளலார் திவ்விய சரித்திரம்--பக்கம்-61.
21. திருவாசகம்--சிவபுராணம்--93.

திருவாசகம் என்னும் மாமேருவின் கொடுமுடிகள் எனப் போற்றத்தக்கவை சிவபுராணம், கீர்த்தித் திரு அகவல், திருவன்பகுதி என்பன. 'உருஅண்டப் பெருமறை என்று உலகமெல்லாம் புகழ்கின்ற திருவண்டப்பகுதி' என்று வள்ளலார் போற்றுவது திருவண்டப்பகுதியாம். அதனுள் 'இரு என்ற தனியகவல் எண்ணமெனக் கியம்புதியே' என்ற வேண்டுதல் வினாவின் வாயிலாக மாணிக்கவாசகர் பெற்ற ஆன்மீக அனுபவத்தைப் போற்றிப் புகழ்ந்துரைக்கின்றார்.[22]

22. உருவண்டப் பெருமறையென் றுலகமெலாம் புகழ்கின்ற
திருவண்டப் பகுதியெனும் திரு அகவல் வாய் மலர்ந்த
குரு வென்றைப் பெருந்த வரும் கூறுகின்ற கோவேநீ
இரு என்ற தனியகவல் எண்ணமெனக் கியம்புதியே
-- ஆளுடைய அடிகள் அருண்மாலை--4.

வள்ளலாரின் சிறப்புரைக்குரிய திருவண்டப் பகுதியுள் வரும் அடிகள் பின்வருமாறு:

"அற்புதமான அமுதகாரைகள்
எற்புத்து ளைதொறும் ஏற்றினன் உருகுவது
உள்ளம் கொண்டு ஓர் உரூச் செய்தாங்கு எனக்கு
அள்ளூறாக்கை அமைத்தனன் ஒள்ளிய
கன்னற்களிதேர் களிறெனக் கடைமுறை
என்னையும் கருப்பதாக்கினன் என்னில்
கருணை வான்தேன் கலக்க
அருளொடு பரா வமுது ஆக்கினன்
பிரமன்மாலறியாப் பெற்றியோனே"[23]

23. திருவண்டப்பகுதி--174-182

திருவாசகம் இறைவனாலே மாணிக்கம் எனப் போற்றப்பட்ட பெற்றியுடையது என்பதை:-

'நற்றொண்டில் காணிக்கையாகக் கருத்தளித்தார் தம்மொழியை
மாணிக்கம் என்றுரைத்த வள்ளலெவன்'[24]

24. நெஞ்சறிவுறுத்தல்--153

என்று வள்ளலார் போற்றுகின்றார். திருவாசக மேற்கோள்கள் இராமலிங்கருடைய ஒழிவிலொடுக்க உரை, தொண்டமண்டல சதக உரை ஆகியவற்றில் இடம் பெற்றுள்ளன. திருவாசகத்துடன் திருஅருட்பாக் கருத்துக்கள் ஒன்றுபடுவதும், வாசகரின் சொல்லும் தொடரும் வள்ளலாரால் எடுத்தாளப்பெற்றபாங்கும் தனியே விளக்கப்பெறும்.

**வள்ளலார்--வாதவூரர்--அருளனுபவங்கள்:**

நம் சிந்தனைக்குரிய இரு பெரியார்களின் வாழ்க்கையிலும் காணப்படும் அருளனுபவங்கள் அனுபூதிச்சிறப்புக்கள் எண்ணிறந்தன; ஒற்றுமையுடையன. விரிவஞ்சிச்சுருக்கமாக ஈண்டுக்குறிக்கப் பெறும்.

வாதவூரர்க்காக இறைவன் நிகழ்த்திய மண்சுமந்த நிகழ்ச்சி, பரிச்சேவகனாக வந்தமை ஆகிய இரண்டும் முன் கூறப் பெற்றுள்ளன. தாம் திருவடிக்கை பெற்றதையும் ஐந்தெழுத்துபதேசம் பெற்றதனையும் பின்வரும் திருவாசகத் தொடர்களால் அறியலாம்.

'கண்ணார் கழல்காட்டி நாயேனையாட் கொண்ட
அண்ணாமலை யானைப் பாடுதுங்காண் அம்மானாய்'

'பேராசையாமிந்தப் பிண்டபறப் பெருந்துறையான்
சீரார் திருவடி யென்ற லைமேல் வைத்த பிரான்'

'நானேயோ தவஞ்செய் தேன்சிவாய நம

வெனப்பெற்றேன்'

'உய்யுநெறி காட்டுவித்தோங் காரத்துட்பொருளை
ஐயனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே'

அடிகளைத் தில்லைக்கு வரும்படியிறைவன் கட்டளையிட்டதனை,

'நாயினேனை நலமலி தில்லையுட்
கோல மார்தரு பொதுவினில் வருகென
ஏல என்னை யீங் கொழித் தருளி'

என்று குறிப்பிடுகின்றார் மணிவாசகர். மேலும் இறைவன் அட்டமா சித்தி யருளிய திறத்தை'

'பட்டமங்கை யில்பாங்காய் திறத்தை
அட்டமா சித்தி அருளிய அதுவும்'

என்ற அடிகள் விளக்குகின்றன.

யோக நெறியில் பயின்று நிலை நின்றார்க்குத் தச வித்நாதங்கள் கேட்கும் என்பது யோக நூல் முடிபு. அருணகிரிநாதர் தம் திருப்புகழில்,

'நா இன்ப ரஸமதான ஆனந்த அருவிபாய
நாதங்களொடுகுலாவி விளையாடி'[25]

25. 'ஞானங்கொள்'--திருப்புகழ் (பழனி)

என்று கூறுகின்றதுங்காண்க.

வாதவூரில் அடிகள் இறைவனின் பாதச்சிலம்பொலிகேட்டதைக் குறிப்பிடுகின்றார்.

'வாதவூரில் வத்தினிதருளிப்
பாதச்சிலம்பொலி காட்டியபண்பும்'[26]

26. 'கீர்த்தி திரு அகவல்'--பக்கம் 52,53.

என்பது அவர் வாக்கு.

இறுதியில் வாதவூரர் ஞான தேகத்துடன் இறையில் இரண்டறக் கலந்தனர். அதனையே வள்ளலார் 'இன்புருவமாயினை நீ எழில் வாதவூரிறையே' என்று பரவுவாராயினர்.

வள்ளற் பெருமானும் இறைவனால் ஆட்கொள்ளப்பெற்று உபதேசம் பெற்றவராவர். கண்ணாடியில் கண்ட கந்தவேள் தரிசனம் அவர் பெற்ற முதல் அனுபூதியாம்.

இருளற ஓங்கும் பொதுவிலே நடஞ்செய்
எங்குரு நாதனெம் பெருமான்
அருளெனும் வடிவங் காட்டி ஒண் முகத்தே
அழகுறும் புன்னகை காட்டித்
தெருளுற அருமைத் திருக்கையால் தடவித்
திருமணி வாய்மலர்ந்தருகில்
பொருளுற இருந்தோர் வாக்களித் தென்னுள்
புகுந்தனன்புதுமை ஈதந்தோ[27]

27. தனித்திருவிருத்தம்--46.

என்னும் பாடல் அவர் தக்கை பெற்ற பாங்கினைக் கூறும். வள்ளலாரும் திருச்சிலம்பொலி கேட்ட பெற்றிக்குப் பின்வரும் பாடல் சான்று பகரும்.

'தீட்டரும் புகழ்சேர் திருவடித்துணைகள்
செலுத்திய திருச்சிலம் பொலிதான்
கேட்ட போதிருந்த கிளர்ச்சியும் இந்நாள்
கிலேசமும் திருவுளம் அறியும்.'[28]

28. பிள்ளைப் பெரு விண்ணப்பம்--128

'சோதிமா மகுடம் சூட்டிய தந்தையே'[29]

29. அருட்பெருஞ்ஜோதி அகவல்--1130

எல்லாம் வல்ல சித்தெனக் களித் தெனக்குனை அல்லா நிலை எனும் அருட்பெருஞ்ஜோதி'[30] போன்ற திருஅருட்பா அடிகள் வள்ளலார் பெற்ற பெரும் பேறுகளைக் குறிப்பிடுவனவாம். இறைவன் அருளால் 'மன்னுகின்றபொன் வடிவம் மந்திரமாம் வடிவும் வான் வடிவும்' பெற்றவர் வள்ளலார்.[31]

30. அருட்பெருஞ்ஜோதி அகவல்--297, 298.
31. அருள் விளக்கமாலை--பக்கம் 61.

'தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னை
சங்கரா ஆர் கொலோ சதுரர்?[32]

32. கோயில் திருப்பதிகம்--10

என்று வாசகம் கூறுவதும்,

'என்னுடலும்என் பொருளும் என்னுயிரும் தான்கொண்டான்
தன்னுடலும் தன்பொருளும் தன்னுயிரும்--என்னிடத்தே தந்தான்'[33]

33. சுத்தசிவ நிலை -- 36

என்று அருட்பா முழங்குதலும் 'பசு கரணம் சிவகரணமான அனுபூதி' யை இருவரும் பெற்றமையை உணர்த்துவன.

வள்ளலாரும் தில்லையில் 'பெருநிலை' எய்தினர். ஆயின் ஒன்று சொல்வோம். வாசகர் தில்லையில் இன்புருவயினர். வள்ளலார் தில்லையின் எல்லையில் சித்திவளாகத்தில் சித்தி பெற்றவர். இருவருமே அருவசித்தி எய்திய ஞானமேனியினர். இருவரும் மெய்யுணர்வுக் காதலர்களாகத் தம்மை ஆக்கிக் கொண்டவர்கள். ஒருவர் நாயக நாயகி பாவத்தில் திருக்கோவையார் தந்தருளினார். இரண்டாமவர் இங்கிதமாலை எனும் பெரும்பகுதியையும் பல்வேறு சிறிய அகத்துறைப் பனுவல்களையும் அருளியவர். அகப்பொருளில் அருட்சுவையை வாரி வழங்கிய வள்ளலாயினர் இருவரும். வாசகர் ஆடுகின்ற சேவடிக்கீழ் ஆடுகின்ற ஆரமுதானால், வள்ளலார் நிச்சலும் பேரானந்த நித்திரை சொல்கின்ற வராயினர்.

**திருவாசகமும் திருஅருட்பாவும்:**

ஞானப் பனுவல்களாம் இவ்விரு நூல்களையும் ஒப்பிடத் தொடங்கின் அதுமிகப் பெரு நூலாகவே விரித்துசெல்லும் பாங்கினது. ஈண்டு கருத்தொற்றுமை, முந்தைய நூலினை இரண்டாவது நூல் எடுத்தாண்டுள்ள சிறப்பு, முந்து நூற்கருத்தை விளக்கும் தன்மையில் அமையும் பாடல்கள் என்ற அளவில் சில சான்றுகளே இக்கட்டுரையில் சுட்டப்பெறுகின்றன.

இறைவன் காரிய காரணத் தொடர்புக் கெல்லாம் அப்பாற்பட்டுச் செயலாற்றும் பெருமையன் என்பதனை,

'விச்சதின்றியே விளைவுசெய்குவாய்
விண்ணுமண்ணகம் முழுவதும் யாவையும்
வைச்சுவாங் குவாங்கிவாய்'[34]

34. திருச்சதகம்--ஆனந்ததாதீதம்--6

என்ற வரிகளில் காட்டுகின்றார் வாதவூரர்.

அதனை,

'வித்தொன்றுமின்றி விளைவித்தருள விக்கும்
சித்தொன்றும் வல்லவொரு சித்த னெவன்'[35]

35. நெஞ்சறிவுறுத்தல்--74

என்று வள்ளலார் வாக்கில் காண்கின்றோம்.

பத்தி வலையில் படுவோன் காண்க[36]

---

38. திருஅண்டப்பகுதி--42

---

என்பது திருவாசகம்

'அன்பெனும் வலைக்குட்படு பரம்பொருளே'[37]

---

37. திருஅண்டப்பகுதி--42

---

என்பது திருஅருட்பா

'நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வு மிலாப் புண்ணியனே'

என்பது வாசகவாக்கு.[38]

---

38. சிவபுராணம்--76--77

---

'போக்கும் வரத்துமிலாப் புண்ணியர்கள்
நோக்குந் திறத்தெழுந்த நுண்ணுணர்வாய்'[39]

---

39. நெஞ்சறிவுறுத்தல்--12

---

'நோக்கரிய நோக்கழகு'[40]

---

40. நெஞ்சறிவுறுத்தல்--210

---

இவை திருஅருட்பாத் தொடர்கள்.

'களக்கமற்பொதுநட நான்கண்டு கொண்டதருணம்
கடைச்சிறியேன்உளம் பூத்துக்காய்த்ததொரு காய்தான்
விளக்கமுறப்பருத்திடுமோ வெம்பி உதிர்ந்திடுமோ
வெம்பாது பழுக்கினும் என் கரத்திலகப் படுமோ
கொளக்கருது மலமாயைக் குரங்கு கவர்ந்திடுமோ
குரங்குகவரா தெனது குறிப்பிலகப் படினும்
துளக்கமற உண்ணுவனோ தொண்டை விக்கிக் கொள்ளுமோ
சோதி திருவுளம்எதுவோ ஏதும் அறிந்திலனே.'[41]

---

41. நெஞ்சறிவுறுத்தல்--210

---

என்னும் திருஅருட்பாப் பாடலுக்கு வித்தாக அமைந்தது பின்வரும் திருவாசகப்பாடலே.

'வழங்குகின்றாய்க்குன் அருளாரமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின்றேன் விக்கினேன் விளையேன்என் விதியின்மையால்
தழங்கருந்தேனன்ன தண்ணீர் பருகத்தந் துய்யக் கொள்வாய்
அழுங்குகின்றேன் உடையாய் அடியேன்உன் அடைக்கலமே'[42]

42. அடைக்கலப்பத்து--10

'சோதியேசுடரே சூழ் ஒளி விளக்கே'[43]

43. அருட்பத்து--10

'அருட்சுடரே அருள் விளக்கே அருட்ஜோதிச்சிவமே'[44]
--திருஅருட்பா

44. அருள்விளக்கமாலை--1

'பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளிபெருக்கி'[45]

45. பிடித்தபத்து--9

என்ற திருவாசகத்துடன்,

'அன்னையினும் பெரிதினிய கருணை ஊட்டும்
ஆரமுதே என்னுறவே அரசே'[46]

46. மகாதேவமாலை--72

என்ற திருஅருட்பாவை ஒப்பு நோக்கி இன்புறுக.

'திரைபொரா மன்னும் அமுதத் தான்கடலே
திருப்பெருந்துறையுரை சிவனே
உரையுணர்வு இறந்து உணர்வதோர் உணர்வே
யானுனை உரைக்குமா றுணர்தே'[47]

என்னும் மணிவார்த்தைகளும்

'சொல்லொழியப் பொருளொழியக் கரணமெலாம்
சேர்ந்தொழியத் துளங்கா நின்ற
அல்லொழியப் பகலொழிய நடுவே நின்ற
ஆனந்த அனுபவமே ஆதீதவாழ்வே'[48]

என்னும் அருள் வார்த்தைகளும் ஒப்பிடற்குரியன.

இனி, திருப்பள்ளியெழுச்சி, திருவுந்தியார், ஆனந்தமாலை, அச்சோபத்து, தனித்திருப்புலம்பல், எண்ணப்பத்து என்னும் தலைப்பில் வாதவூரர் அருளியதை வடலூரர் பின்பற்றிப்பாடியுள்ளார். அச்சோபத்து என்பது அருட்பாவில் அச்சோப்பதிகம் ஆகின்றது.

**கருவி நூற்பட்டி:**


1. இராமலிங்க அடிகள் வரலாறு - ஊரன் அடிகள்
2. திரு அருட்பிரகாச வள்ளலார் ஜீவிய சரித்திரம் - வள்ளலார் பதிப்பகம்
3. Ramalinga's life and Teachings - G.M. Muthu Swamipillai
4. திருஅருட்பா - சமரச சன்மார்க்க நிலையப் பதிப்பு
5. திருவாசகம் - சுவாமி சித்பவானந்த
6. சன்மார்க்க சங்கம் நூற்றாண்டு விழா மலர், சென்னை, 1965
7. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு - ம. பொ. சி.
8. திருப்புகழ்
9. திருவாசகத்தேன் - கிருபானந்தவாரியார்
10. 'திருக்கோயில்' - 1995 ஜனவரி, இதழ்
11. மகாதேவமாலை - இச்பத்யடிகள் உரை
12. திருஅருட்பா - உபதேசப் பகுதி, பா. பி., பதிப்பு.

## 6. வள்ளலாரும் தாயுமானவரும்

--சரஸ்வதி வேணுகோபாலன்

புறவாழ்வில் அமைதியின்றிக் குழப்பம் மிகுகின்றபொழுது மனித உள்ளங்கள் ஆன்மிகவுணர்வை நோக்கித் திரும்புகின்றன. தமிழகத்தில் அவ்வப்பொழுது இந்தநிலை ஏற்பட்டு வந்துள்ளது மக்கள் பெறவிரும்பும் அமைதிக்காகப் பாடுபடச் சமய வல்லுநர்கள், தத்துவ ஞானிகள் தோண்றியுள்ளனர். மடங்களை நிறுவி, அந்தந்தச் சமயங்களைப் பரப்பும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இந்த மடங்கள் சைவம், வைணவம் போன்ற சமயங்களுக்குத் தனித்தனியே அமைத்து தீவிரமாகச் செயல்பட்டு வந்தன. சமயக் கல்விக் கூடங்களாக இவை விளங்கின.

சமயங்களைப் பரப்பும் முயற்சியில் மடங்கள் ஈடுபட்டதைப் போலவே, சைவம், வைணவம் இரண்டும் சிறு பள்ளிகளை ஏற்படுத்தித் தத்துவக் கருத்துக்களைக் கொண்ட பல்வேறு சமய இலக்கியங்களை உருவாக்கின. இந்தச் சமய இலக்கியங்கள் அமைதியற்ற மக்களுக்கு மிகுந்தன. ஆனால் முற்காலத்திலேயும் (கி.பி. 5 ஆம் நூ) சமயப் பள்ளி இருந்தமையை அறிகிறோம். திருமூலரது பள்ளி சித்தர்களைக் கொண்டது. சித்தர்களுக்குத் தலைவராக, தந்தையாகக் கூறப்படும் திருமூலர் தாயுமானவரால் குருவாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறார். 'மௌன குரு வணக்கம்' என்னும் பகுதியில்

"மந்த்ர குருவே! யோக தந்த்ரகுருவே! மூலன்<br>
மரபில்வரு மௌனகுருவே"

என்று கூறுதல் காண்க.

சமயப் போக்கில் (Religious trend) மூன்றுவகைகளைக் கூறுகிறார் டாக்டர் தெ. பொ. மீ அவர்கள். அவையாவன:

1. தீவிர சமயவாதிகளாக, குறுகிய மனப்பான்மையோடு விளங்குதல் (Sectarian)
2. தத்துவ வற்புறுத்தல் (Philosophical emphasis)
3. சிறந்த கொள்கைகளைப் பிறரிடமிருந்து வாங்கிக் கொண்டு அவர்களைப் புகழும் பரந்த மனப்பான்மை.

இவற்றை அடியாகக் கொண்டு தாயுமானவர், வள்ளலார் இருவரின் தத்துவப்போக்கினையும் ஆய்வோம்.

தாயுமானவரின் குருவாகிய திருமூலர் சிவ பெருமானின் பெருமைகளைக் கூறும் பொழுது அவர் தீவிரசைவரோ எனத்தோன்றும். ஆனால் 'மூன்று தெய்வங்களுள் யார் உயர்ந்தார், சிறந்தார் என்று மக்கள் ஏன் இப்படி வாதிட வேண்டும். மூவருமே ஒருவர்தாமே' என்று கூறும்பொழுது அவர் தீவிரவாதியில்லை யென்பது தெளிவாகிறது.

சித்தர்களின் தலைவரான திருமூலர் தாயுமானவர்க்குக் குருவாக அமைந்ததில் வியப்பில்லை. தாயுமானவரும் ஒரு சித்தர் தாம். குருவைப் பின்பற்றி வாழ்ந்த தாயுமானவப் பெம்மான் சமயப்போக்கில் முதற் கூறாகிய தீவிரத்தன்மை மேற்போக்காக நோக்கும்பொழுது தென்படுகிறது. ஆனால் ஆழ்ந்து பயிலுங்கால் தத்துவ வற்புறுத்தலையும், மற்றவர்களிடமிருக்கும் நல்ல கொள்கைகளைப் புகழும் மனப் பான்மையையும் தான் காண்கிறோம்.

தமது ஞானாசிரியனான திருமூலர் போலவே தாயுமானவரும், சிவபெருமானே தம் தெய்வமாகக் கூறி செல்லும் பொழுது, தீவிரவாதி போல் தோன்றுகிறார்.

"சிவன் செய லாலே யாதும்
வருமெனத் தேறேன்" --(393)

"சிவசிவ என்று தேம்பி"--(395)

போன்ற வரிகள் மிகுதியும் உள.

சைவ சமயமே சமயம்
சமயா தீதப் பழம்பொருளைக்
கைவத் திடவே மன்னுள்வெளிக்
காட்டும், இந்தக் கருத்தைவிட்டுப்
பொய்வந் துழலும் சமயநெறி
புகுத வேண்டா முத்திதருந்
தெய்வ சபையைக் காண்பதற்குச்
சேர வாரும் சகந்தீரே." (காடுங்கரையும்-2)

என்னும்பொழுது தீவிரமிக்க சைவமாகத் தோற்றமளிக்கிறார். இத்தகைய பாடல்கள் சைவத்தை வலியுறுத்துவனவாகத் (Sectarian) தோற்றினும், உண்மையில் அவரது நோக்கம் பரந்து பட்டதாகவுள்ளது திருமூலர் உலகோர் அனைவரும் உய்யவேண்டி,

"யான் பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லவும்
ஊன்பற்றி நின்ற வுணர்வுறு மந்திரம்
தான் பற்றப் பற்றத் தலைப்படுத் தானே."

என்றதைப் போல, தாயுமானவரும்,

"ஒன்றாய்ப் பலவாய், உயிர்க்குயிரா
யாடுங் கருணைப் பரஞ்சோதி
யருளைப் பெறுதற் கன்புதிலை
தேடும் பருவமிது கண்டீர்!
சேர வாரும் சகந்தீரே"

என்று உலகோரை அழைக்கின்றார்.

பரந்த மனப்பான்மை நூல் முழுவதிலும் ஊடுருவி நிற்பதைக் காணலாம். சித்தர்களைப் புகழ்ந்து பாடும் 'சித்தர்கணம்' என்ற பகுதி, ஆயிரம் ஆண்டுகட்கு முன் வாழ்ந்த திருமூலரைத் தம் குருவாக ஏற்று "மௌன குரு வணக்கம்" பாடும் பகுதி, இவற்றில் காண்க.

இதைப் போலவே இராமலிங்கரையும் காண்பது வியப்பிற்குரியது. அவரும்

'முத்தி நீறிடார் முன்கையால் தொடினும்
        முள்ளு றுத்தல்போல் முனிவுடன் நடுங்க
புத்தி நீறிடும் பத்தர்கள் காலால்
        பாய்ந்து தைக்கினும் பரிந்ததை மகிழ்க
புத்தி ஈதுகாண் என்னுடைய உடம்பே
        போற்ற லார்புரம் பொடிபட நகைத்தோன்
சக்தி வேற்கரத் தனயனை மகிழ்வோன்
        தன்னை நாம்என்றும் சார்ந்திடற் பொருட்டே'

'இனிய நீறிடா ஈனநாய்ப் புலையர்க்
        கெள்ளில் பாதியும் ஈகுதல் ஒழிக
இனிய நீறிடும் சிவனடி யவர்கள்
        எம்மைக் கேட்கினும் எடுத்தவர்க் கீகி'
--சிவபுண்ணியத் தேற்றம் 7,8.

(பகுதி முழுவதுமே இவ்வகையில்தான் அமைந்துள்ளது). 'நமச்சிவாயம்காண் நாம் பெறுந் துணையே'
--நற்றுணை விளக்கம்

இவற்றைத் தவிர, திட்டவட்டமாகக் கடவுளைப் பற்றியும், அவன் கருணை பற்றியும் அமைந்த பாடல் ஒன்றைக் காண்க;

"கண்மூன் றுடையான் எவன் அவனே கடவுள் அவன்தன் கருணை ஒன்றே
கருணை அதனைக் கருதுகின்ற கருத்தே கருத்தாம்."
--ஞானசிகாமணி திருச்சீர் அட்டகம்-4

இவை போன்ற எண்ணிறந்த பாடல்களைப் பார்க்குங்கால் மிகத் தீவிரமான சைவராகத் தான் தோற்றுகிறார்.(Sectarian Outlook)

ஆனால் அவர்வணங்கும், காணும் சிவமே அன்பு வடிவம் தான். 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய' (பாடல்-3171) இந்த அன்புள்ளத்திற்குப் பகைவர் என்று யார் இருக்க முடியும்? அவரது சமயத்தை 'Religion of universal love' என்று டாக்டர் தெ. பொ. மீ. கூறுகிறார். எனினும் இவ்வகையில், தாயுமானவரை விட வள்ளலாரிடம் சொல்லளவிலேனும் தீவிரத் தன்மை மிக்கிருப்பதாகவே தோற்றுகிறது. இப்பாடல்கள் தொடக்கநிலையில் பாடப் பெற்றவை என்பாரும் உளர். மேலும் டாக்டர் தமிழண்ணல் அவர்கள் தமது 'வள்ளலாரின் இறைக் கொள்கை' எனும் கட்டுரையில் "இறைவனைச் 'சிவம்' என அழைப்பதில் வள்ளலாருக்கு விழைவு மிகவுண்டு. வள்ளலார் கூறும் சிவம் எல்லாச் சமயங்களுக்கும், தத்துவங்களுக்கும் உரிய ஒரே தனி முழுமுதலாகும். தனித்தனிச்

சமயங்கள், தத்துவங்கள் யாவும் முயன்றும் எட்டாத மிகப் பெரும் நிலையினனாகிய பேரிறைவனையே அவர் 'சிவமாகவும்' 'அருட்பெருஞ்ஜோதியாகவும்' காணுகின்றார்" என்று கூறுவதைக் காண்க.

சைவ சமயத்தைத் தம் சமயமாக அவர் கருதினும், அவரது சமயம் 'அன்பு சமயமே'. உலகனைத்திலும் உள்ள உயிர்களை அருளொடு நோக்கும் அவருள்ளம் உலகின் பொதுச்சொத்து. எனவே அவரைச் சைவசமயத்திற்கு மட்டும் உரியவர் எனல் பொருந்தாது.

இரண்டாவது கூறாகிய தத்துவ வற்புறுத்தல் வள்ளலார், தாயுமானவர் இருவரின் நூல்களிலும் பரக்கக் காணலாம். வள்ளலார் நூலில், (ஊரன் அடிகள் பதிப்பு)

"அன்பென்ப தேசிவம் உணர்ந்திடுக என எனக்கு
அறிவித்த சுத்த அறிவே" --2501

"அன்புரு வாம்ப சிவமே" --3629

"கருணையும் சிவமுமே பொருளெனக் காணும்
காட்சியும் பெறுகமற் றெல்லாம்
மருணெறி எனநீ எனக்கறி வித்த
வண்ணமே பெற்றொருக்கின்றேன்" --3503

....."சுத்தசன் மார்க்கத்
தனிநெறி உலகெலாந் தழைப்பக்
கருணையும் சிவமுமே பொருளெனக் கருதும்
கருத்தும்" ...... ...... --3757

"எவ்விடத்தும் எவ்வுயிர்க்கும் இலங்குசிவம் ஒன்றே
என்னாணை என்மகனே இரண்டில்லை" --4176

"உருவ ராகியும் அருவின ராகியும் உருஅரு வினராயும்
ஒருவ ரேஉளார் கடவுள்கண் டறிமினோ உலகுளீர் உணர்வின்றி
இருவ ராமென்றும் மூவரே யாமென்றும் இயலும்ஐ வர்களென்றும்
ஒருவ ராய்உரைத் துழல்வதென் உடற்குயிர் இரண்டுமூன் றெனலாமே"
--5384

"பொய்வகைச் சாத்திரங்கள் எடுத்துரைத்தே
எமது தெய்வம்எமது தெய்வம் என்று
கைவகையே கதறுகின்றீர் தெய்வம் ஒன்றென்றறியீர்" (5570)

ஆகிய பாடல்களில் "அன்பே சிவம்", "சுத்த சன்மார்க்க நெறி", "கருணையும் சிவமுமே பொருள்", "தெய்வம் ஒன்றே" போன்ற தத்துவங்கள் வற்புறுத்தப் பெறுகின்றன.

இவை தவிர, கொல்லாமை, பிறர்துன்பம் துடைத்தல், எவ்வுயிரையும் தம்முயிராக எண்ணல், சாதி சமயங்களைக் கடந்தவுணர்வு ஆகியன வள்ளலாரோடு கூடப் பிறந்த கொள்கைகள்.

"கருணையே வடிவாய்ப் பிறர்களுக் கடுத்த கடுந்துயர் அச்சமா திகளைத்
தருணநின் அருளால் தவிர்த்தவர்க் கின்பம் தரவும்வன் புலைகொலை இரண்டும்
ஒருவிய நெறியில் உலகெலாம் நடக்க உஞற்றவும் அம்பலத்தினிலே" (3407)

"எவ்வுயிர்த் திரளும் என்னுயிர் எனவே எண்ணிதல் இன்புறச்செயவும்
அவ்வுயிர் களுக்கு வகுமிடை யூற்றை அகற்றியே அச்ச நீக்கிடவும்" (3403)

"ஊடல்செய் மதமும் சமயமும் இவற்றில்
உற்றகற் பனைகளும் தவிர்ந்தேன்" (3637)

"சாதியும் சமயமும் தவிர்த்தவர் உறவே" (இறைவன்) (3704)

"இச்சாதி சமயவிகற் பங்களெலாம்தவிர்த்தே
எவ்வுலகும் சன்மார்க்கப் பொதுவடைதல்வேண்டும் (4086)

சிறிய தெய்வங்களை உருவாக்கி வழிபடுதலையும், அவற்றிற்குப் பலியிடுதலையும் எண்ணி நடுங்குகிறது அவருள்ளம். அத்தகைய கோயில்களைக் கண்டு பயப்படுவதாகக்கூடக் கூறுகிறார். மூடப் பழக்க வழக்கங்களை வெறுத்துப் பேசுகையில் 'புரட்சிக்கவி' யாகத் தோற்றுகிறார்.

"நலிதரு சிறிய தெய்வமென் றையோ நாட்டிலே பலபெயர் நாட்டிப்
பலிதா ஆடுபன்றிக் குடங்கள் பலிக்கடா முதலிய உயிரைப்
பொலிவுறக் கொண்டே போகவும் கண்டே புந்திநொந்துள நடுக்குற்றேன்
கலியுறு சிறிய தெய்வவெங் கோயில் கண்டகா லத்திலும் பயந்தேன்"(3472)

"கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக" --(3768)

என்று கூறுகின்ற உள்ளம். பிற்காலத்தே பாரதி போன்றோர்க்கு வழிகாட்டியாய் அமைந்தது போலும்!

சன்மார்க்கம், எவ்வுயிரையும் தம்முயிராக எண்ணல், கொல்லாமை ஆகியவற்றைப் பற்றித் தாயுமானவரும் வற்புறுத்தல் காண்கிறோம்.

சத்தான கற்பகம்போல் அருளைக் காட்டத்
தக்கநெறி யிந்நெறியே தான்சன் மார்க்கம்
--சிதம்பரரகசியம் 11

**சன்மார்க்க ஞானமதின்** பொருளும், வீறு
சமயசங்கே தப்பொருளும் தானென்னாகப்
பன்மார்க்க நெறியினிலும் கண்டதில்லை
--சிதம்பரரகசியம் 12

"வேதாகமத்துணி பிரண்டில்லை யொன்று"
--மௌனகுருவணக்கம்-2

**எவ்வுயிர்த் திரளும் உலகில் என்னுயி**
**ரெனக்கு ழைந்துருகி** நன்மையாம்
இதமு ரைப்ப, என தென்ன யாவையும்
எடுத்தெ றிந்துமத யானைபோல்
கவ்வை யற்றநடை பயில, அன்பரடி
கண்ட தேயருளின் வடிவமாய்
--சிற்சுகோதய விலாசம்-8

"**கொல்லாமை எத்தனை குணக்கோட்டை நீக்குமக்**
கோரமெத் தனைபக்ஷ பாதமெத் தனைவன்
குணங்களெத் தனைகொடிய பாழ்ங்
கல்லாமை யெத்தனை யகத்தை யெத்தனை
--ஆனந்தமான பரம்-1

(இப்பாடல் "அறவினை யாதெனில் கொல்லாமை கோறல் பிறவினை யெல்லாந்தரும்" என்ற குறட்குப் பெரிய விளக்கந் தருகின்றது.)

...... நல்லறிஞர்

எக்காலமு முதவுவார்,
இன்சொல் தவறார் பொய்ம்மையா மிழுக்குரையார்

**இரங்குவார் கொலைகள் பயிலார்** -- கருணாகரக்கடவுள் -- 10

ஆகிய பாடல்கள் சான்றுகளாய் நிற்கின்றன. சிலவிடங்களில் சொற்றொடர்கள் கூட ஒன்றாயிருப்பது வியப்பிற்குரியது.

(எ-டு)

எவ்வுயிர்த் திரளும் உலகில் என்னுயி
ரெனக்கு ழைந்துருகி
--தாயுமானவர்

எவ்வுயிர்த் திரளும் என்னுயி ரெனவே எண்ணி -- வள்ளலார்

இருவரிமும் காணப்படும் மற்றொரு சிறப்புக் கூறு: தத்தம் குருவைத் தெய்வமாகவே கூறி வணங்குவது.

தாயுமானவர் பாடல்களில் 'மௌன குரு வணக்கம்' என்னும் பகுதியில் எல்லாப் பாடல்களின் இறுதியிலும்

"மந்த்ர குருவே! யோக தந்த்ர குருவே! மூலன்
மரபில்வரு மௌனகுருவே!"

எனக் காண்கிறோம், சிலபொழுது தெய்வத்தைக் குருவடிவிலும் காண்கிறார்.

"குருவுரு வாகி மௌனியாய், மௌனக்
கொள்கையை யுணர்த்தினை" --ஆரணம் 9

இதே போன்று வள்ளலார் தமது கலக்கத்தை நீக்க வந்த கடவுளாகச் சம்பந்தரை வணங்குகிறார், 'அருட்குருவே' என்று போற்றுகிறார்.

"அலகின் மறை மொழியும்ஒரு பொருளின்முடி பெனஎன
தகந்தெளிய அருள்செய் தெருளே"

"அருள்முகில் சம்பந்த வள்ளலாங் கடவுளே"--2501
(சமரசானுபவ அனுக்கிரக அருட்குரு தோத்திரம்)

பலவிடங்களில் 'நானென்னும் அகந்தைக்குட்பட்டு உயிர் அழிவதையும், ஐம்புலன்களையும் வெல்லமுடியாது தவிக்கும் அறிவையும்' பற்றி இருவருமே தத்தம் நூல் முழுவதும் மனிதகுலச் சார்பாளர்களாகத் தங்களை நிறுத்தி வைத்துப் பேசுதலைக் காண்கின்றோம்.

அவ்வாறு பேசுதலில் சிலவிடங்களில் தாயுமானவர் தம் உண்மை நிலையைக் கூறுதலையும் காணலாம்.

"பொன்னாசை, மண்ணாசை, பெண்ணாசை
**வாய்ந்துழலும் எனது மனது** -- 23 என்று வள்ளலார் கூறுவதையும் (இங்கு மனித இனத்தின் பொதுக் குணத்தைத தம் மீதேற்றிக் கூறுவதாகக் கொள்ளவேண்டும்)

'பொன்னை மாதரைப் பூமியை **நாடிடேன்**
என்னை நாடிய வென்னுயிர் நாதனே
உன்னை நாடுவேன்; உன்னருட் டூவெளி
தன்னை நாடுவன தன்னந் தனியனே"
--என்று தாயுமானவர் கூறுவதையும் காண்க.

இறைவனை 'அருட்பெருஞ்சோதி, தனிப்பெருங்கருணை, துரிய வடிவம்' என்பார் வள்ளலார்.

இச் சொற்களை வள்ளலார் எத்துணை இடங்களில் பயன்படுத்துகிறார் என்று கணக்கிடவியலாதோ, அது போலவே தாயுமானவரும் எண்ணிறந்த இடங்களில் துரிய வடிவம், துரிய அறிவு, அருட்சோதி, முக்கணருட் செம்பொற்சோதி, சோதிப் பிரான், சோதி சுடரொளி, பேரொளி, சுடர்க்கொழுந்து ஆகிய வடிவங்களாக இறைவனைக் கூறுகின்றார்.

அத்துவிதம்:

"தாழ்வறஎன் னுளத்திருந்த தத்துவத்தை, அத்துவித
சாரந்தன்னை -- மண்டலத்தின் 4 என்னும்

தாயுமானவர் 'சும்மா இரு' என்ற வாக்கினை மனத்தில் கொண்டு, உள்ளொளி பெருக்கிப் பரம்பொருளைக் காண்பவர்.

வள்ளலார் தன் 'அத்துவித ஆனந்த அனுபவ இடையீடு' என்னும் பகுதியில் (ஆறாம் திருமுறை -- திருச்சிற்றம்பலம்)

"பொருத்தமுறு சுத்தசிவா னந்தவெள்ளம் ததும்பிப்
பொங்கியகம் புறங்காணா தெங்குநிறைத் திடுமோ
அருத்தகும்அவ் வெள்ளத்தே நான்மூழ்கி நான்போய்
அதுவாகப் பெறுவேனோ அறிந்திலன்மேல் வினைவே"

என்ற வரிகளில் உயிர் இறைவனோடு கலக்கின்ற நிலைக்காக (அத்து விதம்) எங்குவதைக் காண்கின்றோம்.

சீவன் முத்த நிலை:

'எடுத்த தேகம் இறக்குமு னேயெனைக்
கொடுத்து நின்னையும் கூடவும் காண்பனோ'

(பொன்னை மாதரை -- 66) என்று 'சீவன் முத்த நிலை'க்கு ஏங்கும் தாயுமானவர் அந்த நிலையைக் கண்டுவிட்டார் என்பதற்கும் மற்றொரு பாடல் சான்றாக அமைகிறது.

"எடுத்த தேகம் பொருளாவி மூன்றுநீ
எனக்கொன் றில்லை யெனமோன நன்னெறி
கொடுத்த போது கொடுத்த தன்றோ"
--(எடுத்ததேகம்--1)

என்று உடல், பொருள், ஆவி அனைத்தையும் தம்முடையன இல்லை என்றும் என்றைக்கோ (மோன நன்னெறி அருளிய அன்றே) இறைவனோடு அவை இரண்டறக் கலந்துவிட்டன என்று தாயுமானவர் கூறுவதால்,

"தாழ்வறஎன் னுளத்திருந்த தத்துவத்தை அத்துவித
சாரத் தன்னை"

என்ற கூற்றுப் பொருந்துவதே.

'ஆ முக்தேஹ சம்சாரஹ' என்பது சங்கரரின் அருள்வாக்கு, 'முத்தி அடையும் வரை இந்தவுலகு உண்மையானதாகத் தோற்றும்' என்பது அதன் பொருள். அந்த அருள் வாக்கிற்கு ஓர் இலக்கியமாய்த் திகழ்பவர் தாயுமானவர் எனலாம். எடுத்த

தேகம் இறக்கு முன்னே தம்மைக் கொடுத்து இறைவனைக் கண்டுவிட்ட சீவன்முத்தர்.

இவ்வாறே வள்ளலார் கூறும் சில பாடல்களையும் காண்கிறோம்.

" .......எனக்குநீ செய்த
தூயபேர் உதவிக்கு நான்என்
ஆற்றுவேன் ஆவி உடல்பொருள் எல்லாம்
அப்பநின் சுதந்திரம் அன்றோ" (3850)

"சுதந்திரம் உனக்கே கொடுத்தனம் உனது
தூயநல் உடம்பினில் புகுந்தேம்
இதந்தரும் உளத்தில் இருந்தனம் உனையே
இன்புறக் கலந்தனம் அழியாப்
பதந்தனில் வாழ்க அருட்பெருஞ் சோதிப்
பரிசுபெற் றிடுகபொற் சபையும்
சிதந்தரு சபையும் போற்றுக என்றால்
தெய்வமே வாழ்கநின் சீரே." (3851)

இப்பாடல்கள் வள்ளலாரின் 'சீவன் முத்த நிலை' யினைக் காட்டுகின்றது.

மூன்றாவது கூறாகிய 'பிறரிடமுள்ள நற்கூறுகளைப் போற்றும் பரந்த மனப்பான்மை (Eelecticism) இருவரிடத்தும் அமைந்து கிடப்பதைப் பலவிடங்களில் காணலாம்.

தாயுமானவர் 'சித்தர் கணம்' என்னும் பகுதியில், ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும்

1) "வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர் கணமே"

என்று சித்தர்கள் அனைவரையும் புகழ்தலையும்,

2) 'மௌனகுரு வணக்கம்' என்னும் பகுதியில் பாடல்களின் இறுதியில்
'மூலன் மரபில்வரு மௌன குருவே' என்று சித்தர்களின் தந்தை திருமூலரைப் போற்றலையும்,

3) 'எங்குநிறைகின்ற பொருள்' என்ற பகுதியில்,
'அவனின்றி யோரணுவும் அசையா' தெனும் பெரிய
'ஆப்தர்மொழி யொன்று கண்டால்' என்று அப்பரைப்

போற்றுதலையும் ("ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடா தாரே அடங்குவித்தால் ஆரொருவர் அடங்கா தாரே" என்ற அப்பர் பாடலின் கருத்து இங்கு எடுத்தாளப்பட்டுள்ளது) பார்க்கிறோம். பலரையும் புகழ்கின்ற ஒரு பாடலையும் இங்குக் குறிப்பிட வேண்டும்.

"தேவர் தொழும் வாதவூர்த் தேவே! என்பேன்
திருமூலர்த் தேவே! இச்சகத்தோர் முத்திக்
காவலுறச் சிவவென்வாக் குடனே வந்த
அரசே! சும்மா இருந்துன் னருளைச் சாரப்
பூவுலகில் வளரருண கிரியே மற்றைப்
புண்ணியர்காள் ஓஎன்பேன்"

என்பது அப்பாடல்.

வள்ளலாரும், அருணகிரியார், சைவ சமய குரவர் நால்வர் ஆகியோரைப் புகழ்ந்து வணங்குதலையும், அவர்களின் கருத்துக்களைக் கூறிப்போற்றுதலையும் காணலாம்.

1. "வயங்கருண கிரிவிளங்க வளர்ந்தசிவக் கொழுந்தே" (2500)

2. "அன்பென்ப தேசிவம் உணர்ந்திடுக என எனக்கு
அறிவித்த சுத்த அறிவே
அத்துவித நிலைதுவித நிலைநின்ற பின்னலது
அடைந்திடா தென்ற இறையே" (2501)

"அருள்முகில் சம்பந்த வள்ளலாங் கடவுளே" (2501)

3. "ஒண்ணுளே ஒன்பதுவாய் வைத்தாய் என்ற உத்தமனே" (3241)

("ஒண்ணுளே ஒன்பது வாசல்வைத்
தாய்ஒக்க அடைக்கும்போ துணரமாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே"
--(திருநாவுக்கரசர் -- திருப்புகலூர்த்திருத்தாண்டகம்)

4. "ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய்! என்று முன்நீ சொன்னபெருஞ் சொற்பொருளே"
(3251)

"தேன்படிக்கும் அமுதாம்உன் திருப்பாட்டைத் தினந்தோறும்
நான்படிக்கும் போதென்னை நானறியேன் நாஒன்றே
ஊன்படிக்கும் உளம்படிக்கும் உயிர்படிக்கும் உயிர்க்குயிரும்
தான்படிக்கும் அனுபவங்காண் தனிக்கருணைப் பெருந்தகையே"
(3253)

("ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான்செய்யும் துரிசுகளுக் குடனாகி--7751
-சுந்தரர்-திருவாரூர்ப்பதிகம்)

5. 'இருஎன்ற தனிஅகவல்' எண்ணம்எனக் கியம்புதியே!
('என்னையும் இருப்ப தாக்கினன் என்னில்
திருவாசகம் 3, திருவண்டப் பகுதி)

"வாட்டமிலா மாணிக்க வாசகநின் வாசகத்தைக்
கேட்டபொழு தங்கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்குகளும் மெய்ஞ்ஞான
நாட்டமுறும் என்னில்இங்கு நானடைதல் வியப்பன்றே"--3266

முதலிய பகுதிகளைச் சான்றுகளாய்க் காட்டலாம்.

இவற்றை விடுத்து, இருவரின் செய்யுணடையைக் காணுங்கால், தாயுமானவரின் பாடல்கள் அவரது தத்துவ அறிவு, ஆழ்ந்த பத்தி ஆகியவற்றால் தூண்டப்பெற்ற அவரது தத்துவ அனுபவங்களிலிருந்து ஊற்றெடுத்துள்ளன. நூலெங்கணும் வடமொழிச் சொற்களும் தத்துவச் சொற்களும் நிரம்பியிருந்த போதிலும், எளிமையாகவும் மேன்மேலும் படிக்க ஊக்கமூட்டுவதாகவும் அமைந்துள்ளது. உபநிடதச் சொற்றொடர்களெல்லாம் அவரது பாடல்களில் உயிர் பெற்று நிற்பதைக் காணலாம். எளிமையான முறையில் தத்துவத்தின் ஆழ்ந்த பொருளை அவரைப்போல் விளக்குவோரைக் காணல் அரிது.

வள்ளலார் பாடல்கள் மக்களிடம் மிகவும் பரவியுள்ளன. இவ்வாறு கூறுவதிலிருந்தே அவரது நடை மக்களை எவ்வளவு கவர்ந்துள்ளது என்றறியலாம். அக்கவர்ச்சிக்குக் காரணம் பாடல்களின் எளிமை; கல்லாதார்க்கும் புரியக்கூடிய எளிமை.

பாடல்கள் அமைப்பை நோக்கும்பொழுது, தாயுமானவர் நூலில் ஆசிரியவிருத்தம், கலிவிருத்தம், கலித்துறை, சந்தவிருத்தம், கண்ணி போன்ற பல்வேறு அமைப்புக்கள் இருப்பினும், முக்கால் பகுதி ஆசிரிய விருத்தமாகவே இருக்கக் காண்கிறோம்.

வள்ளலார் பாடல்களிலும் குறள்வெண்பா, நேரிசை வெண்பா, இனங்கள் (துறை, தாழிசை), நிலைமண்டில ஆசிரியப்பா, ஆசிரியத்துறை, விருத்தம், கலிப்பா (பலவகை), கலித்துறை, விருத்தம், வஞ்சித்துறை, தாழிசை--இவ்வாறு பல்வேறு வகைகளைக் காணினும் பாதிக்கும் மேல் ஆசிரியவிருத்தங்களைத் தான் காண்கிறோம். மேலும் ஒரு சிறப்பு 192 சீர்க் கழிநெடிலடி, 48 சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்கள் பாடியிருப்பது.

எனவே இருவருக்கும் யாப்பில் கூட ஆசிரியவிருத்தம் பாடுதலே விருப்பமாக இருத்தலைக் காணலாம்.

பாடல்களைத் தவிர்த்து இருவரின் வாழ்க்கையை நோக்கின், சில வேறுபாடுகள் காணப்படும்.

ஐந்தாம் திங்களிலேயே சிதம்பரரகசியத்தை இறைவன் அறிவிக்க அறிந்த குழந்தையாக இருந்தார் வள்ளலார் (4133)

'தாய்முதலோ ரொடுசிறிய பருவமதில் தில்லைத்
தலத்திடையே திரைதூக்கத் தரிசித்த போது
வேய்வகைமேல் காட்டாதே என்றனக்கே எல்லாம்
வெளியாகக் காட்டியஎன் மெய்யுறவாம் பொருளே"

உலகியலை யொட்டித் திருமணம் செய்த பின்பும் தாமரையிலைத் தண்ணீராக வாழ்ந்த நிலையைத் 'தொட்டனன் அன்றிக் கலப்பிலேன்' (3452) என்று அவரே கூறுதல் காண்க.

ஆயின், தாயுமானவர் இளம்பருவத்தில் கல்வி கற்றுத்தேர்ந்து, தந்தை இறந்த பின்பு அவர்தம் கடமையைத் தாம் மேற்கொண்டு, மௌனகுருவினது அறிவுரையைத் தலைமேற்கொண்டு 'மட்டுவார் குழலி அம்மை'யை மணம்புரிந்து இனிய இல்லறம் நடத்தி ஓர் ஆண்மகவினையும் பெற்றார். மனைவியின் இறப்புக்குப் பின்னர்த் துறவறம் பூண்டார்.

"காமம் சான்ற கடை கேக்காட்டாலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்தபின் பயனே"

என்ற தொல்காப்பிய நூற்பாவுக்கு இலக்கியமாகத் திகழ்கிறார்.

இறுதியுரையாகக் கூறவிழைவது: இருவரும் தமிழ்நாடு பெற்ற மிகப் பெரிய ஞானியர். ஆன்மீகவுணர்வு மிகச் சிறு பருவத்தே கைவரப் பெற்று 'அன்பே சமயம்' எனக் கொண்டு சீவன்முத்தர்களாக வாழ்ந்த பெரியோர். திரு. தெ. பொ. மீ. தம் நூலில் வள்ளலாரைப் பற்றிக் கூறுவதை இங்குக் கூறிமுடிக்கின்றேன். அது வருமாறு:-

In the 19$^{th}$ century in the period of Sri Ramakrishna, there was born in the Tamil land Ramalingar, a poet of universal love. His manthra describes God as "Arutperunjothi thanipperunkarunai" the great light of universal love, the unique and great universal compassion. God is love and feeling sympathy with all being is the only form of worship. His religion of universal love unfortunately came before people were ripe for it. He did not have a Vivekananda to deliver message in English. In the future, when the world becomes one family, his poem is bound to become the musical and poetic voice of the world.

# 7. வள்ளலார் உள்ளம்

-இரா. வே. நாராயணன்

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பாதித் தொடக்கத்திலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பாதி முடிவு வரையுள்ள ஒரு நூற்றாண்டுக் காலத்தில், பழம்பெரும் பாரதநாடு, பரங்கியர்களின் வேட்டைக் காடாக விளங்கியது. போர்ச்சுகீசிய டச்சு-பிரஞ்சு, பிரிட்டிஷ் நாடுகளின் வர்த்தகக் கூட்டங்கள், தங்கள் சரக்குகள் விற்கும் சந்தைக்கடையாகவே நாட்டைப் பயன்படுத்தின. வாணிகப் போட்டி நாடுகளிடையே போராட்டமாயிற்று. உள்நாட்டு மன்னர்கள் கட்சி சேர்ந்து நாட்டையே குருஷேத்திரம் ஆக்கினர். பெரியவும், சிறியவும் ஆக பயங்கரப் போர்கள் பலநடைபெற்றன. அரசாளும் உரிமையையும் வர்த்தகச் சரக்காக்கி ஏலத்தில் விட்டார்கள் வந்தவர்களாகிய வணிகர்கள். பரங்கியர்களாலேயே காட்டிக் கொடுக்கப்பட்டு, கொடுமையாகப் பழி வாங்கப்பட்டனர். அன்னிய நாட்டினருக்கு அடிமைப்படுகின்றோம் என்பதைவிட அன்னிய ஆசாரத்துக்கு அடிமைப்படுகிறோம் என்ற நிலை தான் நாட்டில் நூற்றாண்டுக்காலம் போரிடவன்மையைத் தந்தது. இந்தச் சூழ்நிலையில் மத வெறியை அழித்து, மதநெறியை வளர்க்க இந்து முஸ்லீம் சீக்கிய கிறித்துவ மதங்கள் ஒன்றுக்கொன்று எதிரும் புதிருமான இராணுவ முகாம்களாக விளங்கிய அவலநிலையை மாற்றி அவற்றிடையே சமரச மனோபாவம் வளர்க்க தக்க சன்மார்க்க ஞானியர் தேவைப்பட்டனர். அப்படிப்பட்டஞானியர் நால்வர் தோன்றினர். அவர்களே, இராசாராம்மோகன், தயானந்த சரஸ்வதி, இராமகிருஷ்ணர், இராமலிங்கர் ஆகியோராவர்.

இவர்கள் அனைவரும் சிலபல கருத்துக்களில் வேறுபாடு உடையவர்கள். ஆனால் சமுதாய சமயச் சீர்த்திருத்தத்தில் புரட்சிகரமான மனப்போக்கு உடையவர்கள். சாதிவேறுபாடுகளை அறவே ஒழித்தல், தெய்வம் ஒன்று என்ற உண்மையை மக்கள் உணரும்படி செய்தல், இந்து சமயத்தவரிடையே காணப்படும் எல்லா வேற்றுமைகளையும் தொலைத்துச் சமத்துவம் நிலவும்படி செய்தல், இந்துமத வேத, ஆகம, சாத்திர நூற்களைத் தாம்தாமே படித்துப் புரிந்து கொள்ளாமல் சொன்னதையெல்லாம் நம்புவதை எதிர்த்தல், பெண்ணடிமை ஒழிந்து ஆணுக்குப் பெண் சமம் என்ற நிலையைத் தோற்றுவித்தல் சர்வ சமயங்களிடையேயும் சமரசம் ஏற்படுத்தப் பாடுபடல், ஆகிய சீர்த்திருத்தக் கொள்கைகள் மேற்சொன்ன, பெரியார் நால்வருக்கும் பொது ஆனவை. இராசாராம் மோகன்ராயும் தயானந்த சரஸ்வதியும் உருவ வழிபாட்டை முழுமூச்சுடன் எதிர்த்தனர். இராமலிங்கரும் இராமகிருஷ்ணரும் ஏகன்-அநேகன்-இறைவன் எனும் கொள்கையை உருவாய் அருவாய் உளதாய் இலதாய் என்னும் நெறியை நம்பி அதனைத் தங்கள் வாழ்க்கையிலும் கடைப்பிடித்தனர். ஒரு நிலையில், இராமலிங்கர், மூவர் இடமிருந்தும் வேறுபடுகின்றார். சமயங்களே அற்ற ஆன்ம நேய ஒருமைப்பாட்டுரிமை உடைய ஒரே உலகம் காண்பதைத் தமது இறுதி லட்சியமாய்க் கொண்டிருக்கிறார். வேதாகம சாத்திரங்களுக்குக் கட்டுப்படாத ஒரு சமுதாயத்தை, தெய்வ நெறியை--அந்த நெறியின் வழிச்சென்று அடையக்கூடிய தெய்வ நிலையை உலக மக்கள் அனைவருக்குமாகப் போதித்தார். அந்த வகையில் மற்ற மூவரிலும் தீவிரமான புரட்சிக்காரராய் விளங்கினார் இராமலிங்கர்.

இராசாராம் மோகன்ராய் பிரம்ம சமாஜத்தைத் தொடங்கினார். தயானந்தர் ஆரிய சமாஜத்தை நிறுவினார். இராமகிருஷ்ண பரம அம்சரோ, விவேகானந்தர் வாயிலாக, ஸ்ரீ இராமகிருஷ்ணர் சங்கம் நிறுவினார். இராசாராம்மோகன் ராய் சமூகச் சீர்த்திருத்தப் பணிகளில் தீவிரமாகக் கவனம் செலுத்தினார். உருவ வழிபாட்டை எதிர்த்தார். ஆணுக்குப் பெண் சமம் என்ற வேதகால நீதியைத் திரும்பவும் நிலைநாட்ட முனைந்தவர். வேத, ஆகம, சாத்திரங்களிலுள்ள முற்போக்கான-விஞ்ஞான சகாப்தத்துக்குப் பொருந்தத்தக்க கருத்துக்களை ஏற்றுக் கொண்டு காலத்துக்கொவ்வாத வித்தைகளின் மீது அறிவுப் போர் தொடுத்தார். "பாரதமக்கள் ஆங்கிலமொழியினைப் பயில வேண்டும். கல்வி அந்த மொழியிலேயே கற்கப்பட வேண்டும்" என்ற லார்டு மெக்காலேயின் தேசிய விரோதக் கல்வி முறைக்கு மனநிறைவோடு ஆதரவு தந்தார். ஆங்கில மொழியறிவே மூடநம்பிக்கைகளிலிருந்து மக்களை விடுவிக்க முடியும் என்று இராசாராம் மோகன்ராய் நம்பினார். மூட நம்பிக்கையாம் இருளைப் போக்கும் பகுத்தறிவுக் கதிரவனாக பறங்கி மொழியை ஏற்பது, மற்றொரு புதிய மூட நம்பிக்கையாகும்.

தயானந்தர், இராமகிருஷ்ணர், இராமலிங்கர் ஆகிய மூவரும் ஆங்கில மொழி அறியாதோரே. இருந்தும் வேதாகம சாத்திரங்களின் துணை கொண்டு வளர்ந்த மூடநம்பிக்கைகளை முழுமூச்சோடு எதிர்த்துப் போரிட்டு உள்ளனர். இராமலிங்க வள்ளலார், மற்ற மூவரையும் விட மிக மிகத் தீவிரவாதியாவார். எப்பொழுது தெரியுமா? சுயசாதி சத்தியற்றது. சுய இனம் உணர்ச்சியற்றது என்று நாடு இருந்த நிலையில்.

தில்லையம்பதியிலிருந்து வடமேற்கில் உள்ள மருவூரில், இராமயா பிள்ளையின் ஆறாம் தாரமாகிய சின்னம்மையாருக்கு ஐந்தாம் பிள்ளையாகத் தோன்றியவரே இராமலிங்க வள்ளலார். ஓர் பிரகாசம் உண்டாயது; பெரியார் அவதரித்தார் என ஆசி கூறினர்.

"அகத்தே கறுத்துப் புறத்து வெளுத்து
இருந்த உலகர் அனைவரையும்
சகத்தே திருத்திச் சன்மார்க்க
சங்கத்து அடைவித் திடஅவரும்
இகத்தே பரத்தைப் பெற்றுமகிழ்ந்
திடுதற் கென்றே எனைஇந்த
உலகத்தே இறைவன் வருவிக்க உற்றேன்"

என்று அவரே பாடுகின்ற வாய்மையுரை அறிவோம் அன்றோ? மணிவாசகர் அவர் அருளாலே அவன்தான் வணங்கி என்று உரைப்பது நமக்குத் தெரியும். நபிகள் நாயகம் ஆண்டவர் தூதர் என்றுக் கூறிக்கொண்டது. காந்தியடிகளாரும் கடவுளால் அனுப்பப் பட்ட தொண்டராகவே கருதியது போன்றே இராமலிங்கரும் இந்த உண்மையை உணர்த்துகின்றார். பிறர் தமக்கு ஓது இறையருளால் தாமே ஓதியுணர்ந்தார் பெருமானார்.

"ஓதி உணர்ந்தவர் எலாம் எனைகேட்க எனைத்தான்
ஓதாமல் உணர்ந்துணர்வாம் உருவுறச்செய் உறவே"

திருவருட்பாவின் ஆறாந்திருமுறையின் திருக்கதவம் திறத்தல் என்னும் தலைப்புதனில்

"வேதநெறி ஆகமத்தின் நெறிபவு ராணங்கள்
விளம்புநெறி இதிகாசம் விதித்தநெறி முழுதும்
ஓதுகின்ற சூதனைத்தும் உளவனைத்தும் காட்டி
உள்ளதனை உள்ளபடி உணரஉரைத்தனையே"

என்னும் வரிகளிலே, பிறர் போல் புராணம் கூறும் கதைகளிலே மயக்குறாமல், ஓதுகின்ற சூதும் உளவும் அறிந்து ஓதி, உண்மைப் பொருளைத் தரம் உணர்ந்ததாகக் கூறுகின்றார். இதற்கு மாறாக, புராணம் கூறும் கற்பனைகளையே உண்மை என நம்புகின்ற மூட நம்பிக்கைகளை நினைத்து

"கலையுரைத்த கற்பனையே நிலையெனக்கொண் டாடும்
கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக"

என்று சபிக்கின்றார்.

"வையமேல் பிறர்தம் கோலமும் நடையும்
வண்ணமும் அண்ணலே சிறிதும்
பையநான் ஊன்றிப் பார்த்ததே இல்லை
பார்ப்பனேல் பயம்மிகப் படைப்பேன்"

என்று கூறு, நகர மக்களின் பொய்க்கோலம் கண்டு பொருமுகின்றார். இது காந்தியடிகளாரின் வாழ்வினையும் மனத்தினையும் ஊக்குவித்தது போன்று தெரிகிறதன்றோ?

"தேட்டிலே மிகுந்த சென்னையில் இருந்தால்
சிறுகுறும் என்றுளம் பயந்தே
நாட்டிலே சிறிய ஊர்ப்புறங் களிலே
நண்ணினேன் ஊர்ப் புறம் அடுத்த
காட்டிலே பருக்கைக் கல்லிலே புன்செய்க்
களத்திலே திரிந்துஉற்ற இளைப்பை
ஏட்டிலே எழுத முடியுமோ இவைகள்
எந்தைநீ அறிந்தது தானே"

என்ற பாடலில் நகர வாழ்க்கையின்பால் தமக்கிருந்த வெளிப்படையான வெறுப்புகளைக் காட்டும் வள்ளலாரின் உள்ளப் புலம்பலைக் கண்டு கழிபேர் இரக்கம் கொள்கின்றோம்.

இதுகாரணமாகவே கூடலூரிலிருந்து வடலூர் சேர்ந்த வள்ளற்பெருமானார் ஆன்ம நேய ஒருமைப்பாட்டுணர்வு என்ற சித்தாந்தத்தைக் கண்டுவிட்டார். இது, சத்தியாக்கிரகம் என்ற ஒருபெரு நெறியை உலகுக்கு அளித்தது போல உள்ளது அல்லவா?

"அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ் ஜோதி
தனிப்பெருங் கருணை அருட்பெருஞ் ஜோதி"

என்ற புனித முழக்கம் அவருடைய திருவாயிலிருந்து வெளிப்பட்டது.

பசித்திரு
தனித்திரு
விழித்திரு

என்ற மூன்று மகாமந்திரங்களைத் தம்மைச் சூழ்ந்திருந்த, அன்பர்களுக்கு உபதேசிக்கத் தொடங்கினார். அடிகளாரின் தெய்வத் திருவுளத்திருந்து பிறந்த திருவருட்பாக்கள் ஆறு திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டன.

சன்மார்க்க சங்கம் 1865
சத்திய தருமசாலை 1867
சத்திய ஞானசபை 1872
சித்தி வளாகம் 1870

ஆகிய நிறுவனங்கள் தோன்றின.

துவராடையணிபவர் துறவிகள் என்பதற்கு மாறாக, மக்கள் மத்தியிலே வெள்ளாடை அணிந்த வள்ளலார் தோன்றினார். துவராடைக்காரர்களிடம் காணாத உள்ளத் தூய்மையும் ஒழுக்க நெறியும் உயர்குணமும் வெள்ளாடைத் துறவியிடம் வெளிப்படக் கண்டு மக்கள் வியப்புற்றனர். அவருடைய தேவைகள்: இரண்டு வெள்ளாடை, காலுக்கு இரண்டு பாதக் குறடு, வேளைக்கு ஒரு கவளம் உணவு. அதுவும் சமாதி கூடும் காலத்தில், பலவேளை கழிந்து ஒரு வேளை உண்ணுவார். அதனால் தான் நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம் என்ற நெஞ்சம் பெற்றிருந்தார். அஞ்சுவது யாதொன்றும் இல்லை. இனி அஞ்ச வருவதும் இல்லை என்ற உறுதி கொண்டிருந்தார்.

'அருளினை அளிக்கும் அப்பனே உலகில்
அன்புளார் வலிந்தெனக் கீந்த
பொருளினை வாங்கிப் போனபோ தெல்லாம்
புழுங்கிய புழுக்கம்நீ அறிவாய்
மருளும் அப்பொருளைச் சாலகத் தெறிந்து
மனமிக இளைத்ததும் பொருளால்
இருளுறும் எனநான் உளம்நடுங் கியதும்
எந்தைநின் திருவுளம் அறியும்'

'பணத்திலே சிறிதும் ஆசைஒன் றில; நான்
படைத்தஅப் பணங்களைப் பலகால்
கிணற்றிலே எறிந்தேன் குளத்திலும் எறிந்தேன்
கேணியில் எறிந்தனன் எந்தாய்
குணத்திலே நீதான் கொடுக்கின்ற பொருளை
எறிகலேன் கொடுக்கின்றேன் பிறர்க்கே
கணத்திலே எல்லாம் காட்டும்நின் அருளைக்
கண்டனன் இனிச்சொல்ல தென்னே?"

நகைப் பைத்தியத்தைப் பற்றி

"காதில் இரண்டு பெரிய பொத்தல் செய்து வரவிடுத்த ஆண்டவர் ஆணுக்குக் கடுக்கனிடுதலும் பெண்ணுக்கு மூக்குத்தி தோடு முதலியவை போடுதலும் தமக்குச் சம்மதமானால் காதிலும் மூக்கிலும் அதற்கு வேண்டிய பொத்தல்களிட்டு வர விட்டிருக்க மாட்டாரா? என்று விசாரித்துத் தெரிந்து கொள்கிற பட்சத்தில் காதில் கடுக்கனிடவும் மூக்கு முதலியவற்றில் நகையிடவும் சம்மதம் வருமா?" என்று கேட்கின்றார். இது, ஒட்டகத்தை ஊசிக் காதில் நுழைத்தாலும் நுழைக்கலாம்; பணக்காரனைச் சொர்க்கத்திற்கு அனுப்புவது சாத்தியமில்லை என்ற ஏசு பெருமானின் வாக்கை நினைவு படுத்தும் அன்றோ?

இராமலிங்கர் ஆடையணிவதில் காட்டிய அடக்கத்தை வாழ்வின் ஒவ்வொரு துறையிலுமே கடைபிடித்தார்.

"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்."

என்ற குறட்பாவின் விரிவுரையே அடிகளாரின் வாழ்க்கை வரலாறு ஆகும். உடம்புதடிப்பதனையும் வெறுத்தவராகி

"தனைத்திடும் ஊண்உடம் பொருசிறிதும்
தடித்திட நினைத்திலேன் இன்றும்
இளைத்திட விழைகின்றேன் இதுநான்தான்
இயம்பலேன் நீஅறிந் ததுவே"

என்று பாடுகின்றார். பெருமான் இளைத்த உடம்பையும் வெள்ளாடையால் மறைத்து வாழ்ந்த பெருமான் உயர்ந்த ஆசனத்தில் அமரவும் விரும்பினார் அல்லர். இதனை

"காட்டுயர் அணைமேல் இருக்கவும் பயந்தேன்
காலின்மேல் கால் வைக்கவும் பயந்தேன்"

என்ற அருட்பாவால் அறிகிறோம்.

அவர் ஒவ்வொரு ஆன்மாவையும் பரம்பொருளின் அம்சமாகவே கருதினார். ஆதலால் உயர்ந்த ஆசனத்தில் தாம் அமர்ந்தால், அச்செயல் தாழ்ந்த இடத்திலுள்ள ஆன்மாக்களை அவமதித்ததாகி, தெய்வ நிந்தனை செய்த பாவம் நேருமோ என்றஞ்சினார். இதே மனநிலையில் தான் பார்க்கின்ற மலரூடு நீயே யிருத்தி, அப்பனி மலர் எடுக்க மனமும் நன்னேன் என்றார் தாயுமானவர்.

தாழ்ந்தோருக்கும் தாழ்ந்தோர் என்ற நிலையில் அவர் வாழ்ந்தார். சன்மார்க்க சங்கத்தினரோ அவரையே தெய்வமாகக் கருதி வழிபட்டனர். "தெய்வத்தைத் தெரிந்து கொள்ளாது இவ்வுலகத்தார் என்னைத் தெய்வமெனச் சுற்றுகிறார்கள். ஐயோ நம் சகோதரர்கள் தெய்வத்தை தெரிந்து கொள்ளாததினாலே அல்லவா நம்மைச் சுற்றுகிறார்கள்" என்று நான் உள்ளும் புறமும் பரிதாபப் பட்டுக் கொண்டே இருந்தேன்; இருக்கின்றேன்; இருப்பேன்' என்று மிக நைந்து கூறுகின்றார்.

மகாபதேசப் பகுதியில் அடிகளாரைப் பார்த்த ஞானியொருவர் இதோ மனிதன் போகின்றான் என்றாராம். கிரேக்கரும் பகலில் விளக்குகொண்டு மனிதனைத் தேடுகின்றேன் என்பதாகக் கதைக் குறிப்புண்டல்லவா?

ஜீவகாருண்ணியம் என்பது, கொல்லாமையோ, புலால் மறுத்தலும் மட்டுமோ அன்று. பசி என்கிற நெருப்பானது ஏழைகள் தேகத்தினுள் பற்றி எரிகின்ற போது ஆகாரத்தால் அணைப்பதுதான் ஜீவகாருண்யம். தம் பசியினால் தூக்கம் பிடியாமல் துன்பப்படுகின்ற ஏழை ஜீவர்களுக்கு ஆகாரம் கொடுத்து துக்கத்தை நீக்கித் தூக்கம் பிடிக்க வைப்பதே ஜீவகாருண்யம்.

ஜீவகாருண்ணிய ஒழுக்கமில்லாமல் ஞானம், யோகம், தவம், விரதம், ஜெபம், தியானம் முதலியவைகளைச் செய்கிறவர்கள் கடவுள் அருளுக்குச் சிறிதும் பாத்திரமாகார்கள். அவர்களை ஆன்ம விளக்கமுள்ளவர்களாகவும் நினைக்கப்படாது. ஜீவகாருண்யம் இல்லாது செய்யப்படுகிற செய்கைகளெல்லாம் பிரயோசனமில்லாத மாயாஜாலச் செய்கைகளேயாகும் என்று அறிய வேண்டும்.

சமுசாரிகள் விவாகம் முதலிய விசேஷகாரியங்களில், பந்தலை அலங்கரித்தும், வேறுவேறு சடங்குகளைச் செய்வித்தும் ஆடல், பாடல் வரிசை, ஊர்வலம் முதலிய வினோதங்களையும், அப்பவர்க்கம் சித்திரான்னம் முதலிய பெருமைப்பாடுகளையும் நடத்தியும் எக்களிப்பில் அமிழ்ந்திருக்கும் தருணத்தில் பசித்த ஏழையர் முகத்தைப் பார்க்கவும் சம்மதிக்கவில்லை.

தமது குடும்பச் செலவைக் கூடியமட்டில் சிக்கனம் செய்து ஏழைகளின் பசியை நீக்குதல் வேண்டும்.

"மண்ணுல கதிலே உயிர்கள்தாம் வருந்தும்
வருத்தத்தை யொருசிறி தெனினும்
கண்ணுறப் பார்த்தும் செவியுறக் கேட்டும்
கணமுநான் சகித்திட மாட்டேன்."

'பசிவந்திடப் பத்தும் பறந்துபோம்' என்பது பழமொழி. பட்டினிக் கொடுமை, தேசபக்தி, தெய்வபக்தி, மதபக்தி, மனிதபக்தி அத்தனையையும் நலிய வைத்தது. எனவே, தெய்வ நிந்தனை, புறமதந்தழவல்கள், பரதேசி ஆட்சிக்கு அனுசிரனையாயிருத்தல் ஆகிய தீமை பல்லாயிரம் சேர்ந்தன. அன்றிருந்த ஆன்மீகத்துறையினர், மடாதிபதிகள், மதாச்சாரியர்கள், மகந்துகள், சாதித் தலைவர்கள் ஆகியோர் இந்த உண்மையை உணராதவர்களாகவோ, உணர்ந்தும் மறந்தவர்களாகவோ இருந்தனர். இது நாட்டின் விதி. அந்த விதிக்கும் விதிகளை விழைந்தார் வள்ளலார். மனித சமுதாயத்திலே மகத்தானதொரு பொருளாதாரப் புரட்சி ஏற்பட வேண்டும் என்று விரும்பினார்.

# 8. எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணல்

--எம். இளம்பிறை

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்பாள் தமிழ் மூதாட்டி ஔவை. பெறுவதற்கரிய மானிடப் பிறவியைப் பெற்றுக் கொண்டவன், தன் பிறவியின் நோக்கத்தை தன் வாழ்நாட்காலத்தில் உணர்ந்து செயல்படுத்த வேண்டியது அவன் கடமையாகும். மனிதப் பிறவியெனும் பெரும் பேற்றினைப் பெற்றுக் கொண்டவன். அப்பிறப்பினால் தான் அடையக் கூடிய ஆன்ம லாபத்தை உரியகாலத்தில் உணர்ந்து, அறிந்து, அடைந்து, அனுபவிக்க வேண்டும். எல்லா உலகங்களையும், புவனங்களையும், பொருட்களையும், உயிர்களையும், ஒழுக்கங்களையும் அருட்சக்தியால் தோற்றுவித்து விளக்கம் செய்கின்ற இயற்கை வடிவினனாகிய கடவுளின் பூரண அருளையும், இயற்கை இன்பத்தையும் பெற்று எக்காலத்தும் எவ்விடத்தும் தடைபடாமல் வாழ்கின்ற ஒப்பற்ற பெரிய வாழ்வே ஆன்மலாபம். அத்தகைய பெரியவாழ்வை அடைவதற்கான வழிகளைப் பல மெய்யடியார்களும், ஞானியரும், தத்தம் அருள் அனுபவத்திற்கு ஏற்ற வகையில் கண்டு தெளிந்திருக்கின்றார்கள். இறைவனோடு மகிழ்ந்து கலந்து வாழ்கின்ற சுகவாழ்விற்கு அருட்பிரகாச வள்ளலும் வழிகாட்டியிருக்கிறார். அவர் காட்டிய நெறி அருள் நெறி, அன்பு நெறி. ஜீவகாருண்ய ஒழுக்க நெறியாலன்றி, வேறெந்த வகையிலும் இறைவனின் பெருங்கருணையைப் பெற இயலாதென்பதனை திருவருட்பாத் திரு நூலைப் போன்று வேறெந்த நூலும் தெளிவாக இந்நாள் வரைப் பேசியதில்லை. உயிர்க்கருணையாகிய ஜீவகாருண்யம் தோன்றும்போது, அன்பும் அறிவும் அதனைச் சார்ந்த அனைத்துப் பண்புகளும் தோன்றுகின்றன. உயிர்க்கருணை மறையும்போது அந்த நற்பண்புகளும் மறைந்து போகின்றன. எல்லா உயிர்களிடத்தும் எந்தவித வேறுபாடுமின்றி காட்டப்பட வேண்டிய உயிர்க்கருணையைத்தான் 'தனிப்பெருங்கருணை' என்ற தகைசான்ற சொற்கொண்டு அழைக்கிறார் வள்ளற் பெருமான்.

உள்ளத்தில் கருணை உடையவன் தான் எவ்வுயிரையும் தன்னுயிராக எண்ணிப் போற்றக்கூடும். மன்னுயிரெல்லாம் கடவுள் வடிவம், கடவுளின் மக்கள் என்று உணரக்கூடும். கருணை உடைய கண்களுக்கு உலகுயிர்த்திரளுக்கு மத்தியில் எந்தவித வேறுபாடும் தோன்றாது. 'உற்றநோய் நோன்றல்; உயிருக்கு உறுகண் செய்யாமை' என்று வள்ளுவர் பேசும் அறக்கொள்கை இவ்வருள் பெற்றார் மட்டுமே செயல்படுத்தக் கூடிய ஒன்று. உண்மை நெறியாகிய கடவுள் நெறியை அடைவதற்கான நால்வகை ஒழுக்கங்களான இந்திரிய ஒழுக்கம், ஜீவ ஒழுக்கம், கரண ஒழுக்கம், ஆன்ம ஒழுக்கம் இந்நான்கிலும் ஜீவ ஒழுக்கமும், ஆன்ம ஒழுக்கமும் உயிர்க்கருணையின் அடிப்படையில் எழுந்தவை. ஆண் பெண் முதலிய யாரிடமும், சாதி சமய மத ஆச்சிரம ஆசார பேதமனைத்தும் நீக்கி எல்லோரையும் தம்மவர்களாய் கொள்ளுதல் ஜீவ ஒழுக்கம் என்றும், யானை முதல் எறும்பு வரை தோன்றிய எல்லா உயிர்களிடத்துமுள்ள ஜீவான்மாவே திருச்சபையாகவும், அதனுள் பரமான்மாவே பதியாகவும் கொண்டு வேறுபாடகற்றி, எல்லாந்தானாக நிற்றல் ஆன்ம ஒழுக்கம் என்றும் பேசப்படுகிறது. இந்த இருவகை ஒழுக்கங்களுக்கும் அடிப்படைதான் எவ்வுயிரும் தம்முயிராய் கொள்ளும் பண்பு. இதனை அருட்பா எடுத்தியம்பும் அழகே தனியானது.

"எத்துனையும் பேதமுறா தெவ்வுயிரும் தம்முயிர்போ லெண்ணியுள்ளே
ஒத்துரிமை யுடையவராய் யுவக்கின்றார் யாவர் அவர் உள்ளத்தான் சுத்த
சித்துருவாய் யெம்பெருமான் நடம்புரியு மிடமெனநான் தெரிந்தேனந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடவென் சிந்தைமிக விழைந்ததாலோ"
(ஆறாந்திருமுறை, அகவல் 125, பாடல் 2)

உயிர்கள் அனைத்தினுள்ளும் திருநடம் புரிகின்றான் இறைவன் என்பதனை உணர்ந்தவன் கொலைத் தொழிலையும் புலைப்பசியையும் அறவே நீக்க வேண்டியதன் அவசியத்தைப் புரிந்துகொள்வான்.

"உயிருள்யாம் எம்முன் உயிர் இவையுணர்ந்தே
உயிர் நலம் பரவுகென் றுரைத்த மெய்ச்சிவமே"

என்றும்,

"உலகினில் உயிர்களுக் குறுமிடை யூறெலாம்
விலகேநீ அடைந்து விலக்குக மகிழ்க;
சுத்தசன் மார்க்க சுகநிலை பெறுக
உத்தமனாகுக ஓங்குக வென்றனை"

என்றும்,

"உலகுயிர்த் திரளெலாம் ஒளிநெறி பெற்றிட
இலகுமைந் தொழிலையும் யான்செயத் தந்தனை"

என்றும் அகவல் வரிகள் உயிர்க்கருணை பற்றிப் பேசுகின்றன.

உயிர்க்கருணையாகிய ஜீவகாருண்யமே மோட்ச வீட்டின் திறவுகோல். வையத்துள் வாழ்வாங்கு வாழ வேண்டிய இம்மை வாழ்விற்கும், அதன் அடிப்படையில் அமைகின்ற மேலுலக வாழ்க்கைக்கும் இன்றியமையாத சாதனமாக அமைவது உயிர்க் கருணை. அந்தக் கருணை, தான், தன்மனைவி, மக்கள், சுற்றம், வீடு, நாடு என்ற குறுகிய வட்டத்தினுள் அடைபடலாகாது. இவன் மனிதன், இது பிராணி, இது தாவரம் என்ற பாகுபாட்டைப் பகுத்துக் கொண்டு, இனத்திற் கேற்றாற்போல் நடந்து கொள்பவன், சன்மார்க்கத்தை உணராதவன். தன்னையும், கொழு கொம்பில்லாமல் தவித்த முல்லைக் கொடியையும், தனித்தனியாகப் பிரித்துக் கொள்ளாமல், முல்லைக் கொடிக்குத் தன் தேரை வழங்கினான் பாரி. கார்கண்டு தோகைவிரித்தாடும் கலாபம், குளிரால் வாடுகின்றது போலும் என்றெண்ணித் துடிதுடித்துத் தன் போர்வையை வழங்கினான் பேகன். மயிலையும், முல்லைக் கொடியையும், முறையே ஒரு சாதாரணப் பறவையாகவும் கொடியாகவும் கருதியிருந்தால், பாரியும் பேகனும் அவ்வுயிர்களின் துன்பங்கண்டு துவண்டு போக வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. மாறாக, அவ்வுயிர்களுக்கு ஏற்பட்ட துன்பத்தை தன்னதாகப் பாவித்துக் கொண்ட காரணத்தால், பிற உயிர் பதைக்கப் பார்த்திடாத உள்ளம் தங்களுடையது என்று தம்மை இனங்காட்டிக் கொண்டனர் பாரியும் பேகனும். இந்த ஒத்த உணர்வினைத்தான்,

"எவ்வுயிர்த் திரளுமென்னுயி ரெனவே
எண்ணிநல் லின்புறச் செயவும்
அவ்வுயிர்களுக்கு வருமிடை யூற்றை
யகற்றியே யச்சநீக் கிடவும்
செவ்வையுற் றுனது திருப்பதம் பாடிச்
சிவசிவ வென்று கூத்தாடி
ஒவ்வுறு களிப்பா லழிவுறா திங்கே
ஓங்கவும் இச்சை காணெந்தாய்"

என்று அருட்பா பேசுகின்றது.

பொதுவாக உலகில், சமயம் சமுதாயம் இவற்றின் பேரால் எழும் சீர்கேடுகளைச் சாடுகின்றவர்கள் சீர்திருத்தவாதிகள் என்ற பெயரைப் பெற்று விடுகின்றனர். ஆய்ந்து பார்த்தால், உண்மைச் சீர்திருத்தம் விரும்புகின்றவன், சீர்கேடுகளைச் சுட்டிக் காட்டுவதோடு மட்டும் அமையாமல், அவைகளை மாற்றிப்போட வழிவகைகளைக் கண்டுணர்ந்து, பிறர்க்கும் உணர்த்த வேண்டும். அப்படிப்பட்டவன் சொற்கேட்கும் இவ்வுலகம். அருட்பாவின் ஆறு திருமுறைகளும் சீர்த்திருத்தப் பாதை அமைத்துக் காட்டும் திறமுடையவை.

எவ்வுயிரையும் தன்னுயிராய் எண்ணிப் போற்றும் பண்பினைப் பெற வேண்டுமாயின் மனிதன் என்ன என்ன செயல் வேண்டும்? முதலில் நானார்? என் உள்ளமார்? என்ற வினாக்களுக்குரிய விடையை மனித உள்ளம் உணர்ந்திருக்க வேண்டும். தன்னைப் பற்றிய உண்மை அறிவு ஓரளவுக்கேனும் மனிதனுக்கு வேண்டும்.

"தன்னை உணர்ந்து இன்பமுற வெண்ணிலாவே
ஒரு தந்திரம் நீ சொல்ல வேண்டும் வெண்ணிலாவே"

என்று பாடுகின்றார் அருட்பிரகாசர். அடுத்து இறைவன் முன்னிலையில் தன்னைத் தாழ்த்துகின்ற உணர்வும், மனபக்குவமும் மனிதனுக்கு வேண்டும். "தன்னைத் தாழ்த்துகிறவன் எவனும் உயர்த்தப்படுவான். தன்னை உயர்த்துகிறவன் எவனும் தாழ்த்தப்படுவான்" என்று விவிலியம் பேசுகின்றது. உள்ளத்தின் அழுக்காறு, அவா, வெகுளி, இவை அகல, தன் குறைகளை நினைத்து கண்ணீர் மல்கி, இக்கருணையைப் பெறல் வேண்டும். "வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே" என்று மாணிக்கவாசகப் பெருமானின் வாசகம் காட்டும் நெறியும் இதுவே. கடையனுக்கும் கடையனாகத் தன்னைக் கருதுகின்றார் இராமலிங்கர் திருவருட்பாவிலே.

"நாயினுங் கடையேன் ஈயினு மிழிந்தேன்
ஆயினும் அருளிய அருட்பெருஞ் ஜோதி
தோத்திரம் புகலேன் பாத்திர மல்லேன்
ஆத்திரம் அளித்த அருட்பெருஞ் ஜோதி"

என்கின்றார். "காட்டிலே திரியும் விலங்கை விடக் கொடியவன் நான்; எளியவர் வளைத்த நிலமெல்லாம் கவரும் வண்ணமே பெரிது முடையவன்; அளத்திலே பிடித்த துரும்பினும் சிறியேன்;" என்கிறார் தான். ஒன்றுக்கும் உதவாதவனே தன்னைப் பற்றி மிகப் பெரியவனாக நினைத்துக் கொள்ளும் இந்த நாளில் அருள் அனுபவம்

பெற்றவர்கள் தங்களைத் தரையளவாகத் தாழ்த்திக் கொள்வதைக் காணும்போது நம்மால் உருகாமல் இருக்க முடியவில்லை.

"அளத்திலே படிந்த துரும்பினுங் கடையேன்
அசடனே னறிவிலே னுலகில்
குளத்திலே குளிப்பார் குளிக்கவெஞ் சிறுநீர்க்
குழியிலே குளித்தவெங் கொடியேன்
வளத்திலே பொசித்துத் தளத்திலே படுக்க
மனங்கொண்ட சிறியனேன் மாயைக்
களத்திலே பயின்ற வுளத்திலே பெரியன்
என்னினுங் காத்திருள் எனையே"

(ஆறாந்திருமுறை, அகவல் 11, பாடல் 7)

என்று பாடிப் பரவுகின்றார். மாறாக, இந்தவுலகில் தன்னைத்தானே பெரியவனாக எண்ணிக் கொள்வார் தொகைதான் அதிகம். தன்னைப் பெரியவனாக எண்ணிக் கொள்பவன் கண்கள் ஒளியற்றுப்போகும். உள்ள பொருட்களின் உண்மையைக் கண்டு கொள்வதே அவனுக்குக் கடினமாகும். அப்பேர்ப்பட்ட மனிதன் பிறரால் மதிக்கப்படவும், போற்றப்படவும் மட்டுமே விரும்பான். தன் உள்ள உணர்வுகளைச் சீர்படுத்தும் பயிற்சியும், இறைச் சிந்தனையும், இத்தூய உணர்வுகளை சாதாரண மனிதர் மாட்டும் புகுத்தும் தன்மையுமுடையன். மாணிக்க வாசகரும் தன் திருவாசகத்தில் 'நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனை" என்றும் "விலங்கு மனத்தால் விமலா! உனக்குக் கலந்த அன்பாகிக் கசிந்து உள்உருகும் நலந்தானில்லாத சிறியேன்" என்றும் தன்னைத் தாழ்த்திக் கொள்கிறார். மெய்யடியார்கள் அனைவரும், இறைவன் முன்னிலையில் தங்களைத் தாழ்த்திக் கொள்வதும், எல்லா உயிர்களையும் போற்றிக் காக்கும் நன்னிலை எய்த அருட்பா காட்டும் வழிகளில் சிறந்தவைகளாக அமைகின்றது.

மனிதனை மனிதன் மனிதாபிமானத்துடன் நடத்த வேண்டும் என்ற மானிடப் பண்பே, பொருள் இழந்துபோன காலம் இது. செம்புக்கும், கொம்புக்கும் அஞ்சி மனிதன் சிற்றடிமைப்பட்ட காலமென்னும் காட்டாற்றைக் கடந்து வந்துங்கூட, மனிதன் முழுமன வளர்ச்சி உடையவனாக தன்னை மாற்றிக்கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டதில்லை. வானில் பறக்கும் பறவையினைப் பார்த்து, தானும் சிறகுகளை எங்கேனும் கட்டாயமாகக் கடன் வாங்கிக் கொண்டு வானத்தின் வரைதழுவிச் செல்ல வழியிருக்கிறதா என்று தன்னையே குழப்பிக் கொண்டான். இன்று கணக்கற்ற வானவூர்திகளில் பவணி வருகின்றேன். நீரிலும் மீனைப்போலச் சுற்றித் திரிய வழிகண்டுபிடித்து விட்ட இறுமாப்பில் திளைக்கிறான். ஆனால் பூமியில் மனிதன் மனிதனாக நடந்துகொள்ள ஒருநாளும் முயன்றதில்லை. மனிதனுக்குரிய உயர் பண்புகளுடன், உலகில் வாழ்வதும், ஆறறிவு பெறாப் பிராணிகள் தாவரங்கள் மாட்டு கருணை உடையவனாக இலங்கவேண்டியதும் அவன் கடமை என்று அருட்பா பேசுகின்றது. அயராது உழைக்கின்ற உடலுக்கு மனிதன் உண்ணும் உணவின் சத்து ஊட்டமாக அமைவது போன்று, நற்பண்புகளைச் செயல்படுத்தும் உள்ளத்திற்கு, கலப்பில்லா அன்பு ஊட்டமாக அமையும். அத்தகைய அன்பினால், செய்ய இயலாதென்று ஒன்று இல்லை. அன்புப்பிழம்பாகிய இறைவனைக் கூட அந்தப்பிடிக்குள் அடக்கிவிடலாம்.

"அன்பெனும் பிடிக்குள் அகப்படும் மலையே"

என்கிறார் அருட்பிரகாசர். அந்த அன்பின் துணை கொண்டே, உயிர்கள் மாட்டு கருணை காட்டும் அருள் உள்ளத்தை வளர்த்துக்கொள்ள முடியும். அன்பாய்ப் பேசுதலும், அன்புடன் பழகுதலும், அன்பை வளர்த்துக்கொள்ளுதலும், கைம்மாறு கருதாது காட்டப்படும் அன்பை மதித்துப் போற்றுதலும், எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணிப் பாதுகாக்கும் நல்லுணர்வை வழங்கும் அருளாளர்களின் வாழ்வியல் இதற்கு நற்சான்றாக அமைகின்றது. அன்பிருக்கும் உள்ளம் ஒரு ஆலயம். அதில் நெகிழ்வும், மென்மையும் கருணையும் இருக்கு மென்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. அருட்பிரகாசரின் உள்ளம் எப்படிப்பட்டதென்பதனை, திருவருட்பா காட்டுகின்றது. பட்டினி கிடந்து, பரிதவிப்பார் முகம் பார்த்துச் சகியாத உள்ளம் அவர் உள்ளம். நீரின்றி, நிலவளமின்றி வாடும் பயிரைக் கண்ணால் கண்டாலே வாடும் உள்ளம் அவர் உள்ளம். உலக உயிர்த்திரளில் தான் ஒரு சிறு பகுதியெனவும், மற்றை விலங்குகளும் தாவரங்களும் அதே உயிர்த்திரளின் அங்கங்கள் எனவும் உணர்ந்த உள்ளம் அவருடையது. அதனால்தான் பசியாலும், மகிழ்ச்சியுதவா சூழ்நிலையிலும் பறவைகள் எழுப்பும் ஒலிகேட்டு அவர் உள்ளம் துடிதுடித்துப் போகின்றது.

"பட்டினி யுற்றார் பசித்தனர் களையால்
பரிதவிக்கின்றன ரென்றே
ஒட்டிய பிறராற் கேட்டபோ தெல்லாம்
உளம்பகீ ரெனநடுக் குற்றேன்
இட்டவிவ் வுலகிற் பசியெனி லெந்தாய்
என்னுளம் நடுங்குவ தியல்பே."

என்றும்,

"காக்கைகள் கூவக் கலங்கினேன் பருந்தின்
கடுங்குரல் கேட்டுளங் குலைந்தேன்
தாக்கிய வாந்தை குரல்செயப் பயந்தேன்
சாக்குரற் பறவையாற் றளர்ந்தேன்"

என்றும் 'பிள்ளைப் பெரு விண்ணப்பத்'தில் நெக்குருகி நிற்கின்றார். பிற உயிர்களுக்கு அன்பு காட்டுவது நம் கடமையாயிருக்க, நாம் பிற உயிர்களைத் துன்புறுத்துகின்றோமே அது எந்த வகையில் நியாயம் என்று சிந்திக்கச் சொல்கிறார். நம் நன்மைக்காகப் படைக்கப்பட்ட பிராணிகளை நாமே கொல்வது எந்த வகையில் நியாயம்.

'கொல்லான் புலால் மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்'

என்று வள்ளுவம் மொழிகின்றது. புலைப்பசியைத் தவிர்த்தார் எல்லாம் அகவினத்தார் என்று அருட்பா பேசுகின்றது. புலைப்பசியைத் தவிர்த்தாலன்றி சன்மார்க்க நன்னெறிகளை ஏற்றுச் செயல்படுத்துவது மிகக் கடினம். தன் உடலை வளர்ப்பதற்காக, பிற உயிர்களைக் கொஞ்சமும், இரக்கமின்றிக் கொன்று குவிக்கும் இழிந்த கொலைத்தொழிலைச் செய்வாரெல்லாம் கருணையில்லாதார் அந்தக் கருணை நண்ணிடாக் கூட்டத்தார் இறைவனை அநுபவித்தல் இயலாததொன்று.

"உயிர்க்கொலையும் புலைப்புசிப்பு முடையவர்க ளெல்லாம்
உறவினத்தா ரல்லரவர் புறவினத்தா ரவர்க்குப்
பயிர்ப்புறுமோர் பசிதவிர்தல் மாத்திரமே புரிக
பரிந்துமற்றைப் பண்புரையேல் நண்புதவே லிங்கே
நயப்புறுசன் மார்க்கமவ ரடையளவு மிதுநான்
நம்மாணை யென்றெனக்கு நவின்றவரு னிறையே
மயர்ப்பறுமெய்த் தவர்போற்றப் பொதுவில்நடம் புரியும்
மாநடந்தென் னரசேயென் மாலையணிந் தருளே"
(ஆறாம் திருமுறை, அகவல் 28, பாடல் 71)

உள்ளத்தே தயவுடையார் தவிர மற்றை யாரும் இந்த மலைவறு சுத்த சன்மார்க்க நன்னெறியில் சேர இயலாது என்பதனைத் தெள்ளத் தெளிவாக உணர்த்துகின்றார். யாராயினும், இந்த சன்மார்க்கமெனும் நன்மார்க்க சங்கம் சார்ந்து ஒழுக இயலும் என்று சொல்லி வைக்காமல் கருணையில்லாதாரின், அகவிருள் போக்கி, அவர்தம் உள்ளங்களைத் தெளிவித்துத் திருந்திய பின்னரே சன்மார்க்க சங்கத்தில் அடைவித்திடுதல் வேண்டுமென்கிறார்.

"அகத்தே கறுத்துப் புறத்தே வெளுத்த
சகத்தோர் அனைவரையும் திருத்திச்
சன்மார்க்க சங்கத்து அடைவித்திட"

என்ற வரிகளில் விளக்குகின்றார்.

இவ்வுலகில் தூண்டில், கண்ணி, கத்தி போன்ற பொருட்களின் துணைக் கொண்டு பிராணிகளைக் கொன்று குவிப்பது மட்டுமே பாவம் என்றும், போட்டி, பொறாமை, போர் இவைகளின் விளைவாக எழுகின்ற பூசல்களின் அடிப்படையில் ஒரு மனிதனை, மற்றொருவன் கொல்வதே கொலை என்றும் எண்ணிக் கொண்டிருப்பாருக்கும், அருட்பா ஒரு புத்தம் புதிய கொல்லாமை நெறியையும் உபதேசிக்கின்றது. பிற உயிரைக் கொல்வது எத்துணை அளவுக்குப் பாவம் என்று கருதப்படுகின்றதோ, அதுபோன்று பிற உயிர் பசிக்கப் பார்த்திருப்பதும் கொலை, பாவம் அறத்திற்கு மாறுபட்ட செயல் என்று விளக்குகின்றார். கொன்றென்ன இன்னா செய்யுங் கொடியாரேயாயினும், அவர் படுந்துயரையும் மாற்ற வேண்டிய கடமை நமக்குண்டு என்று உணர்த்துகின்றார்.

"கொடியவரே கொலைபுரிந்து புலைநுகர்வா ரெனினும்
குறித்திடுமோ ராபத்தில் வருந்துகின்ற போது
படியிலதைப் பார்த்துகவேல் அவர்வருத்தந் துன்பம்
பயந்தீர்த்து விடுகவெனப் பரிந்துரைத்த குருவே"

என்று அருட்ஜோதி தெய்வத்தை அழைக்கின்றார். இந்த அருள் நோக்கந்தான் சுத்த சன்மார்க்க சாதனம் என்று வழங்கப்படுகிறது. எல்லா உயிரையும் தன்னுயிராய் மதிக்கும் சன்மார்க்க சாதனம் பெற்றவன் எவனோ, அவனே இறந்தாரை எழுப்புகின்ற ஆற்றல் படைத்தவன்; அவனே ஆண்டவனுமாவான். அருட்பாவின் ஆறாந் திருமுறையின் இருபத்து ஒன்றாம் பதிகத்தில் "கருணையும் சிவமே பொருளெனக் காணும் காட்சி" என்று அழகாகப் பேசிகின்றாரே. அக்காட்சி

கண்டவன்தான் சுத்த சன்மார்க்கன். அப்பேர்ப்பட்ட சுத்த சன்மார்க்கனும் அன்புப் பிழம்பாய் திருவான். கருணையும், சிவமும் பொருளெனக் காண்பவன், எவ்வுயிரையும், தன்னியிராய் காண்பான். அவன் உள்ளத்தில் உயிர்க்கருணை என்றும் விளங்கும். அதுவே அருளின் ஏகதேச விளக்கமுமாகும். விவிலியம் கூறும் தத்துவக் கொள்கைகள் அத்தனையையும் 'உன்னைப் போல் உன் பிறனுக்கும் அன்பு காட்டு' என்ற தெய்வீக நெறி ஒன்றில் அடைக்கலாம். அது போன்று அருட்பா பேசும் அத்தனை சன்மார்க்கச் சட்ட திட்டங்களையும் உயிர்க்கருணை என்னும் ஒரு தத்துவக் கொள்கையில் அடைவிக்கலாம். அருட்பாவின் ஜீவநாடியாக இயங்குவது இந்த ஜீவகாருண்யமே. மற்றை நெறிகள் எதுவும் முழு ஆன்ம நெறியையும், முழு மன வளர்ச்சியையும் தர இயலாது.

உயிர்க்கருணை உள்ளத்தே தோன்றி நிலைத்து விட்டால், அந்த அருள் உணர்வே நாளடைவில் உலகையே ஒருவீடாகக் காணும் பெரிய மனத்தை மனிதனுக்கு வழங்கிவிடும். பின்னர், தனக்கென்றும் தன் வீட்டிற்கும் எதனையும் கரந்து வைத்துக் கொள்ளாது உலகிற்கு உவந்து வழங்குகின்ற நேர்மைத் திறம் கைவரப்பெறும். இறைவன் தன்னை ஆட்கொண்ட காலத்தில் கூட, தன்னைப் போன்ற பிற உயிர்களை இன்னும் இறைவன் ஆட்கொள்ளவில்லையே என்ற ஏக்கத் தான் பிறந்தது வள்ளற்பெருமானுக்கு. தன்னை ஆட்கொண்ட இறைவனிடமே "இறைவா எனக்கு வழங்கியருளியுள்ள பேரின்பப் பேற்றை, நீ உலகின் எல்லா உயிர்த்திரளுக்கும் வழங்கும் நாளே நான் உகந்த நாள்" என்கின்றார்.

"பாதி யிரவில்எழுந் தருளிப்
பாவி யேனை எழுப்பிஅருட்
ஜோதி அளித்துஎன் னகத்தே
சூழ்ந்து கலந்து துலங்குகின்றாய்
நீதி நடம்செய் பேரின்ப
நிதிநான் பெற்ற நெடும்பேற்றை
ஓதி முடியாது என்போல்இவ்
உலகம் பெறுதல் வேண்டுவனே"

என்று பாடும் பாடலில் அவர் உள்ளம் தெள்ளத் தெளிவாகப் புலனாகின்றது.

தன் மனம் நிறைய இறைவனை விளக்கும்போதும், தனித்த ஒரு சன்மார்க்கத் தன்மை அதில் பெருக்கெடுத்தோடுகின்றது. "பாலானைத், தேனானைப், பழத்தினானை, பலனுறு செங்கரும்பினானை" என்று இறைவனை அழைப்பதோடு நிறுத்திக் கொள்ளாமல், கொல்லா விரதம் பூண்டோர் உள்ளத்தில் வாழ்வானை யென்றும் கொலைபுரிவாரைக் கொஞ்சமும் பாரானை என்றும் இறைவனை விளிக்கின்றார்.

"உடையானை யருட்ஜோதி யுருவி னானை
ஓவானை மூவானை யுலவா இன்பக்
கொடையானை யென்குறைதீர்த் தென்னை யாண்டு
கொண்டானைக் கொல்லாமை குறித்தி டாரை
அடையானைத் திருச்சிற்றம் பலத்தி னானை
அடியேனுக் கருளமுத மளிக்க வேபின்
இடையானை யென்னாசை யெல்லாந் தந்த
எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே."

என்றும்,

"உள்ளானைக் கதவுதிறந் துள்ளே காண
உளவெனக்கே யுரைத்தானை உணரார் பாட்டைக்
கொள்ளானை யென்பாட்டைக் குறிக்கொண் டானைக்
கொல்லாமை விரதமெனக் கொண்டார் தம்மைத்
தள்ளானைக் கொலைபுலையைத் தள்ளா தாரைத்
தழுவானை யான்புரிந்த தவறு நோக்கி
எள்ளானை யிடர்தவிர்த் திங்கென்னை யாண்ட
எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே."

என்றும் இறைவனை விளிக்கின்றார்.

அருளடியார்கள் தம்தம் அனுபவத்திற்கும், மன உணர்வுக்கும் ஏற்றபடி இறைவனிடம் வரம் வேண்டிப் பெற்றுக் கொள்கின்றனர். பிறவாமை வேண்டுமென்று சிலரும், இன்ப அன்பு மட்டுமே வேண்டுமென்று சிலரும், பலமுறை பிறந்து இளைத்தாலும், இறைவன் பொன்னடிகள் மட்டும் நெஞ்சத்தை விட்டு அகலாத வரம் வேண்டும் என்றும் அடியார்கள் சிலர் வேண்டி வரம் பெற்றுள்ளனர். "புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா! நின்னடி என் மனத்தே வழுவாதிருக்க வரம் தர வேண்டும்" என்று திருநாவுக்கரசரும், "தேனார் பூஞ்சோலைத் திருவேங்கடச்சுனையில் ஒரு மீனாய்ப் பிறக்கும் விதி வேண்டுமென்று ஆழ்வாரும், இறவாத இன்ப அன்பு வேண்டுமென்று காரைக்காலம்மையும், குற்றாலத் தமர்ந்துறையும் கூத்தனின் கழலுக்கே கற்றாவின் மனம் போலக் கசிந்துருக" வேண்டுமென்று மாணிக்கவாசகரும் இறைவனிடம் வரங்கேட்கின்றனர். அருட்பிரகாச வள்ளற் பெருமானும் இறைவனிடம் வரங்கேட்டுப் பெறுகின்றார். தன்னைப் பற்றிய சிந்தனை முற்றிலுமாக நீங்கிப் போக, இறைவன் மாட்டு, வரம் வேண்டும் போதும், உலகுயிர் வாழ வரம் வேண்டி நிற்கிறார். "ஆருயிர்க் கெல்லாம் அன்பு செய்கின்ற இனிய வரத்தை வழங்கிடு இறைவா" என்று கசிந்து உருகுகின்றார்.

"அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்க் கெல்லாம்நான் அன்புசெயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும்நான் சென்றே
எந்தைநின தருட்புகழை எடுத்தியம்பிஇடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேல் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்ஜோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செயினும் நீபொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத நிலைமையும்வேண் டுவனே."

என்கின்றார். தணையடுத்தார் சுகம் பெற்று இனிது வாழ வேண்டும் என்பதோடு மட்டுமல்லாமல், எவ்வுயிரும் இன்பமடைதல் வேண்டுமென்று வேண்டுகின்றார்.

"அருளாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
அணுத்துணையும் சினங்காமம் அடையாமை வேண்டும்
மருளாய வுலகமெலாம் மருள்நீங்கி ஞான
மன்றிடத்தே வள்ளலுனை வாழ்த்தியிடல் வேண்டும்

இருளாமை யுறல்வேண்டும் எனையடுத்தார் சுகம்வாய்ந்
திடல்வேண்டு மெவ்வுயிரும் இன்பமடைதல் வேண்டும்
பொருளாமோர் திருவடிவிலு டையாயும் நானும்
புணர்ந்துகலந் தொன்றாகிப்பொருந்துதல் வேண்டுவனே".

என்றும், எல்லாம் சாதி சங்கற்ப, சமய, விகற்பங்கள் எல்லாம் தவிர்த்து உயிர்கள் மாட்டு அன்பு கொள்ளவேண்டு மென்பதனை,

"அச்சாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆறந்த நிலைகளெலா மறிந்திடைதல் வேண்டும்
எச்சார்பு மாகிஉயிர்க் கிதம்புரிதல் வேண்டும்
எனையடுத்தார் தமக்கெல்லாம் இன்புதரல் வேண்டும்
இச்சாதி சமயவிகற் பங்கள் எல்லாம் தவிர்த்தே
எவ்வுயிரும் சன்மார்க்கப் பொதுவடைதல் வேண்டும்"

என்ற பாடலின்கண் விளக்குகின்றார். பிறனைக் கடைத்தேற்றுவதற்காக நீ உன் சுவர்க்கப் பதியை இழக்கக் கூட தயாராக இருக்க வேண்டும், என்று விவேகானந்தர் பேசுவது போன்று, உயிர்க்கு இதம்புரியும் நோக்கோடு வழங்கியருள சித்தமாயிருக்க வேண்டும் என்றும் உணர்த்துகின்றது அருட்பா. திருமூலர் காலந் தொட்டு அறிவியல் வளர்ந்திருக்கிறது என்று நாம் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கும், இந்த இருபதாம் நூற்றாண்டின் இறுதிக்காலம் வரை வாழ்ந்து வந்திருக்கின்ற மனித சமுதாயத்தின் ஆன்மீக வளர்ச்சியினைப் பற்றிச் சிந்திக்கும் போதுதான், வரிசைவரிசையாக மெய்ஞானியர் பலர்வந்துங்கூட, முழுமை பெற்ற ஆன்மீக உணர்வு மனிதர்களிடை இன்னும் தோன்றியதில்லை என்பதனை உணர்ந்து வருந்த வேண்டியதுள்ளது. அன்புன் அறனும் உடைய பண்பார்த்த வாழ்க்கை நடாத்தும் ஆன்றோர்கள் கூட பெரும்பாலும் வீடுபேற்றை அதாவது அன்புன் அறமும் ஓம்பி அதன் வழி தாங்கள் பெற்றுக்கொள்ளும் வீடுபேற்றினைக் கருத்தில் கொண்டு, அந்த அடிப்படையில் தான் வையக வாழ்வை அமைத்துக் கொள்கின்றனர். சமயத்தின் உள்நோக்கத்தைப் புரிந்து கொள்பவர்கள் மிகமிகச் சொற்பப்பேர். சமய நெறி என்றால் என்ன என்பதனை நன்கு உணர்ந்து கொண்டு, அதன் உண்மை நோக்கமான உலக உயிர்களுக்குப் பணி செய்து கிடப்பதே என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்டவனே எவ்வுயிரையும் தன்னுயிராய்க் காணும் பேரறிவாளன். உயிர்க்கருணை கைவரப் பெற்றவன். ஈத்துவக்கும் இன்பத்தின் எல்லையைக் கண்டவன். அத்தகையவன் இறைவனைக் கண்ணாரக் கண்டு, வாயாரப் பாடி மனமார நினைந்து மகிழும் பேறு பெற்றவன்.

திருவருட்பா, தெள்ளிய, எளிய வாழ்விற்கான இனிய வழிகளை விளக்கும் திருநூல். அந்தத் திருநூலின் பாக்களை நாம் கலந்து பாடுகின்றபோது விளைகின்ற சொல்லொண்ணா சுகத்தை வேறெங்கும் பெறமுடியாது. அந்த அருள் நூல் திருவாக்கின் துணையோடு தன் வாழ்வியல் அமைகின்றபோது, எதற்கும் அஞ்ச வேண்டிய அவசியம் ஏற்படாது. சாவையும், மாயையையும் கூட அஞ்சி நடுங்கி ஓடச் செய்யும் உண்மையான அநுபவம் கிட்டும்.

"கண்ணுங் கருத்தும் நின்பாலன்றி பிறர்பாற் செல்லுமோ?
கண்டேன் உன்னை இனிமேல் என்னை மாயை வெல்லுமோ"

என்று இராமலிங்கப் பெருமானுடன் சேர்ந்து நாமும் பேரானந்தப் பெருவெள்ளத்தை அனுபவித்துப் பாட முடியும். நமைக் காணில் "குறுகப் பயந்து கூற்றும் ஓடிக் குலைந்து போகும், அருட்சிற் ஜோதி நம் மையதாகும்"

உலகுயிர்த் திரளினுள் திருநடம்புரியும் இறைவன், நாளும் நம் சிறு உயிர் வீட்டின் உள்நின்று நடமாடும் தகுதியுடைய இல்லமாக நம் உள்ளத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். அருளாளன் படைப்புகள் அத்தனையின் மாட்டும் பேதமின்றி அன்பு கொண்டு எவ்வுயிரும் தம்முயிராய்க் கருதி வாழ்ந்து நிற்போம். இகத்தே நாம் பரந்தைப் பெற்றிட வகை அமையும். இதுபோன்ற எல்லாச் சித்திகளையும் தெளிவித்து சத்திய நிலைதனைத் தயவினில் தருகின்ற அருட்ஜோதி ஆண்டவன், கருணையும் சிவமும் பொருளெனக்காட்டி, எவ்வுயிரையும் தம்முயிராய் எண்ணும் கருணையினைத் தன் தனிப்பெருங் கருணை யமுதமாய் நமக்கு வழங்குவானாக!

# 9. பசிப்பிணி: வள்ளலாரும் காந்தியடிகளும்

--க.மு.நடராஜன்

அருட்ஜோதி வள்ளல் இராமலிங்கர் அடக்கமே உருவானவர்; கருணையின் வடிவம். உரத்துப் பேசியறியாத உத்தமர். அவரே பசிப்பிணியைக் கண்டு வெகுண்டெழுந்திருக்கிறார். "பசி எனும் ஓர் பெரும் பாவிப் பயலே" என்று அதட்டி அழைக்கிறார்; என் முன்நில்லாதே என்று விரட்டுகிறார். அடிகளார் எழுதிய "சீவகாருண்ய ஒழுக்கம்" என்ற நூல் முழுவதிலும் பசிக்கொடுமையையும் அதைத் தீர்த்தலின் சிறப்பையும் எடுத்துக் கூறுகிறார்.

பசிப்பிணிக்கான விஷக்கிருமிகள் பல்கிப் பெருகுவது வறுமைக் குட்டையில்தான். இவ்வறுமையை விரட்ட வேண்டும் என்று இன்றைய அரசும் படாதபாடு பட்டுக்கொண்டிருக்கிறது. இருப்பினும், வறுமையும் பசியும் போனபாடில்லை. கெட்டியாக நம் நாட்டில் ஒட்டிக்கொண்டு விட்டன. பெரும்பகுதி மக்களைப் பிடித்த நோயாக நித்திய அவஸ்தையாக இந்த நிரப்பு நின்று நிலவுகிறது. அது மட்டுமல்ல, நாள்தோறும் பெருகி வருகிறது. 1960-61 ஆம் ஆண்டில் நம் நாட்டில் வறுமை வட்டத்திற்குள் வாழ்ந்தோர் மொத்த மக்கள் தொகையில் 52% 67-68ல் அது 70% ஆக உயர்ந்திருக்கிறது.

நிரப்பு என்றும் நல்குரவு என்றும் இந்த வறுமைக்குத்தான் எத்தனை சொற்கள்! ஈவோரையும் இரப்போரையும் பலபடப்பாடியுள்ளார்கள் நம் புலவர்கள். வள்ளல் ஒருவரின் பெருமைகளைக் கூற வந்த புலவர் அவருடைய இல்லத்தை நோக்கி இரப்போர் எறும்புச் சாரியாகப் படையெடுப்பதாகக் கூறுகின்றார். பிரபுக்களிடம் பரிசு பெற்றுத் திரும்பிய புலவர்கள் மற்ற புலவர்களை ஆற்றுப்படுத்தும் பாடல்களுக்கும் நம் இலக்கியத்தில் குறைவில்லை. வறுமையே ஒரு வரப்பிரசாதமாகவும் பண்பாட்டுச் சின்னமாகவும் ஏற்றிப் போற்றப்படுகிறதோ என்ற ஐயம் உண்டாகிறது.

**வளத்திற்கிடையில் வறுமை ஏன்?**

"எத்தனை கோடி இன்பம் வைத்தாய்" என்று இறைவனை நன்றியுணர்ச்சியோடு பாரதியார் நோக்குகிறார். சேரும் ஐம்பூதத்தில் வியனுலகு படைத்த வித்தகத்தை வியந்து போற்றுகிறார். இயற்கை வளங்களுக்கு இந்த நாட்டில் பஞ்சமில்லை. இருப்பினும், இங்கு வறுமை ஏன்? பசிப்பிணி ஏன்? வளங்களைப் பயன்படுத்தும் உரிமையும் அதன் மீது அமைந்துள்ள உடைமையும் இதற்கு அடிப்படைக் காரணங்களாகும். உற்பத்தி சாதனங்கள் ஒரு சிலர் கையில் குவிந்தும், அவற்றில் உழைத்துப் பாடுபட்டு வயிறு வளர்க்க வேண்டிய நிர்ப்பந்தம் பெரும்பாலோர் தலையில் விழுந்தும் இருப்பதே இந்த வறுமை நிலைக்குக் காரணம். சமுதாய அமைப்பிலே ஏற்பட்டுவிட்ட இவ் ஏற்றத்தாழ்வு பொருளாதார வளர்ச்சிக்கும் சமுதாய முன்னேற்றத்திற்கும் தடையாக நிற்கிறது. நம் நாட்டிலுள்ள சமூக ஏற்றத்தாழ்வும் இதனுடன் சேர்ந்துகொண்டு முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டை போடுகின்றது. 1961ஆம் ஆண்டு புள்ளி விவரப்படி தஞ்சை மாவட்டத்தில் விவசாயத் தொழிலாளர்கள் 32. 57% மொத்த ஜனத்தொகையில் ஹரிஜனங்கள் மட்டும் 23. 12% ஆகும். நன்செய் கொழிக்கும் கிழக்குத் தஞ்சையில் மொத்த

விவசாயத் தொழிலாளர்களில் 90% ஹரிஜனத் தொழிலாளர்கள்; இவர்கள் நிலமற்றவர்கள். வளம் மிகுந்திருக்கும் இடங்களிலெல்லாம் இந்த நிலையைக் காணமுடியும். சமூக அந்தஸ்த்தில் கீழ் சாதி வகுப்பினர் என்றும் தாழ்த்தப்பட்டோர் என்றும் கருதப்படுபவர்களில் பெரும்பாலும் பொருளாதாரத் துறையிலும் பின்தங்கியிருப்பதைக் காணுகிறோம். இத்துடன் அரசியல் செல்வாக்கும் இவர்களிடம் அண்டாமல் போனால் இவர்கள் கதி என்னவாகும்?

இந்தச் சூழ்நிலையில் நாட்டின் மொத்த வளர்ச்சி பாதிக்கப்படுவதில் ஆச்சரியமில்லை. எனவேதான் பின்தங்கிய நாடுகளில் விரைவான வளர்ச்சி ஏற்பட வேண்டுமெனில் அதற்கு முதல் தேவை ஏற்றத் தாழ்வற்ற சமூக, பொருளாதார அமைப்பாகும் என்கிறார் ஸ்வீடன் நாட்டுப் பொருளாதார நிபுணர் திரு குன்னார்மிர்தல். ஏற்றத் தாழ்வற்ற சமுதாயம் இங்கு லட்சியமாக இருப்பதற்குப் பதில் வழிமுறையாகவே இருக்கவேண்டும் என்பது தெளிவாகிறது. உள்ள நிலைமையைப் பாதுகாப்பாக வைத்துக்கொண்டு மேலும் மேலும் பொருளாதார அபிவிருத்திக்குத் திட்டமிட்டால், அதன் விளைவாக மேல் தட்டில் உள்ளோரின் செல்வம் அதிகரிக்கவும் கீழ்த் தட்டிலுள்ள லட்சோப லட்சம் மக்களின் வறுமை அதிகரிக்கவும்தான் வழி திறக்கப்படும். இந்த விபரீத விளைவை ஐந்தாண்டுத் திட்டங்கள் தேடித் தந்திருக்கின்றன. பெருவாரியான மக்கள் வேலையில்லாமல் வறுமையின் பாற்பட்டுவாங்கும் சக்தியிழந்து பரிதவிக்கும் நிலை இங்கு யதார்த்த கொள்கைகளைப் பின்பற்றாமல் விலகிச் சென்றதுதான் இந்தியத் திட்டங்கள் எதிர்பார்த்த அளவு வெற்றி பெறாததற்கு காரணம் என்று குன்னார்மிர்தல் அடித்துக் கூறுகிறார். வறுமையை எதிர்த்து வெற்றி காண்பதே ஆசிய நாடுகளின் திட்டக் குறிக்கோளாக இருக்க வேண்டும் என்கிறார். இங்கு காணப்படும் கொடுமையான வறுமைக்குக் காரணம், இருக்கின்ற உழைப்புச் சக்தியைக் குறைவாகப் பயன் படுத்துவதுதான். வறுமையைப் போக்க தீட்டப்படும் திட்டத்தில் இதைக் கவனித்து ஆவண செய்யவேண்டும். பெருவாரியான ஏழை மக்களுக்குத் தேவைப்படும் பொருள்களை உற்பத்தி செய்வதில் கவனம் திரும்ப வேண்டும்' என்கிறார் திரு குன்னார் மிர்தல்.

**காந்தியடிகளின் நிர்மானத் திட்டங்கள்:**

இந்தப் பின்னணியில் காந்தியடிகளின் கருத்துக்களையும் நிர்மானத் திட்டங்களையும் நோக்கினோமானால், பசிப்பிணியையும், வறுமையையும் போக்க அவை எப்படி உதவுகின்றன என்பது புலனாகும். காந்தியடிகள் மனித வாழ்வினை சமூக வாழ்க்கை, தார்மீக வாழ்க்கை, ஆன்மீக வாழ்க்கை என்று பல பிரிவுகளாகப் பிரித்துப் பார்ப்பதை அவர் ஏற்பதில்லை. தார்மீக உள்ளீடற்ற சமூக வாழ்க்கையை அவர் ஒத்துக்கொள்வதில்லை. எனவேதான் அவர் கொடுத்த நிர்மானத் திட்டங்களில் தீண்டாமை விலக்கு, மாதர் முன்னேற்றம், ஆதாரக் கல்வி மாணவர் முதலிய அம்சங்களும் அடங்கியிருந்தன. கதர் கிராமக் கைத்தொழில், பொருளாதார சமத்துவம் போன்ற திட்டங்களும் இருந்தன. சமுதாயத்தில் காணப்பட்ட குறைபாடுகளை ஏக காலத்தில் சாடினார். சமூகத்தின் அடித்தளத்தில் தீண்டத்தகாதவர்களாக அடக்கப்பட்டிருந்த ஹரிஜனங்களின் முன்னேற்றத்திற்கும் பாடுபட்டார். வேலையின்றிச் சோம்பித்திரியும் மக்களுக்கு சிறிதளவாவது வருமானத்திற்கு வகைசெய்யும் கதர்திட்டத்தையும் கொடுத்தார். இவ்வாறு பல துறைகளிலும் காணப்படும் வறுமை ஒழியும். இதற்காக அவர் சுதந்திர அரசாங்கம் வரும் வரை காத்திருக்கவில்லை. பொதுமக்களின் ஆற்றலை ஒருங்கிணைத்து

வெளிப்படுத்துவதின் மூலம் பல நிறுவனங்களை ஏற்படுத்தினார். ஹரிஜன சேவா சங்கம், அகில இந்திய நூற்போர் சங்கம் போன்ற நிறுவனங்கள் தலைவர்கள் பலரை உருவாக்கின. சுதந்திரத்திற்கு முன்னரே ஜனநாயக பண்பாயையும் ஏற்றத்தாழ்வையும் அகற்றும் பணிகளில் அடக்கமாக ஈடுபட்டு வந்தன.

**கதர், கிராமக் கைத்தொழில்:**

பசியால் வாடும் ஏழைகள் முன்னால் ஆண்டவன் உணவு வடிவத்தில்தான் காட்சியளிப்பான் என்றார் காந்தியடிகள். இந்த நாட்டுப் பசியும் பட்டினியும்தான் ராட்டைக்குச் சாதகமான காரணங்களாக முன்வந்து நிற்கின்றன என்றார். கதர்த் தத்துவத்தில் மனித மேன்மைக்கான பல அம்சங்கள் இருக்கின்றன. லட்சக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பளித்து அவர்களின் வறுமையைப் போக்கும் துறையில் கதரின் சாதனை என்ன என்பதை மட்டும் இப்போது பார்ப்போம்.

இந்தியாவில் ஆண்டொன்றுக்கு 2.4 சதவிகிதமாக ஜனத்தொகை பெருகி வருகிறது. 1971-ல் 54.7 கோடிப் பேர்களாக எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது. இந்த ஜனத்தொகையில் எண்பது சதவிகிதம் 5,66,878 கிராமங்களில் வசித்து வருகிறார்கள். இவர்களில் 69.9 சதவிகிதம் பேர் விவசாயத்தை நம்பி வாழ்கிறார்கள்.

1961-ல் 3.15 கோடியாக இருந்த விவசாயத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 1971-ல் 4.74 கோடியாகப் பெருகியுள்ளது. இப்படிப் பெருகிவரும் விவசாயத் தொழிலாளிகளுக்கு ஓர் துணைத் தொழில் தேடித் தரவேண்டியது அவசியமாகிறது. 1971-ல் 23.8 கோடி போருக்கு கட்டுபடியாகக் கூடிய வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டியிருந்தது. 1981-ல் அது 39 கோடியாகும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. இவர்களுக்கெல்லாம் வேலை கொடுக்கவேண்டுமென்றால், இப்போது விவசாயத்திலும் வேறு தொழில்களிலும் ஈடுபட்டிருப்போரின் எண்ணிக்கையை அப்படியே வைத்துக்கொண்டு கணக்கிட்டாலும், இப்போதிருக்கும் பெருந்தொழில்கள் இரண்டு மடங்காகப் பெருக வேண்டியிருக்கும். 50 முதல் 100 பேர்கள் வரை வேலை செய்யும் தொழிற்சாலைகள் 11933-க்கு உற்பத்தி முதலீடாக ரூ. 7548 கோடியாகிறது. விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் மக்கள் சதவிகிதம் 70. அதை 60 ஆகக்குறைக்க வேண்டுமெனில் 4.6 கோடிப் பேருக்கு விவசாயத்தைத் தவிர வேறு வேலை தேடித்தர வேண்டும். பெருந்தொழில்களால் இத்தனை கோடி மக்களுக்கு இவ்வளவு பெரும் முதலீடு போட்டு வேலைவாய்ப்பளிப்பதற்கு இயலாத நிலையைத்தான் இன்று பார்க்கிறோம். இந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டுமானால், கதர், கிராமக் கைத்தொழில்கள்தான் கைகொடுக்க வேண்டும். மேலும் வேலையில்லாதோரின் எண்ணிக்கை 1.3 கோடிப் பேர். இவர்களுடன் பகுதி வேலை வாய்ப்பு வேண்டுவோர் 1.6 கோடிப்பேரையும் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

1970-71-ல் 2.21 லட்சம் பேருக்கு முழு நேர வேலையும் 16.99 லட்சம் பேருக்கு பகுதிநேர வேலையும் கதர் கிராமக் கைத்தொழில்கள் கொடுத்திருக்கின்றன. கதர் வேலைவாய்ப்பில்லாத கிராம மக்களுக்குக் காமதேனுவாகக் காட்சியளிக்கிறது. எனவேதான் சுதந்திர இந்தியாவில் வெவ்வேறு கட்சிகள் ஆட்சிக்கு வந்தாலும் காந்தியடிகள் தந்த கதர்த் திட்டத்தை அகற்றிவிடாமல் ஆதரித்து வருகிறார்கள். கிராமக் கைத்தொழிலுக்காக முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 15 கோடி ரூபாயும் இரண்டாவது திட்டத்தில் 83.78

கோடியும், மூன்றாவது திட்டத்தில் 92.40 கோடியும், நான்காவது திட்டத்தில் 111 கோடியும் நிதி ஒதுக்கப்பட்டது.

இப்போதிருக்கும் குறைந்த மூலதன வசதியில் வேலையில்லாத திண்டாட்டத்தைக் கணிசமான அளவு தீர்க்க முற்படும் திட்டம் கதர்த் திட்டம் என்றால் மிகையாகாது. ஏனெனில் கதர் கிராமக் கைத்தொழில் மூலம் ஒரு நபருக்கு வேலை கொடுக்கத் தேவைப்படும் முதலீடு ரூ. 150 முதல் 3000 வரை ஆகும். அதே சமயம் பெருந்தொழில்கள் மூலம் ஒரு நபருக்கு வேலை கொடுக்க ஆகும் முதலீடு 15,000 முதல் 1 லட்சம் வரை என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

கதர்த் தொழிலில் ஒரு நபருக்கு தினம் ஒன்றுக்கு ரூ. 1.50 முதல் 7 வரை கிடைக்கிறது. இவ்வளவுதானா என்று ஆச்சரியப்படலாம். இந்நாட்டில் பெருந் தொழிலாகயிருக்கும் விவசாயத்தில் கிடைக்கும் கூலியைவிட இது அவ்வளவு குறைந்தது அல்ல.

நம் நாட்டில் பல நீர்ப்பாசனத் திட்டங்கள் வந்த பின்னரும் 19 சதவீதம் நிலம்தான் பாசன வசதியுடையதாக இருக்கிறது. அதில் 14 சதவீதம் நிலத்தில் இரண்டு போகம் எடுக்கலாம். மேலும் 45 சதவீதம் நிலவுடைமை 1 ஏக்கரிலிருந்து 5 வரைதான். எனவே விவசாயத்தின் மூலமே இன்னும் கூடுதலான வேலை வாய்ப்பளிக்கலாம் என்பது முடியாத காரியம். சற்று அதிக வசதிகள் அளிப்பதன் மூலம் ஒரு பகுதி கிராமங்களில் விவசாயிகளுக்கு ஆண்டு முழுவதும் வேலை இருக்குமாறு பார்த்துக்கொள்ளலாம். கிராமப்புறங்களில் வேறு ஏதாவது தொழிலுக்கான ஏற்பாடு இருந்தேயாக வேண்டும்.

மேலும் கிராமப்புறங்களில் உள்ள மக்கள் தொகையில் படித்தவர்கள் இன்னும் குறைந்த எண்ணிக்கையில்தான் இருக்கிறார்கள். அதிகமாக தொழில் நுட்பத்திற்கும் கல்வியறிவுக்கும் அவசியமில்லாத தொழில்களை அங்கு ஏற்படுத்துவதுதான் பொருத்தமாயிருக்கும்.

நம் கிராமங்களில் 20 சதவீதம் தான் மின்சார வசதி இருக்கிறது. இதிலும் மழையின்மையாலும் மற்றும் யந்திர சாதனங்களின் நிர்வாகத்தில் உள்ள குறை, திட்டமிடுவதிலுள்ள குறை காரணமாகவும், அடிக்கடி மின்சார வெட்டு ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிறது. இந்த நிலையிலும் விசை தேவைப்படாமல், மனித சக்தியையே பயன்படுத்தும் தொழில்தான் இன்னும் நெடுங்காலத்திற்கு நம் கிராமப்புறங்களுக்குப் பொருத்தமானதாயிருக்கும்.

எனவே வளர்ந்து வரும் உழைப்பு சக்தி, சுருங்கி வரும் மூலதன வசதி இவற்றை வைத்து நோக்கும்போது அதிக வேலைவாய்ப்புக்கு இடமளிக்கும் குறைந்த மூலதனம் தேவைப்படும் தொழில்முறை தான் நம் நாட்டிற்குப் பொருத்தமானது. இந்த இடத்தை நிரப்புவது இன்னும் நீண்ட காலத்திற்குக் கதராகத்தான் இருக்கும் என்பதும் தெளிவு.

கதர்த் திட்டத்தில் இன்னொரு சிறப்பான அம்சம் அதன் உற்பத்தி முறையிலேயே சீரான வருவாய் விநியோகத்திற்கு இடம் இருப்பதாகும். பரவல் முறையிலமைந்த உற்பத்தி விநியோகத்தின் மூலம் இது சாத்தியப்படுகிறது.

மிக தீர்க்க தரிசனமாக காந்தியடிகள் கொடுத்த இந்தக் கதர்த் திட்டத்தை தேவையில்லாதது என்று நிரூபிக்கும் அளவுக்கு எந்த அரசும் இதுவரை புதிய தொழிற்கொள்கை எதையும் உருவாக்கிடவில்லை. இந்திய யதார்த்த நிலை அதற்கு இடங்கொடுக்காது.

**நிலச் சீர்திருத்தம்:**

இத்துடன் உழுபவனுக்கே நிலம் சொந்தமாகும் நோக்கத்தில் நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் விரைவில் உறுதியாக அமுலாக்கப் பட்டால் கிராமப் புறங்களில் மக்களுக்கு வேலைவாய்ப்பு அதிகரிக்கும். வறுமை அகலும். வாங்கும் சக்தி கோடிக்கணக்கான மக்களிடத்தில் பெருகும். அவர்களுக்குத் தேவையான பொருட்களை ஆங்காங்கே உற்பத்தியாக்கும் கிராமக் கைத்தொழில்களும் சேரும்போது வறுமையை விரட்டி விடலாம்.

இதற்குத் தகுந்தவாறு மக்கள் அபிப்ராயம் சமுதாயத்தில் உருவாக வேண்டும். அரசும் தீவிரமாகத் திட்டமிட்டு முயல வேண்டும். இதற்கெல்லாம் ஆதாரம் தனிமனிதன். அவன் தன்னை அறக் காவலனாக எண்ணி நடந்துகொள்வது மிகவும் தேவையானது. தனி மனிதன் மாறினால்தான் சமுதாய மாற்றத்திற்கு வித்தூன்ற முடியும். வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடும் ஜீவகாருண்ய உள்ளம் ஏற்படாவிட்டாலும், தன்னுடன் வாழும் மனிதனுடைய வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும் என்ற மனப்பக்குவமாவது இருத்தல் அவசியம்.

இராமலிங்கர் காலத்து அறம், அறக்கூழ்ச்சாலை நிறுவி அழிபசி தீர்க்கும் பெரும்பணியை மேற்கொள்ளத் தூண்டியது. மனிதனை உணர்வு நிலையில் செயல்படத் தூண்டும் இத்தகு திட்டங்கள் அக் காலத்தில் மிகவும் தேவைப்பட்டிருக்கலாம். ஆனால் இன்றைய காந்தி அறம் கூறுவது என்ன? ராட்டையால் நூற்று, கையால் நெய்யப்பட்ட துணியையும் குடிசையில் ஏழைகள் உற்பத்தி செய்த பொருட்களையும் வாங்கி உபயோகிப்பதால் பசித்தவர்களுக்கு நிரந்தரமாக உணவளிக்கும் திட்டத்தை மேற்கொண்டவர்களாவோம். காந்தி கூறும் இந்த நல்லறத்தைப் பேணி வறுமையையும் பசிப்பிணியையும் போக்கும் பெரும்பணியில் அனைவரும் பங்கு கொள்வது இக்காலம் உணர்த்தும் கடமையாகும்!

**உதவிய நூல்கள்:**


1. GUNNAR MYRDAL: The Challenge of World Poverty
2. திருவருட்பா
3. "Khadi Gramodyog" (Vol. XIX No. 8)
4. Survival of Democracy (Published by Tamilnad Sarvodaya Mandal)
5. Background papers: Seminar on the Role of Khadi in the Development of our country

# 10. வள்ளலாரின் விண்ணப்பங்கள்

-- அ. சாந்தா

**முன்னுரை**

**விண்ணப்பங்கள்:**

நெஞ்சம் இறைவனுக்கே இடமாக வைத்து நினையாது ஒரு போதும் இருந்தறியாத அடியவர்கள், தலந்தோறும் சென்று அவன் திருக்கோலத்தைக் கண்டு களித்தனர். அவன் தொண்டர் தம் சிறப்பினைக் கொண்டாடினர். அத்தொண்டர்க்கு தொண்டராய் தமை ஆக்க வேண்டினர். தம் சிறுமை எண்ணி உளம் உடைந்தனர். இரங்கினர். தமை ஆட்கொண்டு அருளுமாறு இறைவனிடம் விண்ணப்பித்தனர். இடைப்பட்டதாகிய விண்ணப்பநிலை வள்ளலார் பாடல்களில் விலங்குமாறு காண முயல்வது இக்கட்டுரை.

**வள்ளலாரின் விண்ணப்பங்கள்:**

அருட்பெருஞ்ஜோதியாய் இறைவனை உணர்ந்து அவனது தனிப்பெருங்கருணையை உலகுய்ய உணர்த்தியவர் வள்ளலார். அவரது இறைப்பற்றும் வழிபாடும் மூன்று நிலைகளின் நின்று காணும் பெற்றியது. பாலறாவாயராய், பச்சை பாலகராய் இருந்தகால் கந்தகோட்டத்து முருகனிடம் சிந்தை பறிகொடுத்தார். அவன் அழகுத் திருக்கோலத்தில் ஈடுபட்டு, அருள் வேட்டுப் பாடினார். இவ்வாறு ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும் முருகனை, வழிபட்டது முதல்நிலை; அதன்பின் அண்டசராசரங்களைப் படைத்து ஐந்தொழில் ஆற்றும் நமச்சிவாயனை இமைப்பொழுதும் மறவாது அவன் அருட்செயல்களில் ஆழ்ந்தது அவரை அன்பர் குழாத்துள் தன்னையும் சேர்த்திடுமாறு அகமருழைந்து வேண்டினார். இப்படிப் பித்தனைப் பிறைசூடியை அத்தனாய்க் கண்டது இரண்டாம் நிலை. மூன்றாவதோ ஒன்றே சமயமாய் ஒருவனே இறைவனாய்க் கண்டு அவனை ஒளி உருவில் உணர்ந்து விட்ட பெருநிலை. வள்ளலார்க்கே உரிய தனிநிலை. இம்மூன்று நிலைகளிலுமே விண்ணப்பங்கள் பலவிடுத்து நிற்பதைக் காண்கின்றோம். விண்ணப்பப் பொருட்கள் ஒவ்வொரு நிலைக்கும் மாறுபடும் அழகு ஆய்ந்து அறிந்து தோய்ந்து மகிழற்குரியவொன்று.

வள்ளலாரின் விண்ணப்பங்களில் உள்ள அவரது எண்ணப் பதிவை காணுமுன்னால் அவ்விண்ணப்பப் பாடல்களின் தலைப்பு பற்றிச் சிந்தித்தல் சிறப்பு. வள்ளலாரின் பதிகங்களில் அவரே தலைப்பிட்டவை மொத்தம் இருபத்தெட்டுதான். பிற யாவற்றுக்கும் அவற்றைப் பின்னால் பதிப்பித்த வேலாயுதனாரும் சோடசாவதனம் சுப்பு செட்டியாரும் பெயரிட்டார்கள். விண்ணப்பப் பாடல்களில் பிள்ளைச்சிறு விண்ணப்பம், பிள்ளைப் பெருவிண்ணப்பம் இரண்டும் வள்ளலாரே பெயரிட்டவை. இது தவிர விண்ணப்பக் கலிப்பா எனவும் வள்ளலார் ஒரு பதிகத்துக்குப் பெயரிட்டுள்ளார். கலிப்பா என்பது பாவகையாக இதனையும் விண்ணப்பங்களோடு இணைக்கத் தடையில்லையன்றோ? ஆக இவை மூன்றொழிந்த பிற இருபத்து மூன்று விண்ணப்பங்களும் பதிப்பாசிரியர்களால் பெயரிடப்பட்டவையே.

எனவே பதிப்பாசிரியர்கள் எந்த அடிப்படையில் பெயரிட்டிருக்கக் கூடும் என நோக்குதல் தேவையாகிறது. வள்ளலாரே பெயரிட்ட விண்ணப்பங்களில் தலைப்புக்கும் பொருளுக்கும் உள்ள பொருத்தினை அன்றி எவ்வழி நின்று பெயரிட்டுருக்கக் கூடும் என்று எண்ணத் தோன்றுகிறது. ஆனால் அவ்வாறு மனம் பொருந்துமா என்பது ஆய்வுக்குரியது.

இனி, இராமலிங்கரின் விண்ணப்பங்கள் பிறக்க வழிவகுத்தது எது என்பதும் விடைக்குரிய வினாதான். மாணிக்கவாசகரின் வாசகத்தைத்தன் வழிபடு நூலாக கொண்டவர் வள்ளலார் என்பது அனைவரும் அறிந்த உண்மை. அவர் திருவாசகத்தில் அகம் தோய்ந்தார். அவற்றைப்பாடி உளம் நெகிழ்ந்தார். உன்னி உன்னி மகிழ்ந்தார். திருவாசகம் அவரது ஊனோடு கலந்தது. உயிரோடு ஒன்றாகியது. எனவே அவரது பாலமுதப் பாடல்களிலே திருவாசகத் தேன்சுவை ஆங்காங்கே முனைப்பதில் வியப்பில்லை. விண்ணப்பப் பாடல்களிலும் அந்நிலையினையே காண்கின்றோம். தம்மைத் தாங்கிக் கொண்டருளுமாறு ஓங்கு குரலில் விண்ணப்பிக்கும் மணிவாசகரின் நீத்தல் விண்ணப்பமே வள்ளலாரின் பிள்ளைப் பெரு விண்ணப்பம் பிறக்கவும் சிறு விண்ணப்பம் சிறக்கவும் காரணமாயின என ஊகித்தல் எளிது.

உலக வாழ்வில் உழந்து உழன்று ஓய்ந்த வாதவூரார் "தளர்ந்தேன் என்பிரான் என்னைத் தாங்கிக் கொள்ளே[1]" என்று பாடல்தோறும் வேண்டி விண்ணப்பித்துக் கொள்வதையே திருவாசகத்தில் காணமுடிகிறது. அதே நிலையில் அடிகளாரும் "அம்மையப்பா இனி ஆற்றேன்[2]" என அவலக்குரல் எழுப்பி "அணைத்திட வேண்டும்[3]" என்று கூறும் பதிகத்திற்கும் "தரிக்கிலேன் சிறிதும் தரிக்கிலேன் உள்ளம் தரிக்கிலேன் தரிக்கிலேன்[4]" "தரிக்கிலேன் என்று தடுமாறித் தவிக்கும் பதிகத்திற்கும் விண்ணப்பங்கள் எனப் பெயரிட்டார். தவிரவும் பெருவிண்ணப்பத்தில் விண்ணப்பம் எனுஞ்சொல் இருமுறைப் பயின்று வரலையும் காணமுடிகிறது.

1. திருவாசகம் நீத்தல் விண்ணப்பம்
2, 3. திருவருட்பா பிள்ளைச் சிறு விண்ணப்பம் 1
4. திருவருட்பா பிள்ளைப் பெரு விண்ணப்பம் 133

விண்ணப்பக் கலிப்பாவிலோ

"நின்றனக்கோர் விண்ணப்பம் ............
...............
.............நீயென்னைக்

"கூற்றனுக்குக் காட்டிக் கொடுக்கற்க-பாற்றவள
நந்தக் கடற்புவியில் நானின்றும் வன்பிறவிப்
பந்தக் கடலமுந்தப் பண்ணற்க--முந்தைநெறி
நின்றேயுன் பொற்றாள் நினையாதார் பாழ்மனையில்
சென்றே உடலோம்பச் செய்யற்க--நன்றேநின்
றோங்கு நெறியோர் உளத்தமர்ந்நோய் என்றன்னைத்
தீங்கு நெறியிற் செலுத்தற்க[5]"

5. விண்ணப்பக் கலிவெண்பா 290, 391-394

என்று தெள்ளத் தெளிவாகத் தன் விண்ணப்பங்களை இறைவன் திருமுன்னர் வைக்கிறார்.

இனி பதிப்பாசிரியர் பெயரிட்ட பதிகங்களைக் காண்போம்.

முருகனைப் பாடி மகிழும் விண்ணப்பங்கள் முதல் மூன்று. அவற்றுள் இரந்த விண்ணப்பத்திலும் கருணை விண்ணப்பத்திலும் "மாயை நீக்கி நல் அருள்புரி தணிகையை வந்தருள் இந்நாளே[6]" "............ மாயை வாவென் றொருசொல் சொல்லியே[7]" என வேண்டும் நிலைகளைக் காணமுடிகிறது. ஆயின் மூன்றாவதான வேட்கை விண்ணப்பத்தில் இறைவனைப் பரவலும், தம் பஞ்சுபடும் பாடுபடுவது பார்த்தும் அருள் தராதிருப்பது குறித்து இரங்கும் நிலையினையே காணமுடிகிறது.

6. இரங்கல் விண்ணப்பம் 10
7. மருண்மாலை விண்ணப்பம் 10

பிற பதிகங்களிலும் "எனை எடுத்தே அருள்வாய்[8]" என்றும், "மூன்று கொண்டருள் ஈந்திடல் வேண்டும்[9]" என்றும் வேண்டும் நிலை காணப்படினும், இப்பதிப்பாசிரியர் தலைப்பட்ட விண்ணப்பப் பாடல்கள் அனைத்திலுமே (விண்ணப்பம் ஒழிக்க) பிற பதிகங்களைப் போலவே குறை நினைந்து இரங்கலும் அருள் வேட்டு நிற்றலும் அருளாதது கண்டு முறையிட்டுப் புலம்பலும் விரவியே வருவதாகத் தான் தெரிகிறது.

8. கருணை விண்ணப்பம் 10
9. வழிமொழி விண்ணப்பம் 10

விண்ணப்பப் பகுதிகள் சிலவற்றின் பொருட் சுருக்கம் விளக்கப் போந்த ஆ. பாலகிருஷ்ணப்பிள்ளை "இப்பதிகப் பாக்களில் நம்பெருமானார், இறைவன் திரு அடிக்குத் தொண்டு செயும் நாள் தமக்கும் வருமோ என்று ஏங்கி என்புருகி முறையிடுதல் காண்க[10]" என்றும் "இப்பாக்களில் நம் அடிகளார் உலகமாயையில் மூழ்கி, நெஞ்சம் கல்லாக மாறிச் செயக்கடவது அறியாது திகைக்கும் தம்பிழை கருதாது இறைவன் தம்மை ஆட்கொண்டருள வேண்டும் என்று இரத்தல் காண்க[11]" என்றும் எழுதியிருத்தல் ஈண்டு நினைவு கூரத்தக்கது. எனவே பதிப்பாசிரியர்கள் தலைப்பிட்ட விண்ணப்பப்பாடல்கள் மறு பரிசீலனைக்குரியன என்று மட்டும் குறித்தல் பொருந்தும்.

10. திருவருட்பா-பாலகிருஷ்ணப்பிள்ளைப் பதிப்பு 8 ஆம் புத்தகம் பக்கம் 147.
11. திருவருட்பா-பாலகிருஷ்ணப்பிள்ளைப் பதிப்பு 8 ஆம் புத்தகம் பக்கம் 150

**இறைத்திருக்கோலம்:**

வள்ளலார்தம் வழிபாட்டு நெறி மூன்று நிலைகளில் காணற்குரியது என்றோம். அம்மூன்று நிலைகளிலும் வெவ்வேறு உருவில் இறைவனின் திருக்கோலத்தினை அவர் அனுபவித்து அகம் குளிர்வதைக் காண்கிறோம்.

"விரைசேர் கடம்ப மலர்ப்புயனாய்[12]" "வேலாயுதக்கை மேலோனாய்[13]" "பன்னிருகண் படைத்தவனாய்[14]" "மயில் ஊர் சேவகனாய்15" "சேவற்கொடி உயர்ந்த குண குன்றாய்16" முருகனைக் கண்டு உளம் மகிழ்வதை முதல் திருமுறையில் காண்கிறோம்.

---

12,13. மருண்மாலை விண்ணப்பம் 5
14,15,16. வேட்கை விண்ணப்பம்

---

அடுத்து சிவவழிபாட்டு நிலையில் "பிறை முடிமேல் தரித்தவனாய்[17]" "முக்கணுடை இறைவனாய்[18]" "நீலமா மிடற்றுப் பவளமா மலையாய்[19]" "பெண்நி லாவிய பாகத்து அமுதாய்[20]" என்று இறைவனைக் கண்டு அவன் திருக்கோலத்தைப் பரவுகின்றார்.

---

17. வேட்கை விண்ணப்பம்
18. கருணை விண்ணப்பம்
19. சிறு விண்ணப்பம்
20. சிறு விண்ணப்பம், காதல் விண்ணப்பம், திருவண்ண விண்ணப்பம்

---

மூன்றாம் நிலையிலே அம்பலத்தாடுகின்ற ஆடலரசாகவும் பரந்து நிற்கும் சோதிச் சுடராகவும் கண்டு களிக்கின்றார்.

"பொடித்திருமேனி அம்பலத்தாடும் புனிதா[21]" "தனிப்பெரும் சோதித் தலைவனே[22]" "அந்தமோ டாதி இல்லாதோர் பொதுவில் அரும்பெரும் சோதியே[23]" என சோதியாய் சுடராய், சூழ்ஒளி விளக்காய் இறைவனை உணர்கிறார்.

---

21. பிள்ளைச் சிறு விண்ணப்பம் 1
22. பிள்ளைச் பெரு விண்ணப்பம் 1
23. பிள்ளைப் பெரு விண்ணப்பம் 33

---

வள்ளலார் பாக்களில் இறைவனின் புறந்தோற்றத்தில் தோயும் நிலை பொதுவாகக் குறைந்தே காணப்படுகிறது. அவனது அருள் வெள்ளப் பெருக்கிலே ஆடி மகிழ்வதும், பெருங்கருணைகள் பேசி நிற்பதுமே சிறக்கக் காணலாம்.

**குறை நினைந்திரங்கல்:**

முருகனுக்கு விண்ணப்பிக்கும் முதல்நிலையில் 'நாளை ஏகியே வணங்குதும்' என நாட்களைக் கடத்தியதற்கும் விரைவோப்பாதம் போற்றா வீணராய்த் திரிவதற்கும் வருந்தி மாழ்கிறார். வெம்பி வெதும்புகிறார்.

"அல்லும் பகலும் நின்நாமம் அந்தோ நினைந்துன் ஆளானேன்
கல்லும் பொருவா வன்மனத்தால் கலங்கா நின்றேன் கடையேனே[24]"

---

24. மருண்மாலை விண்ணப்பம் 1

---

என மீண்டும் மீண்டும் தனது பிழையெண்ணிப் புலம்புகிறார்.

இரண்டாம் நிலையிலும் கூட, "கோடி கோடியாம் குணப்பழுதுடையவன்[25]" எனக் கலங்கித் தவித்து ஞானம் சிறிதும் இலாததற்கு வருந்தி, காமக் கடலுள் சிக்கியதற்காக சிந்தை நொந்து நின்றாலும் தனது நிறையினையும் ஒவ்வொருகால் நினைவு கூறுவதையும் காணமுடிகிறது.

25. இரங்கல் விண்ணப்பம் 1

"நித்தம் நின்னடி அன்றிஒன் றேத்தேன்[26]"

"....................உலகம்படும் பாட்டை
உற்று நோக்கினால் உருகுதென் உள்ளம்[27]"

26. சிறுமை விண்ணப்பம் 9
27. இரங்கல் விண்ணப்பம் 1

என்றும் கூறுதல் காணலாம்.

மூன்றாம் நிலையாம் பெருநிலையிலோ தான் வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடியதை, பிறர் துன்பம் கண்டு உள்ளம் வெதும்பிய வெதுப்பினை யெல்லாம் அருள் வெள்ளப் பெருங்கடலுக்கு விரிவாக, நிகழ்ச்சி வாரியாக நினைவுபடுத்துகிறார்.

அத்துடன் தான் செய்த பிழைகளை ஒத்துக் கொண்டு அப்பிழைகளைத் தாம் உணர்ந்து விட்டதை, அதற்காக உளம் கலங்கிக் குழைந்ததை நினைவுறுத்துகிறார். "உரத்த வார்த்தைகளால் ஒருசில வாதங்கள்[28]" புரிந்த தென்னவோ தவறு தான். ஆனால் அதற்காக உளம் நடுங்கிய உண்மையையும் உணரவேண்டும் என்கிறார்.

28. பிள்ளைப் பெரு விண்ணப்பம் 44

அனைத்திற்கும் மகுடம் வைத்தாற்போல தனது தவறுகள் அனைத்துக்கும் தானே காரணமன்று. அணு அணுவையும் அசைத்து நடத்தி வரும் ஆண்டவனே காரணம் என்று உணர்கின்ற நிலையினையும் இங்குக் காணமுடிகிறது.

"இருப்பினும் கொடிய மனஞ்செயும் பிழையும்
என் பிழை அற்றெனப் பலகால்
விரும்பி நின்அடிக்கே விண்ணப்பித்திருந்தேன்[29]"

29. பிள்ளைப் பெரு விண்ணப்பம் 96

என்று பிள்ளைப் பெரு விண்ணப்பத்தில் பேசுகிறார்.

"பாலுறவில் அருவருப்புப் பால் உணும் காலையே[30]" தமக்கு இருந்த போதும் தம்மை மணவாழ்க்கைப் படுத்துயது யார் தவறென இடித்துக் கேட்கிறார்.

30. பிள்ளைச் சிறு விண்ணப்பம் 7

இப்படித் தம் நிறைவுகளையும், குறையிருப்பின் குறைகளின் மூலத்தையும் காட்டி தன்னை உணர்வதை--ஆண்டவனின் ஆட்சியை உணர்வதைக் காணமுடிகிறது.

**விண்ணப்பங்கள்:**

விண்ணப்பித்து வேண்டுவதிலும் கூட தெளிவான வளர்ச்சியைக் காண முடிகிறது.

தன் தகுதியின்மைக்காக வருந்தித் தன்னைக் கண்டுகொண்டு அருள வேண்டுமென இறைஞ்சி நிற்றல் முதல்நிலை.

"நாயை எப்படி ஆட்கொளல் ஆயினும்
நாதநின் செயல் அன்றே[31]"

31. இரந்த விண்ணப்பம் 10

எனப் பரிதவித்து நிற்கும் நிலை.

தனது பிழைகளை மறந்து ஆட்கொள வேண்டும். ஏனெனில் தாம் இறையே கதியென எண்ணி நிற்பதாகவும், சிறியார் பிழையைப் பெரியார் பொறுப்பது, கடன் எனவும் உரிமையோடு பாடும் நிலையினை அடுத்து உணர முடிகிறது.

"சிறியர் செய்பிழை பெரியவர் பொறுக்கும்
சீல மென்பதுன் திருமொழி அன்றே
வறிய னேன்பிழை யாவையும் உனது
மனத்தில் கொள்ளுதல் வழக்கல இனிநீ
இறையும் தாழ்க்கலை அடியனேன் தன்னை
ஏற்றுக் கொண்டருள் ஈந்திடல் வேண்டும்[32]"

32. வழிமொழி விண்ணப்பம் 10

எனக் கேட்கும் நிலையினை இரண்டாவதாகக் காண்கின்றோம்.

மூன்றாம் பெருநிலையிலே தனக்கு அருள் பெறும் தகுதி இருப்பதையும், தனக்கு அருள வேண்டிய கடமை இறைவனுக்கு உண்டு என்பதையும் தெளிவுபடுத்துகிறார். தன் விண்ணப்பங்களில்

தந்தையடித்தால் பிள்ளையைத் தாயணைப்பதும், தாயடித்தால் தந்தை அணைப்பதும் உலக இயல்பாதலின் தந்தையும் தாயுமான இறைவன் தன்னைத் தாங்கியே தீர வேண்டும் என்கிறார்.

தன்மீது தவறேதும் இருப்பின் தன் தவறன்று. ஏனெனில் "எப்படி இட்டாய் அப்பணி அலதென் இச்சையில் புரிந்த தொன்றிலையே" என வாதிடுகின்றார்.

தாம் பணத்துக்கு ஆசைப்படவில்லை; காசுக்கு ஆசைப்படவில்லை; தமக்கு உடம்பில் ஆசையில்லை; உணவில் ஆசையில்லை; தாம் ஆசைப்படுவதெல்லாம்,

"தங்கமே அனையார் கூடிய ஞான சமரச சுத்தசன் மார்க்கச்
சங்கமே கண்டு களிக்கவும் சங்கம் உணவில் சார்திருக் கோயில்கண் டிடவும்
துங்கமே பெறுஞ் சங்கம்நீ டூழி துலங்கவும் சங்கத்தில் அடியேன்
அங்கமே குளிர நின்றனைப் பாடி ஆடவும் மட்டுமே யாம்.[33]"

---

33. பிள்ளைச் சிறு விண்ணப்பம் 21

---

அந்த இச்சை நவையிலா இச்சை. எனவே அதனை நிறைவு செய்தல் இறைவன் கடமை எனத் தீர்மானமாக, தெளிவாக, உறுதியாக, உரிமையுடன் வேண்டுகிறார்.

இங்ஙனம் விண்ணப்பங்களை விடுக்கும் முறையில், வேண்டும் முறையில், வாதிடும் திறத்தில் வள்ளலார் காட்டும் மாற்றங்களும் வளர்ச்சியும் உன்னி உணர்ந்து உளம் குளிரும் திறத்தன.

# 11. சன்மார்க்க சங்கமும் உயிரிரக்கமும்

--சா.பா. குருசாமி

வள்ளலார் இரக்கத்தின்-அருளின்-முழுவடிவாய் இருக்கின்ற இறைவனை, நமது உள்ளத்தின் அருளை வளர்த்து, செயலில் அருளைக் காட்டுவதன் மூலமாகத்தான் அடைய இயலுமென்பதை தனது பட்டறிவின் அடிப்படையில் கண்டுகொண்டார். "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்," என்று எண்ணும் சான்றோர்களின் மரபு வழி வாழையடி வாழையாக வந்த வள்ளலார் தான் கண்ட பேருண்மையை உலகிற்கு எடுத்துரைக்க ஓர் அமைப்பினை உருவாக்கத் தீர்மானித்தார்.

கொள்கை நின்று நிலவ வேண்டுமானால் அது பரவுதல் வேண்டும். ஆலமரம் விழுது விட்டுப் படர்கின்ற பொழுது அணிதேர், புரவி, படைக்கு நிழல்தருமளவிற்கு வளர்கின்றது. அதேபோல கொள்கை என்ற குளிர் நிழல் வெம்மைசேர் உலகில் வாழ்பவர்களுக்கெல்லாம் கிடைக்க அதனை வழங்குகின்ற ஓர் அமைப்பு வேண்டும். அத்தகைய அமைப்பாகத்தான் சன்மார்க்க சங்கத்தை வள்ளலார் தோற்றுவித்தார்.

வள்ளலார் தன்னுடைய கொள்கைகளை வளர்க்கவும், விளக்கவும், நின்று நிலவச் செய்யவும் தலையாய அமைப்புக்களை நிறுவினார். அவை சன்மார்க்க சங்கம் (1865), சத்திய தருமச் சாலை (1867), சத்திய ஞானசபை (1872) என்பனவாகும். அவை மூன்றிற்கும் முன்னோடியாகவும், அடிப்படையாகவும், வழிகாட்டியாகவும் என்றென்றும் உலகளாவ வளர்வதாகவும் அமைந்தது சத்திய சன்மார்க்க சங்கமாகும்.

பெயர் விளக்கம்: வள்ளலார் 1865 இல் அமைந்த சங்கத்திற்கு முதலில் இட்ட பெயர் "சமரச வேத சன்மார்க்க சங்கம்" என்பதாகும். பின்னால் அதனை "சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்" என்று மாற்றி விட்டார்.

வள்ளலார் 'ஆன்மநேய ஒருமைப்பாட்டை' உலகிற்கு உணர்த்தி விழைந்தார். சமரசமாக உடன்பட்டு வாழவேண்டிய இறைவனின் பிள்ளைகளான மக்கள் தங்களுக்குள் எண்ணற்ற வேற்றுமைகளை வளர்த்துக்கொண்டு சண்டையிடுவதைக் கண்டார். ஆதலால் தான் அமைக்கின்ற சங்கம் மனிதர்கல் மனத்தால் உருவாக்கித் தங்களைக் குழுக்களாய் பிரித்துக் கொள்ளப் பயன்படுத்தும் கற்பனை வேலிகளையும், வரம்புகளையும் அகற்றி, எல்லோரையும் இணைக்கின்ற ஒன்றாக இருக்க வேண்டுமென்று விரும்பினார். ஆதலால்தான் இறைவனை அருட்பெருஞ்ஜோதியாகக் கண்டு விண்ணப்பித்த பொழுது. 'இது தொடங்கி எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய தடையாகிய சமயங்கள் மதங்கள் மார்க்கங்கள் என்பவற்றின் ஆசாரசங்கற்ப விகற்பங்களும், வருணம் ஆசிரமம் முதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களும் எங்கள் மனத்தில் பற்றாத வண்ணம் அருள் செய்தல் வேண்டும்,' என்று முறையிட்டுள்ளார்.

வள்ளலார் காண விரும்பிய சமரசம் சாதி, சமயம், மொழி, இனம், நாடு ஆகிய உணர்வுகளை எல்லாம் கடந்தது. அவர் வாழ்ந்த காலத்தில் எத்தனையோ வகையான ஏற்றத்தாழ்வுகள் மக்களிடம் இருந்தன. அவற்றின் குறுகிய வட்டங்களை

உடைத்துக்கொண்டு 'பரந்த உலகினைத் தனதாக்கிக் கொள்ள குஞ்சு முட்டையை உடைத்துக் கொண்டு வருவதைப் போல மனிதன் வந்து ஒன்று சேர (சமரசம் காண) ஏற்பட்ட அமைப்புத்தான் சன்மார்க்க சங்கம் என்பதை 'சமரச' என்ற முதல் சொல் காட்டுகின்றது.

முதலில் வள்ளலார் 'வேதம்' என்ற சொல்லை "எல்லா சமயங்களுக்கும் பொதுவாகிய அறிவு நூல்" என்னும் பொருளில் பயன்படுத்துனார். உண்மையான வேதங்களின் மறைகளின் சாரம் 'சன்மார்க்கம்' என்பது அவர் கண்ட முடிவு. எந்த ஒரு குறிப்பிட்ட பேதங்களை ஏற்கும், வளர்க்கும் எந்த வேதத்தையும் அவர் சத்திய வேதமாக ஒப்புக் கொள்ளவில்லை. பின்னால் 'வேதம்' என்னும் சொல்லை 'குறுகிய பொருளில்' சிலர் பயன்படுத்துவதால் அதனை எல்லோரும் ஏற்றுக்கொள்ளத் தயங்கலாமென்று கருதியதைப் போல அதற்கு பதிலாக 'சுத்த' என்னும் சொல்லைப் பயன்படுத்துனார்.

தூய்மையைக் குறிக்கின்ற 'சுத்தம்' என்னும் சொல் அனைவருக்கும் பொதுவானதாகும். திருவள்ளுவர்,

"புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்."

என்று கூறியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். பெரும்பாலான சமயவாதிகள் புறத்தூய்மைக்கே முதலிடம் கொடுத்து, அதனைக்கட்டிக் காக்க சடங்குகளையும், ஆசாரங்களையும் மிகுதியாக வலியுறுத்துகின்றனர். இதனால் மக்களுக்கிடையில் வேறுபாடுகள் வளர்ந்தன. வள்ளலார் அகத்தூய்மையை வளர்க்கும் கருவியாக, தான் அமைக்கும் சங்கம் செயல்பட வேண்டுமென எண்ணியதால் 'சுத்த' என்னும் சொல்லை சங்கத்திற்கமைந்த அடைமொழிகளில் ஒன்றாகக் கொண்டார்.

வள்ளலார் கண்ட சன்மார்க்கம் அருள்வழியான, மன்னுயிரெல்லாம் தன்னுயிராக எண்ணி ஓம்புகின்ற ஜீவகாருண்ய நெறியாகும். (இதன் விளக்கம் இரண்டாம் அந்நியாயத்தில் விரிவாகக் கூறப்பெற்றுள்ளது)

சங்கத்திற்கு 'சத்திய' என்ற அடைமொழி இந்தச் சங்கம், மற்றைய சங்கங்களிலிருந்து மாறுபட்டது என்பதைக் குறிக்கின்றது. நித்தியமான, முக்காலத்தும், நிலையற்று நிற்கின்ற ஒன்றே சத்தியமாகும். இறைவனை 'சத், சித், ஆனந்தமாக' நமது முன்னோர்கள் கண்டனர். 'சத்தியம்' என்னும் வடசொல்லின் பொருளை பொருளை 'உண்மை', 'வாய்மை', 'மெய்மை' என்னும் மூன்று தமிழ்ச் சொற்களும் தருகின்றன. 'உண்மை' என்பது உள்ளத் தூய்மையையும் 'வாய்மை' என்பது பேச்சில் தூய்மையையும் (பொய்யாமையையும்) 'மெய்மை' என்பது உடல் செயல் தூய்மையையும் குறிக்கின்றன. சிந்தனையிலும், சிந்தனையை வெளியிடுவதிலும், செயல்படுதிலும், சத்தியம் ஒளிவிட வேண்டும். அத்தகைய தூய்மையாளர்களின் கூட்டத்தை - சங்கத்தை உருவாக்கவே வள்ளலார் விழைந்தார்.

வள்ளலார் காலத்திற்கு முன்பு இந்து சமயத் தலைவர்கள் தங்கள் கொள்கையைப் பரப்ப மடங்களை அமைத்தனர். ஆனால் வள்ளலாரோ புத்த சமயத்தவர்கள் சங்கம் அமைத்ததைப் போன்றும் தமிழ்ப்புலவர்கள் சங்கம் வைத்து

மொழி வளர்த்ததைப் போன்றும் தமது கொள்கையை விளக்க சங்கம் அமைத்தார். மடத்திற்கும் சங்கத்திற்கும் இடையிலுள்ள வேறுபாட்டை ஊரன் அடிகள், 'மடம் துறந்தவர்க்கு மட்டுமே உரியது. சங்கம் இல்வாழ்வார்க்கும் உரியது. மடம் பக்குவ ஆன்மாக்களுக்கு மட்டுமே உரியது. சங்கம், பக்குவர், அபக்குவர் ஆகிய எல்லார்க்கும் உரியது. மடம் எல்லார்க்கும் இடந்தராது. சங்கம் இடந்தரும். எல்லார்க்கும் இடந்தந்து இழுத்துத் திருத்த வேண்டும் என்ற பேரெண்ணத்தாற்றான் அடிகள் மடம் எனப் பேரிடாது சங்கம் எனப் பேரெண்ணத்தாற்றான் பேரிட்டருளினார்[1]' என்று கூறுகின்றார்.

1. 'இராமலிங்க அடிகள் வரலாறு' சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம், வடலூர், 1971 ப. 268.

நோக்கம்: வள்ளலார் தனக்குத்தானே சோதனைகளும் சாதனைகளும் செய்து சத்திய தரிசனம் கண்ட நிலையில் உலகினுக்கு உண்மை உரைத்திட ஒரு கருவியாக சங்கத்தை உருவாக்கினார். இதனை அவர்,

"அகத்தே கறுத்துப் புறத்து வெளுத்
திருந்த உலகர் அனைவரையும்
சகத்தே திருத்திச் சன்மார்க்க
சங்கத் தடைவித் திடஅவரும்
இகத்தே பரத்தைப் பெற்றுமகிழ்ந்
திடுநற் கென்றே எனைஇந்த
உலகத்தே இறைவன் வருவிக்க
உற்றேன் அருளைப் பெற்றேனே.[2]"

2. திருவருட்பா - 6 (முடி) உற்றதுரைத்தல் 9-5485

என்று கூறுவதிலிருந்து அறியலாம்.

வள்ளலார் சன்மார்க்க சங்கத்தில் தன்னைப் பின்பற்றி வருகின்றவர்களை முதலில் இணைத்து, பின் தொடர்ந்து பல ஆன்மீகப் பணிகளை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தார். அவரது இந்த ஆவலை,

"தங்கமே அனையார் கூடிய ஞான
சமரச சுத்தசன் மார்க்கச்
சங்கமே கண்டு களிக்கவும் சங்கம்
சார்திருக் கோயில்கண் டிடவும்
துங்கமே பெருஞ்சற் சங்கம்நீ டூழி
துலங்கவும் சங்கத்தில் அடியேன்
அங்கமே குளிர நின்றனைப் பாடி
ஆடவும் இச்சைகாண் எந்தாய்[3]"

3. திருவருட்பா--3406

என்னும் பாட்டினில் காணலாம்.

கொள்கைகள்: வள்ளலார் தனக்குப் பின்னால் தனது புகழ்பாடி நிற்கும் பெருங்கூட்டத்தை உருவாக்க விரும்பவில்லை. தன்னைச் சார்ந்து வருகின்றவர்கள் எல்லாம் தன்னைப்போன்று மாறவேண்டுமென்று விரும்பினார். ஆதலால்தான் 'சாகாதவனே சன்மார்க்கி' என்றும், 'என்மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்க தானே' என்றும் முரசறைந்து கூறினார்.

சன்மார்க்க சங்கத்தில் யார் வேண்டுமானாலும் சேரலாம். ஆனால் அவர்கள் வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய கொள்கைகள் இருக்கின்றன. அவற்றை, 'இராமலிங்கரின் எழுத்துக்களில் குறிப்பிடப்பெற்றிருக்கின்ற, சங்கத்தின் தலையாய குறிக்கோள்கள் கீழ்க் கண்டவைகளாகும். அவை:-

1. ஜீவகாருண்யத்தைக் கற்பித்தலும் கடைப்பிடித்தலும்

2. இறைச்சி உண்பதையும், கோவில்களில் பலி இடுவதையும், கண்மூடித்தனமான நம்பிக்கைகளையும் அகற்றுதல்

3. சாதி, வர்ண வேறுபாடுகளை விட்டுத் தொலைத்தல் அன்பினால் எல்லா ஆன்மாக்களின் ஒருமைப்பாட்டை (ஆன்மநேய ஒருமைப்பாட்டை) உணரச் செய்வதன் மூலம் எல்லாவகையான மக்களுக்கிடையிலும் ஒருமைப்பாட்டைக் கொண்டு வருதல்.

4. "மரணமிலாப் பெருவாழ்வினை அடைதல்[4]" என்று ஒரு கிறிஸ்தவ ஆராய்ச்சியாளர் கூறுகின்றார். இந்த நான்கின் சாரமாக உயிரிக்கம்-ஜீவகாருண்யம் இருக்கிறது.

---

4. T. Tayanandan Francis 'Ramalinga Swamy', The Christian Institute for the Study of Religion and Society Bangalore-6, 1972. p. 11.

---

தொண்டு-வழிமுறை சன்மார்க்க சங்கத்தினர் உயிரிக்கத்தை தவமாக மேற்கொள்ள வேண்டுமென்று வள்ளலார் வலிவுறுத்துகின்றார். எல்லா உயிர்களிடத்தும் கொள்கின்ற 'கருணையைப் பெறுதல் உயிர்நிலையாகும்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிவகுத்த வள்ளுவர் எப்படி படிப்படியாக நமது உள்ளம் பண்பட்டால் அருளைப் பெறலாமென்பதை உணர்த்துகின்றார். இல்லறவியலில் 'அன்புடைமையின்' தேவையைக் கூறுகின்றார். 'அன்பு' என்பது தொடக்க நிலையாகும். இது இல்வாழ்வில் மனைவியைக் கைப்பிடிக்கின்ற பொழுது மலர்ந்து, மக்களைப் பெற்று தந்நலம் மறந்து, வளர்க்கின்ற பொழுது மணங்கமழ்கின்றது. "அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு" என்னும் நிலை வகுகின்றது. "அன்பின் வழியது உயர்நிலை" என்ற தெளிவு வருகின்ற பொழுது மனிதன் தன்னைச் சார்ந்தவர்களோடு உடன்பட்டு சண்டையின்றி வாழ்கின்றான். இது முதல்படி.

'புலால் மறுத்தல்' அடுத்த படியாகும். தன்னைச் சார்ந்த மனிதர்களிடம் காட்டிய அன்பை பிற உயிர்களிடமும் காட்டுவதால் தொடக்கமாகும். 'உண்ணாமை வேண்டும் புலால் என்னும் உறுதி யோடிருப்பவர்களால் கொல்லாமையை பின்பற்ற இயலும், கொல்லாமையின் சிறப்பை, 'ஒன்றாக நல்லது கொல்லாமை' என்றும்,

"தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை"

என்றும்,

"கொல்வான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும்",

என்றும் வள்ளுவர் கூறுகின்றார். இந்தப் படியையும் கடக்கின்ற பொழுது 'மனிதனால் ஓம்பி அருளாள்' கின்ற நிலையை அடைய முடியும்.

"அருளென்னும் அன்பீன் குழவி" என்பது வள்ளுவர் வாக்கு. வள்ளுவரை நன்கு உணர்ந்தவர் வள்ளலார். 'தமிழ்நாட்டில் பொது மக்களுக்கு முதன் முதலாகத் திருக்குறள் வகுப்பு நடத்தியவர் வள்ளற் பெருமானே[5]" என்பது ஆராய்ச்சியாளர்கள் கருத்து. ஆதலால் வள்ளுவரின் கருத்தோட்டத்தின்படி அன்பில் தொடங்கி அருளில் சன்மார்க்க சங்கத்தினர் கனிய வேண்டுமென வள்ளலார் எதிர்பார்த்தாரெனக் கொள்ளலாம்.

5. ஊரன் அடிகள், 'வடலூர் திருவருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையங்களின் வரலாறு, 'சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம், வடலூர், 1972, ப. 6

வள்ளலார் கூறும் கருணையில் மூன்று கூறுபாடுகள் இருப்பதனை டாக்டர் சுப. அண்ணாமலை சுட்டிக் காட்டுகின்றார். அவை "1. நம்மோடு வாழ்கின்றவர்கள் பசியால், நோயால், தாகத்தால், அறியாமையால், வறுமையால், அச்சத்தால் வாடுகின்றபொழுது அவர்கள் துயர் தீர்க்க நற்பணிபுரிதல் 2. கொல்லாமை 3. புலால் உண்ணாமை.[6]"

6. The Life and Teachings of Saint Ramalingar, Bharatiya Vidya Bhavan, Bombay, 1973, p. 85

மனிதர்களுக்கும் பிற உயிர்களுக்கும் தொண்டு செய்வதன் மூலம் சன்மார்க்க சங்கத்தினர் தங்களை உயர்த்திக்கொள்ள முடியுமென்பதைச் சுட்டிக்காட்டினார். இத்தகைய தொண்டிற்கு ஒரு வழி முறையாக, கருவியாக சத்திய தருமச்சாலையை உருவாக்கினார்.

இரு இனங்கள்: வள்ளலார் எல்லா உயிர்களையும் ஒன்றெனக் கொண்டவர். அப்படிப்பட்ட அவரே புலால் உண்பதன் அடிப்படையில் மக்களை தன்னிடம் இறைவன் 'உறவினத்தார்' 'புற இனத்தார்' என இரு வகைகளாகப் பகுத்துக் கூறியதாகக் கூறுகின்றார்.

புலால் மறுத்தவர்களை மட்டும்தான் 'உறவினத்தார்' என்று கூறுகின்றார். இவர்கள்தான் 'அக இனத்தவர்களாக' அதாவது சன்மார்க்க சங்கத்தின் உறுப்பினர்களாகும் தகுதி பெற்றவர்கள் என்பதை குறிப்பால் உணர்த்துகின்றார். கருத்துக்களைக் கூறப்போவதாகப் பாடுகின்றார்.

"உயிர்க்கொலையும் புலைப் பொசிப்பும் உடையவர்கள் எல்லாம்
உறவினத்தார் அல்லர்அவர் புறஇனத்தார் அவர்க்குப்
பயிர்ப்புறும்ஓர் பசிதவிர்த்தல் மாத்திரமே புரிக
பரிந்துமற்றைப் பண்புரையேல் நண்புதவேல் இங்கே
நயப்புறுசன் மார்க்கம்அவர் அடையளவும் இதுதான்
நம்ஆணை என்றெனக்கு நவின்ற அருள் இறையே
மயர்ப்பறுமெய்த் தவர்போற்றப் பொதுவில்நடம் புரியும்
மாநடத்தென் அரசேஎன் மாலைஅணிந் தருளே.[7]

7. திருவருட்பா-6 (இடை) அருள்விளக்க மாலை 71

என்று பாடுகின்றார்.

இதற்கு அடிப்படையான காரணம் உயிரிரக்கத்தைக் கைக்கொள்ளாத ஒருவன் வேறு எந்த முறையாலும் இறைவனை அடைய முடியாதென்று வள்ளலார் உறுதியாக நம்புகின்றார். கூறுகின்றார். உயிரிரக்கம் என்ற திறவுகோலை கையிலெடுக்காமல் இறைவன் இருக்கும் திருக்கோவிலின் கதவினைத் திறக்க இயலாதென்பதே அவர் கருத்து.

உயிரிரக்கத்தால் எப்படி உள்ளொளி பெருக்கி இறைவனை அடைய இயலுமென்பதை, சரவணானந்தா, "ஜீவ தயவு அல்லது ஜீவகாருண்யம்' என்பது என்ன என்றால், புறத்தில் ஜீவர்கள் விஷயத்தில் காட்டப்படும் உயிர் விளக்கமும், அறிவு விளக்கமும் தரும் செய்கையாகும். இந்தச் செயல்முறை புறத்தில் காரியப்படும்போது, இச்செயல் புரிகின்றவனின் அகத்தில் கடவுள் தயவால் சுத்தமான இன்பம் ஊற்றெடுக்கின்றது. அவ்வின்ப சக்திதான் அவனுக்கு மேலான அறிவு விளக்கத்தையும், அமுதமயமான உயிர் விளக்கத்தையும் வழங்குவதாம். ஆகையால் ஜீவகாருண்யம் செயல் பட வேண்டியதின் அவசியம் அறியலாகின்றதாம்[8]", என்று கூறுகின்றார்.

8. வள்ளலார் கண்ட ஒருமை வாழ்வு, இராமலிங்கர் பணி மன்றம் சென்னை, 1974, ப. 91

சன்மார்க்க சங்கத்தினர்-நடைமுறை: வள்ளலார் சத்திய சன்மார்க்க சங்கத்தை அமைத்த பொழுது பலர் அதில் உறுப்பினர்களானார்கள். அவர்களில் பெரும்பாலானவர்கள் "சாகாதவனே சன்மார்க்கி", என்றும் "என்மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கம்தானே" என்றும் கூறியதைத் தவறாகப் புரிந்து கொண்டார்கள். 'மரண பயத்தை' உள்ளத்தில் தேக்கி வைத்துக் கொண்டிருந்த அவர்கள் வள்ளலாரைச் சேர்ந்தால் அவர் இறவாதிருக்க சித்தின் மூலம் வழி செய்வார் என்று எதிர்ப்பார்த்துச் சென்றனர். ஆனால் வள்ளலார் அவர்கள் 'தந்நலம் இழந்தும் மற்ற உயிரினங்களின் நலங்காக்க' என்று கூறியது மிகவும் கடினமான ஒன்றாகத் தோன்றியது.

வள்ளலார் அவர்கால மக்களிடமிருந்து நிறைய எதிர்பார்த்தார். தான் கண்டு சொல்லும் பேருண்மையைக் கேட்டு நாட்டு மக்களெல்லாம் தனது வழியிலேயே

நடப்பார்களென்ற நம்பிக்கையோடிருந்த வள்ளலார் மக்களின் உலகியல் போக்கினைக் கண்டு ஏமாற்றமடைந்தார். "கடைவிறித்தேன் கொள்வாரில்லை". என்ற முடிவுக்கு வந்தார். வடலூரிலிருந்த சங்கத்தையே மூடிவிடும்படி ஆணையிட்டுவிட்டு சித்தி வளாகத்திற்குச் சென்றுவிட்டார். அவர் ஒளியோடு கலந்துவிட்ட இரண்டாண்டுகளுக்குப் பிறகுதான் சங்கத்தைத் திறந்தார்கள்.

இந்த நூற்றாண்டில் சன்மார்க்க சங்கத்திற்கு புத்தாக்கம் வழங்க மறைமலையடிகளும், திரு. வி. கலியாண சுந்தரனாரும் அரும் பாடுபட்டனர். வடலூரில் சங்கம் வலுப்பெற்ற நிலையில் 1946 இல் 'சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்' என்ற பெயரால் பதிவு செய்தனர். அதனை ஒட்டி தமிழகமெங்கும் சன்மார்க்க சங்கங்களை அமைத்திருக்கின்றனர். ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் வடலூர் சன்மார்க்க சங்கம் கல்விப் பணி வளர நற்பணிகள் பலவற்றை மேற்கொள்ள உறுதுணையாக இருந்தார். பொள்ளாட்சி நா. மகாலிங்கம் "வள்ளலார் பணிமன்றம்" என்னும் அமைப்பினை உருவாக்கி வள்ளலார் கருத்தை நாடெங்கும் பரப்பும் பணியை மேற்கொண்டுள்ளார்.

இராமகிருஷ்ண பரமஹம்சருக்கு சுவாமி விவேகானந்தர் கிடைத்ததைப் போல வள்ளலாருக்கு ஒரு விவேகானந்தர் கிடைத்திருந்தால் சன்மார்க்க சங்கமும் இராமகிருஷ்ணர் பணிமன்றத்தைப் போல அரும்பெரும் தொண்டு செய்கின்ற நிறுவனமாக மாறியிருக்கும். இன்று அந்நிலை இல்லை.

நமது நாட்டில் மக்களுக்கும் பிற உயிரினங்களுக்கும் தொண்டு செய்ய நிறைய வாய்ப்புக்கள் உள்ளன. சன்மார்க்க சங்கத்தினர் 'உயிரிரக்கத்தின் மூலம் ஆன்ம இலாபத்தைப் பெற்று இறைவனை அடையலாம்," என்பதை உணர்ந்து தொண்டினை யோகமாக மேற்கொண்டால் சிறந்த பலன் விளையும்.

## 12. ஜீவகாருண்யம்

--க. அருணாசலம்

இராமலிங்க வள்ளலார் 1823-ஆம் ஆண்டில் தோன்றி ஐம்பது ஆண்டுகள் இந்நிலவுலகில் வாழ்ந்தவர். இதே காலத்தில்தான் இராமகிருஷ்ண பரமஹம்சர் வங்காளத்தில் தோன்றி வாழ்ந்தார். ஒரு புதிய விழிப்புணர்ச்சி தோன்றிய காலம் அது. இராமலிங்க வள்ளலாரும் ஓதாது உணர்ந்து உலருக்கு பல புதிய செய்திகளை உணர்த்திய பெரியவர்களில் ஒருவர். அவர் சிறு வயது முதலே அருள் தாகம் மேலிட்டு பல சாதனைகள் புரிந்து, தமது ஆற்றலைப் பெருக்கிக் கொண்ட பெரியார். அவர் தம்மை தமிழ் நாட்டில் வாழையடி வாழையாக வந்த சித்தர்கள் பரம்பரையில் ஒருவராக அறிமுகப்படுத்திக் கொள்கிறார். சித்தர்கள் தமக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்து உலகை உயர்த்தியவர்கள்.

மனிதப் பிறப்பெடுத்தவர்கள் இப் பிறப்பினால் அடையத் தக்கது ஆன்ம லாபம் தான் என்பது இராமலிங்க வள்ளலாரின் கூற்று. ஆன்ம லாபம் அடைவதற்கு ஜீவகாருண்ய ஒழுக்கமே வழி. வேறு எந்த வழியாலும் கடவுளின் அருளைப் பெற முடியாது என்பது அவரது அனுபவ உரை. "அருள் என்பது கடவுள் தயவு. கடவுள் விளக்கம், ஜீவகாருண்யம் என்பது ஜீவர்கள் தயவு ஜீவர்கள், ஆன்ம இயற்கை விளக்கம். இதனால் தயவைக் கொண்டு தயைவைப் பெறுதலும், விளக்கத்தைப் பெறுதலும் கூடும். வேறொன்றினால் பெறக் கூடாமை அனுபவமாகலின் ஜீவகாருண்யத்தைக் கொண்டு அருளைப் பெறுதல் கூடும்; வேறொன்றினாலும் பெறக் கூடாமை நிச்சயம்" என்கிறார் இராமலிங்க வள்ளலார். இயேசு நாதரும் இத்தகைய கோட்பாடு ஒன்றை உலகுக்கு உணர்த்தியது நினைவு கூறற்பாலது. அவர் மக்களுக்குப் போதித்த பிரார்த்தனையில் 'ஆண்டவரே! நாங்கள் பிறர் எங்களுக்கு செய்த குற்றங்களை மன்னிக்கிறது போல நீங்கள் எங்கள் குற்றங்களையும் மன்னியும்' என்று இறைவனிடம் இறைஞ்சுதல் வேண்டும் என்கிறார். மீனைப் போட்டு மீனைப் பிடிக்கிற மாதிரி, நாம் ஒன்றைக் கொடுத்துத்தான் பிரிதொன்றைப் பெற வேண்டுமென்பது பொருளல்ல. நாம் எதைக்கொடுக்கிறோமோ அதனையே பெருமளவில் பெறுகிறோம் என்பது பொருள். கொடுக்கும் பொருளும், கொடுப்பவனும், பெறுபவனும் அனைத்தும் ஒன்றே; ஆதலினால் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் பேரின்ப வாழ்வுக்குப் பெருந்துணையாகும்.

அருளைப்பெற அனைத்துயிர்களுக்கும் அனுதாபம் காட்டி, துன்பம் துடைத்து, துயரை ஒழித்து தூய்மை வாழ்வு வாழ்தலே வாழ்வின் பயன். இதனை வள்ளலார் தமது வாழ்க்கையின் மூலமும் எழுதிய எழுத்துக்களின் மூலமும் உணர்த்தியுள்ளார்.

ஆன்மீக வாழ்க்கையில் ஒழுக்கம் சிறப்பிடம் பெறுகிறது.

திருவள்ளுவரும்,

ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

என்று கூறுகிறார்.

இராமலிங்க வள்ளலார் ஜீவகாருண்யத்தைப் பற்றிய ஒரு விரிவான நூலை பல பாகங்களாகப் பிரித்து எழுத வேண்டுமென்று திட்டமிட்டிருந்திருக்கிறார். அதில் முதல் மூன்று பிரிவுகளே இதுவரை வெளிவந்துள்ளன. மற்ற பிரிவுகள் எழுதப் பெற்றனவா இல்லையா? என்பது தெரியவில்லை. ஒழுக்கத்தை, தனிமனிதனின் நித்திய ஒழுக்கம் என்றும், கருணை ஒழுக்கம் என்றும், இந்திரிய ஒழுக்கம் என்றும், அவ்வப்போது உபதேசித்தருளிய வள்ளலார் ஜீவகாருண்யத்தைப் பற்றி பல கோணங்களிலிருந்தும் சிந்தித்து நிரல் பட விவரித்துள்ளார்.

பசி, கொலை, பிணி முதலிய எந்தத் தடைகளுக்காக ஜீவகாருண்யம் தோன்றியதோ அந்தத்தடையை நிவர்த்திப்பதே ஜீவகாருண்யம் என்பது வள்ளலாரின் விளக்கம். இருப்பினும் பசி நீக்குதலை அவர் அடிக்கடி வற்புறுத்தி இருக்கிறார். பசி நீக்குவதற்காக அவர் தருமசாலை ஒன்றையும் நிறுவினார்.

அற்றார் அழிபசித் தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள் வைப்புழி

என்பது பொய்யாமொழி. ஒருவன் பசியைத் தீர்த்தால் அது தனக்கே வந்து உதவும். எனவே தன்னலம் கருதியாவது பிறர் பசியைத்தீர்க்க வேண்டும் என்று வள்ளலார் வற்புறுத்தினார். இதனையே கீழ்க்காணுமாறு விவரிக்கின்றார்.

"பசியென்கிற நெருப்பானது ஏழைகள் தேகத்தினுள் பற்றி எரிகின்றபோது ஆகாரத்தால் அவிக்கின்றதுதான் ஜீவகாருண்யம்.

பசியென்கிற விஷக்காற்றானது ஏழைகள் அறிவாகிய விளக்கை அவிக்கின்ற தருணத்தில் ஆகாரங்கொடுத்து அவியாமல் ஏற்றுகின்றதே ஜீவகாருண்யம்.

கடவுளியற்கை விளக்கத்திற்கு இடமாகிய சீவதேகங்களென்கிற ஆலயங்கள் பசியினால் பாழாகுந் தருணத்தில் ஆகாரங் கொடுத்து அவ்வாலயங்களை விளக்கஞ் செய்விப்பதே சீவகாருண்யம்.

கடவுள் இன்பத்தைப் பெறுகின்ற நிமித்தம் தேகங்களிலிருந்து குடித்தனஞ் செய்கின்ற சீவரது தத்துவக் குடும்ப முழுதும் பசியினால் நிலை தடுமாறி அழியுந் தருணத்தில் ஆகாரங்கொடுத்து அக்குடும்ப முழுதும் நிலைபெறச் செய்வதே சீவகாருண்யம்.

பசியென்கிற புலியானது ஏழை உயிர்களைப் பாய்ந்து கொல்லத் தொடங்குந் தருணத்தில் அப்புலியைக் கொன்று அவ்வுயிரை இரட்சிப்பதே சீவகாருண்யம்.

பசியென்கிற விஷம் தலைக்கேறிச் சீவர் மயங்குந் தருணத்தில் ஆகாரத்தால் அவ் விஷத்தை இறக்கி மயக்கந் தெளியச் செய்வதே சீவகாருண்யம்.

பசி என்கிற கொடுமையாகிய தேள் வயிற்றிற் புகுந்து கொட்டுகின்றபோது கடுப்பேறிக் கலங்குகின்ற ஏழைகளுக்கு ஆகாரத்தால் அக்கடுப்பை மாற்றிக் கலக்கத்தைத் தீர்ப்பதே சீவகாருண்யம்.

'நேற்று இராப்பகல் முழுதும் நம்மை அரைப்பங்கு கொன்று தின்ற பசியென்கிற பாவி இன்றும் வருமே! இதற்கு என்ன செய்வோம்' என்று ஏக்கங் கொள்கின்ற ஏழைச் சீவர்களது ஏக்கத்தை நீக்குவதுதான் சீவகாருண்யம்.

'வெயிலேறிப் போகின்றதே, இனிப் பசியென்கிற வேதனை வந்து சம்பவிக்குமே! இந்த விதி வசத்திற்கு என்ன செய்வது!' என்று தேனில் விழுந்த ஈயைப்போல, திகைக்கின்ற ஏழைச் சீவர்களுடைய திகைப்பை நீக்குவதுதான் சீவகாருண்யம்.

'இருட்டிப் போகின்றதே, இனி ஆகாரங் குறித்து எங்கே போவோம்! யாரைக் கேட்போம்! என்ன செய்வோம்!' என்ற விசாரத்தில் வருந்திய ஏழைச் சீவர்களது விசாரத்தை மாற்றுவதே சீவகாருண்யம்.

நடந்து நடந்து காலும் சோர்ந்தது; கேட்டுக் கேட்டு வாயும் சோர்ந்தது; நினைந்து நினைந்து மனமும் சோர்ந்தது; இனி இப்பாவி வயிற்றுக்கென்ன செய்வோம்! என்று கண்ணீர் வடிக்கின்ற ஏழைகளுக்கு ஆகாரங்கொடுத்துக் கண்ணீரை மாற்றுவதே சீவகாருண்யம்.

'பகற்போதும் போய்விட்டது, பசியும் வருந்துகின்றது. வேறிடங்களிற் போக வெட்கந் தடுக்கின்றது; வாய் திறந்து கேட்க மானம் வலிக்கின்றது; வயிறு எரிகின்றது; உயிரை விடுவதற்கும் உபாயம் தெரியவில்லை. இவ்வுடம்பை ஏன் எடுத்தோம்!' என்று மனமும் முகமும் சோர்ந்து சொல்வதற்கு நாவெழாமல் உற்பாத சொப்பனங் கண்ட ஊமையைப் போல் மனம் மறுகுகின்ற மானிகளாகிய சீவர்களுக்கு ஆகாரங் கொடுத்து மானத்தைக் காப்பதுவே சீவகாருண்யம்.

நாம் முன்பிறப்பில் பசித்தவர்கள் பசிக் குறிப்பறிந்து பசியை நீக்கியிருந்தால், இப்பிறப்பில் நமது பசிக்குறிப்பறிந்து பசியை நீக்குவதற்குப் பிறிதொருவர் நேர்வார்; அப்போது அப்படி நாம் செய்ததில்லை. இப்போது நமக்கிப்படிச் செய்வாருமில்லை என்று விவரித்துக் கொண்டு தூக்கம் பிடியாமல் துக்கப்படுகின்ற ஏழைச் சிறுவர்களுக்கு ஆகாரங் கொடுத்து, துக்கத்தை நீக்கித் தூக்கம் பிடிக்க வைப்பதே சீவகாருண்யம்.

தேகமுழுவதும் நரம்புகள் தோன்றப் பசியினால் இளைத்து உயிரொடுங்கி மூர்ச்சை மூடிய காலத்தும் அயலாரைக் கேட்பது துணியாமற் கடவுளை நினைந்து நினைந்து நெருப்பிற்படுத்து நித்திரை செய்யத் தொடங்குவாரைப் போல அடிவயிற்றிற் கொடிய பசி நெருப்பை வைத்துப் படுக்கத் தொடங்குகின்ற விவேகிகளுக்கு ஆகாரங் கொடுத்து அந்தப் பசி நெருப்பை ஆற்றுவதே சீவகாருண்யம்.

'நேற்றுப் பட்டினி கிடந்தது போல் இன்றும் பட்டினி கிடப்பது எப்படி? நாம் பாலிய வாசத்தால் இன்றும் பட்டினி கிடக்கத் துணிவோமாயினும் பட்டினி சகியாத நமது ஏழை மனைவி வயிற்றுக்கு யாது செய்வோம்? இவள் பசியைக் குறிப்பதும் பெரிதல்ல வார்த்திப திசையால் மிகவுஞ் சோர்ந்த நமது தாய் தந்தைகள் இன்றும் பட்டினி கிடந்தால் இறந்து விடுவார்களே! இதற்கென்ன செய்வோம்? பசியினால் அழுதழுது களைத்த நமது புத்திரர்களது சோர்ந்த முகத்தை எப்படிப் பார்போம்? என்று எண்ணிக் கொல்லன் உலையிலூத மூண்ட நெருப்பைப்போல், பசி நெருப்பும்

பயநெருப்பும் விசார நெருப்பும் உள்ளே மூண்டபடியிருக்கக் கன்னப்புடையில் கைகளை வைத்துக் கொண்டு கண்களில் நீர் கலங்க வருந்துகின்ற ஏழைகளுக்கு ஆகாரங்கொடுத்து வருத்தத்தை மாற்றுவதே சீவகாருண்யம்.

'கண், கை, கால் முதலிய உறுப்புக்களிற் குறைவில்லாதவர்கள் ஆகி ஆகாரஞ் சம்பாதிக்கத் தக்க சக்தியுள்ளவர்களும் பசியால் வருந்தி இதோ படுத்திருக்கின்றார்கள்; குருடும் செவிடும் ஊமையும் முடமுமாகவிருக்கின்ற நமக்கு ஆகாரம் எந்த வழியாற் கிடைக்கும்! பசி எப்படி நீங்கும்!' என்று தனித்தனி நினைத்து நினைத்துத் துக்கப்படுகின்ற ஏழைகளுக்கு ஆகாரங் கொடுத்துத் துக்கத்தை நீக்குவதே சீவகாருண்யம்.

பசியினால் வருந்துகிறவர்கள் எந்த தேசத்தவராயினும் எந்தச் சமயத்தவராயினும் எந்த சாதியினராயினும் எந்தச் செய்கையராயினும் அவர்கள் தேசவொழுக்கம் சமயவொழுக்கம் சாதிவொழுக்கம் செய்கைவொழுக்கம் முதலானவைகளைப் பேதித்து விசாரியாமல், எல்லாச் சீவர்களிடத்தும் கடவுள் விளக்கம் பொதுவாய் விளங்குவதை அறிந்து பொதுவாகப் பார்த்து அவரவர் ஒழுக்கத்திற்குத் தக்கபடி அவர்கள் பசியை நிவர்த்தி செய்விப்பதே சீவகாருண்யம்.

சன்மார்க்க வொழுக்கத்திற்கு ஒத்த சத்துவ ஆகாரத்தால் பசி நிவர்த்தி செய்து கொள்ளத்தக்க மிருகம் பறவை ஊர்வன தாவரம் என்கின்ற உயிர்களுக்கு பசி வந்த போது பசி நிவர்த்தி செய்விப்பதே சீவகாருண்யம்.

பசி தீர்த்தலைப்பற்றி இத்தனை விரிவாக எழுதியுள்ள வள்ளலார் ஏழை எளிய மக்களுக்கும் மற்றோருக்கும் சாதி சமய வேறுபாடின்றி பசி தீர்க்கும் பொருட்டு சத்திய தருமச் சாலையை ஆரம்பித்தார். ஏறக்குறைய 115 ஆண்டுகளுக்கு முன்னால் வள்ளலார் தம் கையால் அடுப்புமூட்டி ஆரம்பித்த தருமச்சாலை இன்றும் நடந்து வருகிறது.

சீவகாருண்யத்தின் மற்றொரு பிரிவாகிய புலால் மறுத்தலைப் பற்றியும் வள்ளலார் வலியுறுத்தி வந்தார். புலால் மறுத்தல் "வெறும் உணவுப்பிரச்சினை அன்று; உயிர்க்குலத்தின் ஒருமைப்பாட்டுப் பிரச்சினை; ஆன்ம நேய ஒருமைப்பாடுடைய புது உலகம் காணும் புதிய பிரச்சினை" என்கிறார் டாக்டர் ம. பொ. சிவஞானம். "உயிர்கள்பால் இரக்கம் காட்டும் உணர்வு தோன்றினாலன்றி, மனித குலத்தவரிடையே ஒற்றுமை ஏற்படுவதோ, இந்தியரிடையே தேசிய ஒருமைப்பாடு தோன்றுவதோ சாத்தியமில்லை" என்று கருதினார் அடிகள். "ஜீவகாருண்ய ஒழுக்கத்தை அடிப்படையாக வைத்து ஆன்மநேய ஒருமைப்பாட்டை வளர்க்க முயன்றார்" என்பது சிலம்புச் செல்வர் ம. பொ. சியின் முடிவு.

சீவகாருண்யம் ஏன்? என்பதற்கு வள்ளலார் கூறும் காரணங்கள் பல. சிறப்பாக சீவகாருண்ய ஒழுக்கம் இல்லாமல் ஞானம், யோகம், தவம், விரதம், ஜபம், தியானம் முதலியவைகளைச் செய்கின்றவர்கள் கடவுள் அருளுக்குச் சிறிதும் பாத்திரம் ஆக மாட்டார்கள். தயவினால்தான் தயவைப் பெற்று பேரின்ப நிலையை அடையலாம் என்பது அவர் காட்டும் வழி.

சீவகாருண்யத்தை அடைவதற்குரிய வழியையும் அவர் காட்டுகிறார். கடவுளுடைய பெருமையையும் தரத்தையும் நம்முடைய சிறுமையையும், தரத்தையும்

சதா ஊன்றி விசாரித்தல் மனிதனிடையே சீவகாருண்யத்தை மலர்விக்கும். சத்விசாரமும், பரோபகாரமும் ஜீவகாருண்ய ஒழுக்கத்தை உறுதிப்படுத்தும் செயல்கள். இதனை பல பாடல்கள் மூலமும் உபதேசங்களின் மூலமும் தாம் எழுதிய ஜீவகாருண்ய ஒழுக்கம் என்ற நூலின் மூலமும் வள்ளலார் விளக்கி அருளியுள்ளார்கள். அவர் நிறுவிய சன்மார்க்க சங்கம் வாழ்க! அவர் மூட்டிய தருமச்சாலையின் அடுப்பு அணையாது ஒளிர்க! அவர் தோற்றுவித்த சத்திய ஞானசபை நிலைபெற்று விளங்குக.

அருட்பெருஞ்சோதி, அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

# 13. மரணமிலாப் பெருவாழ்வு

--என்.சரோஜினிதேவி

வாழ்க்கை மாண்புடையதென்று சொல்லப்படுகிறது. வாழ்க்கை, உள்ளொளியைக் கொண்டு அமையும்போதுதான் மாண்புடையதாகும்.

மகாத்மா காந்தி பிறப்பதற்கு நாற்பத்தாறு ஆண்டுகளுக்கு முன்னே தமிழ் நாட்டில் ஒரு வள்ளல் பிறந்தார். அவர் ஓதாது உணர்ந்தவர். கருவிலே திருவாய்க்கப் பெற்றவர். அவர்தாம் நம் வள்ளலார்.

**எண்ணமும் உருவமும்**

எண்ணம் உருவமா? உருவ மற்றதா? எண்ணத்துக்கும் வடிவம் நிறம் முதலியன உண்டு என்று இக்கால விஞ்ஞானியர் கண்டுள்ளனர்.

எண்ணத்தின் நிறங் கொண்டு மக்கள் குணம் இந்நாளில் கணிக்கப்படுகிறது. அறிஞர்கள் பலரும் எண்ணத்துக்கும் வடிவம் உண்டு என்ற முடிவுக்கு வந்துள்ளனர்.

எண்ணமாவது ஒலியின் ஈட்டம். ஒலி இருவகைப்படும். கேட்கும் ஒலியும், கேளா ஒலியும் கேளாத ஒலியின் ஈட்டமே எண்ணம். அவ்வொலி அலைகள் இந்நாளில் விஞ்ஞானிகளால் படம் பிடிக்கப் படுகின்றன. எனவே ஒலியும் உருவத்தின் பாற்பட்டது.

இறவாவரம் பெற்ற நம் வள்ளலார் எத்தனையோ வழிகளை நமக்குச் சொல்லிச் சென்றுள்ளார். நம்மையும் அழைத்தார்.

"ஒலியுடம்பு பெறவாரீர், அதன் கண்ணே இறவா வரம் பெறலாம்" என்றெல்லாம் விளித்தார். ஆனால் நாம் அவர்வழி சென்றோமில்லை. அருட்பா மூலம் நம்முள் நுழைந்து மீண்டும், மீண்டும் அழைப்பு விடுத்த வண்ணமிருக்கிறார். இனிமேலாவது நமக்கு ஆன்ம விழிப்பு வரவேண்டும்.

ஆன்மா-உயிர்-சக்திப் பெருக்கம் அடைவதற்கெல்லாம் அன்பு, கடமை, அருள் ஆகியவைகளே அடிப்படையாக நின்று இறவா வரத்தை அளிக்கக் காத்திருக்கின்றன.

பொய்யோடு வீண்பொழுது கழிப்பதை விட்டொழிக்க வேண்டும்; புலைத் தொழிலோடு கொலைத் தொழிலையும் நீக்கவேண்டும். விளக்கைப்பற்றிக் கொண்டு அதன் வெளிச்சத்தில் தெரிகின்ற பாழுங் கிணற்றைக் கண்டும் அதில் விழுகின்ற இன்பக் களிப்பைக் களிப்பென நினைக்கும் கருத்தைக் கருத்தெனக் கருதக் கூடாது. உங்களுக்கு வருகின்ற மூப்பையும் மரணத்தையும் நினைத்தால் அடிவயிறு கலங்கவில்லையா என்று கேட்கிறார் அருளரசர்.

கொடிய உலக மக்களே! மெய் விளக்க, எனது தந்தையாகிய அருட்ஜோதி ஆண்டவர் வருகின்ற தருணம் இதுதான். உடனே அவரை வணங்கி இறவாவரம் பெறுவீர் என நம்மீது இரக்கம் கொண்டு அழைக்கிறார்.

"பொய்விளக்கப் புகுகின்றீர் போதுகழிக் கின்றீர்
புலைகொலைகள் புரிகின்றீர் கலகலஎன் கின்றீர்
கைவிளக்குப் பிடித்தொருபாழ்ங் கிணற்றில்விழு கின்ற
களியர் எனக் களிக்கின்றீர் கருத்திருந்தும் கருதீர்
ஐவிளக்கு மூப்புமா ணாதிகளை நினைத்தால்
அடிவயிற்றை முறுக்காதோ? கொடியமுயற் றுலகீர்
மெய்விளக்க எனதுதந்தை வருகின்ற தருணம்
மேவியதீண் டடைவீரேல் ஆவிபெறு வீரே.

என்று பெருமகனார் உள்ளமுருகப்பாடி நம்மை அழைக்கின்றார்.

"என்னை அடைத்திடுமின், என் மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கம்தானே" என்றும் கூறி வள்ளல் பெருமான் உய்ய நெறியை உணர்த்தி அருளினார்கள்.

அக இருளும், புற இருளும் அறியாமை என்னும் மாயையும் நீங்க வேண்டி ஆண்டவனுடைய அருள்ஜோதி எங்கும் ஒளிவீசி திகழ்கின்றது. அருட்கருணை மழை பொழியும்போது பாத்திரத்தைக் கவிழ்த்து விட்டால் எப்படி ஒரு சொட்டு நீரும் அதனுள் புகாதோ அப்படியே அருட்கருணைமழை பொழியும் போது மனமாகிய பாத்திரத்தை மூடிவிட்டார். கருணையின் அருள் நீரும் சிறிதளவு மனதில் புகாது. எனவே நம் உள்ளமெனும் பாத்திரத்தை மூடிவிடாமல் அன்பும் அறிவும் கொண்டு திறந்தே வைத்தால் கருணையின் அருளால் மூன்று மகா மந்திரங்களை வள்ளலார் நமக்கு அருளியுள்ளார். அவை பசித்திரு-தனித்திரு-விழித்திரு என்பனவாகும். இம்மந்திரங்களுக்கான விளக்கங்கள் அடிகளாரின் பாடல்களிலேயே கண்டு கொள்ளலாம். மந்திரம் என்பது நினைப்பவனைக் காப்பது என்பதாகும்.

அடிகளார் 'பசித்திரு' என்பதன் பொருள் உண்ணாமலிருப்பது என்பதன்று. உயிர்தரிக்க உண்டால் போது மென்பதாகும். மகாத்மா காந்தி அவர்கள் எப்பொழுதுமே பசித்திருக்குமளவில் சிறிதளவே உணவு கொள்வாராம். வள்ளலார் பிள்ளைப்பருவமுதலே தாம் பசித்திருக்கும் நோன்பைக் கடைப்பிடித்தத்தாகவும் சிற்சில வேளைகளில் பிறருடைய வற்புறுத்தலுக்காக முழு உணவு கொண்டதாகவும் அவரே கூறுகின்றார்.

"உற்றதா ரணியில் எனக்குல குணர்ச்சி
உற்றநாள் முதல்ஒரு சிலநாள்
பெற்றதாய் வாட்டம் பார்ப்பதற் கஞ்சிப்
பேருண வுண்டனன் சிலநாள்
உற்றவர் நேயர் அன்புளார் வாட்டம்
உறுவதற் கஞ்சினேன் உண்டேன்
மற்றிவை அல்லால் சுகஉணாக் கொள்ள
மனநடுங் கியதுநீ அறிவாய்.

என்ற பாடலால் அறியலாம்.

திருமுருகாற்றுப் படையில் முனிவர்களைப்பற்றிக் கூறுமிடத்து "நண்பகற் பலவுடன் கழிந்த உண்டியர்" என்கிறார் நக்கீர தேவர். அவர்கள் பல பொழுது பசித்திருந்து ஒரு பொழுதே உண்கிறார்களாம். வேளைக்கு வேளை உணவு கொள்வது மற்றவர்களுக்குப் பொருந்தலாம், ஆனால் மரணமிலாப் பெரு வாழ்வு விரும்பும் சன்மார்க்கிகளுக்குப் பொருந்தாது.

"சோற்றிலே விருப்பஞ் சூழ்ந்திட வொருவன்
துன்னுதற் றவமெலாஞ் சுருங்கி
ஆற்றிலே கரைந்த புளியெனப்போம்"

என்று உறுதியுடன் கூறுகிறார்.

**புலைப்பசி அறவே கூடாது:**

உயிர்களுக்கு வரும் இடையூற்றினைப் போக்கி அவற்றை நல்வழியில் அமைத்துக் கொள்வதற்கு வேண்டிய அமைப்பினைக் காண வள்ளல் பெருமானின் உள்ளம் விழைந்தது.

தாம் வாழுகின்ற வாழ்க்கை இவ்வுலகத்தோடு முடிவடைந்து விடுவதில்லை. உயிர்கள் மீது தாம் வைக்கின்ற கருணையாகிய 'சீவகாருண்யம்' தான் வீடுபேற்றின் திறவுகோல். இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்ந்து வீடுபேற்றை விரும்பிகின்றவர்கள் அனைவரும் மன்னுயிரைத் தன்னுயிர்ப் போல் பார்க்க வேண்டும். எல்லா உயிர்களும் ஈசன் கோவில், எனவே எவ்வுயிர்களையும் கொள்ளுதல் கூடாது என்பது வள்ளலார் கருத்து.

"தன்னூண் பெருக்கத் திற்குதான் பிறிதுஊண்
உண்பான் எங்ஙனம்ஆளும் அருள்"

என்பார் வள்ளுவரும்.

'ஆருயிர் கொல்லா மேலோர் அறிவினை அறிந்த நல்லோர்
தீமனம் அடக்க வல்லார், இவர்களே தேவரராவார்
காமராய் கற்பழித்தோர் களவு செய்துடல் வளர்த்தோர்
மாமிசம் தின்போரெல்லாம் மானிடப் புலையர் தாமே"

என்று சாத்தியமாகவே கூறுகிறார்.

துண்ணெனக் கொடியோர் பிறவுயிர் கொல்லத்
　　தொடங்கிய தெல்லாம் பயந்தேன்
கண்ணினால் ஐயோ! பிறவுயிர் பதைக்கக்
　　கண்ட காலத்திலும் பதைத்தேன்
மண்ணினில் வலையும் தூண்டிலுங் கண்ணி
　　வகைகளும் கண்டபோ தெல்லாம்
எண்ணிஎன் உள்ளம் நடுங்கிய நடுக்கம்

எந்தைநின் திருவுளம் அறியும்"

என இறைவனிடம் முறையிடுகிறார். சுத்த சன்மார்க்கம் எனும் புது நெறி பரவுவதன் மூலமாகத்தான் உயிர்க்குத்தான் உயிர்க்கருணையைப் புரிய வைக்க முடியுமென்று வள்ளலார் நம்பினார். சதாசிவ நினைப்புடன் இருந்து எங்கும் எதிலும் கடவுளைக் காணும் திறனுடையார் பசித்திருத்தல் இயலும்.

'தனித்திரு' என்பது அடிகளார் சொன்ன இரண்டாவது மந்திரமாகும். சிவ சிந்தனையுடன் தனித்திருத்தல் பேரின்பம் பயக்கும் என்கிறார் வள்ளலார். ஆரவார சூழ்நிலையில் மனத்தில் இறையுணர்வு பிறக்காது. பிறந்தாலும் உறுதியாக நிலைக்காது. அதனாலேயே சாவாத கல்வி பயிலத் 'தனித்திருத்தல்' அவசியமென்கிறார் வள்ளலார். அதற்காக காட்டைத்தேடி ஓட அவசியமில்லை, மக்களிடையே வாழ்ந்து, தொண்டாற்றி, அடிக்கடி உள்ளொளி பெருக்க தனித்திருத்தலையே அவர் கூறியுள்ளார்.

'விழித்திரு' என்பது மூன்றாவதாகும். சாவாத நிலை பெற்ற சித்தர்கள் தூக்கமொழிந்தவர்களாய் சதா காலமும் பேரின்பத்தில் ஆழ்ந்திருப்பார்கள். அவர்களும் அரிதுயில் கொள்வதுண்டு. 'தூங்காமல் தூங்கிச்சுகம் பெறுவதெக்காலம்' என்றார் தாயுமானவரும்.

"தூக்கத்தை ஒழித்தால் ஆயுள் பெருகும். மந்தம் அகலும். ஒருவன் ஒருநாளைக்கும் இரண்டரை நாழிகைக்கு தூங்கப் பழகினால் அவன் ஆயிரமாண்டுகள் ஜீவித்திருப்பான். எப்போதும் ஆசானுடைய திருவடியை ஞாபகஞ் செய்து கொண்டிருப்பதே சாகாத கல்விக்கு ஏதுவாகும்" என்கிறார் வள்ளலார். காந்தியடிகள் நாள்தோறும் மூன்று மணி நேரத்திற்கு அதிகமாக தூங்குவதில்லை என்பர் உடன் இருந்து பழகியவர்கள்.

இறைவன் அருள் பெற்று சுத்த சன்மார்க்கியாவதற்கு முன்பு தாமிருந்த நிலையைக் கூறுமிடத்து "தூங்குகின்றதே சுகமென அறிந்தேன்" என்கிறார் வள்ளலார். பின் தெய்வ அருளிற் கலக்கும் எண்ணம் தோன்றிய பிறகு தோழிக்குத் தலைவி கூறும் பாவனையில்,

"தூங்குகநீ என்கின்றாய் தூங்குவனோ எனது
துரைவரும்ஓர் தருணம் இதில் தூக்கமுந்தான் வருமோ
ஈங்கினிநான் தனித்திருக்க வேண்டுவதா தலினால்
என்னுடைய தூக்கமெல்லாம் நின்னுடைய தாக்கி
ஏங்கலறப் புறத்தேபோய்த் தூங்குகநீ தோழி
என்னிருகண் மணிஅணையார் எனையனைத்த உடனே
ஓங்குறவே நான்அவரைக் கலந்தவரும் நானும்
ஒன்றான் பின்னர்உனை எழுப்புகின்றேன் உவந்தே?"

என்று பாடுகின்றார். எப்பொழுதும் விழித்திருக்கும் திறன் ஆண்டவன் அருளால் தான் சிந்திக்கும் என்பதை "தூங்காதே விழித்திருக்கும் சூதறிவித்தெ னையாண்ட துரையே" என்றவரியில் உணர்த்துகின்றார். இறையருளால் பசித்திருந்தும், விழித்திருந்தும் பொன்னுடல் பெற்றகாலை

"தூக்கம் தொலைந்த தென்றுந் தீபற"

என்று பாடுகின்றார்.

தாயுமானவரும் பசித்திரு-தனித்திரு-விழித்திரு எனும் மந்திரங்களைக் கடைப்பிடித்தார். இதனை அவரே வேளை வந்த போது 'கனல்வாதை வந்தெய்தின்' புசிக்கவேண்டும் என்றார்.

**மரணமிலாப் பெருவாழ்வு:**

வள்ளலார் உயிரெலாஞ் சாவாதிருக்க இறைவனை வேண்டினாற் போல தமக்காவும் சாவாத பெருவாழ்வினை வேண்டுகிறார்.

'கற்றதென்றுஞ் சாகாத கல்வியென்றும் கண்டு கொண்டுன்
அற்புத--சிற்றம் பலத்தில் அன்பு வைத்தேன் ஐயாவே!
'வாடலறச் சாகா வரங்கொடுக்கு மென்று மன்றி
ஆடலடிப் பொன்மலர்க்கே அன்பு வைத்தேன் ஐயாவே!

என்றெல்லாம் பல்லாண்டு காலம் அழுதழுது, பலப் பலப் பாக்களைப் பாடிப் பரமனை வேண்டினார். இறுதியில் தாம் இறவாவரம் பெற்றதாகவும் அவரே பாடியுள்ளார்.

.................................... கற்ப கோடியினும்
வயத்தொறா சாகாவரமும் என்தனக்கே
வழங்கிடப் பெற்றனன் மரண
பயத்தை விட்டொழித்தேன் எனக்கிது போதும்
பண்ணிய தவம் பலித்ததுவே"

வடலூர் வள்ளலார் அறிவால் கடவுளை அறிந்து அன்புமயம் ஆனவர் ஜீவன்முக்தர். இறைவனைப் பாடிப் பரவித் தவப்பயனால் உள்ளொளி பெற்றவர் சாகாத நிலையினைப்பெற எண்ணுவோர் பெறுகின்ற கல்வியினைத் தரமறிந்து கற்கவேண்டும். தரமறிந்து சாகாத கல்வியினைக் கற்போர் உண்மைநிலை அறிவதோடு அவர்கள் நற்குலத்தவராகவும் விளங்குகின்றாரென்ற உண்மையை வள்ளலார் விளக்குகின்றார்.

'சாகாத கல்வித் தரமறிதல் வேண்டுமென்னும்
வேகாத காலுணர்தல் வேண்டுமுடன்--சாகாத்
தலையறிதல் வேண்டுந் தனியருளால் உண்மை
நிலையடைதல் வேண்டும் நிலத்து'

என்ற கல்வியைக் கற்கும்போது நரை மூப்பறிய நல்ல உடம்பு பெற்று மக்கள் திகழுவரென்று வற்புறுத்துகிறார்.

மனித சமுதாயம் தனக்குத்தானே செய்து கொண்டுள்ள தீமைகளையும், அமைத்துக் கொண்டுள்ள தடைகளையும் உடைந்து வாழ வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறார். பொழுதும் நாவும் மனமும் சிந்திக்க வேண்டிய பரம்பொருளை, எப்பொழுதாவது ஒருமுறை சிந்தித்துச் சீர்பெறலாமென்ற வாழ்வை

எண்ணிக் கலங்குகின்றார். எனவேதான் பகுத்தறிவுபெற்ற மனிதனை மெதுவாக சிந்திக்க வைத்து அவன் சிந்தனையைச் சிவமயமாக்குவதற்குமுன் அவனுக்கு கல்வி போதிக்கின்றார். அந்தக் கல்வி எழுமையும் ஏமாப்புடைத்தான கல்வியாகும்.

பலமுறை நினைக்கும் பழக்கந்தான் வழக்கமாகிறது. சொற்கள் நாவிலே தழும்பேறவேண்டும். பிறகு நினைத்தலும் சொல்லும் இனிமை தருகிறது. அதைத் தொடர்ந்து பல நிலைகளில் தன் அனுபவத்தை வள்ளல் பெருமான் கூறுகிறார்.

'விண் மாரியெனக் கண்மாரிபெய்யவே சற்றயர்ந்தேன் --தாயுமானார்.

"நினைந்துநினைந் துணர்ந்துணர்ந்து நெகிழ்ந்துநெகிழ்ந் தன்பே
நிறைந்துநிறைந் தூற்றெழுங்கண் ணீரதனா லுடம்
நனைந்துநனைந் தருளமுதே நன்னிதியே ஞான
நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று
வனைந்துவனைந் தேத்தும்நாம் வம்மினுல கியலீர்
மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாங் கண்டீர்
புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியஞ் சொல்கின்றேன்
பொற்சபையிற் சிற்சபையிற் புகுந்தருண மிதுவே"

இதைவிட, சத்தியமாகவும் அழுத்தமாகவும் கூற இயலாது.

மனிதன் சாகாமல் இருக்க முடியுமென்று வள்ளலார் கூறுவதனைத் தத்துவரீதியாகவும் ஏற்றுக்கொள்கிறார். ஏற்பவர் முயன்றால் சாவாமலிருக்கத் தம்மாலும் முடியுமென்று சத்தியம் செய்து கூறுகின்றார்.

பார்மீது நான் சாகாதிருப்பேன் காண்பீர்!
மலிவுகண்டீர் இவ்வுண்மை பொய்கூறேன் யான்
மடிந்தாலும் பொய்கூறேன் மானுடர்க்கே
நலிவுமில்லை சாவுமில்லை! கேளீர், கேளீர்!
நாணத்தைக் கவலையினைச் சினத்தைப் பொய்யை
அச்சத்தை வேட்கைதனை அழித்து விட்டால்
அப்போது சாவுமங்கே அழிந்து போகும்
மிச்சத்தை பின் சொல்வேன்? சினத்தை முன்னம்
வென்றிடுவீர் மேதினியில் மரணமில்லை.

என்று பாடியவர் ஓர் உண்மையை மறந்து பின்னர் நினைவு கூர்ந்தவர்போல

"சாகாமலிருப்பது நம்சது ராலன்று
சக்தியருளாலன்றோ பிறந்தோம் பார்மேல்
பாகான தமிழினிலே பொருளைச் சொல்வேன்
பாரீர்நீர் கேளீரோ, படைத்தான் காப்பான்"

என்று பாடி இறையருள் பெற்றால்தான் மரணத்தை வெல்லமுடியும் என்கிறார்.

இந்த உண்மையை 'சாகாத வித்தைக்கு இலக்கண இலக்கியம் தயை இருந்த பரமே' எனும் வரியில் நமக்கு உணர்த்துகிறார். வள்ளலார் இன்னும் சாகாத

கல்வியே கல்வி என்றும் கூறுகிறார். மனிதன் சாவாமல் வாழ்ந்திருக்க முடியுமென்பதில் அடிகளுக்கு அழுத்தமான நம்பிக்கை யிருந்தது. தாம் சாவா வரம் பெற்றதைப் பலப்பல பாடல்களில் அளிக்கிறார் வள்ளல் பெருமான். இகத்தே, பரத்தைப் பெற்று வாழும் பேற்றினைத் தமக்களித்த அருட்பெருஞ்ஜோதித் தெய்வத்தை மனங்களிந்து நன்றியுணர்வு தோன்றத் தம்மை மறந்து போற்றித் துதிக்கின்றார்.

**மரணத்தை வென்றவர்:**

வாழையடி வாழையென வந்த சித்தர் மரபில் வள்ளலாரும் ஒருவர்-- வள்ளலாரும்

'சித்தர் எனும் நின் அடியார் திருச்சபையில் நடு இருத்துச்
சித்துருவில் வளர்க்கின்றாய் சிற்சபையில் நடிக்கின்றார்"

என்ற வரிகளில், நித்தியதேகம் பெற்று இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கும் சித்தர்கள் மத்தியிலே தாம் இருப்பதாகக் கூறுகின்றார். அவர் சித்துக்கள் புரியும் ஆற்றல் பெற்றிருந்தாரெனினும் அவற்றைச் செய்து காட்டி மக்களுடைய பாராட்டைப் பெற முடியவில்லை. தமக்கு சித்துக்கள் புரியும் ஆற்றலைத்தந்த சிவபெருமான் அவற்றைச் செய்யவேண்டா வென்றும் ஆணையிட்டதாக,

'அட்ட சித்திகளும் நினது ஏவல் செய்யும்
நீயவை அவாவியிடல் என்ற ஒளியே'

என்று கூறுகிறார்.

செத்தாரை எழுப்புந் திறனைத்தாம் பெற்று விட்டதாகவும் அடிகளார் பாடியுள்ளார். இறந்தாரை எழுப்புந்திறனைத்தாம் பெற்று விட்டதாகப் பலப் பாடல்களில் பாடியுள்ளாராயினும் இறந்தவரைத் தாமே எழுப்பித் தருவதாக ஒருபாடலிலும் கூறினாரில்லை. அந்தச் சித்தாடல் புரியும் உரிமை எல்லாம் வல்ல இறைவனுக்குத்தான் உண்டென்றும் கூறியுள்ளார்.

'இறைவர் வருவார், இறந்தாரை எல்லாம் எழுப்புவார்;
வாழ்வாருக் கெல்லாம் இறவாத வரந்தருவார்'

என்று அடிகளார் கூறியது அவர் உள்ளத்திலேயெழுந்த கருணையினாலாகும். 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்றார் தாயுமானவர். அதையே அடிகளார் உள்ளமும் கருதியது.

**மரணமிலாப் பெருவாழ்வு பெற்றவர் அடிகளார்:**

அருட்பாவிலுள்ள அகச் சான்று, வள்ளலார் பூத உடலோடு மறைந்ததனைக் காட்டுகிறது. வள்ளல் பெருமான் எதனாலும் அழியாத அருளுடலைப் பெற்றவரென்று நமக்கு அறிவிக்கின்றது. திருவருட்பா,

'காற்றாலே புவியாலே ககனமத னாலே
கானலாலே புனலாலே கதிராதி யாலே
கூற்றாலே பிணியாலே கொலைக்கருவி யாலே
கோளாலே பிறஇயற்றும் கொடுஞ்செயல் களாலே
வேற்றாலே எஞ்ஞான்றும் அழியாதே விளங்கும்
மெய்யளிக்க வேண்டுமென்றேன் விசைந்தளித்தான் எனக்கே'

'மரணமிலாப் பெருவாழ்வு' என்பதனை பேரானந்த நித்திரை என்றும் கூறுவர்.

**செய்ய வேண்டியவைகள் - வழிகள்:**

1. மக்களெல்லாம் சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தில் அங்கத்தினர்களாக வேண்டும்.

2. சாதி சமய பேதங்களைத் தவிர்க்க வேண்டும்.

3. ஜீவகாருண்ய ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து ஏழைமக்களின் பசியைப் போக்க வேண்டும்.

4. வழிபாடு நடத்துதல் இன்றியமையாதது.

5. தெய்வம் உண்டென்று நம்பி, அதுவும் ஒன்றென்று தெளிந்து ஆன்மநேய ஒருமைப் பாட்டுணர்வுடன் உலகிலுள்ளோர் அனைவரும் ஒன்றுபடவேண்டும்.

இந்தக் கொள்கைகளெல்லாம் நிறைவேறி சுத்த சன்மார்க்க சமுதாயமும் உருவாகுமானால், அந்த சமுதாயத்திலே அருட் பெருஞ் ஜோதி ஆண்டவன் வருவான். செத்தாரை எல்லாம் எழுப்புவான். வாழ்வாருக்கும் சாவா வரம் தருவான் என்று கூறியுள்ளார். மரணமிலாப் பெருவாழ்வினைத்தரும் திறன், இந்து மதத்திற்கு மட்டுமே உரியதென்கிறார்.

"இந்து வேதாகமங்களில் மாத்திரந்தான் ஏமசித்தி, ஞானசித்தி முதலிய சித்திகளைச் சொல்லியிருக்கிறது. மற்ற எல்லாச் சமயங்களிலும் மேற்படி சித்திகளையும் சாவாத கல்வியையும் சொல்லவில்லை. ஒருவேளை அப்படியிருக்கிறதாகக் காணப்படுமாகில், அது இந்து வேதாகமங்களில் சொல்லியிருப்பதன் ஏகதேசங்களென்பது உண்மை.

அடிகள் சமய மதங்களைக் கடந்தவர் எனினும் இந்து மதத்திலுள்ள சிறப்புக்களை நடுநிலையில் நின்று எடுத்துரைக்க தயங்கவில்லை.

தமிழ் மறையாகிய திருக்குறளிலும் சாவாத கல்வியைப் பற்றிச் சொல்லியிருப்பதாகக் கூறுகின்றார். வள்ளுவர் குறள் முதல் அதிகாரத்தில் சாகாத கல்வியைக் குறித்துச் சொல்லியிருக்கின்றது. அதைத் தக்க ஆசிரியர் மூலமாய்த் தெரிந்து கொள்ள வேண்டும். இது வள்ளலாரின் உபதேச மொழி,

"மலர்மிசை ஏகினாள் மானடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்."

"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்"

என்ற குறட்பாக்களில் ஒவ்வொரு குறளின் இறுதியில் வந்துள்ள 'நீடுவாழ்வார்' என்பதற்கு 'இறவாமல் நித்திய தேகத்துடன் என்றென்றும் வாழ்வார்' என்று வள்ளலார் பொருள் கொள்கிறார்.

மனிதன் சாவாமல் வாழமுடியும் என்று தாம் நம்பியதோடு, மக்களையும் நம்ப வைக்க அடிகள் முயன்றார். இறந்தார்க்கு ஏங்கி அழும் மக்களைப் பார்த்து

"இறந்தவரை எடுத்திடும்போது அரற்றுகின்றீர் உலகீர்
இறவாத பெரும் வரம்நீர் ஏன்அடைய மாட்டீர்"

என்று அன்புக்குரலில் அறிவுரை கூறுகின்றார்.

"உற்றமொழி உரைக்கின்றேன் ஒருமையினால் உமக்கே
உறவன்றிப் பகைவன்என உன்னாதீர் உலகீர்
கற்றவரும் கல்லாரும் அழிந்திடக்காண் கின்றீர்
கரகணம் எல்லாம் கலங்கிவரும் மரணமும்சம் மதமோ
சற்றும் இதைச் சம்மதியா தென்மனந்தான் உமது
தன்மனந்தான் கன்மனமோ வன்மனமோ அறியேன்
இற்றிதனைத் தடுத்திடலாம் என்னோடும்சேர்ந் திடுமின்
என்மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கந் தானே"

மேலும் அவர் கற்ற கல்வியைப் பற்றி,

கற்றேன்சிற் றம்பலக் கல்வியைக் கற்றுக் கருணைநெறி
உற்றேன்எக் காலமும் சாகாமல் ஓங்கும் ஒளிவடிவம்
பெற்றேன் உயர்நிலை பெற்றேன் உலகினில் பிறநிலையைப்
பற்றேன் சிவானந்தப் பற்றேஎன் பற்றெனப் பற்றினனே.

தாம் சாவாவரம் பெற்றதைப் பலப்பல பாடல்களால் அறிவிக்கின்றார் அடிகளார். இகத்தே பரத்தைப் பெற்று வாழும் பேற்றினைத் தமக்களித்த அருட்பெருஞ்சோதித் தெய்வத்தை மனங்கனிந்து நன்றியுணர்வு தோன்ற தம்மை மறந்து போற்றித் துதிக்கின்றார்.

அடிகள், இறந்தாரை யெழுப்புந்திறனைத்தாம் பெற்று விட்டதாகப் பலப்பல பாடல்களில் பாடியுள்ளாராயினும், இறந்தவரைத் தானே எழுப்பித்தருவதாக ஒரு பாடலிலும் கூறினாரில்லை. அந்தச் சித்தாடல் புரியும் உரிமை, எல்லாம் வல்ல இறைவனுக்குத்தான் உண்டென்றும் கூறியுள்ளார். திறமை பெறுவது வேறு; உரிமை பெறுவது வேறுதான்.

"செத்தாரை எல்லாம் திரும்ப எழுப்புதல் இங்கு
எத்தால் முடியும் எனில் எம்மவரே.....சித்தாம்
அருட்பெருஞ்சோதி அதனால் முடியும்
தெருட்பெருஞ் சத்தியம் ஈதே!"

என்கிறார்.

# 14. THE CONCEPT OF RAMALINGAR'S 'IMMORTALITY'

--L.R. LAKSHMI NARAYANAN

In a world of cunning, self-seekers and militant progressmongers, the philosophy of Saint Ramalinga may have little significance. In a world where money-making has become a major human activity, the philosophy of Saint Ramalinga may look vague. The modern literary world has witnessed ever so many philosophies from East and West. The problem of man's life after death is an searching question which has been taken up, discussed and analysed at length by every philosophy in the world. The most predominant thought in every philosophy is that man's life in this mundane, money-mad world is a trial or a probation for him to pass through the crucial divine ordeal. Very great world thinkers have mooted out new ideas and promulgated new concepts in accordance with their cultural heritage of the land. The philosophy of West is intensely analytical in its approach and attitude towards the problems of life. The philosophy of East tries to unify all interacting forces and contradictions in life. Our philosophy has taught us that this world is unreal and that the life we lead in this world is going to be short lived. It is the ephemerality of human life; a very unique idea stressed by Indian Philosophers. Our understanding of Saint Ramalinga will be very clear if we try to know something about the background of the Indian philosophy. Because the philosophy of Saint Ramalinga is in his own way a violent devistion, and departure from them.

The problem of man's life after death caused. Ramalinga to reexamine his views on life. He never went to a particular religion in order to find out an adequate answer. The long and neverending Quest for finding out answer lay according to him in the liberation of man from the bondage of religion, narrow faiths and creeds. The uniqueness and special significance of Ramalinga lay in his sincere attempt to evolve a new thinking and a new way of looking at life. All of us are born in this world and all of us die at sometime or later. This is an ordinary Phenomenon. The mere physical existence of man without any ideal and purpose cannot be called 'life'. In such a case of mere physical existence there is no difference between a stone and a man. Man is superior to stone, because he has a soul in him which can evolve into higher stature. To Saint Ramalinga Death is not a possible happening. If one is very careful, in his observance of certain principles, one can avoide it. Death is no longer to him a kind of physical disintegration and decomposition of the human system. Saint Ramalinga is the one and only philosopher who has taught us to attain immortality with the body. It is an idea which has to be grasped in association with various other concepts of Ramalinga. Saint Ramalinga believed that an empty stomach does not conduce the mind to think "You can not talk of God to a starving person, you must give him food" so

said Gandhiji. Karl Marx said that Starvation in France broke into Revolution. Saint Thirumoolar has also emphasized this point very strongly.

> உடம்பா ரழியின் உயிரா ரழிவர்
> திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
> உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
> உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே.

If the physical body starves, the soul loses its strength. A deliberately prolonged state of starvation will not take us to heights of self-knowledge and God-realization. The secret of attaining God realization lay therefore not in starvation. With the help of Thirumoolar and Ramalinga, we understand that body is not a bad thing though they have seen the fast-fleeting. Human system is therefore a conditional requirement for the attainment of divine sublimation. Saint Ramalinga never visualized a strange kind of dichotomy between body and soul. They live in simultaneous co-existence. Man is after all, according to Ramalinga a speark from the divine. The long and elaborate process of the unification of man with the divine is the purpose of man, which is in no other words the attainment of immortality. This is the essence of Ramalinga's philosophy. The simultaneous duality of human existence is no longer an instance of witticism to Saint Ramalinga, for he never visualized and envisaged duality in human existence. Body and soul are no two separate departments according to Ramalinga. They are one and the same. Saint Ramalinga was a greater revolutionary philosopher. Because he never saw a distinction between body and soul. The crucial tenor of his thinking is that body and soul may be distinguished logically but not really.

It is very difficult to attempt at a rational of human existence. There are certain things in the life of man which go beyond his thinking and powers of comprehension. To most of the people, the attainment of immortality may look like a myth. The life of Ramalinga is a true comment on the attainment of immortality. The life of Ramalinga itself is a monumental example of his own enunciation of his own philosophy. The greatness and uniqueness in Ramalinga lies in the harmony between his doctorine and dedication, precept and performance, aspiration and achievement, profession and practice.

Mathew Arnold, a very great Victorian poet in his Scholar Gypsy says, "thou has not lived, thou has not perished". It is very meaningful sentence which has to be examined with very great tact and care. Scholar Gypsy lived in this world with a supreme purpose which justified his existence because of his single-minded devotion towards the divine spark. Jesus Christ was crucified on the cross. But the ideas of Jesus Christ were not crucified on the cross. Christ still lives in the form of his ideas and principles. These two examples lend support and also credibility to Ramalinga's concept of the attainment of immortality. There are three stages in his concept of the attainment of immortality. According to him the human body is a manifestation of several

impurities. The attainment of immortality is a process of transformation of the impurity into purity. The second stage is visualized in a change from body into Gold and light. The third stage is embodied in the change from body into knowledge and wisdom. Liberation from the bondage of religion, following and practicing good conduct (sanmarg) in life, compassion for all the beings in the world; they are the essential requirements for the attainment of immortality.

His own Lord was the great tutor who intiated and introduced Ramalinga into immortality. Ramalinga attained self-realization when the Lord showed him the stage of immortality. Therefore the art of immortality is a pathway to God realization. Saint Ramalinga's concept of immortality is not a mere philosophy. It is not a mere faith. It is a way of life. It is a mystic state of experience. T. S. Eliot, a modern poet and a mystic exposed the vulgarity of the modern civilization in his famous poem called the "Waste Land". For all the modern life and nagging problems Eilot seeks an answer for the purification of man through fire. Ramalinga believed that man was composed of even so many elements. The stage and the way to immortality lay in man's attempt to shed every bad element and transfigure himself into Divine Light.

What is important in the demonstration of Ramalinga's concept of immortality in his life, is not the end he points out, but the way he has shown towards the art of immortality. Immortality cannot be measured in quantities, but it can be measured in relation to the amount and the extent of the degree of self-knowledge and the height of self-realization. Man can rise to and arrive at.

# 15. வள்ளலார் காட்டும் சன்மார்க்க நெறி

--சுப. அண்ணாமலை

"படித்தாலும், படிக்கப் பக்கம் நின்று கேட்டாலும்", செவிக்குத் தேன் என, தீங்கரும்பின் சாறெனத் தித்தித்து, ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கி, இறைஞானத்தை எளிதாக வழங்கும் திருவருட்பா என்னும் கவிதைப் பேரிலக்கியம் இருபதான் நூற்றாண்டுத் தமிழிலக்கியத்தின் முன்னோடியாகும். பலரும் நினைப்பதைப்போல், திருவருட்பா ஒரு தோத்திரநூல் மட்டும் அல்ல; அது ஒரு வாழ்வியல் நூல். மனிதனின் வாழ்வியலைத் தூய்மைப் படுத்தி அவனது மனிதத் தரத்தை உயர்த்தி, உணர்வும் ஆற்றலும் இப்பொழுது இருப்பதைக் காட்டிலும் மிகுதியாக வளர்ந்த மா மனிதனைப் (Superman) படிப்படியாக உருவாக்கும் வழியை எல்லோரும் புரிந்து கொண்டு, நடைமுறையில் பின்பற்றும்படி எடுத்துச் சொல்லும் பெருநூல் திருவருட்பா. தமிழ் இலக்கியம், வரலாறு அறிய, இரண்டாயிரம் ஆண்டுகளாக வளர்ந்து, நம் நாட்டில் நிலவச் செய்த கவிதையின் முழுவளர்ச்சியைத் திருவருட்பாவில் காண்கின்றோம். திருவருட்பாவைப் போல நீரோட்டமாகப் பெருகிவரும் கவிதைப் பெருக்கை, முன்னைய தமிழிலக்கியத்தில் காணமுடியவில்லை. அருட்சோதி வள்ளலார், குறைவிலா நிறைவாய், கோத அமுதாய், ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றாய், சிறை பெறா நீர்போல், சிந்தை வாய்ப்பாயும் திருவருள் வெள்ளத்தில் மூழ்கித் திளைத்து, அந்த இன்ப நினைவை எல்லாம், அப்போது பெற்ற ஞானத்தை எல்லாம், சிந்தனையில் தெளிந்த தெளிவை எல்லாம், கவிமழையாகப் பொழிந்தார். ஆதலால், அருள்வெள்ளம் தமிழ்வெள்ளமாகப் பெருகுகின்றது.

திருவருட்பாவின் கவிதை எத்தனை எத்தனையோ புது இலக்கிய மரபுகளைத் தமிழுக்குத் தருகின்றது. சொல்லழகும் அணிநயங்களும், நடைநலமும், எடுத்துச் சொல்லும் முறையும் திருவருட்பாவில் புதுமையாகவும், திருத்தும் ஆற்றலுடனும் விளங்குகின்றன. படித்தால் மனமாற்றத்தை உண்டாக்கிவிடும் உயிரோட்டம் உள்ள பேரிலக்கியம், அது. அதன் உயிர்நாடியாக விளங்குவது, அது வழங்கும் வாழ்வியல் நெறியே ஆகும்.

திருவருட்பா தனது முடிவான நோக்கினால், தெய்வப் புலவரின் திருக்குறளையும் கண்ணன் அருளிய கீதையையும், முனிவர்கள் உரையாடிய உபநிடதங்களையும் ஒத்து விளங்குகின்றது. ஆனால் உயிரோட்டத்தாலும், இலக்கியத் தன்மையாலும், உணர்வுப் பெருக்காலும், இன்றைய இருபதாம் நூற்றாண்டு மக்களின் இதயத்தை, அது எதிரொலிக்கின்றது. இன்று மக்கள் இனத்தையே எதிர்நோக்கும் மாபெரும் சிக்கலுக்கு--கேள்விக்குறிக்கு--திருவருட்பா விடை சொல்லுகின்றது. வெறும் தத்துவமாக வாய் வேதாந்தமாக அல்ல; நடைமுறைக்கு ஏற்ற விடையைச் சொல்லுகின்றது. சமயம், தத்துவம், இவற்றுக்குள்ளேயே புதைந்து போய்விடாமல், பரந்த உலகத்தில் மக்களிடையே நின்று கொண்டு, சமூகம், பொருளாதாரம், வாழ்க்கையில் உள்ள மேடுபள்ளங்கள், துயரங்கள், மக்களுக்கு மக்களே செய்யும் கொடுமைகள், ஆணவம் பிடித்தோரின் வெறியாட்டங்கள், பல்லாண்டுக்காலமாக வேரூன்றிவிட்ட சாதி, குலம் போன்ற அமைப்புக்கள்--இவற்றை எல்லாம் சிந்தித்து, வாழ்க்கை முழுவதையும் கருத்தில் கொண்டு, துயரங்களிலிருந்து, மனிதகுலம் முழுவதுமே விடுதலை பெறத்

திருவருட்பா வழிகாட்டுகின்றது. பல அமைப்புகளை பல நெறிகளைக் கண்டு, வாழ்ந்து, சலிந்து, முழுப்பயன் காணாமல், இன்னும் துன்பத்தில் மூழ்கிக் கிடக்கும் உலகத்திற்கு, சலிப்புத்தோணாமல், நடந்து, முன்னேறி, பகையின்றி, பூசலின்றி, போரின்றி, பண்புடன் வாழவும், கூர்தல் அறத்தின் படி (evolution) மாமனிதராக உயர்வு பெறவும் ஒரு புதுவழியை இங்கேயே, இவ்வுலகத்திலேயே நன்மையை அளிக்கும் வழியை ஒரு புது உலகம் பிறக்கும் வழியை--திருவருட்பா காட்டுகின்றது.

அந்தப் புதுவழி தான் 'சுத்தசன்மார்க்கம்'. இதற்கு வள்ளலார் வழங்கிய முழுப்பெயர் "ஷடாந்த சமரச சுத்த சிவ சன்மார்க்கம்" என்பது. யாவருக்கும் விளங்கும் வகையில், இதனைப் "பொது நெறி", "அருள் நெறி", "ஒளிநெறி" என்றும் அவர் வழங்குகின்றார். இந்த நெறியில் அவர் வாழ்ந்தார். அந்த வாழ்வின் அனுபவத்தை--உணர்வை--அறிவுத்தெளிவை, அருளோடு குழைத்துக் கருணையோடு தருகின்றார். "ஆருயிருக் கெல்லாம் நான் அன்பு செய வேண்டும்" என்று இறைவனிடம் வரங்கேட்டவரல்லவா வள்ளலார்?

பெரியோர்கள் மக்களுக்குக் காட்டும் நெறி ஒவ்வொன்றும் அந்த மக்கள் வாழும் காலம், இடம், அவர்களின் கருத்து, மனநிலை ஆகியவற்றோடு மிகவும் பொருந்தியிருக்கும். மக்கள் சமுதாயத்தின் முன்நிற்கும் சிக்கல்களை நீக்கி, அவர்கள் உயர்வு அடைவதற்கு உதவும் நெறியாக இருக்கும். நடந்து முடிந்த காலங்களில் நல்ல பயனைத் தந்த ஒரு கொள்கை அல்லது சித்தாந்தம், காலப் போக்கில் தன் வலிமையை இழக்கின்றது. மக்களின் வாழ்க்கைப் பழக்க வழக்கங்களுக்கும் மனப்போக்கிற்கும் ஏற்பவும் அவர்கள் சந்திக்கும் சிக்கல்களுக்குத் தீர்வு காணக்கூடிய வகையிலும் வாழ்க்கைச் சித்தாந்தம் புத்துயிரும் புது வலிமையும் பெற்றாக வேண்டும். அவ்வாறு பெற்றால்தான் அந்தச் சித்தாந்தம் மக்களுக்குப் பயன்படும். அவ்வப்போது மக்களிடையே தோன்றும் பெரியோர்கள், தமது மனவலிமையாலும், அறிவாற்றலாலும், மக்களிடம் கொண்ட கருணையாலும், மக்களின் வாழ்க்கைச் சித்தாந்தத்தில் தேவையான மாறுதல்களைச் செய்து, அவர்கள் அதைப் புரிந்து கொண்டு, ஏற்று, நடக்குமாறு செய்கின்றார்கள். அதனால் அந்தச் சித்தாந்தத்தில் தேக்கம் உண்டாகாமல், உயிரோட்டம் உண்டாகின்றது. அது வெறும் கருத்துப்பொருளாக அல்லது பேச்சுப் பொருளாக இல்லாமல் நடைமுறை வாழ்க்கைக்குப் பொருந்தி வரும் வாழ்வியல் நெறியாகின்றது.

புத்தரும், மகாவீரரும், ஞானசம்பந்தரும், உடையவர் இராமானுஜரும், மாத்வரும், சங்கர பகவத்பாதரும், கிருஷ்ண சைதன்யரும், ராஜாராம் மோகன்ராயும், பகவான் இராமகிருஷ்ணரும், இராமலிங்க வள்ளலாரும், நமது நாட்டில் வெவ்வேறு காலங்களில் தோன்றிய பெரியோர்கள். அவர்கள் நம் நாட்டில் அவ்வப்போது நிலவி, தேக்கம் அடைந்துவிட்ட வாழ்வியல் கொள்கைகளை, தம்முடைய வாழ்க்கை என்னும் உலைக் களத்தில் இட்டு, அனுபவம், ஞானம் ஆகிய பெருந்தீயினால் புடமிட்டு, புது மெருகும், புத்தொளியும் புத்துயிரும் கொடுத்து மக்களிடம் பரப்பினார்கள். இவர்களின் தொண்டினால் இந்தியா அவ்வக்காலங்களில் விழிப்படைந்தது. மறுமலர்ச்சி பெற்றது. இந்தியாவில் நடைபெற்றதைப்போல், மற்ற நாடுகளிலும் பெரியோர்கள் தோன்றி மக்களுக்கு வழிகாட்டி வந்துள்ளார்கள். கிரேக்கப் பெருநாட்டில் தோன்றிய சாக்ரடீஸ், பிளேட்டோ, அரிஸ்டாடில், பிதகோரஸ், உரோம நாட்டுப் பெரும் புலவர் வர்ஜில் முதலியோரின் சிந்தனைகள் தாம், மேலைநாட்டு வாழ்வியல் சித்தாந்தத்திற்கு அடிப்படை. மத்திய ஆசியாவில், யூதர் இனத்தில் தோன்றிய ஏசுநாதர் மேலைநாட்டுச் சமயவாழ்விற்குப் புதுமலர்ச்சி

கொடுத்தார். பழைய நம்பிக்கைகளை மாற்றி, மக்களின் மனத்தையும் வாழ்வையும் தூய்மைப்படுத்தும் புதுச்சித்தாந்தத்தை - புது வாழ்வியல் நெறியை - தமது அன்புத் தொண்டினாலும் வாய்மொழி உபதேசத்தாலும் பரப்பினார். அராபிய நாட்டில் தோன்றிய நபிகள் நாயகம், பல தெய்வ வழிபாடுகளால், தனித்தனிக் கூட்டமாகச் சிதறிக் கிடந்த மக்களை ஒரு தெய்வ வழிபாட்டின் கீழ் ஒன்றுபடுத்திச் சமத்துவம், சகோதரத்துவம் என்ற புது வாழ்க்கைக் கொள்கைகளை அராபிய மக்கள் ஏற்றுக் கொள்ளுமாறு செய்தார். சமயத்துறையில் இப்பெரியோர்கள் மக்களுக்கு வழிகாட்டிகளாக விளங்கியதைப்போல, சமூக, பொருளாதார, அரசியல் துறைகளிலும் அறிஞர்கள், காலந்தோறும் தத்தம் நாட்டுச் சூழ்நிலைகளுக்கும், மக்களின் வாழ்க்கைச் சிக்கல்களுக்கும் ஏற்ப, மரபான சிந்தனைகளில் மாற்றம் செய்தும், புதுச் சித்தாந்தங்களை எடுத்துக்கூறியும் மக்களுக்குப் பெருநன்மை செய்துள்ளனர்.

வள்ளலார் இப்பெருயோர்களைப் போலத் தனித்துறைகளைத் தேர்ந்தெடுக்காமல் நாம் முன்னே கூறியதுபோல், உலக மனித இனத்தின் வாழ்வு முழுவதையும் கருத்திற்கொண்டு, அவ்வாழ்வை ஆட்டிப்படைக்கும் மனத்தை உயர்த்துவதற்கான பொதுநெறியைத் தந்துள்ளார். ஆங்கிலேயரின் ஆட்சியில், 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் இந்தியா புதுவிழிப்பும் மறுமலர்ச்சியும் பெறத் தொடங்கிய காலத்தில் வாழ்ந்த இராஜராம் மோகன்ராய், தயானந்த சரஸ்வதி, பகவான் இராமகிருஷ்ணர் ஆகிய பெரியோர்கள் காட்டிய வாழ்வியல் நெறிகளுடன் ஒப்புநோக்கி மதிப்பிடத்தக்கது. அதேகாலத்தில் வாழ்ந்த வள்ளலார் காட்டிய சன்மார்க்க நெறி.

பெரியோர்களும் அறிஞர்களும் காட்டும் நெறிகள் இரண்டு வகைப்படும். ஒன்று குறிப்பிட்ட ஒரு நாடு, அல்லது ஒரு பகுதி மக்கள் பின்பற்றக்கூடிய வழி. மற்றொன்று உலக மக்கள் அனைவரும் பின்பற்றக்கூடிய வழி. இரண்டாவதாகக் கூறியதைப் பொது நெறி (Universal Path) என்று குறிப்பிடுவார்கள். இராமலிங்க வள்ளலார் மக்களுக்கு அளிக்கும் நெறியும் இத்தகைய பொதுநெறி ஆகும். திருவள்ளுவரும், இளங்கோவடிகளும், கம்பரும் ஓர் இனம் ஒரு நாடு ஆகியவற்றோடு தங்கள் சிந்தனையை நிறுத்திக் கொள்ளாமல், பொதுவாக மனித இனம், தனக்கு உரிய மனிதப் பண்புகளால் வளர்ச்சி பெற, தத்தம் போக்கில் சிந்தனை செய்து ஒவ்வொரு வகையில் நூல்களைப் பாடினார். திருவள்ளுவர் அறநூல் செய்தார். மற்ற இருவரும் காப்பியம் செய்தார்கள். ஆயினும், மூவருமே மனித வளர்ச்சிக்கு, மானுடத்தின் உயர்விற்கு எனச் சிந்தித்த மனித இயல் அறிஞர்கள் (Humanists) என்று கூறலாம். அவர்களின் சிந்தனையில், சமயமோ, தத்துவமோ, உலகியலோ, அரசியலோ, சமுதாய இயலோ, சாதி, இனப் பிரிவுகளோ தனி முக்கியத்துவம் பெறவில்லை. இவற்றுள் ஒவ்வொன்றும் மற்றவற்றுடன் தொடர்பு இல்லாமல் தனித்து இருக்கக்கூடும் என்று அவர்கள் எண்ணவில்லை. இவைகள் எல்லாம் கலந்த மனித வாழ்விற்கும் இவைகளால் வளர்ந்தோ, தேய்ந்தோ வரும் மனிதப்பண்புகளுக்குமே அவர்கள் முக்கியத்துவம் கொடுத்தார்கள். மனித வளர்ச்சியே அவர்களின் நோக்கமாகத் திகழ்ந்தது. அவர்களின் வழியில் வந்தவர் இராமலிங்க வள்ளலார். அவர்களைக் காட்டிலும் மிக வளர்ந்த மனித இயல் கவிஞராக விளங்குகின்றார். அவர் ஒரு புதுவகை மனிதவியல் கவிஞர். இருபதாம் நூற்றாண்டில் வந்த பெர்ட்ரண்ட் ரஸ்ஸலைப் போல பெர்னார்டு ஷாவைப் போல வள்ளலார் மனிதவியலை, உலகியல் என்னும் அளவோடு நிறுத்திக் கொள்ளவில்லை; அவர்களைப் போல ஆன்மீகம் பற்றிய செய்திகளை ஐயத்துடன் நோக்கவில்லை;

மனித இயலில் ஆன்மீகம் என்னும் ஒரு பக்கமும் உண்டு; அதுதான் வாழ்விற்கு அடிப்படை; வாழ்வை உயர்த்துவது? அதுவும் உலகியலுடன் தோளோடுதோள் இணைந்து வளர்வதே மனித வளர்ச்சியைக் காட்டும் என்று கொண்டவர் வள்ளலார். ஆனால் பழங்காலத்து முனிவர்களைப் போல், யோகிகளைப்போல், சித்தர்களைப்போல் வள்ளலார் ஆன்மீகத்திலேயே மூழ்கி, உலகத்தைக் கண்திறந்து பார்க்காமல் இருந்தவரும் அல்லர். வள்ளலாரின் தனிச் சிறப்பே, உலகியலையும் ஆன்மீகத்தையும் (Materialism and Spiritualism) அவர் இணைத்த முறைதான். அந்த முறையால் உலகியல், ஆன்மீகம் இரண்டிலுமே அவர் காலத்திற்கு முன்பு உண்டாகியிருந்த தேக்க நிலையை அவர் நீக்கினார். அவை இரண்டிற்குமே புதுமெருகும், புத்துயிரும், புதுமலர்ச்சியும் அளித்தார். அவை இரண்டையும் இணைத்து ஒரு நடைமுறை வாழ்வை (Practical life) --பின்பற்றுவதற்கு எளிய வாழ்வை--வகுத்து மக்களுக்கு வழங்கினார். அவ்வாழ்விற்கு இரக்கமே அடிப்படையாக அமைகின்றது. இரக்கம் இயற்கை உணர்ச்சி அன்றோ? துன்பத்தைக் கண்டபோது இயற்கையாக ஒருவருக்கு இரக்கம் தோன்றுமன்றோ? உலகில் தோன்றிய மக்கள் தொண்டர் அனைவரும், இரக்க உணர்ச்சியினால் தான் தத்தமக்கு முடிந்த வகையில் மக்களுக்குத் தொண்டாற்றினர். இந்த வகையில் உயர்ந்த உலகியல் வாழ்விற்கு தூண்டுகோல் உணர்வாக உள்ள இரக்கம் தான் ஆன்மீகத்திற்கும் அடிப்படை என்று கூறுகின்றார் வள்ளலார். ஆன்மீகம் என்பது ஒரு பேச்சு அல்ல; அது ஒரு மன வளர்ச்சி; ஒரு புது உணர்வு நிலை. அது தோன்ற வேண்டுமானால் மனிதனிடம் முதலில் இரக்கம் வளர வேண்டும் என்கிறார் வள்ளலார். தத்துவ விசாரணை செய்வது மட்டும் அல்லது தோத்திரப் பாடல்களைப் பாடுவது மட்டும் ஆன்மீகத்தை உண்டாக்கி விடாது. ஜீவராசிகள் எல்லாம் சகோதரர்கள் என்ற உண்மையை அறிந்து கொண்டு, சகோதரர்கள் அன்பு காட்டுவதற்கு உரியவர்கள் ஆகையால் எல்லா ஜீவராசிகளிடத்தும் இரக்கம் காட்டும் மனிதனிடத்தில் தான் உண்மையில் ஆன்மீகம் தோன்றி வளர வாய்ப்பு உண்டு. இறைவனையும் நினைத்து, ஜீவராசிகளின் மேல் இயற்கையாக இரக்கம் காட்டி உருகிவிடும் ஒருவனிடம் தான் கடவுள் விளக்கம் உண்டாகும் என்கிறார் வள்ளலார்.

"எங்கே கருணை இயற்கையின் உள்ளன
அங்கே விளங்கிய அருட்பெருஞ் சிவமே
ஆரே என்னினும் இரங்குகின் றார்க்குச்
சீரே அளிக்கும் சிதம்பர சிவமே
கொல்லா நெறியே குருஅருள் நெறியெனப்
பல்கால் எனக்குப் பகர்ந்த மெய்ச்சிவமே
உயிரெல்லாம் பொதுவின் உளம்பட நோக்குக
செயிரெலாம் விடுகஎனச் செப்பிய சிவமே"

என்பது வள்ளலார் அருட்பெருஞ்சோதி அகவலில் அருளிய வாக்கு. எங்கும் இருப்பது தான் இறைவனின் இலக்கணம் என்றால் அவன் எல்லா உயிர்களிடத்திலும் இருப்பதில் ஐயமில்லை. எல்லா உயிர்களிடத்திலும் அவன் மறைந்து இருக்கின்றான். ஒருவனுக்கு இரக்கம் தோன்றும் போது அவ்விரக்கத்தில் இறைவனை உணர முடியும். ஒருவன் இரக்கத்தால் மற்றொருவனுடைய துன்பத்தை நீக்கி மகிழ்ச்சியை உண்டாக்கினால் அந்த இருவரின் உணர்ச்சியிலும் ஓர் ஒருமைப்பாடு தோன்றும்; அவ் ஒருமைப்பாட்டில் இறைவனை உணர முடியும். ஒருவன் தன் உயிரில் மறைந்து நிற்கும் இறைவனை உணர்வது தான் ஆன்மீகம். ஆதலால் ஆன்மீகத்திற்கு வழிகோலுவது இரக்கமே ஆகும். "ஜீவகாருண்யத்தால்

தான் சிவ காருண்யத்தைப் பெறமுடியும்" என்பது வள்ளலார் வாக்கு. ஜீவகாருண்யம் என்பது மக்கள்காட்டும் கருணை. சிவனுடைய காருண்யம் என்பது இறைவனது அருள். இவை இரண்டும் அளவில் தான் வேறுபட்டவை. தன்மையால் இவை ஒன்றே. இறைவனது அருளைப் பெற்றால் தான் அவனிடம் நமக்கு அன்பு உண்டாகுமா இல்லையானால் விதாரண உலகியலில் நான் அதாவது நமது சாதாரண ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ளும் உலகியலில்தான் விருப்பம் தோன்றிக்கொண்டே இருக்கும் என்கிறார் வள்ளலார். இறைவனிடத்தில் அன்பு தோன்றி வளர்தே ஆன்மீகம். இந்த அன்பு வளர வளர இறைவனது அருளையும் மிகுதியாகப் பெறலாம். அந்த அருளால் மனிதனுக்கு உணர்வும் அறிவும் ஆற்றலும் வளரும். அவற்றால் உயிர்களுக்குப் -- பெருந்தொண்டு செய்யலாம். அவ்வாறு செய்தால் பின்னும் இறையருளைப் பெறலாம். இவ்வாறு இரக்கம் தழுவிய உலகியலால் மக்கட் சேவையால் உயிர்ப்பணியால் -- ஆன்மீகமும், ஆன்மீகத்தால் உயிர்ப்பணியும் வளரும் என்ற பேருண்மையை வள்ளலார் தம் சொந்த அனுபவத்தால் கண்டு அறிந்து, மக்களுக்கு எடுத்துரைத்தார். உலகியலில் உயர்ந்தது மக்கள் தொண்டு; உயிர்களைப் பாதுகாத்தல், உயிர்களை மதித்தல் (Reverence for life) என்ற புதுத் தொடரையே உருவாக்கினார் ஆல்பர்ட் ஸ்வைட்ஸர். நம் இராமலிங்க வள்ளலார்,

"அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்க்கு எல்லாம் நான்அன்பு செயல்" என்றும்,

"உள்நாடி உயிர்கள்உறும் துயர் தவிர்த்தல் வேண்டும்" என்றும்,

"எனையடைந்தார் சுகம் வாய்ந்திடல் வேண்டும்
எவ்வுயிரும் இன்பமடைதல் வேண்டும்" என்றும்,

"எச்சார்பும் ஆகி உயிர்க்கு இதம் புரிதல் வேண்டும்"

என்றும் பாடுகின்றார். வள்ளலார் இரக்கமே வடிவாய்ப் பிறந்தவர். தமது பன்னிரெண்டாம் வயதிலேயே, தம்மைச் சுற்றிலும் உள்ள மக்கள், படும் வறுமைத் துன்பத்தையும், பலவகை நோய்களால் படும் வேதனைகளையும் பசியால் எழும் கூக்குரல்களையும், எளியவர்களை வலியவர்களும் மேட்டுக் குடியினரும் வதைப்பதையும் கண்டு கண்டு நொந்து கண்ணீர் விட்டார். அந்தச் சிறுவயதிலும் தமக்கென்று ஓர் ஆசையும் அவருக்கு இருந்ததில்லை.

"அறிவது இல்லாத சிறுபருவத்தும்
அடுத்தவர் கொடுத்த காசு அவர்மேல்
எறிவதும் மேட்டில் எறிந்ததும்
எனக்குள் இருக்கின்ற நீஅறிந் ததுவே"

என்றும்,

"கிளைத்த இவ்வுடம்பில் ஆசை எவ்வளவும்
கிளைத்திலேன் பசியற உணவு
திளைத்திடுந்தோறும் வெறுப்பொடும் உண்டேன்"

என்றும், தம்மைப் பற்றி அவர் கூறுகின்றார். அவருக்கு இருந்த ஆசை என்ன என்பதைக் கூறுகின்றார்.

"கருணையே வடிவாய்ப் பிறர்களுக் கடுத்த
கடும்துயர், அச்சன் ஆதிகளைத்
தருணம்நின் அருளால் தவிர்த்துஅவர்க்கு இன்பம்
தரவும், வன்புலை கொலை இரண்டும்
ஒருவிய நெறியில் உலகெலாம் நடக்க
உளுற்றவும் அம்பலத் தனிலே
மருவிய புகழை வழுத்தவும் நின்னை
வாழ்த்தவும் எனக்கு இச்சை காண் எந்தாய்"

"மண்ணுல கதிலே உயிர்கள்தாம் வருந்தும்
வருத்ததை ஒரு சிறிது எனினும்
கண்ணுறப் பார்த்தும் செவியுறக் கேட்டும்
கணமும் நான்சகித்திட மாட்டேன்
எண்ணுறும் எனக்கே நின்அருள் வலத்தால்
இசைத்தபோது இசைத்தபோது எல்லாம்
நண்ணும் அவ்வருத்தம் தவிர்க்கும் நல்வரம்தான்
நல்குதல் எனக்கு இச்சை எந்தாய்"

என்று வள்ளலார் இறைவனிடம் முறையிடுகிறார்.

உலகியல் வாழ்வில் உயிர்கள் நன்மை பெறும் பொருட்டு உதவி செய்யவும் தொண்டு செய்யவும் அவர் துடித்தார் என்பது இவற்றால் விளங்கும். உயிர்களுக்குத் தொண்டு செய்ய வரம் தா என்று அவர் இறைவனை வேண்டினார். அதனைப் பெற்று உயர்ந்தார். ஆதலால் இரக்கம், மனிதாபிமானம், உயிர்த்தொண்டு, ஜீவகாருண்யம் -- இவற்றைச் சன்மார்க்கத்தின் முக்கியக் கொள்கைகளாக வகுத்தார். இவற்றால் அடையக்கூடிய இலட்சியம், ஆன்ம நேய ஒருமைப்பாடு என்றார். இது அவர் உருவாக்கிய புதுத் தொடர்.

"சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியமாகிய ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமை எங்களுக்குள் எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்வளவும் விலகாமல் நிறைந்து விளங்கச் செய்வித்து அருளல் வேண்டும்"

என்பது சன்மார்க்கத்தின் சாதகர்கள் இறைவனிடம் வேண்டுதற்காக வள்ளலார் வகுத்து வைத்த விண்ணப்பம். ஆன்மநேய ஒருமைப்பாடு என்னும் வள்ளலாரது சிறப்புத் தொடரை இத் திருவருட்பா நன்கு விளக்குகின்றது. புத்தரும் ஏசுபிரானும், நபிகள் நாயகமும் மஹாவீரரும், "எல்லாம் ஒன்றே" எனக் கூறிய உபநிடதப் பெரியோர்களும் "எல்லா உயிரிலும் நானே இருக்கின்றேன்" என்று கூறிய கண்ணபிரானும் அருளிய அமுத மொழிகள் எல்லாம் ஒன்று திரண்டு, வள்ளலாரின் அனுபவத்தில் தோய்ந்து, அவர் கருணையில் மெருகேறி, இறைவனது அருளாற்றலால் வலிமை பெற்று, இருபதாம் நூற்றாண்டுக்கு ஏற்ற புது உயிரோட்டத்துடன் இந்தத் திருவருட்பாவாக உருவெடுத்துள்ளன. சாதி, குலம், சமயம், இனம், நிறம், மொழி, வர்க்கம், நாடு, அரசியல், கட்சி, மாநிலம், கருத்துக் கொள்கைகளால் உண்டாகி நிலைத்துவிட்ட பிரிவுகள்--என்று மக்களிடையே

எத்துனையோ பேதங்கள் உள்ளன. இப்படி இருப்பது தான் நாம் எத்தனையோ காலங்களாக, வரலாற்றாலும், நேரிலும் கண்டுவரும் உலகியல். இந்த பேதங்களால் முன்பு எப்போதையும் விட, இப்பொழுது தான் ஆபத்து அதிகம். ஏன்? விஞ்ஞான வளர்ச்சியால், செய்திப் போக்குவரத்து வசதிகளின் காரணமாக உடனுக்குடன் செய்திகள் பரவுவதால், தொழில் பெருக்கத்தால், இன்று உலகம் சுருங்கி விட்டது. எந்தச் சிக்கலும் விரைவில் வளர்ந்து உலகின் பல பகுதிகளைப் பாதிக்கின்றது. விஞ்ஞானம் பயங்கர அணுக் குண்டுகளையும் நீரக ஆயுதங்களையும் கண்டுபிடித்திருக்கின்றது. மனிதன் விஞ்ஞானத்தால் புதிய படைப்புக்களைப் படைத்தான். ஆனால் ஏதோ ஒரு காரணத்தைக் கொண்டு பகைமையையும் வெறுப்பையும் வளர்க்கும் பழைய மனப்போக்கை இன்றும் வைத்துக் கொண்டிருக்கிறான். இந்த மனப்போக்கு உடைய மனிதனின் கையில் இன்று விஞ்ஞானம் பயங்கர அணு ஆயுதங்களையும் புதுமையான போர்ச் சாதனங்களையும் கொடுத்திருக்கின்றது. எந்த நேரத்தில் எத்துணைப் பேராபத்து விளையுமோ சொல்ல முடியாது. இரண்டு உலகப் போர்கள் நடந்து முடிந்து, இரண்டாம் உலகப் போருக்குப் பின்னே இன்று வரை மிரட்டல் போர் முறைகள் (cold war) இருந்து வருகின்றன. நாடுகள் ஒவ்வொன்றும், ஆன்மீக பாரம்பரியம் உள்ள நம்நாடு உட்படத் தற்காப்பிற்காகத் தான் கோடிக் கணக்கில் பணத்தைச் செலவிடுகின்றன. ஒருபக்கம் அறிவு வளர்கிறது; ஆனால் மறுபக்கம் நாடுகள் ஆயுத பலத்தை வைத்துக் கொண்டால் தான் சமநிலையைக் காப்பாற்ற முடியும் என்ற நிலை உள்ளது. எந்நேரத்திலும் எங்கும் போர் மூளலாம். வேறுப்பட்ட கருத்துக் கொள்கைகளால் (different ideologies) இன்று உலகம் இரண்டுபட்டிருக்கின்றது. வளரும் நாடுகளில் கூட இக்கருத்துக் கோஷ்டிகளின் போராட்டத்தைக் காண்கின்றோம். அந்த இரண்டு பிரிவினருக்கும் வலிமை வாய்ந்த வெளிநாட்டி அரசினர் ஆயுதம், படை முதலியன கொடுத்துப் போரை வளர்க்கின்றனர். இத்தனையும் பேதம் பாராட்டுவதால் உண்டாகும் விளைவுகள் தாம்; பேதம் பாராட்டி, நாடுகளின் மக்களிடையே வெறுப்பை வளர்த்து, தம் கருத்துக் கொள்கையை (Ideology) மற்றவர்கள் மீதும் வலிந்து திணிப்பது தான் அதைப் பரப்புவதாகும், என்றும் அரசுகள் இன்று கருதுகின்றன. பேத உணர்ச்சி நிலையாக ஊன்றிவிட்டதையே இது காட்டுகின்றது. பேத உணர்ச்சியால் முன்பு எத்தனை நாடுகள் அழிந்தன? எத்தனைக் கோடிக்கணக்கில் மக்கள் தம் அருமையான உயிரை இழந்தார்கள்? எத்தனை செல்வங்கள் பாழாயின? இவற்றால் எல்லாம் உலகம் பாடம் கற்றுக் கொள்ளவில்லை. இன்றும் அந்தப்போர் ஆபத்து இருந்து வருகின்றது. போரைத்தவிர்க்க அரசுகளின் தலைவர்கள் தோற்றுவித்த பொது நிறுவனங்கள், தம் பணியைச் சரிவரச் செய்ய இயலவில்லை. அணு ஆயுதச் சோதனைகள் இன்றும் நடந்து கொண்டிருக்கின்றன. அவற்றால் கதிர் வீச்சுக்கள் தோன்றித் தமிழ்நாட்டு மக்களுக்குப் பலகாலத்திற்கும் கேடு விளைக்கும் என்று சில நாடுகள் எதிர்க் குரல் எழுப்பினாலும் அணுகுண்டுச் சோதனைகள் நடந்து கொண்டிருக்கின்றன. தட்டிக் கேட்க யாருமில்லை. இந்நிலையில் பயங்கரப் போர் ஆபத்தினை எவ்வாறு தவிர்ப்பது? இதுதான் இன்றைய மாபெரும் சிக்கல்,

> "நோய்நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும்
> வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என்றார் வள்ளுவர். இந்தச் சிக்கலின் மூலம் யாது? பேதம் பாராட்டும் மனம் தான். இன்று மனிதனின் மனம், தன் எண்ணப்போக்கை மாற்றிக் கொண்டால், சகிப்புத்தன்மை, நட்பு, அன்பு, உதவிசெய்தல் - இவற்றில் மதிப்பு வைத்து,

நாடுகளின் உறவில் இவற்றைப் படிப்படியே வளர்த்தால், காலப்போக்கில், போர் ஆபத்து நீங்கும், அமைதியும் இன்பமும் உண்டாகும். பேதம் பாராட்டாத மனத்தில் தொடங்கி, முடிந்த முடிவான இலட்சியம் ஆகிய ஆன்மநேய ஒருமைப்பாட்டினை மேற்கூறிய திருவருட்பாவில் வள்ளலார் எடுத்துக்காட்டுகின்றார். இது அவர் காணும் கனவு. அதை நனவாக்க நாம் மிகத் தொலைவு நடக்க வேண்டும். 'மக்களிடையே எந்தக் காரணத்தாலும் பேதம் பாராட்டாக்கூடாது' என்பது போரின்றி வாழத் துடிக்கும் இந்த நூற்றாண்டு மக்களுக்கு வள்ளலார் காட்டும் சன்மார்க்கம். உயர்வு அடையும் வழியாக முன்பு தோன்றிய சமயங்களைக் காரணமாகக் கொண்டும் பேதங்கள் இருக்கக் கூடாது என்கிறார் வள்ளலார்.

"சாதியிலே மதங்களிலே சமயநெறிகளிலே
சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே அபிமானித்து அலைகின்ற உலகீர்
அலைந்தலைந்து வீணே நீர் அழிதல் அழகலவே"

என்பது வள்ளலார் கூறும் அறிவுரை. சமயங்கள் இறைவனை அடைவதற்குத் தான் பெரியோர்களால் உண்டாக்கப்பட்டன. அப் பெரியோர்கள் நினைத்த பயனைச் சமயங்கள் மக்களுக்கு அளித்தன. ஆயினும் காலப்போக்கில் மனிதமனம் எத்தகைய உயர்ந்த நிறுவனத்தையும் கெடுத்துவிடும். சமயநெறியின் அடிப்படை உயிரோட்டம் அன்பு; மனத்தூய்மை. காலப்போக்கில் மக்கள் இவற்றைக் காற்றில் பறக்க விட்டு, வெறும் சடங்குகளைச் சமயமாகக் கருதியதோடு, சமய பேதங்களைப் பாராட்டி மற்ற சமயத்தாருடன் சண்டையிட்டனர். அன்புன் இன்பமும் வளர்க்க வேண்டிய சமய நெறியில் இவ்வாறு ஒரு தேக்க நிலை ஏற்பட்டது.

வெவ்வேறு சமயங்களைச் சார்ந்த மக்கள், தாங்களே பிற சமயங்களின் மேல் ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்று எண்ணத் தொடங்கியவுடன் அவர்களுக்கும் பிற சமய மக்களுக்கும் இடையே பகைமை வளர்ந்தது; ஆதிக்க மனப்பான்மை அரசர்களுக்கு உரியது; பகைமையும் அப்படியே. இவை சமயத்தின் அடிப்படை உண்மைக்கே புறம்பானவை. என்றாலும் தத்தம் சமயங்களைப் பரப்ப நினைத்தவர்கள் இந்த மனப்பான்மையுடன் தான் நடந்து கொண்டார்கள். அரசாங்கங்களைத் தம் வசப்படுத்திக்கொண்டு, மற்ற சமயத்தார்களை நசுக்கவும் அவர்கள் தயங்கவில்லை. சமயம் காரணமான ஏராளமான உயிர்க்கொலைகளையும் (Religious execution) சமயப் போர்களையும் இவ்வுலகம் கண்டிருக்கின்றது. நாகரீகத்தால் பழமையான நம்நாடும், நாகரீகத்தில் புதுமரபுகளை உண்டாக்கிய இங்கிலாந்தும் கூட இதற்கு விதிவிலக்கல்ல. சமயவேறுபாட்டை எடுத்துக்காட்டித் தமது சமயத்தின் மேலாதிக்கத்தை நினைவுபடுத்தி, அண்டை நாடுகளை மிரட்டும் அரசுத் தலைவர்கள் இன்றும் இருக்கின்றார்கள். இந்த மனப்போக்குகளில் விளைவாக, இறைவனை உணர்வதற்கும் அவனுடன் உறவு கொள்ளுவதற்கும் அன்பை விரிவுபடுத்துத் தெய்வீக அன்பாக ஆக்கி வளர்ப்பதற்கும் ஏற்பட்ட சமயம், தனது அடிப்படை நோக்கத்தை (Purpose) இழந்து, பூசல் போட்டிகளை உண்டாக்கியது. இதை எண்ணித்தான் வள்ளலார் உலகில் சமய நெறி, மத நெறி எல்லாம் பேய்பிடித்த பைத்தியக்காரப்புள்ளைகளின் விளையாட்டாகிவிட்டது என்றும், வெவ்வேறு சமயத்தார்களும் உண்மையை அறியாமல், இறைவனை உணராமல், சமயச் சண்டைகளில் ஈடுபட்டு வாழ்க்கையை வீணாக்கி விட்டுச் செத்தொழிந்தார்கள் என்றும் கூறி வருந்துகின்றார்.

"பேருற்ற உலகில் உறு சமய மதநெறி எலாம்
பேய்ப்பிடிப்பு உற்ற பிச்சுப்பிள்ளை
விளையாட்டுஎன உணர்ந்திடாது
உயிர்கள் பல பேதம்உற்று அங்கும்இங்கும்
போருற்ற இறந்துவீணே போயினார் இன்னும்வீண்
போகாதபடி விரைந்தே
புனிதமுறு சுத்தசன் மார்க்கநெறி காட்டி
மெய்ப்பொருளினை உணர்த்திஎல்லாம்
ஏருற்ற சுகநிலை அடைந்திடப் புரிதிநீ
என்பிள்ளை ஆதலாலே
இவ்வேலை புரிகஎன்றிட்டனம்
மனத்தில் வேறு எண்ணற்க
என்ற குருவே"

"நீருற்ற ஒள்ளிய நெருப்பே நெருப்பினுள்
நிறைந்திருள் அகற்றும் ஒளியே
நிர்க்குணானந்த பரநாதாந்த வரை ஓங்கும் நீதிநட ராசபதியே"

என்பது அவர் பாடும் திருவருட்பா. "உலகில் மக்கள் சமயநெறி என்று சண்டை வெறியை வளர்த்து அழிந்தது போதும்; இனியாவது அவர்கள் நல்வாழ்வு வாழ, இறைவனை உண்மையாக உணர, அவன் தரும் இன்பத்தை அடைய, மாமனிதனாக வாழ சுத்த சன்மார்க்க நெறியை அவர்களுக்குக் காட்டுக" என்று இறைவனே தமக்கு ஆணையிட்டான் என்று இத்திருவருட்பாவில் வள்ளலார் கூறுகின்றார். சமய நெறிகள் எல்லாம் "பழைய ஏற்பாடு" (Old Testament) என்றால், வள்ளலார் ஓர் இயக்கமாக மக்களிடம் பரப்பத் தொடங்கிய 'சுத்த சன்மார்க்கம்', "புதிய ஏற்பாடாகும்". (New Testament)

அவர் மக்களைப் பார்த்து, 'நீங்கள் இறைவனிடம் அபிமானம் காட்டாமல், சாதியிலும் சமயத்திலும் தத்துவத்திலும் அபிமானம் வைத்துச் சண்டையிட்டு அழிக்கின்றீர்களே' என்று கூறுகின்றார்.

சமயநெறியையும், தத்துவநெறியையும் வள்ளலார் மிகவும் கடுமையாகச் சாடுகின்றார். ஆனால் இறைவனை உருகி உருகிப் பாடுகின்றார்.

"அருளமுதே, நன்னிதியே, ஞான நடத்தரசே
என் உரிமை நாயகனே" என்றும்,

"என் உயிரே, என் அறிவே எனக்கினிய உறவே" என்றும்

"எனக்குப் பேசிய தந்தையும் தாயும் பெறத் திருமேனி
அம்பலத்தாடும் புனித நீ யாதலால்" என்றும்

நூற்றுக்கணக்கான பாடல்களை இறைவனிடம் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிப் பாடுகின்றார். இதன் உண்மை என்ன? எல்லாச் சமயங்களும் தம் வேறுபாடுகளைத் தாண்டி, ஓர் இறைவனையே உணர்த்துகின்றன. ஆதலின், வெவ்வேறு சமய நெறிகளால் இறைவனை இதுவரை உலக மக்கள் அணுக முயன்றது போதும்;

சமயத்தைச் சாராமல், அருள் நெறியால், இரக்கத்தின் மூலமாக இறைவனை அணுகலாம் என்று அவர் துணிந்ததே இதற்கு காரணமாகும். அந்தத் துணிவிற்கு ஏற்ப அவரது வாழ்வில் அருள்நெறியால், அவர் இறைவனை மிக நெருக்கமாக உணர்ந்து இறையின்ப அனுபவத்தைப் பெற்று மரணமிலாப் பெருவாழ்வும் பெற்றார். இதை ஒரு திருவருட்பாவிலே குறிப்பிடுகின்றார்:

"மதத்திலே, சமய வழக்கிலே மாயை
மருட்டிலே இருட்டிலே மறவாக்
கதத்திலே மனத்தை வைத்து வீண்பொழுது
கழிக்கின்ரார் கழிக்க, நான் உன்பூம்
பதத்திலே மனத்தை வைத்தனன் நீயும்
பரிந்தெனை அழிவிலா நல்ல
பதத்திலே வைத்தாய், எனக்கிது போதும்
பண்ணிய தவம்பலித் ததுவே"

என்றும் இப்பாடலில் சமயத்தைக் கடந்து நின்று தாம் இறைவனை அனுபவித்துப் பெரும் பயன் பெற்றதைக் கூறுகின்றார். இதைக் கருதியே,

"சாதியும் மதமும் சமயமும் பொய்யென
ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ்சோதி"

என்றும்,

"சமயம் கடந்த தனிப்பொருள் வெளியாய்
அமையும் உணர்த்திய அருட்பெருஞ்சோதி"

என்றும்,

"சமயம், குலம் முதல் சார்பெலாம் விடுத்த
சமயம் தோன்றிய அருட்பெருஞ்சோதி"

என்றும் கூறி சமய நெறியும் மதநெறியும் இனிமேல் உலகத்திற்கு வேண்டாம் என்று துணிச்சலுடன் முழக்கமிட்டு

"அருள்நெறி ஒன்றே தெருள் நெறி மற்றெலாம்
இருள்நெறி என, எனக்கு இயம்பிய சிவமே"

என்று இறைவனது திருவாக்கினாலேயே அருள்நெறியின் தேவையும் சிறப்பும் பெருமையும் தமக்குந் தெரிந்தன என்று எடுத்துக்காட்டுகின்றார். சமயச் சண்டையிடும் மக்களைப் பார்த்து

"எய்வகை சார் மதங்களிலே பொய்வகைச் சாத்திரங்கள்
எடுத்துரைத்தே எமது தெய்வம் எமது தெய்வம் என்று
கைவகையே கதறுகின்றீர், தெய்வம் ஒன்றென்று அறியீர்."

என்று இடித்துரைக்கின்றார்.

சமயத்தைச் சார்ந்தவர்கள் என்று தம்மைப் பற்றிக் கூறிக் கொண்டும், வெறும் சடங்குகளே சமயம் என்று நம்பியும், இறையனுபவத்தைப் பெறாமல் வாழ்வை வீணாக்கும் மக்களைப் பார்த்து இரக்கத்துடன் பேசுகின்றார்.

"காட்டையெல்லாம் வெட்டி நிலத்தை உழுது செம்மைப் படுத்தி, எருப் போட்டுத் தயாராக்கிய பிறகு, அதில் கரும்பை நடாமல் விஷ செடிகளை நட்டு மகிழ்ந்து கொண்டிருக்கின்றீர்களே, உங்கள் அறியாமையை என்ன சொல்ல?" என்கின்றார். அருமையான உவமையைக் கூறி மக்களின் அறியாமையைப் பளீச்சென எடுத்துக்காட்டுகின்றார். கல்வி கற்று, ஒழுக்கத்தை வளர்த்து, மனத்தை நெறிப்படுத்தித் தயாராகிய பிறகு, அதில் இரக்கத்தை வளர்த்து இறைவனை அடைய முயலாமல் சண்டையிடும் சமய, மத நெறிகளுக்கு உள்ளத்தில் இடம் கொடுத்து அதனால் களிப்பும் அடைகின்றீர்களே என்று கூறி நொந்து கொள்கின்றார்.

"காடு வெட்டி நிலந்திருத்திக் காட்டெருவும் போட்டுக்
கரும்பை விட்டுக் கடுவிரைத்துக் களிக்கின்ற உலகீர்"

என்று அழைத்து அவர்களுக்கு அறிவு புகட்டுவதற்ாக மேலும் கூறுகின்றார்.

உங்கள் உடலைவிட்டு ஆவி பிரிந்தால் என்ன செய்வீர்கள்? அதை எண்ணிப் பார்த்தீர்களா! இறந்துவிட்டால் உங்களுக்குப் புகலிடம் உண்டா? அப்போது யாரைச் சார்ந்து வாழ்வீர்கள்? பாடு பட்டுக் கல்வி பெற்று வாழ்வை அமைத்துக் கொண்டீர்களே, பயன் அடைந்தீர்களா? என்று கேட்கின்றார்.

கூடுவிட்டுப் போயின பின் எது புரிவீர்? எங்கே
குடியிருப்பீர்? ஐயோ, ஓர் குறித்தறியீர்! இங்கே
பாடுபட்டீர், பயன் அறியீர்! பாழ்க்கு இறைத்துக் கழிந்தீர்"

என்று வருந்திக்கூறிம் அவர்களைச் சுத்த சன்மார்க்கமாகிய அருள் நெறியை பின்பற்றுமாறு அறிவுறுத்துகின்றார்.

"பட்டதெல்லாம் போதும்; இது பரமர் வருதருணம்
ஈடுகட்டி வருவீரேல் இன்பம் மிகப் பெறுவீர்
என்மை உரைத்தேனலன் நான்;
உண்மை உரைத்தேனே"

இவ்வாறு வள்ளலார் சுத்த சன்மார்க்க நெறியைச் சாரும்படி மக்களை அழைக்கும் போது கட்சிக்கு ஆள் சேர்ப்பதுபோல் அழைக்க வில்லை. தம் அனுபவத்தை, தமக்கு இறைவன் ஈடில்லா அனுபவம் தந்ததை எடுத்துக்கூறி, அந்த இறைவன் வருகின்ற தருணம் இது, நீங்கள் அருள்நெறியைச் சாருவீர்களாக என்று அழைக்கின்றார். தம் இறையனுபவ வளர்ச்சியால், எல்லாம் வல்ல -- சித்தியை உலகனைத்திற்கும் எந்தப் பேருதவியையும் செய்யக் கூடிய அருள் ஆற்றலை -- அருட்பெருஞ்சோதியை -- இறைவன் தமக்கு அளிக்க விருக்கும் நேரம் வந்து விட்டது என்பதை உணர்ந்தே,

"அருள் அமுதம் தந்து எனை மேலேற்றித்
தனித்தபெருஞ் சுகமளித்த தனித்த பெரும் பதி தான்
சீர்பெறவே திருப்பொதுவில் திருமேனி தரித்துச்
சித்தாடல் புரிகின்ற திருநாள்கள் அடுத்த;
ஓர்புறவே இது நல்ல தருணம் இங்கே வம்மின்
உலகியலீர், உன்னியவாறு உற்றிடுவீர் விரைந்தே"

என்று மக்களைக் கூவி அழைக்கின்றார்.

தாம் இறைவனிடம் அருள் ஆற்றலைப் பெறும் தருணம் வந்துவிட்டதை உணர்ந்த வள்ளலார், அப்பொழுது மக்கள் நம்மை அடைந்து, தம் சொல்லைக் கேட்டு, சுத்த சன்மார்க்க நெறியை உணர்ந்து, உய்வும் உயர்வும் அடையலாம் என்பதற்காகவே அவர்களை அறைகூவி அழைத்தார்.

சுத்த சன்மார்க்கம் என்ற அருள்நெறிக்கு அடிப்படை இரண்டு; ஒன்று ஜீவராசிகளிடம் கொள்ளும் இரக்கம், அவர்களுக்குச் செய்யும் பரோபகாரம்; அவர்களுக்கு ஏற்படும் பசியும் நோயும் துன்பமும் துயரமும் அவலமும் கவலையும் தீர்த்து வைத்தல். மற்றொன்று, இறைவனைப் பற்றிய நினைப்பு. இறைவனின் புகழையும் ஆன்மாவின் தரத்தையும், ஜீவர்களாகிய நமது சிறுமையையும் இறைவனது தரத்தையும் இடைவிடாது விசாரித்துக் கற்று அறிந்து, நமது குறையை எல்லாம் மனம் உருகிக் கண்ணீர்விட்டுக் கதறிக் கடவுளின் திருவடியில் விண்ணப்பிப்பது எந்தச் சமயத்தையும் எந்த நாட்டையும் சேர்ந்தவனும் இவை இரண்டையும் ஆர்வத்தோடு செய்யத் தொடங்கி விட்டால், அவனது வாழ்க்கை உயிரோட்டமுள்ள வாழ்க்கை ஆகும். அர்த்தமுள்ள வாழ்க்கை ஆகும். செயல் வாழ்விற்குத் தொண்டு; உயிர்ப்பணி. உள்ளத்தின் வாழ்விற்கு இறைவனை நினைத்துத் தன் குறைகளையும் நினைத்து உருகுதல்; அந்தக் குறைதீர மற்ற உயிர்களுக்கு நன்மை செய்யுமாறு இறைவனை மன்றாடி வேண்டுதல்; இவ்வாறு தொடங்கும் வாழ்க்கை உறுதியாக நன்மையைக் கொண்டு வந்து சேர்க்கும். அதாவது அவனுக்கு இறைவனை அனுபவிக்கும் வாய்ப்பு இங்கேயே, இவ்வுலக வாழ்விலேயே கிடைக்கும். இதை வள்ளலார் சன்மார்க்கத்தின் பயனாக வகுத்து உரைக்கின்றார். உலக மக்களுக்கு உலகியலில் மூழ்கி இறைவனை, மறந்தவர்களுக்கு, தன்னலத்தில் மூழ்கி உயிர்ப் பணியைச் செய்யாதிருப்பவர்களுக்குப் பேத உணர்ச்சிகளால் இயற்கை அன்பைக் காற்றில் பறக்க விட்டவர்களுக்கு சுத்த சன்மார்க்கத்தை அளித்து, அவர்கள் இந்தப் பயனைப் பெறுவதற்கு உழைக்க வேண்டும் என்றே, தம்மை உலகத்திற்கு இறைவன் வரச் செய்ததாக வள்ளலார் பாடுகின்றார்.

"அகத்தே கறுத்துப் புறத்து வெளுத்து இருந்த உலகர் அனைவரையும்
சகத்தே திருத்திச் சன்மார்க்க சங்கத்து அடைவித்திட, அவரும்
இகத்தே பரத்தைப் பெற்று மகிழ்ந்திடுவதற்கு என்றே எனை இந்த
உகத்தே இறைவன் வருவிக்க உற்றேன் அருளைப் பெற்றேன்"

என்பது திருவருட்பா. வள்ளலார் பிள்ளைப் பருவத்திலிருந்தே மக்களின் துயரங்களைத் துடைக்க எண்ணியதற்கு ஏற்ப, அவ்வாறு செய்யும் வல்லமை இறைவனது அருளால் அவருக்குக் கிடைத்தது. ஆதலால், இந்தப் பணிக்காகவே இறைவனின் தூதராகத் தாம் இந்த யுகத்தில் பிறந்ததாகக் கூறுகின்றார்.

"தர்மம் குறைந்து அதர்மம் தலையெடுக்கும் போது நான் பிறப்பேன்"

என்று கண்ணன் கீதையிலே அருளியதை இப்பாடல் நமக்கு நினைவூட்டுகின்றது.

உயிர்ப்பணிகளாக வள்ளலார் வகுப்பவை இரக்கத்தை அடிப்படையாகக் கொண்டவை. அவற்றுள் முக்கியமானது பசியால் வாழும் ஏழைகளின் வாட்டத்தை, மற்ற ஜீவராசிகள் பசியால் வருந்தும் வாட்டத்தை உணவு கொடுப்பதால் தீர்த்து வைத்தல். மற்றொன்று எந்த உயிரையும் எவரையும் எந்தக் காரணத்திற்காகவும் தன் சுயநன்மைக்காகவோ, நாட்டின் பேராலோ, கோபத்தாலோ பகைமையாலோ கொல்லக்கூடாது என்பதாகும். இன்னும் ஒன்று மாமிசம் உண்ணாதிருத்தல். சுத்த சன்மார்க்கத்தின் மிகமிக முக்கியமான கொள்கைகள் இவை. வள்ளலாருக்கு மிக உயர்ந்த இறையனுபவம் கிடைப்பதற்கு அடிப்படையாக இருந்தவை இரக்கத்துடன் எல்லா உயிருக்கும் அவர் செய்த பரோபகாரமாகிய ஜீவகாருண்யச் செயல்களும் அவரது அளவற்ற இறையுண்புமே ஆகும். அவரது இரக்கம் எல்லையில்லாதது. வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் தாமும் வாடி வதங்கி விடுவார். அத்துனை இரக்க உள்ளம். அவர் சிறந்த வைத்தியர். சித்த வைத்தியத்தில் வல்லவர். தம்மை வந்து அடைந்த நோயாளிகளுக்கு அவர் மருத்துவம் செய்தார். வறுமையாளர்களுக்கு அன்பர்களைக் கொண்டும் தாமும் செல்வம் வழங்கினார். பசி தணித்தார். வடலூரில் சத்திய தருமச் சாலையை நிறுவி ஏழை மக்களின் பசியைத் தணிக்க நாள்தோறும் உணவு வழங்கினார். தம்மை வந்து அடைந்த மக்களின் துன்பம் எதுவாயினும் அதைத் தீர்த்து வைத்தார். அவர் வாழ்க்கை முழுதும் சேவை வாழ்க்கை. சுத்த சன்மார்க்கத்தின் இத்தகைய சேவை மிக முக்கியமானதாகும். இச்சேவைகளுள் வள்ளலார் மிகவும் வற்புறுத்துவது, அவர்காலத்துச் சூழ்நிலைக்கு ஏற்ப, ஏழைகளின் பசியைத் தீர்ப்பதுதான். ஒருவன் பாவியானாலும் அவன் பசியைத் தீர்ப்பது நம் கடமை என்கிறார் அவர். நம் இந்தியாவின் இன்றைய சூழ்நிலைக்கும் அவர் காணும் இந்த அறம் மிகவும் முக்கியமான ஒன்று. நாட்டு மக்களின் வறுமையைத் துடைக்க மேற்கொள்ளும் சட்டபூர்வமான முயற்சிகளும் தொழில் வளர்ச்சியும், வேலைவாய்ப்பும் அறச்செயல்களும் பசி தவிர்த்தலே ஆகும், உலகில் வளர்ச்சி அடையாத நாடுகளில் முக்கிய சிக்கல் வறுமைப் பிரச்சினையே யாகும். வறுமை தீர்ந்தால்தான் இறைவனை நினைக்க மனம் வரும். ஏழைக்கு இறைவன் ரொட்டி வடிவில் இருக்கிறான். வறுமை தீர்ப்பதே இறைப் பணியாகும் என்று உறுதியாகக் கூறினார் வள்ளலார். பசி தீர்ப்பது தான் பெரிய ஜீவகாருண்யம். ஜீவகாருண்யம்தான் இறையருளைப் பெற்றுத்தரும் கருவி என்று விளக்கும்போது வள்ளலார் இவ்வாறு எழுதுகின்றார்.

"பசி இல்லாவிட்டால் சீவர்கள் ஆகாரம் குறித்து ஒருவரை ஒருவர் எதிர்பார்க்கமாட்டார்கள் (வள்ளலார் சீவர்கள் என்று கூறுவது மக்களையும் மற்ற பிராணி, பறவைகளையும் தாவரங்களையும் சேர்த்துத்தான்) எதிர்பாராத பட்சத்தில் உபகாரச் செயற்கை தோன்றாது; அதுதோன்றாத போது சீவகாருண்யம் விளங்காது. அது விளங்காத போது கடவுள் அருள் கிடைக்கமாட்டாது. ஆதலால், பசியும், கடவுளால் கொடுக்கப்பட்ட ஓர் உபகாரக் கருவி என்றே அறிய வேண்டும்.

"பசி என்கிற நெருப்பானது ஏழைகள் தேகத்தினுள் பற்றி எரிகின்ற போது ஆகாரத்தால் அவிக்கின்றதுதான் சீவகாருண்யம். பசியென்கிற விஷக் காற்றானது ஏழைகள் அறிவாகிய விளக்கை அளிக்கின்ற தருணத்தில் ஆகாரம் கொடுத்து அவியாமல் ஏற்றுகின்றதே சீவகாருண்யம். நேற்று இராப் பகல் முழுதும் நம்மை

அரைப்பங்கு கொன்று தின்ற பசி என்கிற பாவி இன்றும் வருமே இதற்கு என்ன செய்வோம்? என்று ஏக்கம் கொள்கின்ற ஏழைச் சீவர்களது ஏக்கத்தை நீக்குவதுதான் சீவகாருண்யம். பசியால் வருந்துகின்றவர்கள் எந்தத் தேசத்தாராயினும், எந்தச் சமயத்தாராயினும், எந்தத் சாதியினராயினும், எந்தச் செய்கையராயினும், அவர்கள் தேச ஒழுக்கம், சமய ஒழுக்கம், சாதி ஒழுக்கம், செய்கை ஒழுக்கம் முதலானவைகளைப் பேதித்து விசாரியாமல் எல்லாச் சீவர்களிடத்தும் கடவுள் விளக்கம் பொதுவாய் விளங்குவதை அறிந்து, பொதுவாகப் பார்த்து அவரவர் ஒழுக்கத்திற்குத் தக்கபடி அவர்கள் பசியை நிவர்த்தி செய்விப்பதே சீவகாருண்யம். பசியை நிவர்த்தி செய்து கொள்ளத் தக்க புவன போக, சுதந்திரங்களைப் பெறுவதற்கு உரிய அறிவிருந்தும், பூர்வகர்மத்தாலும் அஜாக்கிரதையாலும் அச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ளாமல், பசியினால் வருந்துகின்ற சீவர்களுக்கு ஆகாரம் கொடுத்து, அந்தப் பசி வருத்தத்தை நீக்கி, திருப்தி இன்பத்தை உண்டுபண்ணுவதற்குக் காரணமாகிய சீவகாருண்யம் என்கின்ற திறவுகோலைக் கொண்டுதான் மோட்சமாகிய மேல்வீட்டுக் கதவைத் திறந்து கொண்டு, உள்ளேபுகுந்து எக்காலத்தும் அழியாத இன்பத்தை அனுபவித்து வாழ வேண்டும்" என்று வள்ளலார் எழுதுகின்றார்.

நாட்டின் பொருளாதாரச் சிக்கலை--நமது நாட்டு ஏழை மக்களை நாம் பார்க்க வேண்டிய இரக்கப் பார்வையை இதில் நமக்கு நினைவூட்டுகின்றார் வள்ளலார். வறுமையின் துன்பத்தை நம் மனமுருக எடுத்துரைத்து, அதைத் தீர்ப்பது கடமை என்கின்றார். இந்தத் தொண்டுதான் ஆன்மீக வாழ்வை நமக்கு உண்டாக்கி, அதன் பயனையும் தரும் என்கிறார். இது வள்ளலார் வகுத்த சுத்த சன்மார்க்கத்தின் ஒருபடி. மற்றொன்று கொல்லாமை; எந்த உயிரையும் எந்தக் காரணத்திற்காகவும் கொல்லாமல் பாதுகாப்பது வள்ளலார் வற்புறுத்தும் அறம். அவர் வற்புறுத்திக்கூறும் மற்றொரு அறம் புலால் உண்ணாமை. உயிர்க்கொலை செய்பவரும் மாமிசம் உண்பவரும் சன்மார்க்கர் அல்லர் என்பது அவர் கொள்கை.

"கொலை புரிவார் தவிர மற்றை எல்லாரும்"

மக்களே என்பார். 'உயிர்க்கொலையும் புலைப்பொசிப்பும் உடையார்கள் எல்லாம் உறவினத்தார் அல்லர்; புற இனத்தார்" என்பார். அவர்களும் பசியால் வாடினால், பசியைத் தீர்த்து வைக்கலாம். ஆனால் அவரிடம் நட்புக் கொள்ளலாகாது என்பதனை உலகம் முழுவதும் வன்முறைச் செயலான கொலையும், ஊண் உண்ணும் வழக்கமும் இல்லாமல் ஒழியும்படி செயலாற்ற வேண்டும் என்பது எனது இச்சை என்று அவர் இறைவனிடம் விண்ணப்பம் செய்கின்றார்.

"தலைநெறி ஞான சுத்தசன் மார்க்கம்
சார்ந்திட முயலுறுது அந்தோ
கலைநெறி உலகக் கதியிலே கருத்தைக்
களிவுற வைத்தனார் ஆகிப்
புலைநெறி விரும்பினார், உலகுயிர்கள்
பொதுஎனக் கண்டு இரங்காது
கொலைநெறி நின்றார் தமக்குஉளம் பயந்தேன்
எந்தைநான் கூறுவ தென்னே"

என்று உலகில் கொடியவர்கள் கொலைநெறி பிடித்து அலைவதைக் கண்டு தாம் மிகவும் பயந்ததாகப் பாடுகின்றார்; இராணுவவீரர்கள் போர்களத்தில் வீரம் காட்டுவதை நாம் மதிக்கலாம். அதையும் வள்ளலார் மதிக்கமாட்டார். மன்னிக்க மாட்டார். ஆனால் ஒரு குடியேற்ற நாட்டு அரசின் இராணுவ வீரர்கள் அந்த அரசினால் ஆளப்படும் ஆண்களையும் பெண்களையும் வரிசையாக நிறுத்தி வைத்து, ஒவ்வொருவராக இழுத்து வந்து சுட்டுத் தள்ளினார்கள் என்று செய்தித்தாளில் படித்தோமே! பச்சைக் குழந்தைகளைப் பூட்சுக் காலால் எற்றியதாகப் படித்தோமே! இந்தக் கொடுமையை மன்னிக்க முடியுமா? இன்று தமது கருத்துக் கொள்கைகளுக்காக, தத்தம் நாடுகளையும் ஆதிக்கத்தையும் பாதுகாப்பதற்காக உலகில நடைபெறும் போர்கள் எல்லாம் தவிர்க்கமுடியாதவை அல்ல; ஐ. நா. சபை அதற்காகவே இருக்கிறது. ஆனால் போரைத் தவிக்கும் சிரத்தை அரசுத் தலைவர்களுக்கு இல்லை. ஆதிக்கத்தையே அவர்கள் விரும்புகின்றனர். ஒருபக்கம் ஆதிக்கத்தை விரும்புகிறவர்களும் மறுபக்கம் ஆதிக்கத்திற்கு அடங்க மறுப்பவர்களும், தங்கள் மாறுபாட்டைப் போர்க்களத்தில் தீர்த்துக் கொள்ளும் சூழ்நிலை இன்று உலகில், மிக்க விரைவில் உண்டாகிவிடுகின்றது. வள்ளலார் காட்டும் சுத்த சன்மார்க்க நெறியில் இந்த ஆபத்திற்குத் தீர்வு இருக்கின்றது. அவர் நாடுகள் இல்லாத, எல்லைக் கோடுகள் இல்லாத ஒருலக அரசைக் கனவிற் காணுகின்றார். ஆயினும் அதனை அடைவதற்கு நடைமுறை வழியையும் அவர் கூறுகின்றார். அந்த வழி தான் ஒருமைப்பாட்டு உரிமை. உலக மக்களுக்குள் ஓர் உரிமை இருக்கின்றது என்கின்றார். உலக மக்கள் யாவரும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவனால் படைக்கப்பட்டவர்கள். ஆதலால் அவருடைய பிள்ளைகள் ஆவர். அவர்கள் அனைவரும் சகோதரர்கள். நாடு, இனம், மொழி, சமயம், கொள்கை இந்த அபிமானங்களை விட்டு, இச்சகோதர அபிமானத்தை மனத்தில் எண்ணி, அதை வளர்க்கச் சொல்லுகின்றார் வள்ளலார். இந்த மனிதாபிமானத்தை அவர் மிகவும் வற்புறுத்துகின்றார். எவ்வகையாலும் பேதம் பார்க்காமல் எல்லாரும் நம்மவராய்ச் சமத்தில் கொள்ளுவது ஜீவஒடுக்கம் என்கின்றார் அவர். இந்த அகில உலக சகோதரத்துவம் (Universal Brotherhood) "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்று சங்க இலக்கியத்தில் ஒரு கருத்தாகக் கூறப்படுகின்றது. கம்பரால் இராமனது பண்பு நலத்தில் ஒரு கூறாகக் காட்டப்படுகின்றது. வள்ளலார் தாம், உலகில் பகைமையின் பேரால் நடக்கும் புலையும் கொலையும் நீங்கிப் போர் ஒழிந்து மனித இனம் முழுவதும் முன்னேறுவதற்கான ஒரு வழியாகவும் இலட்சியமாகவும் அகில உலக சகோதரத்துவத்தை எடுத்துக் கூறினார். சகோதரத்துவத்தால் உண்டாகும் ஒருமைப்பாடு ஒன்று தான் இனி உலகத்தைக் காப்பாற்றும். நாடுகளோ, அரசுகளோ, சமயங்களோ, மதங்களோ, வர்க்கங்களோ அல்ல என்று அவர் கருதியதாலும், இறைவன் தனக்கு உள்ளும் புறத்துலும், எல்லா ஜீவராசிகளிடத்திலும் விளங்குகின்ற அருட்காட்சியை அவர் கண்டதாலும்,

"ஆதிஅந்தம் தோற்றாத அரும்பெருஞ்சோ தியனே
அம்மே, என் அப்பா என் ஐயாஎன் அரசே
ஓதிஎந்த வகையாலும் உணர்ந்து கொளற்கு அரிதாய்
உள்ளபடி இயற்கையிலே உள்ளஒரு பொருளே
ஊதியம் தந்து எனைஆட்கொண்டு உள்ளிடத்தும் புறத்தும்
ஓவாமல் விளங்குகின்ற உடையவனே இந்தச்
சாதிஇந்த மதம்எனும்வாய்ச் சழக்கைஎலாம் தவிர்த்த
சத்தியனே உண்கின்றேன் சத்தியத் தெள்ளமுதே"

என்று பாடுகின்றார். நாங்கள் சகோதரர்கள், அவர் அமெரிக்க சகோதரர், இவர் ரஷ்ய சகோதரர் என்று பேசாமல், இந்தநாடு, அந்தநாடு என்று பிரித்துப் பேசுவது வள்ளலாரின் கருத்துப்படி வாய்ச்சழக்கு ஆகும். இச் சழக்கைவிட்டு, உலக மக்கள் எல்லாம் சகோதரத்துவத்தின் பேரால் மருவிக் கலந்து வாழ்வதற்குத் தருணம் வந்து விட்டது என்று வாய்ப்பறை கொட்டி மக்களை அழைக்கின்றார் வள்ளலார். ஒருமைப் பாட்டு உணர்ச்சியுடன் இறைவனுக்குப் புதுமையான ஒரு திருப்பள்ளி எழுச்சி பாடுகின்றார்.

"ஒருமையில் உலகெலாம் ஓங்குக எனவே ஊதின சின்னங்கள் ஊறின சங்கம்"

என்று வைகறை வேளையில் முழங்கும் சின்னங்களும் சங்குகளும் உலக ஒருமை ஓங்குக; ஒருமையால் மக்கட்குலம் உயர்க என்று ஒலிப்பதாகக் கூறி மேலும் கூறுகின்றார்.

"மதம்பிடித்தவர் எல்லாம் வாய்ப்பிடிப்புண்டு
வந்து நிற்கின்றனர் வாய்திறப்பிப்பான்
கதம் பிடித்தவர் எல்லாம் கடும் பிணியாலே
கலங்கினர் சூழ்ந்தனர் உலம்புறுகின்றார்
பதம்பிடித்தவர் எல்லாம் அம்பலப் பாட்டே
பாடினர் ஆடினர்பரவி நிற்கின்றார்
இதம் பிடித்து எனையாண்ட அருட்பெருஞ்சோதி
என் ஐயனே பள்ளி எழுந்தருள்வாயே"

மதம் பிடித்தவர்கள்--அதாவது கொள்கை வெறி பிடித்தவர்கள் எல்லாம் இப்போது வாயடைத்துப் போனார்களாம். கதம் பிடித்தவர்கள்--அதாவது கோபமும் வெறுப்பும் பகைமையும் கொண்டவர்கள், அவற்றால் தாமே துன்பத்தை வரவழைத்துக்கொண்டு, கலக்கம் கொண்டு, வந்து நின்றார்களாம். பதம் பிடித்தவர்--அதாவது பதவிகளை விரும்பியவர்கள் இப்போது அந்த ஆசையால் நொந்துபோய் அம்பலப் பாட்டைப் பாடுகின்றனராம்.

மதங்களும், கொள்கை வேறுபாடுகளும், கோபம், பகைமை முதலியவையும், பதவியாசையும் துன்பம் விளைவித்ததெல்லாம் போதும். இனி உலகம் சகோதரபாவத்தால் ஒருமை அடைந்து உயர வேண்டும் என்பது வள்ளாலாரின் அறைகூவல் ஆகும்.

இறையனுபவத்தை ஒருவன் பெறுவதற்கு அவன் பின்பற்ற வேண்டிய அறங்களைப் பற்றி பரோபகாரம் என்னும் உயிர்ப்பிணியைப் பற்றி இதுவரை வள்ளலாரின் சிந்தனையை ஒட்டிக் கண்டோம். இனி, சுத்த சன்மார்க்கத்தின் மற்றொரு அடிப்படையாகிய, இறை நினைவு பற்றியும் இறைவனிடம் நம் குறைகளை உருகி உருகி முறையிடுவது பற்றியும் பார்ப்போம்.

வள்ளலார் கொண்ட இறைநினைப்பு எத்தகையது என்று அவரது பாடலைக் கொண்டே பார்ப்போம். நாம் எப்படி இறைவனை நினைக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக, அவர் கனிந்து கனிந்து, உருகி உருகிப் பாடுகின்றார்.

"உன்னை மறந்திடுவேனோ, மறப்பறியேன், மறந்தால்
உயிர்விடுவேன், கணந்தரியேன் உன்ஆணை இதுநீ
என்னை மறந்திடுவாயோ மறந்திடுவாய் எனில் யான்
என்ன செய்வேன்; எங்குறுவேன்? எவர்க்குரைப்பேன் எந்தாய்

அன்னையினும் தயவுடையாய்! நீ மறந்தாய் எனினும்
அகிலமெலாம் அளித்திடும்நின் அருள் மறவாது என்றே
இன்னும்மிகக் களித்திங்கே இருக்கின்றேன், மறவேல்
இதுதருணம் அருட்ஜோதி எனக்கு விரைந்தருளே!

இரக்க குணத்தால் இறை நினைப்பு உண்டாகி வளரும்; அந்த இறைநினைப்பு அனுபவத்தைத் தரும்; அந்த அனுபவம் புதிய ஆற்றலைத் தரும். அந்த ஆற்றலால் மேலும் உயிர்ப் பணி செய்ய வேண்டும் என்ற சுத்த சன்மார்க்கக் கொள்கை வள்ளலாரின் இதயத்தில் ஊறி, ஊற்றெடுத்துப் பொங்கியதற்கு இப்பாடல் சான்று பகர்கின்றது. வள்ளலார்க்கு இறைவனே வாழ்க்கையில் எல்லாமுமாகி விட்ட பின் "உன்னை மறப்பறியேன், மறந்தால் உயிர் விடுவேன்" என்கின்றார். இதைப்போல், இரக்கமும், தன் உயிரும் ஒன்றுதான்; இரக்கம் நீங்கினால் தன் உயிரும் நீங்கிவிடும் என்ற நிலையில் இருப்பவர் வள்ளலார். ஆக சன்மார்க்கத்தின் இரண்டு பண்புகளாகிய இரக்கமும் இறைநினைப்பும் தாம் வள்ளலாரின் உயிராக இருந்தன.

"கருணையும், சிவமே பொருள் எனக் காணும்
காட்சியும் பெறுக; மற்றெல்லாம்
மருள்நெறி எனநீ எனக்கு அறிவித்த
வண்ணமே பெற்றிருக்கின்றேன்"

என்றும்,

"கலங்கிய போதும் திருசிற்றம்பலத்தில் கருணையங் கடவுளே நின்பால்
இலங்கிய நேயம் விளங்கிய நிலையே எந்தைநின் உளம் அறியாதோ"

என்றும் இறைவனிடம் தன் உள்ளத்தைத் திறந்து காட்டுபவர் வள்ளலார். அவர் கூறுவதுபோல இரக்கம், இறைநினைப்பு இரண்டும் இரண்டாக இல்லாமல் ஒன்றாக அவரிடம் கலந்துவிட்டிருந்ததால் தான், 'என்னை மறந்திடுவாயே; மறந்திடுவாய் எனில் என்ன செய்வேன்?" என்று கேட்ட அதேவாயால், 'இறைவனே, நான் உன்னை மறக்காமல் இருக்க வேண்டுமானால், என் இதயத்தின் இரக்கத்தால் நான் உயிர்ப்பணி செய்வதற்கு நீ அருட்சோதியாகிய அருளாற்றலை--அருள் வலிமையை எனக்குத் தந்து, என்னைத் தனிப்பெருங்கருணை உடையனாக ஆக்க வேண்டும். நான் உன்னிடம் கருணையை வேண்டும் இந்த வேண்டுகோளை, ஒரு கால் நீ மறந்தாலும், இந்தக் கருணையின் மூலமாகிய உன்னுடைய அருள் மறவாது; அந்த ஊக்கத்தால் இன்னும் நம்பிக்கையோடு வாழ்கின்றேன்" என்று கூறுகின்றார். அவரது உள்ளத்தில் இரக்கமும் இறைநினைவும் கொண்டிருந்த இந்த இணையற்ற பிணைப்பு, சுத்த சன்மார்க்கத்தின் உயிர்நாடியாகும். இதைக் கொண்டுதான் இந்நெறிக்கு அருள்நெறி என்று பெயரிட்டார் வள்ளலார். இந்தப் பிணைப்புதான், இனி உலகில் மக்கள் வாழ்வின் மையமாக (axis) அமைய வேண்டும், என்று தம் வாழ்க்கையில் அனுபவமாகக் கண்ட பேருண்மையை வள்ளலார் உலகத்திற்கும்

தருகின்றார். அவருக்கு இரக்கத் தொண்டே இறை நினைப்பு; இறை நினைப்பே இரக்கத் தொண்டு. இப்படிப் பின்னிப் பிணைந்துவிட்டன அவை இரண்டும். இறைவனைக் காணாமல் அவனோடு ஒன்றுபட்டு, அவன் தரும் இன்ப அனுபவம் இல்லாமல் அரைக்கணமும் இருக்கமுடியாத நிலை அவருக்கு உண்டாயிற்று. உணவை மறந்தார்; உறக்கம் துறந்தார்; உயிரைவிடத் துணிந்தார்; இறைவன் மேல் ஆணையிட்டு உரைக்கின்றார்;

"ஆணைஉன்மேல் ஆணைஉன்மேல் ஆணைஉன்மேல் ஐயா
அரைக்கணமும் நினைப்பிரிந்தே இனித்தரிக்க மாட்டேன்
கோணைநிலத் தவர்பேசக் கேட்டதுபோல் இன்னும்
குறும்புமொழி செவிகள்உறக் கொண்டிடவும் மாட்டேன்
ஊணைஉறக் கத்தையும்நான் விடுகின்றேன் நீதான்
உவந்துவராய் எனில்என்றன் உயிரையும்விட் டிடுவேன்
மாணைமணிப் பொதுநடஞ்செய் வள்ளல் நீ எனது
மனமறிவாய் இனம்உனக்கு வகுத்துரைப்பது என்னே"

தமது இறைநினைப்பே, நீங்காத இறையனுபவமாய் இரவு பகல் எப்போதும் நிலையாக இருக்க வேண்டும்; அதுபோல், தாம் உயிர்களுக்குச் செய்யும் பணியும் நிலையாக இருக்க வேண்டும்; இதற்குத் தடையாக மனிதவாழ்விற்குப் பொதுவாக வரும் முற்றுப்புள்ளி ஆகிய இறப்புக்கூடத் தமக்கு வந்துவிடக்கூடாது. இவை இரண்டும் நிலையாக வாய்ப்பதற்காக காலத்தால் அளவுபட்ட மனித உடல், உயிர் ஆகியவற்றை, காலத்தால் அளவுபடாத உடலாகவும் உயிராகவும் ஆக்கித் தரும்படியாக இறைவனை ஊனுருக கண்ணீர் சொரியக் கதறிக் கதறி வேண்டுகின்றார் வள்ளலார். "இறைவா காலத்தால் அளவுபட்ட என் உடலையும் உயிரையும் நீ எடுத்துக் கொள்; காலத்தால் அளவுபடாத உன் உடலையும் உயிரையும் எனக்குத்தா" என்று கேட்கின்றார். தன்னிடம் புதைந்து கிடக்கும் இறைமையை--முழுவதுமாக வெளிப்படுத்துமாறு கேட்கின்றார். அதாவது மரணம் இல்லாத பெருவாழ்வைக் கேட்கின்றார் என்று இதற்குப் பொருள் கொள்ள வேண்டும். இவ்வாறு கேட்கும் திருவருட்பா இதுதான்.

"படமுடியா தினித்துயரம் படமுடியா தரசே
பட்டதெல்லாம் போதும்இந்தப் பயம்தீர்ந்து இப்பொழுதுஎன்
உடல்உயிர் ஆதியஎல்லாம் நீஎடுத்துக் கொண்டுஉன்
உடல்உயிர் ஆதியஎல்லாம் உவந்து எனக்கே அளிப்பாய்
வடல்உறுசிற் றம்பலத்தே வாழ்வாய்என் கண்ணுள்
மணியே என் குருமணியே மாணிக்க மணியே
நடனசிகா மணியேஎன் நவமணியே ஞான
நன்மணியே பொன்மணியே நடராச மணியே"

இன்னும் வேண்டுகின்றார்.

"வாட்டமும் துயரும் அச்சமும் தவிர்த்து என்
வடிவமும் வண்ணமும் உயிரும்
தேட்டமும் நீயே கொண்டு, நின் கருணைத்
தேகமும் உருவும் மெய்ச் சிவமும்
ஈட்டமும் எல்லாம் வல்லநின் அருட்பேர்
இன்பமும் அன்பும்மெய்ஞ் ஞான
நாட்டமும் கொடுத்துக் காப்பதுன் கடன்நான்
நம்பினேன் கைவிடேல் இனியே."

இறைவனையே சரணாகதியாக அடைந்து, என்றும் நீங்காத இரக்கப்பணியும் இறையனுபவமும் தருமாறு வள்ளலார் வேண்டுகின்றார். நாம் நமது குறைகளை எவ்வாறு தீர்த்துக் கொள்ளலாம் என்பதற்கும் அவரே வழிசொல்லித் தருகின்றார். சுத்த சன்மார்க்கத்தில் வாழ விரும்புபவன், தன் குறைகளையும் தவறுகளையும் இறைவன் திருவடியில் அழுது அழுது விண்ணப்பித்துக்கொள்ள வேண்டும். கருணைக் கடலாகிய இறைவன் குறைகளை அகற்றுவான்; தவறுகளை மன்னிப்பான், "பின்னை என் பிழையை பொறுப்பானை, பிழையெலாம் தவிரப் பணிப்பானை" என்று சுந்தரமூர்த்தி நாயனார் பாடினார். "தப்பேதும் நான் செயினும் நீ பொறுத்தல் வேண்டும்" என்று வள்ளலார் இறைவனை வேண்டுகிறார். நம் பிழைகளை இறைவனிடம் சொல்லி முறையிடவும் அவரே நமக்குச் சொல்லித் தருகின்றார். நமது பிழைகளை எல்லாம் தமது பிழைகளைப் போலவே கருதிக் கொண்டு நம்மேல் வைத்த எல்லையற்ற கருணையால் அந்த அன்புள்ளம் வருந்து, நைந்து, இறைவனிடம் கதறிக் கதறி முறையிடுகின்றது. இதை நினைத்தால் நம் கல்மனமும் கசிந்து போகிறது.

"ஓடினேன் பெரும் பேராசையால் உலகில்
ஊர்தொறும், உண்டியே உடையே
தேடினேன் காமச் சேற்றிலே விழுந்து
தியங்கினேன், மயங்கினேன், திகைத்து
வாடினேன் சிறிய வாரியால் மகிழ்ந்தேன்
வஞ்சமே பொருள்என மதித்து
நாடினேன் எனினும் பாடினேன் உனையே
நம்பினேன் கைவிடேல் எனையே"

"காட்டிலே திரியும் விலங்கினிற் கடையேன்
கைவழக் கத்தினால் ஒடிந்த
ஓட்டிலே எனினும் ஆசைவிட் டறியேன்
உலுத்தனேன் ஒருசிறு துரும்பும்
ஏட்டிலே எழுதிக் கணக்கிட்ட கொடியேன்
எச்சிலும் உமிழ்ந்திடேன் நரசு
நாட்டிலே பெரியேன் என்னினும் உனையே
நம்பினேன் கைவிடேல் எனையே"

இப்பாடல்களில், மனிதர் செய்யும் பிழைகளை எல்லாம் கூற இவ்வளவும் செய்தாலும் இறைவனிடம் நம்பிச் சரண் அடைந்து பிழைகளை மறைக்காமல் கூறிக்கதறினால் அவன் கைவிட மாட்டான் என்ற உண்மையை நமக்குக் கூறுகின்றார் வள்ளலார்.

சுத்த சன்மார்க்கத்தின் இரண்டு அடிப்படையாகிய இரக்கஞ் சேர்ந்த உயிர்ப் பணியையும் இறை நினைப்பையும் வள்ளலாரின் வாழ்விலிருந்து எடுத்துக் காட்டினோம். உயிர்ப்பணிக்கு என்றும் நிலையான ஒரு சின்னமாக அவர் வடலூரில் அமைந்த நிலயம் தான் சத்திய தருமச்சாலை. அங்கு அவர் அன்று அடுப்பில் மூட்டிய நெருப்பு இன்னும் அணையவில்லை. நாள்தோறும் ஏழைகளுக்கு அங்கு சோறு வழங்கப்பட்டு வருகின்றது. அது போல் முடிவான இறையனுபவம் எப்படிப்பட்டது என்பதை நிலையாக மக்களுக்கு எடுத்துக்காட்ட, அவர் வடலூரில் ஏற்படுத்திய நிலயம் தான் சத்திய ஞானசபை. சத்திய தருமமாவது உயிர்ப்பணி; சத்திய ஞானமாவது என்றும் நமது ஞானசபையின் உள்ளே அருட்பெருஞ்சோதி ஆண்டவனைக் கண்டு கொண்டு கனிந்து கொண்டு கலந்து கொள்ளுவது ஆகும். சத்திய ஞானம், என்றும் உள்ள ஞானம்; என்றும் உள்ள அனுபவம்; அதாவது மரணம் இல்லாப் பெருவாழ்வு. என்றும் நீங்காத இரக்க உயிர்ப்பணி செய்து இறைவனின் இன்ப ஒளிவடிவத்தோடு கலந்து தழுவி, ஒன்றாகி நின்று பேரின்பம் அனுபவிக்கும் பெருவாழ்வு. இப்பெருவாழ்வை வள்ளலார் இவ்வுலக வாழ்விலேயே பெற்றார். அந்த அனுபவத்தை இறவாப் பெருங்கவிதையாக--இறைக்காதல் இலக்கியமாக--தாம் இறைவனுக்கு வாழ்க்கைப்பட்ட வண்ணமாகப் பாடுகின்றார் இராமலிங்கராகிய வள்ளல் நாயகியார். ஆம்! அரங்கத்து அமுதனைக் காதலித்துக் கலந்தாள், சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாம் ஆண்டாள், திருவாலி அமுதனைக் காதலித்துக் கலந்தார், திருமங்கையாழ்வாராகிய பரகால நாயகி; சங்கும் சக்கரமும் ஏந்திய ஆரா அமுதனைக் காதலித்துக் கலந்தார், நம்மாழ்வார் ஆகிய சடகோப நாயகி; பெருந்துறை மேய பெம்மானை பரிமேல் வந்த அழகனைக் காதலித்துக் கலந்தார் மாணிக்கவாசக நாயகி. இந்த நாயகிமார்கள் எல்லாம் தம் காதலின்பக் கடவுள் அனுபவ நிறைவைத் தீந்தமிழ் இலக்கியமாகப் பாடினர். நம் இராமலிங்கமாகிய வள்ளல் நாயகியாரும் அருட்பெருஞ்சோதி அமுதனைக் காதலித்துக் கலந்து, பெருவாழ்வு பெற்று வாழ்கின்றார். கடவுளைக் கலந்து கலந்து, பொன் உடம்பும், மந்திர உடம்பும் ஆகிய ஒளி உடம்பாகத் தனது உடம்பு மாறப்பெற்று மரணமிலாப் பெருவாழ்வு பெறுகின்றார். வள்ளல் நாயகியார் தம் அனுபவத்தைக் கேளுங்கள்!

"ஆனந்த நாட்டினுக்கோர் அதிபதியை ஆசை
காட்டியெனை மணம் புரிந்து என் கைப்பிடித்த பதியைக்
கண்டுகொண்டேன் கனிந்து கொண்டேன்
கலந்து கொண்டேன் களித்தே"

இறைக் காதலனைக் கலந்து கொண்டு களித்த வள்ளல் நாயகியார் தம் தோழியாகிய மனத்திற்குக் கூறுகின்றார். அவன் தந்த பேரின்பத்திற்கு எதுவும் நிகராகாது; அதற்கு அவன் திருவடிதான் நிகர் என்று மொழிகின்றார்.

"மாடமிசை ஓங்குநிலா மண்டபத்தே எனது
மணவாளர் கொடுத்ததிரு அருளமுதம் மகிழ்ந்தே
ஏடவிழ்பூங் குழலாய்நான் உண்டதொரு தருணம்
என்னை அறிந்திலன் உலகம் தன்னையும்நான் அறியேன்
தேடரிய நறும்பாலும் தேம்பாகும் நெய்யும்
தேனுக்ஒக்கக் கலந்துஎனச் செப்பினும் சாலாதே
ஈடறியாச் சுவை புகல என்னாலே முடியாத
என்னடியோ அவ்வமுதம்! பொன்னடிதான் நிகரே"

இந்தப் பேரின்பப் பெருவாழ்வை வள்ளலார் பெற்றது, சுத்த சன்மார்க்கத்தால். நம்மிடம் அவர் ஆன்மநேய உரிமையோடு, அந்த மரணமிலாப் பெருவாழ்வை--மாமனித வாழ்வை--அனக வாழ்வை அடைய வருமாறு நம்மை அழைக்கின்றார். நமக்கெல்லாம் இரண்டு வடிவம் உண்டு. ஒன்று புறவடிவம், அது நம் உடல். மற்றொன்று அகவடிவு. அது நமது சூக்கும உடலும் காரணசரீரமும். அந்த அகவடிவு, அனக வடிவானால் காலத்தால் அளவுபடாத அழியாவடிவாக ஆனால், புறவடிவாகிய உடலும் எண்ணில்லாத நெடுங்காலம் அழியாமல் இருக்கும். அகவடிவு எப்பொழுது அனக வடிவாகும்? இறையின்ப அனுபவத்தைப் பெற்றால் அனகவடிவு ஆகும். அதைப் பெற நம்மை அழைக்கின்ற வள்ளலாரின் அமுதத் திருவருட்பாவைக் கூறி நம் பேச்சை முடிப்போம்.

"இன்புறலாம் எவ்வுலகும் ஏத்திடவாழ்ந் திடலாம்
எல்லாம்செய் வல்லசித்தி இறைமையும்பெற் றிடலாம்
அன்புடையீர்! வம்மின் இங்கே; சமரசசன் மார்க்கம்
அடைந்திடுமின்! அக வடிவு இங்கு அனக வடிவாகிப்
பொன்புடை நன்கு ஒளிர் ஒளியே, புத்தமுதே, ஞான
பூரணமே, ஆரணத்தின் பொருள் முடிமேல் பொருளே
வன்புடையார் பெறற்கு அரிதாம் மணியேசிற் சபையின்
மாமருந்தே என்று உரைமின்! தீமையெலாம் தவிர்ந்தே"

# 16. வள்ளலார் வாழ்க்கை வரலாறு--சில சிந்தனைகள்

--ச. செயப்பிரகாசம்

**குறிப்புகள்**

இராமலிங்க வள்ளலார்: 5-10-1823 -- 30-1-1874.

ஊர்: தென்னார்காடு மாவட்டம் சிதம்பரத்திற்கு வடமேற்கே பத்துமைல் தொலைவிலுள்ள மருதூர்.

பெற்றோர்: இராமையா பிள்ளை
(ஆறாவது மனைவி) சின்னம்மாள்

முதல் ஐந்து மனைவியர் பிள்ளைபேறின்றி அடுத்தடுத்து இறந்தனர். சின்னம்மாவின் ஐந்தாவது கடைசிப்பிள்ளை இராமலிங்கம்.

சிறு குழந்தையாய் இருக்கிம்போதே தெய்வ அருள் பெற்று விளங்கினார். ஐந்தாம் மாதம் தில்லை நடராசப் பெருமான் தரிசனம்.

இராமலிங்கர் எட்டாவது மாதத்தை எட்டிய பொழுது தந்தை மறைந்தார். அதன் பின் சென்னையில் குடியேற்றம்.(1825)

ஓதாதுணர்தல்
ஆடல் பருவத்தே பாடல் செய்யத் தொடங்கல்
இறைவனால் ஆட்கொள்ளப்படல் (1832, 35)
வறுமை, கல்வியின் கொடுமை
சமயச் சொற்பொழிவு
கந்த கோட்ட வழிபாடு
கண்ணாடியில் காட்சி பெறுதல்
சமயச் சொற்பொழிவு
திருவொற்றியூர் வழிபாடு
தொழுவூர் வேலாயுதம் மாணவராதல் (1849)
திருமணம்
முதலிரவில் திருவாசகம் பாடம் சொல்லல்
இல்லத்தில் துறவறம்
பாடஞ்சொல்லல்

நூல்கள்: பதிப்பித்தல்
ஒழிவிலொடுக்கம் (1851)
தொண்ட மண்டல சதகம் (1855)
சின்மய தீபிகை (1857)

உரைநடை நூல்கள் இயற்றல்:

மனுமுறை கண்ட வாசகம்
ஜீவகாருண்ய ஒழுக்கம்

சென்னை வாழ்க்கையை நீத்தல் (1858)
கருங்குழியில் உறைதல் (1858-1867)
சமரச சன்மார்க்க சங்கம் -- 1865
திருவருட்பா வெளியீடு 1867 (நான்கு திருமுறைகள்)
சத்திய தருமச்சாலை 1867
சித்தி வளாகம் 1870
சத்திய ஞான சபை 25-1-1872
சன்மார்க்கக் கொடி 22-10-1873
சித்தி பெற்றது 30-1-1874.
திருவருட்பா ஐந்தாம் திருமுறை முதல் பதிப்பு 1880
திருவருட்பா ஆறாம் திருமுறை முதல் பதிப்பு 1885

அரசியல்:

ஆங்கிலேய ஆட்சி இந்தியாவில் நிலை பெறல்
1857 இந்திய விடுதலைப் போர்

சமுதாயம்:

பிளவுபட்டு--பாழ்ப்பட்ட சமுதாயம்
சாதிப்பிரிவுகள்
மூட நம்பிக்கைகள்
பெண் அடிமை

சமயம்:

இந்து சமயத்தின் வீழ்ச்சி
கிறிஸ்த்துவத்தின் வளர்ச்சி
சமயச் சண்டைகள்

பொருளாதாரம்:

ஆங்கிலேயர் சுரண்டல்
தொழில்நாகரிகத்தின் தீமை
வறுமையும் பஞ்சமும்

கல்வி:

அறியாமை
ஆங்கிலக் கல்வியின் கேடு

புதிய போக்குகள்:

புதிய எழுச்சி; சங்கங்கள், கட்சிகள் தோன்றல்
இராசாராம் மோகன்ராய் (1774--1880)
தயானந்த சரஸ்வதி (1824--1883)
இராமகிருஷ்ண பரமஹம்சர் (1836--1885)
சுவாமி விவேகானந்தர் (1863--1902)

உலக நிகழ்ச்சிகள்:

ஐரோப்பாவில் தேசியம், சுதந்திரம் முதலிய கருத்துக்களின் வளர்ச்சி

காரல் மார்க்ஸின் சித்தாந்தம்

**சில சிந்தனைகள்:**

வள்ளலாரின் வாழ்க்கை வரலாறுகள் பெரும்பாலும் வழிபாட்டு உணர்வுடன் எழுதப்படுவதால் வரலாற்று நோக்கிலான ஆராய்ச்சி அத்தகு வரலாறுகளில் மிகவும் குறைந்தே உள்ளது. வரலாற்று நோக்கிலான சில சிந்தனைகள் இங்கு தரப்படுகிறது.

வள்ளலாரின் தந்தையாருடைய முதல் ஐந்து மனைவியர் இறந்தனர் என்ற செய்தி மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். இந்நிகழ்ச்சியும், எட்டாவது மாதத்திலேயே தந்தையை இழந்த அவரது தாயின் (தந்தையின் ஆறாவது மனைவி) விதவைக் கோலமும் வள்ளலார் மனதைப் பெரிதும் பாதித்திருக்க வேண்டும். மரபான இந்தியத் திருமண முறையை எதிர்த்து அவர் செய்த பெரும் புரட்சிக்கு இதுவே அடித்தளமாக அமைந்தது எனலாம். திருமணத்தில் ஆர்வமற்று இருந்த அவர், திருமணத்திற்குப் பின்னர் மனைவியை காமப் பொருளாகவோ, ஏவல் அடிமையாகவோ, உடைமையாகவோ கருதாது ஒரு சகோதர மனித ஜீவனாக மதித்துப் போற்றும் நிலையைக் காண்கிறோம்.

ஆங்கிலக் கல்வியிலும் முறையான பள்ளிக் கல்வியிலும் அவர் ஆர்வமற்று இருந்தார். அவை அவருக்குப் பெருஞ்சுமையாக இருந்தன. இன்று "பள்ளி மறுப்பு" (Deschooling) ஒரு புதிய கருத்து உருவாகி வருவதைக் காண்கிறோம். மேற்கத்திய கல்வி முறையை எதிர்த்த முதல் சிந்தனையாளர் வள்ளலார்தான். 19ஆம் நூற்றாண்டு இந்திய சீர்திருத்தச் சிந்தனையாளர் பலரும் மேலைக் கல்வி முறையை ஒரு புதிய மறுமலர்ச்சி யுகத்தின் தொடக்கம் என வரவேற்றதையும் நாம் இங்கு கருத்தில் கொள்ள வேண்டும். "பள்ளி மறுப்பு" சிந்தனையின் தந்தை என வள்ளலாரை நாம் கருதலாம். வள்ளலார் ஓதாது உணர்ந்தார். தமக்கென தாமே புதிய பாதை வகுத்துக் கொண்டார்.

வள்ளலார் வாழ்க்கையில் தெளிவான பரிணாம வளர்ச்சி காணப்படுகிறது. முருகனை வழிபடும் நிலையிலிருந்து அனைத்து உயிர்களையும் ஒருங்கிணைந்துகாணும் ஆன்மநேய ஒருமைப்பாட்டை அநுபவ நிலையில் உணரும் உயர்வடைகிறார். அதே நேரத்தில் சமுதாயத் தொண்டு, சீர்திருத்தம், புதிய உலகம் காணும் செயல்திட்டம் முதலியவற்றையும் சிந்தனையிலும் செயலிலும் வெளியிடும் போக்கு வளர்ந்து செல்கிறது. வள்ளலார் ஆன்ம நெறியாளர்; சிந்தனையாளர்; புரட்சியாளர்; செயல் வீரர். பசிப்பிணி நீக்க அவர் செய்த தொண்டு புதிய வரலாற்றின் தொடக்கமாகும்; இது மட்டுமல்ல. சிந்தனைகளையும் செயல் திட்டங்களையும் நிரந்தரமாக்க நிறுவிய பெருமையும் அவரைச் சேரும். எனவே அவர் பிற சமயச் சிந்தனையாளர்களிடமிருந்து மாறுபட்டு, தனக்கென புதுவழி கண்டவராக அமைகிறார். தமிழக, இந்திய, உலகச் சூழ்நிலைகளை வெகு ஆழமாக அறிந்தவராக அவர் காணப்படுகிறார். கரை கடந்த கல்வி ஞானமும் தீர்க்க தரிசனமும் அவரிடம் காணப்படுகின்றது. காலத்தை வென்று நிற்கும் அவரது இலக்கியம் இவ் உண்மையை உணர்த்தும். அவர் எங்ஙனம் கற்றார்? கருவிலே

அவர் திருவுடையவர் என்பதில் ஐயமில்லை. ஓதாது உணரும் பாங்கும் அவரிடம் மிகுந்து இருந்தது; வாழ்க்கை முழுவதும் இடைவிடாது கற்று வந்த அவரின் அறிவுத் திறனை வியக்காமல் இருக்க முடியவில்லை. ஆனால் அவர் எங்ஙனம் கற்றார் என்பதை முழுமையாக விளக்கக்கூடிய வரலாற்றுச் சான்றுகள் இல்லை.

# 17. ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமை

--மு. சண்முகம்

ஒருமைப்பாடு இல்லாத காரணத்தால் மனிதன் பல துன்பங்களை அனுபவித்து வருகின்றான். பல ஒருமைப்பாடுகளைப் பற்றிப் பேசிவரும் நாம் அவைகளை செயல் முறையில் செய்யாத குறையால் துன்பமடைந்து வருகின்றோம். சமய, பொருளாதார, சமுதாய, தேசிய, மொழி இப்படியாக பல ஒருமைப்பாடுகல் இன்று பேசப்பட்டு வருகின்றன. இவைகளுக்கு அடிப்படையான ஆன்மநேய ஒருமைப்பாட்டினை இராமலிங்க அடிகளார் சமரச சுத்த சன்மார்க்கம் என்ற அவருடைய தத்துவத்தில் வலியுறுத்தியுள்ளார்.

மனிதன் வெறும் தசைக் கூட்டின் மொத்த உருவம் அல்ல. அவனிடம் உள்ள அழியாத, என்றும் உள்ள உண்மையே மனிதனை மனிதன் ஆக்குகின்றது. எல்லா உயிர்களிடத்திலும் உள்ள இந்த உண்மை, மனிதனிடம் உயர்ந்த நிலையில் உள்ளது. எவ்வளவோ வளர்ச்சிக்குப்பின் மனிதன் தன் உணர்வு பெற்று குறிப்பிட்ட நிலைக்கு வளர்ந்துள்ளான். இனி வளர வேண்டியவை இறைஉணர்வு, உண்மை உணர்வு. உள்ளதன் உணர்வுகள் ஆகியவைகள் உள்ளன. இப்படி வளர்ந்து வளர்ந்து வரும் உண்மையையே 'ஆன்மா', 'உயிர்' என இந்திய தத்துவத்தில் குறிப்பிடுகின்றனர். இதன் அடிப்படையில் உறவுகள் அமையவேண்டும். அப்படி அமையும் உறவுகள் உரிமைகளாகவும் பரினமிக்கும் என இராமலிங்க அடிகளார் ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமை என்ற கருத்தின் மூலம் வலியுறுத்துகின்றார்.

இராமலிங்க அடிகளாரின் தத்துவம் சமரச சுத்த சன்மார்க்கம் ஆகும். சமரச சுத்த சன்மார்க்கத்தில் ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமை தலையாய கருத்து. ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமைக்கு வழி சீவகாருண்யம் ஆகும். ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமையை உணர்ந்தவர்கள் பிறப்பு--இறப்பு வட்டத்திலிருந்து நீங்கி மரணத்தை வென்று விடலாம் என்பது இராமலிங்க அடிகளாரின் கொள்கை. சீவகாருண்யத்தை விளக்கி இராமலிங்க அடிகளார் ஆற்றிய சொற்பொழிவு அவரது அடியவர்களால் சிறிய புத்தகமாக வெளியிடப் பட்டு உள்ளது. இதில் சீவகாருண்யமே, அன்பே--மோட்சத்தின் திறவுகோல் என்று இராமலிங்க அடிகளார் வலியுறுத்தியுள்ளார்.

சமரச சுத்த சன்மார்க்கம் என்ற தனது தத்துவத்தை அடைவதற்கு முன்னர் அவர் பல தத்துவங்களையும், சமயங்களைவிட ஆராய்ந்து, அனைத்து தத்துவங்களுக்கும், சமயங்களுக்கும் அடிப்படையில் அமைந்த உண்மைகளை உணர்ந்தார். இந்த தத்துவங்களையும், சமயங்களையும் மனிதன் கடக்கவேண்டிய படி நிலைகள் என்பதையும், மனிதன் நிலை இவைகளுக்கும் மேல் உயர்ந்தது என்பதையும் உணர்த்தவே 'சுத்த' சன்மார்க்கம் என்று பெயரிட்டார்.

ஆன்மநேய ஒருமைப்பாட்டு உலகு காண இராமலிங்க அடிகளார் பாடிய பாடல்கள் பலவற்றை திரு அருட்பாவின் ஆறாம் திருமுறையில் காணலாம். ஆறாம் திருமுறையை வெளியிட (அச்சிட) அவர் அனுமதிக்கவில்லை. அது சன்மார்க்கத்தை வாழ்க்கையில் கடைபிடிக்கும் தொண்டர்களுக்கு மட்டும் என 'மறைமுக போதனைகளாக' அவர் வைத்திருந்தார். அது அவர் வாழ்ந்த காலச்சூழலின் விளைவு.

அவற்றைப் புரிந்து கொள்ள முயன்றவர்களைவிட, கண்மூடித்தனமாக எதிர்த்தவர்கள் அதிகமாக வாழ்ந்த காலம்.

இராமலிங்க அடிகளார் புதிய ஒரு சமுதாயத்தைக் காணவிரும்பி செயல்பட்ட சமுதாய தத்துவஞானி ஆவார். சன்மார்க்க உலகு என்ற ஆன்மநேய ஒருமைப்பாட்டு உலகை அமைக்க அவர் செய்த முயற்சிகள் இன்னும் வடலூரில் காணப்படுகின்றன. தன் உடன் இருந்த அடியவர்கள் தன்னைப்புரிந்து கொள்ள இயலாத நிலையில் இருந்த போதும், சித்தி வளாகம் மாளிகையில் தனித்து மரணமில்லாப் பெருவாழ்வுக்கு--தன் உடலை பிறர்கண்களில் இருந்து மறைத்துக் கொள்ள விரும்பிய காலத்திலும் தன்னை நாடி வந்தவர்களுக்கு ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமையைப் பற்றி பேசி வந்தார்.

சமுதாய சிந்தனையாளர்களுக்கும் மக்களுக்கும் உள்ள தொடர்பு கண்ணிற்கும் இமைக்கும் உள்ள தொடர்பைப் போன்றது. இராமலிங்க அடிகளார் ஓர் புறம் புதிய சமுதாயத்தை ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமையில் அமைக்க ஆயத்தங்கள் செய்தார். அவரை எதிர்த்தவர்களை சந்திக்கவும், உடன் இருந்தவர்களின் ஒழுங்கீனங்களைத் திருத்தவும், தன்னை வளர்த்துக்கொள்ளவுமாக அவர் இருந்தார்.

இராமலிங்க அடிகளாரின் கொள்கைகள்--குறிப்பாக ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமை என்ற இந்த தத்துவக் கொள்கை, அகில உலக அளவில் பரவக் கூடிய கருத்தாழமும் தேவையும் உடையனவாக இருந்தும், இவரது அடியவர்கள் திறமையின்மை காரணமாக குடத்துள் விளக்காக உள்ளது. ஆயினும், இராமலிங்க அடிகளாரே இக்கொள்கைகள் பிற்காலத்தில் மற்ற நாட்டவகளால் வரவேற்கப்படும் என்று கட்டியம் கூறிச் சென்றுள்ளார். இன்று பிரம்மஞான சபை என்று வழங்கப்படும் தியோசிபிக்கல் சொசைட்டி என்ற அகில உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டுச் சமுதாயம் இராமலிங்க அடிகளாரை தங்கள் சங்கம் தோன்ற மூலகாரணமாக இருந்த சிலருள் ஒருவர் எனக் கூறுகின்றனர். 'பகாய் நம்பிக்கை' என்ற புதிய மதத்தின் தத்துவம் இராமலிங்க அடிகளார் கூறிய அடிப்படைத் தத்துவங்களோடு ஒப்புதல் உடைய ஒன்றாக உள்ளது.

ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமையைப் பற்றி இராமலிங்க அடிகளார் ஆறாம் திருமுறையில் அதிகப்படியாகப் பாடியிருந்தாலும் ஒருமைப்பாட்டு உரிமையைப் பற்றி தெய்வமணிமாலையிலேயே குறிப்புகள் காணப்படுகின்றன. இது அவர் மிகவும் இளமையாக இருந்த காலத்தில் பாடிய பாடல்கள் ஆகும். சன்மார்க்க சங்கம் பிற்காலத்தில் துவங்கினாலும், ஒருமையுடன் இறைவன் புகழை நினைக்கும் உத்தமர்கள் உறவை வேண்டி ஆரம்ப காலத்தில் பாடினார். பின்னர் பெற்றார். ஆன்மநேய ஒருமைப்பாட்டை பூரணமாக அனுபவித்த நிலையிலேயே--அடிகளார் தம் உயிரை பிற உயிர்களிலும், பிற உயிர்களைத் தம் உயிரிலும் கண்ட நிலையிலேயே வாடிய பயிரைக் கண்டு வாடி, பாடி இருக்கின்றார்.

ஆன்மநேய ஒருமைப்பாட்டினை உணர்ந்த இராமலிங்க அடிகளார் அதன்வழி அனைத்து ஒருமைப்பாடுகளையும் அடைந்தார். மற்றவர்களும் அடைய வழி அமைத்துக் கொடுத்தார். சமய ஒருமைப் பாட்டினைப்பற்றியும், தத்துவ ஒருமைப்பாட்டினைப் பற்றியும், மொழி ஒருமைப்பாட்டினைப் பற்றியும், சமுதாய

பொருளாதார ஒருமைப்பாட்டினைப் பற்றியும் வலியுறுத்தி அடிகளார் பல பாடல்கள் பாடியுள்ளார்.

ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமையினை அடைவதற்கு இறை அருள் இன்றியமையாத ஒன்றாகும். உயிர் தன்னை உணர்ந்தும், இறைவனின் அருளையும் அடைந்தால் ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமை இயலும் என இராமலிங்க அடிகளார் திருஅருட் பாக்களில் பாடியுள்ளார். அவர் வாழ்வில் இறைஅருளைப் பெற்றபின் ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமையை அடைந்ததை திரு அருட்பாக்களில் காணலாம்.

ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமைக்கு வழி சீவகாருண்ய ஒழுக்கம் என இராமலிங்க அடிகளார் கூறியுள்ளார். சீவகாருண்யத்தைப் பற்றி தமிழ் இலக்கியங்கள் கூறி இருப்பினும், அதை ஒழுக்கமாக்கி, சமயவாழ்வில் ஓர் சாதனை ஆக்கிய பெருமை இராமலிங்க அடிகளாரையே சாரும். சீவகாருண்யத்தைப்பற்றி இராமலிங்க அடிகளார் நீண்ட சொற்பொழிவும், பல பாடல்களும் இயற்றி உள்ளார். அவருடைய சமுதாய-சமய-ஆன்மீக நிறுவனங்களில் சத்திய தருமச்சாலை சீவகாருண்யத்தின் அடிப்படையில், பசி தவிர்த்தலுக்காக ஏற்படுத்தப்பட்டது. சத்திய ஞான சபை எல்லாம் வல்ல இறைவனை ஒளி வடிவில் வழிபட்டு ஆன்மநேய ஒருமைப்பாட்டினை உணர்வதற்காக ஏற்படுத்தப்பட்டது. சித்திவளாகம் திருமாளிகை மரணமில்லாப் பெருவாழ்வை நோக்கிச் செல்லும் அன்பர்களுக்காக நிறுவப்பட்டது.

இன்றைய உலகில் மனிதன் படும் துன்பங்களுக்கும், துயரங்களுக்கும் காரணம் மனிதனின் புறநோக்கும், அறியாமையுமாகும். சிந்தித்துச் செயல்படும் கல்வித்திட்டமோ, தனிந்தியங்கும் தன்மையோ மனிதனுக்கு இல்லாத நிலை. அனைத்து உலக சிக்கல்களும் தனிமனிதனில் நிலை கொண்டுள்ளன. தனி மனிதர்கள் திருந்துவார்களேயாயின் சிக்கல்கள் தீர்க்கப்படும். அகப்புரட்சி ஏற்படுத்த இன்றைய சிந்தனையாளர்களும் ஆன்மநேய ஒருமைப்பாட்டினை, உயிர்களின் பிரிக்க இயலா நிலையையும், கூட்டு வாழ்வின் தேவையையும் வலியுறுத்தி வருகின்றனர். இன்றைய தனிமனிதனின் சிக்கல்களுக்கும் சமுதாய சிக்கல்களுக்கும் ஆன்மநேய ஒருமைப்பாடு சிறந்த தீர்வாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

## 18. வள்ளலாரும் காந்தியடிகளும்

--ச. பாண்டியன்

வள்ளலாரும் காந்தியடிகளும், 19-ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் தோன்றிய இருபெரும் ஆன்மீகப் பெரியார் ஆவர். வள்ளலார் 1823 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 5-ம் நாள் பிறந்தார். நாற்பத்தாறு ஆண்டுகள் கழித்து அதே அக்டோபர் மாதம் இரண்டாம் நாள் காந்தியடிகள் தோன்றினார். வள்ளலார் தம் இளமையில் பள்ளியில் சென்று படித்தது குறைவே. இறையருளால் அவர் பெற்ற கல்வியே மிகுதி என்பர். மோகன் தாஸ் கரம்சந்த் காந்தியோ பள்ளி கல்லூரிகளுக்குச் சென்று பயின்று மேனாட்டிற்குச் சென்று படித்து பாரிஸ்டர் பட்டம் பெற்றார். லண்டனில் இருந்த காலத்தில் பல சமய நூல்கள், சிறந்த இலக்கியங்கள், ஆரோக்கிய சிந்தனைகளைத் தாங்கிய உணவு நெறி நூல்கள் முதலியவற்றை ஊன்றிக் கற்றார். பள்ளித்தேர்வுகளுக்கு எனப் படித்தவற்றை விட, அவர் பொதுவாகப் படித்தவை மிகுதி. பின்னர் தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த காலத்தில் நிறைய நூல்களைப் படித்திருக்கின்றார். தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பிய போது 25,000 நூலகளுக்கு மேல் கொணர்ந்திருக்கின்றார். பொது நூல்களைக் கசடறக் கற்று அவற்றின் படி நிற்கத் தலைப்பட்டவர் காந்தியடிகள். ரஸ்கின் எழுதிய கடையனுக்கும் கடைத்தேற்றம் என்ற நூலை கற்ற பிறகுதான் காந்தியடிகல் வாழ்வில் ஒரு புரட்சிகரமான மாற்றம் ஏற்பட்டது எனலாம். அந்த நூலில் கண்ட சிறந்த மூன்று கருத்துக்களைத் தம் வாழ்க்கையில் மேற்கொண்டு வாழத் தலைப்பட்டார்; விளைவு--மகாத்மாவாக உயர்ந்தார். மந்திர சக்தி வாய்ந்த அந்த மாபெரும் நூலின் சாரமாகக் காந்தியடிகல் குறிப்பிடுவதாவது;

1. தனி மனிதனின் நலன் சமுதாய நலனில் அடங்கி இருக்கிறது.

2. ஒரு நாவிதரின் பணியும் ஒரு வழக்கறிஞரின் சேவையும் சமமதிப்புடையன.

3. மேற்கொள்ளும் தொழில்களில் உழவும், கைத்தொழிலுமே சிறந்தவை.

இயல்பாகவே துறவு மனம் கொண்டிருந்த வள்ளலாரின் உள்ளம் உலக வாழ்க்கையில் ஒட்டவில்லை. அதனை உணராது அவருக்குத் திருமணம் நடத்தி வைக்கப்பட்டபோதும் அவர் உலகியலில் ஈடுபடவில்லை. திருக்கோவில்கள் தோறும் சென்று வழிபட்ட வள்ளலார் தமது 35ஆம் வயதில் வடலூரை அடுத்த கருங்குழியில் தம் உள்ளத்திற்கு இசைந்த புதிய வாழ்க்கைத் தொடங்கினார். மோகன் தாஸ் காந்தி தமது 13ஆம் வயதில் 13 வயது அடைந்த கஸ்தூரிபாயை திருமணம் செய்து கொண்டார். தொடக்கத்தில் மனைவியை ஆட்டிப்படைக்கும் கணவனாகத் தம்மிடம் இருந்த இச்சை மிகுதியால் தம் விருப்பம் போல் நடக்கலானார். பொது வாழ்க்கையில் ஈடுபடத் தொடங்கிய பிறகு சிற்றின்ப வாழ்வு தம் சேவைக்குப் பெரும் இடையூறாக இருக்கிறது என்பதை அறிந்து அச்சிற்றின்ப வாழ்வைத் துறக்க முடிவு செய்தார். தமது 37-ஆம் வயதில் தம் துணைவியாரின் சம்மதத்துடன் சிற்றின்பம் தவிர்த்துப் புதிய வாழ்வைத் தொடங்கினார். திருமணம் செய்து கொண்ட ஒருவனும் ஒருத்தியும் சிற்றன்பத்தைத் துறந்து ஒருவர்க்கு ஒருவர் துணைநின்று அன்புமீதூர்ந்து உயர் வாழ்க்கையை மேற்கொள்ள முடியும் என்பதனை உணர்ந்து அவ்வாறே வாழ்ந்து உணர்த்தினார்.

இருள் நீக்கி அருள் சுரக்கும் மொழிச் சுடராய் விளங்கும் அருட்பாவை வழங்கிய வள்ளலார் 1865-இல் சன்மார்க்க சங்கத்தைத் தோற்றுவித்தார். சாதி சமய சழக்கு அறுக்க வேண்டினார். 1867-ல் சத்திய தருமச் சாலையை நிறுவிப் பசித்தோர் அனைவர்க்கும் உணவளிக்க முற்பட்டார். 1872-இல் வடலூரில் ஞான சபை அவரால் தோற்றுவிக்கப்பட்டது.

தென்னாப்பிரிக்காவில் நிலவிய நிறவெறியை எதிர்த்து சத்தியாகிரகம் என்னும் புதிய போர்முறையைத் தோற்றுவித்து அதனைப் பயன்படுத்தி வெற்றி கண்டு 21 ஆண்டுகள் கழித்து இந்தியா திரும்பிய காந்தியடிகள் ஓர் ஆண்டு இந்தியா முழுமையும் சுற்றிப் பார்த்து இந்தியாவில் சத்தியாகிரக சபையை நிறுவி செயல்பட ஆயத்தமானார். கோச்ராப் சபர்மதி ஆகிய இடங்களில் ஆசிரமம் அமைத்துத்தம் தொண்டு வாழ்க்கையைத் தொடர்ந்தார். பட்டதாரிகளும், பட்டாதாரிகளும் ஆக்கிரமித்துக் கொண்டு ஆண்டுக்கு ஒருமுறை கூடிக் கலைந்து கொண்டிருந்த காங்கிரசில் சேர்ந்து அதனைச் சமுதாயத்தில் இருந்த எல்லாப் பொது மக்களும் ஈடுபடும் ஒரு பேரியக்கமாக மாற்றினார். மேன்மை தங்கிய மகாராசாவுக்கு என்று மனு கொடுத்துக் கொண்டிருந்த காங்கிரசை அகிம்சை வழி விடுதலைக்குப் போராடும் ஒரு சக்திவாய்ந்த -- பிரிட்டிஷார் கண்டு நடுங்கும்படியான ஓர் அற்புதமான இயக்கமாக மாற்றினார். ஒத்துழையாமை, சட்டமறுப்பு ஆகிய நெறிகளைக் கடைபிடித்துக் கோடானகோடி இந்தியர்களை ஒருமைப்பாட்டு உணர்வுடன் ஒரே குரலில் இந்தியாவை விட்டு வெளியேறு என உரக்கச் சொல்லச் செய்து ஆன்மீக ஆற்றலால் ஆங்கில ஆட்சியை அகலச் செய்தார். ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடிய அந்த நேரத்தில் விடுதலை பெற்ற பாரதத்தில் விடுதலை காத்து வாழத்தகுதியுடைய மக்களாக இந்திய மக்களை உருவாக்க முற்பட்டார்; பல்வேறு சங்கங்களைத் தோற்றுவித்தார். நிர்மானத் திட்டங்கள் பலவற்றை உருவாக்கி அத்திட்டங்களின் படி புதிய ஏற்றதாழ்வற்ற ஆன்மநேய ஒருமைப்பாடுடைய சமுதாயத்தைத் தோற்றுவிக்க ஊழியர்களை உருவாக்கினார். தாமே தலைவராகவும் தாமே முதல் தொண்டராகவும் இருந்து செயலாற்றினார்.

வள்ளலார் தாம் விரும்பியவாறே 1874-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30-ஆம் நாள் மேட்டுக்குப்பத்தில் உள்ல சித்தி வளாகத் திருமாளிகையில்ல் சித்தி பெற்றார்; அருட் சோதியானார். மரணமிலாப் பெருவாழ்வு அவருக்குக் கிடைத்தது. மோகன் தாஸ் காந்தியிடமிருந்து வீசிய அருட்சுடர் அவரையே மகாத்மாவாக ஆக்கியது. அவர் தமது சத்தியத் தோட்ட வாழ்வில் 125 ஆண்டுகள் வாழவேண்டுமென விரும்பினார். அப்பால் விரைவில் உயிர் துறக்க வேட்கை கொண்டார். ஒருவன் தம்மை துப்பாக்கியால் சுட அதனைத் தாங்கி, அவன் மீது யாதொரு வெறுப்பு மில்லாது முகமலர்ச்சியோடு உதட்டில் ஆண்டவன் திருநாமத்தோடு உயிர்துறத்தல் வேண்டும். அப்போதே தம்மை மகாத்மா என அழைத்தல் சாலும் எனத்தமது எண்ணத்தை-விருப்பத்தை வெளியிட்டார். அதுபோலவே பிரார்த்தனைக் கூட்டத்திற்கு வந்து கொண்டிருந்த போது கோட்ஸே என்பவன் துப்பாக்கியால் சுட 'ஹே ராம்' என முழங்கியவாறே அன்றலர்ந்த செந்தாமரை யன்ன முகத்தோடும், பூத உடலினின்றும் விடுதலை பெற்றார்.

"தேட்டிலே மிகுந்த சென்னையில் இருந்தால், சிறு
குறும்என்று உளம் பயந்தே
நாட்டிலே சிறிய ஊர்ப்புறங்களிலே, நண்ணினேன்"

என்பார் வள்ளலார். செல்வம் மிகுந்த சென்னையில் வாழ்வது துன்பமும் குழப்பமும் தவறும் சண்டையும் மிகச் செய்யும் என அஞ்சி இருக்கிறார் வள்ளலார். இன்னும் நாம், நாட்டுபுறங்களை விட நகர்ப்புறங்களிலே சூதும் வாதும் பொய்மையும் களவும் மண்டிக் கிடக்கும் போலி ஆடம்பர ஆரவார வாழ்க்கையைக் காண்கின்றோம். எளிய வாழ்க்கையும் உயர்ந்த சிந்தனையும் வேண்டுவோர்க்கு இந்நகர நாகரிகம் ஏற்புடைத்தாய்த் தோன்றுவது இல்லை. மேனாட்டுச் சரக்கான நகர நாகரீகம், பாரதப் பண்பாட்டிற்கு முற்றும் புறம்பானது என்று காந்தி அடிகளும் கண்டார். மேலை நாகரீகத்தை விடுக்க வேண்டும் என்பதற்கு உரத்த வேண்டுகோள் விடுத்த காந்தியடிகள் தம் இந்திய சுயராச்சியம் என்ற நூலில் உண்மை பற்றி எழுதினார். அத்துடன் அல்லாமல் தமது வாழ்க்கையையும் எளிமை நிறை வாழ்க்கையாக, உயர்ந்த சிந்தனை நிறை வாழ்க்கையாக அமைத்துக் கொண்டார். சந்தடிமிக்க நகர்ப்புறங்களுக்கும் ரயில்வே தண்டவாளங்களுக்கும், 30 கல் அப்பால் உள்ளே இருக்கும் தீமை புகார கிராமங்களில் பாரதப் பண்பாடு மிலிர்வதைக் கண்டார். அத்தகைய குக்கிராமம் ஒன்றில் வாழ்வதையே விரும்பினார். அவ்வாறே சபர்மதி ஆசிரமத்திலிருந்து வெற்றியோடு வருவேன்; இன்றேல் என் பிணம் கடலில் மிதக்கும் என வீரசபதமிட்டுத் தண்டியாத்திரை மேற்கொண்ட காந்தியடிகள் வெற்றி பெற்ற பின்னர் குக்கிராமம் ஒன்றிலே வாழ விழைந்து இந்தியாவின் மையப்பகுதியான வார்தா கிராமத்தை அடுத்த சேவா கிராமத்தில் ஆசிரமம் அமைத்துத் தங்கலானார். நல்லசாலையும் மின்வசதியும் கூடப்புகாத அந்தச் சிறு கிராமத்தில் தங்கித் தொண்டு செய்யலனார். அவர்தம் கடைசிக்காலத்திலும் டில்லியில் தங்கிய போதும் கூட தோட்டிகள் தங்கும் குடிசைப் பகுதி ஒன்றில் வாழ்ந்தார். வெற்று ஆடம்பரம், பிறருக்குக் கிடைக்காததைத் தாம் மட்டும் துய்க்கவேண்டும் என்னும் நாட்டம், இவையெல்லாம் இம்சையின் பாற்படும் எனக்கொண்டார். தமிழகத்தில் விவசாயிகளின் உடைகளைப் பார்த்துவிட்டுத் தம்மை அரை நிர்வாணப் பக்கிரியாக மதுரையில் மாற்றிக்கொண்டார்.

வள்ளலார் ஆன்மீகத்தின் அடியையும் முடியையும் கண்டார். தனித்திருந்து, பசித்திருந்து, விழித்திருந்து தவம் மேற்கொண்டவர். ஊனை உருக்கி, உடலினை வருத்தி ஒளிமயமானவர். காந்தியடிகள், உலகெல்லாம் ஒன்று எனக் கண்டு உற்ற நோய் நோற்று, பிறர்க்கு உறுகண் செய்யாது, தவமே உருவாய், ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கி, காந்தம் நிறை கள்வராய் விளங்கினார்.

பாரதத்தில் சான்றோர் மரபிற்குக் குறைவில்லை. வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபில் வந்தவர்களே இவ்விருவரும். பாரதத்தின் வடக்கில் ராமகிருஷ்ண பரமஹம்சா, சுவாமி விவேகானந்தர், ராசாராம் மோகன்ராய், தயானந்த சரஸ்வதி போன்ற சமுதாய சீர்திருத்தச் செம்மல்கள் வாழ்ந்த காலத்தில் தெற்கே வள்ளலார் வாழ்ந்தார். அரசியல் விழிப்பு அதிகம் தோன்றாத காலம் அது. வள்ளலார் 'கருணையிலா ஆட்சி கடுகியொழிக' என்ற போது வேற்றுநாட்டு ஆட்சி விலகுக எனச் சொன்னார் என்று கொள்வதற்கு இல்லை. மனித வாழ்வின் எல்லாத்துறைகளிலும், கருணையின் கை சிறந்து ஓங்கவேண்டும் என்ற விருப்பத்தின் வெளியீடே அது என்று கொள்ள வேண்டும். காந்தியடிகளின் காலத்தில் அரசியல் விழிப்புணர்ச்சி ஏற்பட்டு வெள்ளையர் ஆட்சி வீழ்ந்து ஒழிய வேண்டும் என்ற எண்ணம் பரந்து நின்றது. அவர் அஹிம்சை வழி காட்டி, அறத்தலைமை பூண்டு அரசியல் வானில் பெரும் போர் மறவராய்த் திகழ்ந்தார். அவர் நடத்திய

விடுதலைப்போர் ஆங்கில ஆட்சியை அதிரச் செய்தது. இறுதியில் அவர் விரும்பியவாறே ஆட்சியை நம்மவரிடம் ஒப்படைத்துவிட்டு ஆங்கிலேயர் அகன்றனர்.

வள்ளலாரும் காந்தியடிகளும் வேறுபட்ட தலைமுறைகளிலும், மாறுபட்ட சூழ்நிலைகளிலும் வாழ்ந்தார்கள் என்றாலும் கொள்கையளவிலும் நடைமுறையிலும் அவர்களிடையே ஒருமைப்பாடு இருப்பதைக் காணமுடிகின்றது என்பார் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கள். வள்ளலாரும் காந்தியடிகளும் ஆன்மா வேறு; அது குடிகொண்டிருக்கும் உடல் வேறு என்ற கருத்துடையவர்களாய் இருந்தனர். ஆன்மா அழியாதது என்றும் நம்பினர். பல உடல்களை பெற்றிருப்பினும், மக்களின் ஆன்மா ஒன்றே. சூரிய ஒளிக்கதிர்கள் பலவாய்த் தோன்றினும் அவற்றின் மூலம் ஒன்றாய் இருத்தலைப் போலவே பல்வேறு உருவங்களுடைய மக்களின் ஆன்மாவும் ஒன்றே எனக் கருதினார் காந்தியடிகள்.

பிறப்பும் இறப்பும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. நெருநல் உளன் ஒருவன் இன்றில்ல எனும் பெருமை படைத்தது இவ்வுலகு. 'உடலோடு ஆன்மா அழிந்து விடாமல் தன் வினைகட்கு ஏற்ப மறுபிறவிகள் எடுக்கின்றது' என இவர்கள் நம்புகின்றனர். 'எழுபிறப்பும் ஏமாப்பு உடைத்து' என்பார் வள்ளுவர். காந்தியடிகள் தம் மறுபிறப்பில் ஒரு அரிஜனகப் பிறந்து அரிஜன மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை நன்கு நூற்றுக்கு நூறு அறிந்து அவைகளைத் தீர்க்கத் தாம் பாடுபட வேண்டும் என விரும்பினார்.

ஆன்மாவில் நம்பிக்கை உடைய சிலர் உடல் அழியக் கூடியது என்றும், எனவே அதைப்பற்றிக் கவலைப்படாது வாளாது இருக்கலாம் என்றும் கூறுவர். ஆனால் வள்ளலாரும் காந்தியடிகளும், உடம்பினையும் வேண்டியவாறு ஓம்பி தூய்மை உடையதாய் வைத்துக் கொள்ளுதலை விரும்பினர். உடம்பினை இழுக்கு என்று கருதாமல் அதனையும் போற்றி, அதமை ஒளிமயமாக ஆக்கி, ஜோதியாய் உயர்த்தலாம் என்றார் வள்ளலார். காந்தியடிகளும் தன்னுடைய விரத வாழ்க்கையால் தன் உடலைப்பேணி காண்போர்க்குப் பொன்னுடலினாராய்க் காட்சியளித்தார். உடல் நலத்திற்கு ஏற்ற உணவு பற்றி, பிற வாழ்க்கை முறைகள் பற்றி எல்லாம், தம் வாழ்க்கையிலேயே சோதனைகள் நடத்திப் பார்த்து, ஆரோக்கியத் திறவுகோலை அளித்தவர் காந்தியடிகள்.

ஆன்மாவில் நம்பிக்கை கொண்டிருந்த இருவரும் 'தெய்வம் ஒன்றே' என்றே நம்பினர். தெய்வம் பல சொல்லிப் பகைத்தீமை வளர்த்திடும் மூடரைச் சாடுவர். ஆண்டவனின் பெயரெதெனக் கேட்டாலோ எல்லாத் திருநாமங்களும் அவன்றன் திருநாமமே எனுமாறுரைப்பர். காந்தியடிகள் சத்தியமே கடவுள் என்றார்; ஆயிரம் நாமங்களும் ஆண்டவனுக்குப் போதுமானதல்ல. படைப்புக்கள் எத்தனையுண்டோ அத்தனை திருப்பெயர்கள் ஆண்டவனுக்குச் சூட்டலாம். எனவேதான் பெயரில்லாதவனாக ஆண்டவனைக் காண்கின்றோம். சத்தியத்தில் சக்தியில் ஆண்டவன் இல்லை என்பார்க்கும் நம்பிக்கையுண்டு. எனவே காந்தியடிகள் சத்தியமே கடவுள் எனக் கொள்வது சாலச் சிறந்ததெனக் கொண்டார்.

உண்மையைக் காண்பது எப்படி? உள்ளொளியின் மூலம் உணரலாம் என்பார் காந்தியடிகள். ஆண்டவனின் குரலே மனச்சாட்சியின் உட்குரல். ஆண்டவனின் உண்மையான குரலை நம் முன்னிருந்து கேட்கலாம் என்றும் அதற்குத்தக்க ஒழுங்கான வாழ்க்கை நியதிகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்றும் காந்தியடிகள்

கூறுகிறார். தாம் அவ்வுண்மையின் கீழ் உள்ளக்குரலைக் கேட்டிருப்பதாகவும் தெரிவிக்கிறார். ஆண்டவன் ஒவ்வொருவருக்கும் தம்மை இக்குரல் மூலம் உணர்த்த முற்படுகிறான், ஆனால் நாமோ நமது காதுகளை இக்குரலுக்குச் சாய்க்காமல் அடைத்துவிடுகிறோம் என்றே காந்தியடிகள் நம்பினார். வள்ளலாரு பாதியிரவில் எழுப்பி சோதியளித்து உள்ளத்தே சூழ்ந்து கலந்து பேரின்பம்தாம் பெற்றதைப் பாடுகிறார்.

கடவுளை எங்கும் காணலாம் என்றும் விக்கிரக வழிபாடு வேண்டுவோர் மேற்கொள்ளட்டும் என்றும் காந்தியடிகள் கருதினார். வள்ளலாரும் உருவ வழிபாட்டை வேண்டி நிற்கவில்லை. இருவரும், பக்குவப்படாத மனநிலை கொண்டோர் விக்கிரக வழிபாட்டை மேற்கொள்வது தவறல்ல; அது உருவ வழிபாட்டுக்கு உயர்த்தும் படியெனக் கொண்டனர்.

வழிபாடும் தனிநபர் வழிபாட்டைவிட, கூட்டு வழிபாட்டை இருவரும் விரும்பி ஏற்றனர். தாம் அமைத்த சத்திய ஞானசபையில் எல்லோரும் வழிபாடு செய்யும் வகையில் கூட்டு வழிபாட்டுக்கு ஏற்பாடு செய்தார் வள்ளலார். காந்தியடிகளும் தம் ஆசிரமத்தில் வெளியிடக் கூட்டங்களிலும் சர்வ சமயக் கூட்டுவழிபாடு நடத்தினார். இங்ஙனம் இவர்கள் சமய சமத்துவத்தை நிலைநாட்ட வழிவகுத்தனர்.

சமயங்களிடையே ஒருமைப்பாடு காணத் துடித்தவர்கள் வள்ளலாரும் காந்தியடிகளும். மருட்சாதி சமயங்கள் மதங்களாச்சிரம வழக்கெலாம் மண்மூடிப்போக விழைந்தார் வள்ளலார். காந்தியடிகளும் மதமெனும் பேய் பிடித்தாடாத நிலை வேண்டிநின்றார். எல்லார் சமயங்களின் சாரமும் ஒழுக்கமே என்பதையுணர்த்தி எல்லாச் சமயங்களும் ஒன்றே குலம் ஒருவனே தேவனும் எனக் காட்டுவனவே யாகலின், பல்வேறு மதத்தாரிடையே உயர்வு தாழ்வு கற்பித்துப் பூசலிடல் வேண்டாம் என்றார். தம்மைச் சனாதன இந்து என அழைத்துக் கொண்டாலும் எல்லாச் சமயங்களையும் சமமாகப் பாவிக்கும் போக்கு அவரிடம் இருந்தது. சமமதிப்பளித்தல் அனைவர் கடன் என்றார் அவர். வகுப்பு ஒற்றுமைக்காகவே தம்மின்னுரை ஈந்தார் அண்ணல் காந்தியடிகள்.

சமயநோக்கில் மட்டுமின்றி சமுதாயத்துறையிலும் இருவரும் ஒரே நோக்குடையராய்த் திகழ்ந்துள்ளனர். சமுதாயத்தில் காணப்படும் கேடுகளனைத்தும் தீர்ந்தகல வேண்டுமென இருவரும் விரும்பியுள்ளனர். சமுதாய அமைப்பும் சிந்தனையும் சீர்திருத்தி புரட்சிகரமாக ஒரு மாற்றம் பெற்று புத்தம் புதிய சமுதாயம் உருவாக வேண்டும் என இருவரும் விழைந்துள்ளனர்.

சாதி, சமய வேறுபாடுகளைக் கடந்து ஆன்மநேய ஒருமைப்பாட்டை வலியுறுத்தியவர் வள்ளலார். காந்தியடிகளும் சாதிகளற்ற, சமயக் காழ்ப்பற்ற சமுதாயத்தைக் காண விரும்பினார். ஜாதியின் பெயரால் தீண்டாமை அனுசரிக்கப்படுவதை விலக்கப் பாடுபட்டார். தீண்டாமை எனும் சாபக்கேட்டை சமுதாயத்தினின்று போக்க இந்தியா முழுவதும் பயணம் செய்து சமத்துவக் கருத்துக்களைப் பரப்பி மிகத் தாழ்த்தப்பட்ட நிலையிலிருந்த அரிஜனங்களின் முன்னேற்றத்திற்காக, ஜாதி இந்துக்கள் பாடுபடும் வகையில் அரிஜன சேவக சங்கத்தைத் தோற்றுவித்தார். தாழ்த்தப்பட்டவர்கள் என்று ஒரு சமூகத்தை ஒதுக்கி, அவர்களுக்கென தனித் தொகுதிகள் ஏற்படுத்தி இந்திய சமுதாயத்தைக் கூறு போடுவதை எதிர்த்தார். அதற்காக ஓர் உண்ணாவிரதத்தையே மேற்கொண்டார்.

தீண்டத் தகாதவர்கள் என்று சிலர் கோவில்கள், மற்றும் பொது இடங்களில், அனுமதிக்கப்படாததை எதிர்த்தார். அவர்களை அனுமதிக்காத கோவில்களில் ஆண்டவன் குடி கொள்ளமாட்டான் என்றும் அத்தகைய கோவில்களுக்கு மற்றவர்கள் யாரும் செல்ல வேண்டாம் எனக் கூறினார்.

சமுதாயத்தில் பெண்களைக் கீழாக நினைக்கும் பாங்கினை வள்ளலாரும் காந்தியடிகளும் ஏற்கவில்லை. கல்வியும், கற்பும் இரு பாலர்க்கும் பொது என காந்தியடிகளும் வள்ளலாரும் வகுத்தனர். ஆண்களோடு பெண்களும் சரி நிகர் சமானமாக வாழ்வதையே இருவரும் விரும்பினர். பெண்களை வெறும் இச்சைப் பொருட்களாகக் கொண்டு நகைகளைப் பூட்டி அடிமைப்படுத்தி வைத்தலை விரும்பவில்லை. பெண்கள் நகைகளுக்கும், ஆடை அலங்காரங்கட்கும் ஆசைப்பட்டு தம் உரிமையை இழந்து இருக்க கூடாது என்றார். காந்தியடிகள் பெண்களுக்குச் சம உரிமை வழங்கியதோடு தான் நடத்திய சத்தியாகிரகப் போராட்டங்களில் பெண்களுக்கும் முக்கிய பங்கினை அளித்தார். பர்தா அணிந்து, வீட்டுக்குள்ளே முடங்கிக் கிடந்த பெண்களை, பொதுநல சேவைக்காக வெளியே வந்து தொண்டாற்றச் செய்தார். தீண்டாமை விலக்கு, பெண்கள் முன்னேற்றம் முதலியவற்றுடன் பொருளாதார சமத்துவத்தையும், நிர்மாணத் திட்டங்களில் ஒன்றாகச் சேர்த்தார் காந்தியடிகள். பொருளாதாரச் சுரண்டலின் சின்னமாக விளங்கும் வட்டி, கொள்ளைலாபம், கலப்படம் ஆகிய இவற்றை விலக்க வேண்டினார் வள்ளலார். செல்வம் அனைத்தும் ஆண்டவனுடையதே என்று கருதிய காந்தியடிகள் ஒவ்வொருவரும் தன்னிடம் இருக்கும் செல்வத்திற்கு உரிமையாளர்களாய் இல்லாமல் சமுதாய நன்மைக்காக அதன் பாதுகாவலர்களாய் செயல்பட வேண்டும் என்றார்.

அகிம்சை வள்ளலாரும் காந்தியடிகளும் காட்டிய வாழ்க்கை நெறியாகும். ஜீவகாருண்யத்தின் அடிப்படையில் கொல்லாமை, புலால் உண்ணாமை ஆகியவை வள்ளலார் வற்புறுத்துபவை. அனைத்து உயிர்களையும் ஒன்றாகக் காணும் காட்சி உடையோர் இதனையே ஏற்பர். காந்தியடிகளும் அகிம்சையை தன் உயிர் மூச்சாகக் கொண்டார். புலால் உண்ணாமை, கொல்லாமை காந்தியடிகள் போற்றிய ஒழுக்கமே. புலால் உண்ணாது இருப்பது மட்டும் அகிம்சையின் பால் பற்றுவதாகும். அது அதற்கும் மேற்பட்டது. அதனையும் உட்கொண்டது. அகிம்சை உயிர்களிடத்தில் மட்டும் அன்றி உலகிலுள்ள அனைத்தின்பாலும் அன்பு செலுத்துவதாகும்.

அகிம்சையின் நெறிகாக்க இவ்ஆன்மீகச் செல்வர், வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும், ஆன்மீகம் கலந்து செயல்பட விரும்பினார். கொடை, போர், தண்டம் பின்னியே கிடக்கும், அரசியலிலும் ஆன்மீக நெறியை இணைத்தவர் காந்தியடிகள். அருள்நயந்த நன்மார்க்கர் ஆட்சியை நாடியவர் வள்ளலார். அத்தகைய ஆட்சியை எல்லோரும் பெற்று எளிது வாழவேண்டும் என்பதற்காகவே வேண்டினர். வையகம் முழுவதும் வாழ வேண்டும் என்பதே இவர்தம் குறிக்கோள். உலக சமாதானத்தை விரும்பிய இவ்விருவரும் போரினையும், போரில் எழும் கொலையையும் வெறுத்தனர். உலகம் முழுவதும் ஒரே குடும்பமாக வாழவேண்டும் என்பது இவர்கள் நமக்குக் காட்டும் லட்சியம். காந்தியடிகல் காண வேண்டிய உலகே இத்தகையது:

ஒவ்வொரு தனி நபரும் தம் குடும்பத்திற்குத் தன்னை தியாகம் செய்யவும், ஒவ்வொரு குடும்பமும் தாம் வாழும் கிராமத்திற்காக தன்னை அர்ப்பணிக்கவும்,

ஒவ்வொரு கிராமமும், அதிலுள்ள மாவட்டத்திற்காகவும் மாவட்டம் மாநிலத்திற்கும், மாநிலம் அதன் நாட்டிற்கும் ஒவ்வொரு நாடும் உலக நன்மைக்காகவும், தத்தம்மைத் தியாகம் செய்யச் சித்தமாக இருத்தல் வேண்டும். இத்தகைய அலைவட்ட அமைப்பில் அனைவரும் ஒருங்கிணைக்கப்பட்ட, எல்லாவற்றையும் சமத்துவமாய் பகிர்ந்துகொள்ளும் ஒருவரையொருவர் ஆக்கிரமிக்காத, கனிவுப் பாசமும் நிறைந்த மக்களாக மகிழ்வுடன் வாழ வேண்டும். இவர் தம் கனவினை நனவாக்குவது நம் கடமை.